அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் ஒக்ரோபர் 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# ஒன்ராரியோவில் குழந்தைகள் மீதான துன்புறுத்தல் அதிகரிப்பு

ஒன்ராரியோ மாகாணத்தில் கடந்த வருடம் மட்டும் 29,000 அதிகமான குழந்தைகள் Abused or neglected துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 2000-2001 இன் நிலையில் இருந்து 24 வீதம் அதிகரித்துள்ளது என்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இந்நிலைமை மாற்றப்படவேண்டும் என்றும் குழந்தைகளின் நலன் காக்கப்படவேண்டும் என்றும் The Children's Aid Societies இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதே சமயம், குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக 160,000 மேற்பட்ட தொலைபேசிகள் கடந்த வருடம் தமது அமைப்புக்கு வந்துள்ளதாக The Child and Family Welfare Agency குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதம் குழந்தைகளின் நலன் காக்கும் மாதமாக ஒன்ராரியாவில் கடைப்பிடிக்கப்படுகின்றது (Child Prevention Month in Ontario). அதன் தொடக்க நாளான ஒக்ரோபர் முதலாம் திகதியே இந்த விபரங்களை The Children's Aid Societies பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளது.

7ம் பக்கம் பார்க்க...



சுயாதீன திரைப்பட மையத்தின் ∴(அகேனம்) விருது - 2007 பி.விக்கினேஸ்வரனுக்கு வழங்கப்படுகின்றது. மாற்று ஊடகங்களுக்கான சேவைகளில் அவருடைய பணிகளுக்காக இந்த விருது வழங்கப்படுகின்றது.



**திருமதி. ஜெயமணி சிவராம் அவர்கள் காலமானார்**

அன்னார் தாய்வீடு பத்திரிகையின் கட்டுரையாளர்களான சிவவதனி பிரபாகரனின் தாயாரும் சொக்கலிங்கம் பிரபாகரனின் மாமியாருமாவார் அன்னாரின் பிரிவுத் துயரில் 'தாய்வீடு' பங்குகொள்கிறது.

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Mortgage Canada

Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E.,
Unit 202, Scar, ON

PMCI Mortgage Canada
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Restaurant For SALE, 80 seats, Markham, $79,900
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

CANADIAN HOME APPRAISALS INC.
Residential and Commerical Appraisals
CHAI Canadian Home Appraisals Inc.
S.K. Bales, CRA.
W.E. Doolittle, AACI.
Our firm is listed on major Banks and Trust Companies' approved appraisal list.
www.chainc.ca, Email: chai@chainc.ca
Tel: 905-947-4647, Fax: 905-947-9048, Cel: 416-801-3219


ஆயுட்காப்புறுதி
அதிகுறைந்த கட்டணத்தில்
Life Insurance at the Lowest Rates!
மாதாந்தம்
$11.97
மட்டுமே
FOR $100,000
30 வயதுடைய ஆணுக்கு
Rate based on non smoker
10 year term insurance
30 வயதுடைய பெண்ணுக்கு
$9.90
Rate based on non smoker
10 year term insurance
குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்
RESP
சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி
வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.
கொடிய நோய்களுக்கான காப்புறுதி
(Critical Illness Insurance)
Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.
சிறீதரன் துரைராஜா
Insurance Broker
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
www.life100.ca
LILAND INSURANCE INC.
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
digi Media Creations
இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

# சேதத்தின் குரல்



**த. சிவதாசன்**

தெற்கிலிருந்தொரு சேதத்தின் குரல் ஒலிக்கவாரம்பித்திருக்கிறது- ரணிலின் தொண்டையிலிருந்து! 'ஒற்றையாட்சியை' மஹிந்தவின் கைகளிலிருந்து பிடுங்கியெடுத்து ஊரெல்லாம் கொண்டோடப் போகிறார். 'கண்டி யாத்திரை' போய் பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியக் காரணமாகவிருந்த ஜே.ஆரின் மருமகனிடமிருந்து இது எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

தமிழர்களின் வாழ்வையும் வளத்தையும் சேதப்படுத்தியே அரசியல் நடத்திவரும் இப்படியான குரல்கள் தென்னிலங்கையில் பல தடவைகள் ஒலித்திருக்கின்றன. தமிழர்கள் இதற்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும்பான்மையான சிங்கள மக்கள் அதையேதான் விரும்புகிறார்கள். அதுதான் ஜனநாயகமரபு, அதுவேதான் மக்கள் விருப்பு. போர் என்றால் போர், சமாதானமென்றாலும் போர் என்னும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருக்கிறது.

பதில்? தமிழ் மக்களும் விரைவில் தென்னிலங்கையின் சேதத்துக்காகக் குரல் கொடுக்கப் போகிறார்கள். அழிவு நிச்சயம். அம்மக்களின் ஜனநாயக விருப்பை மீறுவது அழகல்ல.

84 வீதமான தென்னிலங்கை மக்கள் புலிகளைத் தோற்கடித்தபின்னர்தான் அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 70 வீதமான மக்கள் 'புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பினால் அவர்களோடு பேசலாம்' என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் முட்டாள்களா? அல்லது கருத்துக் கணிப்புக் கேள்விகளைத் தயாரித்தவர்கள் முட்டாள்களா? என்ற விவாதத்தில் இறங்கி நாமும் முட்டாள்களாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். இதுவரை உருப்படியான தீர்வுப் பொதியொன்றை முன்வைக்கத் தகுதியற்ற அரசியல்வாதிகளும் அவர்களை உருவேற்றும் மக்களும் ஒரே ரகத்தினரே. பஞ்சம் பட்டினியை நாடு எதிர்கொள்ளப் போகிறது, விலைவாசி, வரி உயர்வு என்று பல அச்சுறுத்தல்கள். இதற்கெல்லாம் காரணம் போர்தான் என்றெல்லாம் உணர்ந்து கொள்ளாது 'புலிகளைத் தோற்கடிப்பதே' மிக முக்கிய விடயமெனக் கருதும்போது போரினால் வரும் இரத்தக் களரிகளையும் ஏற்க அவர்கள் தயாராகவேயிருக்க வேண்டும்.

ஆட்சியைக் கைப்பற்ற அரசியல்வாதிகள் எதையுமே செய்வார்கள். ரணிலும் இதற்கு விதிவிலக்கல்ல. போர் நிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டதிலிருந்து சமஷ்டி ஆட்சியை ஏற்றுக்கொண்டு தமிழர்களிடம் சோரம் போய்விட்டதற்காக சிங்கள தேசத்தின் எதிரியாக்கப்பட்ட ரணில் இப்பொழுது (குப்பை) அரசியலில் இறங்கியிருக்கிறார். ஜே.வி.பி. என்ற வைரஸ் சுதந்திரக் கடசியோடு சேர்ந்து இனவொழிப்பைத் தீவிரமாக்கியது. இப்போது அமிழப்போகும் கப்பலைக் கைவிட்டுவிட்டு இன்னொன்றுக்குத் தாவியிருக்கிறது அது. தனித்து ஆட்சியமைக்க முடியாது ஒட்டுண்ணி வாழ்க்கை வாழும் இக்கட்சி இருக்கும் வரை நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் விமோசனம் இல்லை.

புலிகளை முற்றாக அழிக்கும் வரை போர் தொடரும் என்று கோதபாய ராஜபக்ஷ பேசியிருக்கிறார். அது நாடு முழுவதுக்குமான பிரகடனம். அப்போது அருகிலிருந்த 'சர்வ வல்லமை பொருந்திய கனம் ஜனாதிபதி' அவர்கள் மறுப்புத் தெரிவிக்காமையால் அவரும் அப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாகவே கருதவேண்டும். அதேவேளை போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்குக் காரணமான ஐ.தே.கட்சியும் தாம் ஆட்சிக்கு வந்தால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்வோமென்று அறிவித்திருக்கிறது. இதன் பின்னர் தமிழர் தரப்பு மட்டும் ஏன் இவ்வொப்பந்தத்தைக் கட்டிக்கொண்டழ வேண்டும்?

கோதபாயவின் போர்ப்பிரகடனம் புலிகளுக்கு ஒரு வகையில் கிடைத்த அதிர்ஷ்டமென்றே கருத வேண்டும். சர்வதேசங்களின் வேண்டுகோளுக்கிணங்க புலிகள் பேசப் போனார்கள். ஒப்பந்தத்திற் கையெழுத்திட்டார்கள். அப்பொழுது அவர்களிடம் பலமிருந்தது. ஆனால் அதற்கு சர்வதேசங்களும் தென்னிலங்கை மக்களும் கொடுத்த வெகுமதி ஏமாற்றமே. தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து இறங்கி சமஷ்டி ஆட்சியை ஏற்றுக் கொள்ளத் தயாராகவிருந்த புலிகளை வஞ்சித்ததில் தென்னிலங்கை மக்களுக்கு மிக முக்கிய பங்குண்டு. புலிகளை ஜனநாயகத்துக்குக் கொண்டுவர போர்தான் வழியென்று அவர்கள் நினைத்து அதன் விளைவாக தமிழினப் படுகொலைதான் எஞ்சுமானால் தமிழர்களின் துன்பங்களை அவர்கள் சுமக்கும் காலம் வந்துவிட்டதென்றே கருத வேண்டும்.

இதனால் தமிழர்களும் போரின்பநாதர்களாக மாறவேண்டுமானால் …ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். முடிவொன்றிற்காக மக்கள் தம்மைத் தயார்படுத்திக் கொண்டு வருகிறார்கள். நாடு இரத்தக்களரி ஒன்றிற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. சமாதானத்திற்காகக் குரல்கொடுக்க வேண்டிய மக்களிடமிருந்து உயிர்ச் சேதத்திற்கான குரல்களே உயர்ந்தெழுகின்றன.

உலகில் பல நெடுநாட் போராட்டங்கள் நிரந்தர ஓய்வெடுத்துக்கொண்டுவிட்டன. வட அயர்லாந்துப் போராட்டம், பாஸ்க் போராட்டம், பிலிப்பைன்ஸ் மின்டனோ தீவுப் போராட்டம், இந்தோனேசிய ஆச்சே மாகாணப் போராட்டம், நேபாள மாவோயிஸ்ட்டுகளின் போராட்டம் என்று பல மீசையையும் மண்ணையும் பற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளாது இரகசியமாக அலுவல்களை முடித்துக்கொண்டுவிட்டன. தரகர்கள் யார்? அவர்களுக்கு என்ன ஊதியம் கிடைத்தது? கையூட்டு (?) வாங்கியது யார்? கொடுத்தது யார்? யார் யார் எந்தெந்த ஓட்டல்களில் சந்தித்தார்கள்? என்ற எந்த விடயங்களிலும் மக்கள் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் நிம்மதியாகத் தூங்குகிறார்கள். நீண்ட நாளையக் களைப்பைக் கழைவதே அவர்களின் முதல் தேவை. ஆனால் நமது நாட்டிலோ அரைநூற்றாண்டுப் போராட்டம் இன்னும் பள்ளி கொள்ள மறுக்கிறது. அவமானம்!

இதுவரை காலமும் சிங்களத் தலைவர்களாலேயே ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இனி வரப்போவது தமிழரிடமிருந்து வரட்டும்! போர் நிறுத்த ஒப்பந்தத்தை … எழுமின்! கிழிமின்!!



**இலங்கை இராணுவத்தின் யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியுடன் அமெரிக்கத் துணைஇராஜாங்க அமைச்சர் றிச்சட் பௌச்சர், மற்றும் இலங்கைக்கான தூதுவர் றொபேட் ஓப்ளேக்.**


**இடம் மாற்றப்பட்டுள்ளது**

**கே. எஸ். பாலசந்திரனின் "அண்ணை றைற்"**

முதலான தனிநடிப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு இறுவட்டு (CD) வெளியீட்டு விழா


**October 7th 2007, ஞாயிற்றுக்கிழமை, மாலை 5.30க்கு**

**Agincourt Community Centre**

31, Glen Watford Drive, Scarborough, (Midland and Sheppard On Sheppard)



**#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.**



PROPERTY MAX

Realty Inc. Realtor

**Mohan Subramaniyam**

Broker of Record

**416.321.2300**

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

**Search More Properties @**
**www.realestatebrokerofrecord.info**

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

**PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!**

# அசமந்த மனோபாவம் அரசியலுக்கு ஆகாது!



- க. நவம் -

## ஒன்ராறியோ தேர்தல் - ஒரு சிறு நோக்கு

ஒக்ரோபர் 10, 2007 ஒன்ராறியோ மாகாண வரலாற்றில் ஒரு முக்கியமான நாள். மாகாண சட்டசபைத் தேர்தலுக்கெனத் தேதி குறிக்கப்பட்ட நாள். மேலாக சட்டசபையின் எதிர்கால வடிவமைப்பையிட்டு மக்கள் தீர்மானிக்கவிருக்கும் நாள். சுமார் 200 வருடங்களாக இடம்பெற்றுவரும் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தலாமா என்று மக்களிடமிருந்து அபிப்பிராயம் கோரும் நாள். மாறிக்கொண்டேயிருக்கும் இவ்வுலகில் 'மாற்றங்கள் நிகழும்' என்பது மட்டும் மாறாத ஒரு விதியல்லவா? இவ்விதிக்கமைய, ஒன்ராறியோ மாகாண மக்களும், தங்கள் அரசியற் தலைவிதியை மாற்ற வல்ல, ஒரு புதிய மாற்றத்துக்கு இணங்கு வார்களா என்ற வினாவுக்கு, எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி விடைகிடைக்கும்!

ஒன்ராறியோ மாகாணத்தின் 107 தொகுதிகளிலிருந்தும் அதிகப்படியான வாக்குகளைப் பெறும் ஒவ்வொரு வேட்பாளரை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கும் முறைமையே இம்மாகாணத்தில் நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனுடன் இணைந்ததாக விகிதாசார முறைப்படி, சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றும் இம்முறை இடம்பெற இருப்பது எல்லோரும் அறிந்ததே. இதற்கமைய 90 உறுப்பினர்கள் தொகுதி வாரியாகவும், 39 உறுப்பினர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் மொத்த வாக்கின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதற்கு அங்கீகாரம் கோரும் கருத்துக் கணிப்புக்கெனத் தனியான வாக்குச் சீட்டு ஒன்றும் இம்முறை வாக்காளர்களுக்கு வழங்கப்படும். விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 60சதவீத மக்களாதரவு தேவை. மேலும் மொத்தம் 107 தொகுதிகளில், ஆகக்குறைந்தது 64தொகுதிகளிலாவது 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் இதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இந்நிலையில் இம்மாகாணத்தில் வசித்துவரும் சிறுபான்மை இனத்தவர்களாகிய நாம் - குறிப்பாக தமிழ் இனத்தவர்களாகிய நாம் இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

ஈழத் தமிழராகிய நாம் ஒன்ராறியோ மாகாணத்தில் சராசரியாக சுமார் 20 வருடகால வரலாற்றைக் கொண்டவர்கள். இதுவரை காலமும் எங்கள் அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கென பெரும்பான்மையின அரசியல் தலைவர்களின் தயவையே நாடி வந்திருக்கின்றோம். மாற்றான் மடியை நாம் நம்பியிருக்கும் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவை, காலம், கட்டாயம் நெருங்கிவிட்டது. இதன்பொருட்டு ஏற்கெனவே மாநகரசபை அரசியலில் காலடி பதித்துக்கொண்ட எம்மவர்கள், அடுத்து மாகாண அரசியற் களத்திலும் இப்போது குதித்துள்ளனர். இந்த வகையிலும் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலின் முக்கியத்துவத்தைத் தமிழ் மக்களாகிய நாங்கள் சரிவர விளங்கிக்கொள்ள வேண்டும்.



Scarborough Centre தொகுதியில் போட்டியிடும்
**Samy Appadurai**
Tel: 416-288-8908



Scarborough-Guildwood தொகுதியில் போட்டியிடும்
**Neethan Shan**
Tel: 416-267-3434



Mississauga East-Cooksville தொகுதியில் போட்டியிடும்
**Satish Balasunderam**
Tel: 905.990.0689



Ajax-Pickering தொகுதியில் போட்டியிடும்
**Bala Thavarajasoorier**
Tel: 416.294.3675

புதிதாக அறிமுகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை எமக்கு எவ்வகையில் பயன் தரும் என்பதை முதலில் நோக்குவோம். முதலாவதாக, ஒன்ராறியோ மாகாண மக்கள் தத்தமது தேர்தல் தொகுதியில் தமக்கு விருப்பமான, பயன்மிக்க, திறன்மிக்க, தகுதிமிக்க வேட்பாளருக்கு வாக்களிக்க இந்த முறைமை உதவும். ஆனால் மக்கள் விரும்பிக்கொண்டால், அந்த வேட்பாளரது கட்சிக் கின்றி, பிறிதொரு கட்சிக்கும் வாக்களிக்கும் வாய்ப்பினை இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை வழங்குகின்றது.

அடுத்து, ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் விகிதாசாரப்படி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ஒவ்வொரு கட்சியும் தேர்ந்தெடுக்க இது வழிவகுப்பதால், சட்டசபையில் சகல கட்சிகளும் நியாயமான முறையில் அங்கத்துவத்தைப் பெறமுடியும். அதாவது நீதியான மக்கள் பிரதிநிதித்துவத்தை இந்தத் தேர்தல் முறைமை எமக்கு வழங்குகின்றது. மேலும் பெரும்பான்மை அரசாங்கம் என்ற எண்ணக்கருவை மாற்றியமைத்து, கொள்கையாக்கத்தில் சகல கட்சிகளும் கணிசமான பங்கை வகிப்பதற்கும் இந்த முறைமை வழிவகுக்கின்றது.


இவ்வாறான பல நன்மைகளின் அடிப்படையில் நோக்கும்போது, சிறுபான்மை இனத்தவர்களது குரல் சட்டசபையில் ஓங்கி ஒலிப்பதற்கும், அவர்களது அடிப்படை உரிமைகள் வென்றெடுக்கப்படுவதற்கும் இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பெரிதும் பயன்படும் என்பது தெளிவாகின்றது. எனவே தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் அனைவரும் இதற்கு ஆதரவாகத் தமது வாக்குகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இனி, தேர்தல் தொகுதிகளில் தமிழ் மக்கள் தத்தமது சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, என்ன காரணங்களின் அடிப்படையில் தமது வாக்குரிமையை அவர்கள் பயன்படுத்தக்கூடும் என்பது குறித்தும் சற்று நோக்குவோம். அதிகாரத்தில் இருக்கும் லிபரல் கட்சிக்கு 40 சதவீதமும், புறோகிறஸிவ் கொன்ஸவேற்றிவ் கட்சிக்கு 30 சதவீதமும், என்டிபிக்கு 20 சதவீதமும், கிறீன் கட்சிக்கு 7சதவீதமும் மக்களாதரவு காணப்படுவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது. இவை உறுதியான முடிவுகளல்ல என்பதும், இறுதி நேரத்தில் இவற்றில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்பதும் கடந்த கால அனுபவங்கள்.

ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் 3 ஈழத் தமிழர்கள் போட்டியிடுவதற்கு என்டிபி வாய்ப்பளித்திருக்கின்றது. பிஸி கட்சி ஒரேயொரு தமிழ் வேட்பாளருக்கு வாய்ப்பளித்திருக்கின்றது. லிபரல் கட்சி ஒரு தமிழ் வேட்பாளருக்கும் வாய்ப்பளிக்க முன்வரவில்லை!

இந்நிலையில், நீண்ட காலமாக இனிக்கப் பேசி ஏமாற்றி, வாக்குப் பெற்ற கட்சி ஒன்றிடம் இனியும் ஏமாந்துபோகத் தயாராக இல்லை என்று தமிழ் மக்களில் ஒருசாரார் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். அத்துடன் மத்திய அரசில் ஆட்சிக்கு வந்த கையோடு தமிழ்ச் சிறுபான்மையினருக்குக் கைவிலங்கிட்ட கட்சியொன்றுக்கு மாகாண மட்டத்தில் ஏன் ஆதரவளிக்க வேண்டும்

7ம் பக்கம் பார்க்க...

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்கவும் குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும் அழையுங்கள்
Ravi. Paramu
Broker

Direct: 416-262-4176
Bus: 416-321-6969
HomeLife GTA Realty Inc. Real Estate Brokerage
1711 Mc Cowan Road, Suite #206, Scarborough.

# புது புல்லு புது நாத்து




**மகேன் சிங்கராஜா**
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

**புல்லு வெட்டி களைத்து விட்டீர்களா? அல்லது புல்லு வெட்ட நேரமில்லையா? இதோ ஒரு புதிய வழி...
அப்பாடா... நிம்மதி**

எம்மில் பலர் வீடு வாங்கி, வீட்டில் இருக்கவும் நேரமில்லாமல் புல்லு வெட்டவும் நேரமில்லாமல் அலைந்து திரியும் நேரத்தில் ஒரு விடிவெள்ளியாக உருவாக்கப்பட்ட புல் தான் சூழற்புல் (Eco Grass).

இச் சூழற்புல் மிரியம் கோல்ட்பேர்கர், போல் ஜென்கின்ஸ் ஆகியோரால் 1997ல் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் கனடாவின் வட பகுதியின் பைன் காடுகளிடையே (Pine Forests) செழிப்பாக வளர்ந்த புற்களைக் கண்டு, இவற்றை புற்தரையாக பயன்படுத்தினால் கனடாவை செழிப்பாக்கலாம் என தீர்மானித்து 7 வகையான புற்களின் சேர்க்கையைக் கொண்டதாக ஒரு புல்லினத்தை உருவாக்கினார்கள். அதுதான் இன்று வட அமெரிக்கா முழுவதிலும் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப் புல் இருவாட்டி மண்ணிலும்(Loam), நன்கு வடியக்கூடிய கணி மண்ணிலும் (Well Drained Clay) மற்றும் வளமற்ற வரண்ட மண்ணிலும் (Infertile Dry Soil) அடர்த்தியாக வளரக்கூடியது. சூழல் புல்லானது, அதிக சூரிய வெளிச்சத்திலும், குறைந்த சூரிய வெளிச்சத்திலும், நிழற் பகுதியிலும் கூட வளரக் கூடியது. இது உங்கள் பராமரிப்பு நேரத்தையும் செலவையும் குறைக்கக் கூடியது.

புல்வெட்டுதல் (Grass Cutting), நீர்ப்பாய்ச்சல்(Watering), வளமாக்கியிடல்(Fertilizing) என்பன தேவையற்ற ஓர் புல்வகையே சூழலுக்குகந்த புற்தரையாகும் (Eco Lawn). சாதாரண புற்தரையில் நீங்கள் ஒரு கிழமைக்கு ஒரு தடவை வெட்டுவதை விட சூழல் புற்தரையில், ஒரு மாதத்திற்கு ஒரு தடவையே வெட்டவேண்டிய தேவை இருக்கும். இதனால் புல் வெட்டும் செலவை




குறைக்கலாம். அத்துடன் செலவுகூடிய இரசாயனங்கள் வாங்கவும் தேவையில்லை. சூழல்புற்தரையில் எந்தவொரு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வளமாக்கிகளோ அல்லது கிருமிநாசினிகளோ பயன்படுத்தத் தேவையில்லாதபடியால், உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்திற்கோ இரசாயனங்களால் வரக்கூடியஆபத்தை இச் சூழல் புற்தரை நீக்குகின்றது. மேலும், சூழல் புற்கள் நீண்ட வேர்த்தொகுதியைக் கொண்டிருப்பதால், குறைந்தளவிலான நீர்ப்பாய்ச்சல், அல்லது நீர்ப்பாய்ச்சாமலேயே வளரக் கூடியது.

எமது புவியில் பசுமை இருப்பது நல்லது என்பது எங்கள் எல்லாருக்கும் தெரியும். ஆனால் சூழலைப் பாதுகாக்க இன்னும் அதிகமாக முயற்சிக்கும்படி மக்களிடம் கேட்டால் அதனை தியாகமாக நினைப்பார்கள். வசதிகளை விட்டுக் கொடுக்கும் அதே நேரம் சூழலுக்கு நட்பான மாற்றீடுகளை (Eco friendlier alternatives) ஏற்படுத்துதலே பொறுப்பள்ள செயலாகும். பசுமையில் வாழ்தல் உண்மையில் பணத்தையும் மேலும் அதிகமானவற்றையும் சேமிக்கச் செய்யும்.

## இந்தப் புல் எப்படி நேரத்தைச் சேமிக்கிறது

இதன் பராமரிப்பு இலவசமானது. சூழல்புற்கள் விரைவில் முளைக்கக் கூடியது. ஆனால், வேர்விட்டதும் மிகவும் மெதுவாக வளரும் ஓர் புல்லினம் இதுவாகும். இது மெல்லிய அலகுகளை (Thin blades) கொண்டிருப்பதால் தடிப்பான அலகுகளைக் கொண்ட புற்களைப் போல் அதிகளவு நீர் தேவைப்படாது. சூழல் புற்களுக்கு மிக நீளமான வேர்கள் இருப்பதால், தேவையான போஷணைப் பொருட்களையும் நீரையும் அதிகஆழத்திலிருந்து இயற்கையாகவே பெறக்கூடியவை. இவை மண் தின்னலை (Erosion) கட்டுப்படுத்துவதுடன் மண்ணை இறுகப் பற்றிப் பிடிக்கக் கூடியவை. இதன் மூலம், நீர்ப்பாய்ச்சல், வளமாக்கிகளை இடுதல், மண்ணை காற்றூட்டம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் நேரத்தை மிச்சமாக்குகின்றது. பாரம்பரியப் புற்களைப் போலன்றி, இதன் வேர்கள் 9 அங்குலங்கள் (22.86செ.மீ) வரை கடினமான களி மண்ணிலும், மணல் மண்ணில் 14 அங்குலங்கள் (35.56 செ.மீ)வரையும் செல்லக் கூடியவை.

## இது எவ்வாறு சூழலை பாதுகாக்கிறது

நீர் சேமிப்பு அத்தியாவசியமானதாக இருக்கும் பிரதேசங்களுக்கு, சூழல்புற்கள் (Eco Grass) மிகவும் பொருத்தமானதாகும். சூழல் பற்றி அக்கறை கொண்டிருக்கும் சமூகத்திற்கு, இது ஓர் கனவுப் புற்தரையாகும் (Dream Lawn). இது மெதுவாக வளர்வதால், புல் வெட்டும் நேரத்தைக் குறைப்பதுடன், பச்சைவீட்டு வாயு (Green House Gas Emissions) வெளியேற்றத்தையும் குறைக்கின்றது. ஒரு மணித்தியாலத்திற்கு புற்தரையை இயந்திரத்தினால் வெட்டும்போது (Lawn mower) ஏற்படும் மாசடைதல், ஒரு மணித்தியாலத்திற்கு 40 புதிய

6ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage


Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
416-857-1780

Search Your Dream Home
@
www.powerofsaleproperty.com
OR Call
416-321-2300

One Source For Many Type Of Properties And Mortgages!



3+2 Bdrms, 4 Washrooms,
Excellent Location, Aprox 8 Years
Old Home, Shows Very Well!!



4 Bdrms, 3 Washrooms,
Show Well, Very Well Maintained,
Close To Most Facilities.



3 Bdrms, 2 Washrooms,
Step To Ttc, Best Value In Area!
'Mattamy Home 'Avalon Model.

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

# புதுப் புல்லு புது நாத்து

5ம் பக்கத் தொடர்ச்சி...

மோட்டார் வாகனங்கள் ஓடுவதால் ஏற்படும் மாசடைதலுக்குச் சமனானது.

புற்தரை வெட்டும் இயந்திரம் (Lawn mower), இலைகளை சீராக்கும் இயந்திரம் (Trimmer), ஏனைய நில அமைப்பாக்கும் (Landscaping) இயந்திரங்களை எரிபொருளால் நிரப்பும் போது சிந்தும் எண்ணெயின் வருடாந்த அளவு 13 Million கலன்களாகும். இது Exxon Valdez எனும் அமெரிக்க எண்ணெய் கப்பலிலிருந்து 1989 இல் சிந்தப்பட்ட எண்ணெயை விட 2 மில்லியன் கலன் (7,570,9823.6 லீற்றர்கள்) அதிகமாகும். சூழல்புற்கள் மாதத்திற்கு ஒரு தடவை மட்டுமே வெட்ட வேண்டியிருப்பதால், ஆபத்தான பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை குறைப்பதுடன் எண்ணெய் சிந்துவதையும் விரைவாக குறைப்பீர்கள்.

வண்டுகள், பூச்சிகளின் எச்சங்களால் இப்புற்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டா. இந்த உயிரினங்கள் ஈரலிப்பான மண்ணில் எச்சங்களாக (Grubs) இரண்டு வருடங்களுக்கு உயிர் வாழ்ந்து கோடைகால ஆரம்பத்தில் முதிர்பருவம் அடைகின்றன. இந்த முதிர் பருவ உயிரினங்கள் 6 கிழமைகட்கு மட்டுமே உயிர் வாழ்கின்றன. எனவே இவற்றின் முதலி இலக்கு இனப் பெருக்கம் செய்வதாகும். பெண்பூச்சிகள், தமது முட்டைகளை குளங்கள், ஆறுகளின் கரைகளின் ஈரலிப்பான மண்ணில் இடுகின்றன. இன்று இந்த எச்சங்களை நன்கு நீர்ப்பாய்ச்சப்பட்ட புற்தரைகளில் காணலாம். இதற்குக் காரணம் பாரம்பரிய புற்தரைகளில் உண்மையான வேர்த்தொகுதிகள் இல்லாமையும், இதன் காரணமாக நீங்கள் உங்கள் புற்தரையை மென்மையானதாகவும் ஈரலிப்பானதாகவும் மாற்றுவதற்கு, அதிக நீர் பாய்ச்ச வேண்டியிருப்பதாகும். இதன் மூலம் பெண்வண்டு முட்டையிட ஏற்ற சூழலை நீங்கள் உருவாக்குகிறீர்கள். இப் புற்தரைக்கு மிகவும் குறைந்த நீர் தேவைப்படுவதால், தரை கடினமாகவும் ஈரலிப்பற்றதாகவும் இருப்பதால் முதிர்ந்த வண்டுகள் தமது முட்டைகளை இடுவதற்கு இவ் இடத்தை தேர்ந்தெடுப்பதில்லை. எனவே இவை தமது முட்டைகளை இடுவதற்கு வேறு இடத்திற்குச் செல்வதால், எச்சங்கள் உங்கள் புல்தரையில் காணப்படாது.

சூழல்புற்கள் மிக விரைவாக முளைத்த போதும் மிகவும் மெதுவாகவும் அடர்த்தியாகவும் வளரும். இவை 9 அங்குல நீளத்திற்கு வளர்ந்த போதும், இவை மிகவும் மென்மையானதாக இருப்பதால், 4 அங்குல உயரத்தில் மடிந்து விடுவதால் கம்பளம் போன்ற அமைப்பைத் தோற்றுவிக்கின்றன. வெட்டிய தோற்றத்தை நீங்கள் விரும்பினால், மாதமொரு தடவை 3-4 அங்குல உயரத்திற்கு வெட்டி விடலாம்.

உதாரணமாக, உங்கள் புல்லை வெட்டுவதற்கு ஒரு கிழமைக்கு $40 தேவைப்பட்டால், வருடாந்தம் புல்வெட்டும் செலவில் $800 டொலரை சேமிப்பீர்கள். சூழல் புல்லுக்கு நீர்ப்பாய்ச்சல் அல்லது விலையுயர்ந்த வளமாக்கிகள் தேவைப்படாததால் உங்கள் மொத்த வருடாந்த சேமிப்பு $1000 டொலரை விட அதிகமாகும். எனவே ஓர் சூழல் புல்தரை இருந்தால், நீங்கள் சூழலைப் பாதுகாப்பது மட்டுமல்லாது, உங்கள் வங்கிக் கணக்கையும் பாதுகாக்கின்றீர்கள்.



Eco-Lawn Unmowed Field
வெட்டப்படாத சூழற்புற்தரை

“வாழிட நிலஅமைப்பு: பராமரிப்புச் செலவு, காலம், வளங்களின் ஒப்பீடு” (Residential Landscaps: Comparison of Maintenance Costs, Time, and Resources) என்னும் 2000 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வின் படி, கனடா ஈட்டுக்கடன் மற்றும் வீட்டு கூட்டுறவு நிறுவனத்திற்கான சூழலியல் வெளிநோக்கின் படி, வரட்சியைத் தாங்கக் கூடிய, மெதுவாக வளரக் கூடிய குறைந்த பராமரிப்புச் செலவைக் கொண்ட சூழல் புல்தரை போன்ற புற்தரைகள், எல்லா வகையான நில அமைப்பிலும் “குறைந்த வருடாந்த பராமரிப்புச் செலவைக்” கொண்டிருப்பதுடன் எல்லா ஆய்வு செய்யப்பட்ட நில அமைப்புகளிலும் “அதிகநேரம், பொருள் மற்றும் செலவு சிக்கனமான” வையாக இருக்கும்.

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

செப்ரெம்பர் குறிப்புக்கள்

- இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புகள்.
- நன்றி செலுத்தும் நாள் (Thanks Giving Day) ஐப்பசி 9ம் திகதி விடுமுறையை கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- ஹலோவீன் (Halloween) உடைகள் மற்றும் முகமூடிகளை உங்கள் பிள்ளை களுடன் சேர்ந்து திட்டமிடுங்கள்.
- ஹலோவீனுக்காக உங்கள் யன்னல்களை அலங்காரப்படுத்துங்கள்
- வீட்டின் புகைபோக்கிகள், காற்று மற்றும் வெளிச்சம் வரும் துவாரங்களை சரிபாருங்கள்.
- விடுமுறை நாட்களுக்கான பிரயாண திட்டங்களை உருவாக்குங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி குளிரூட்டியையும் கனலடுப்பையும் சுத்திகரியுங்கள்.
- இருட்டுத் திரைச்சேலைகளை (Blinds) கழுவி சுத்திகரியுங்கள்.
- இம் மாத கடைசி வாரத்தில் நேர மாற்றம் இடம்பெறவிருக்கிறது. மணிக்கூடுகளை அதற்கேற்ப சரிசெய்யுங்கள்.
- வீட்டிலுள்ள வெள்ளி, செம்பு, பித்தளை, கிறிஸ்டல் அலங்காரப் பொருட்களை சுத்திகரியுங்கள்.
- பாரமான தளபாடங்களையும் பொருட்களையும் தள்ளி வைத்து அவற்றின் கீழ் உள்ள தூசுகளை vacuum cleaner ஆல் சுத்திகரியுங்கள்.
- படுக்கை மெத்தைகளை சமனானதாக்கி திருப்பிப் போடுங்கள்.
- வாயு வெப்பமேற்றியை பரிசோதியுங்கள். இது நீல நிற சுவாலையாக இருக்க வேண்டும். மஞ்சள்சுவாலை சிறிதளவில் அல்லது ஓரளவேனும் காணப்படாதிருத்தல் நல்லது.
- கராஜ் கதவுகளின் பிணைச்சல்களை சரிபார்த்து எண்ணெயிடவும்.
- புகைபோக்கிகளின் சிம்னிகளில் பறவைக் கூடுகள் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என பரிசோதிக்கவும்.
- மென்மையான வருடாந்த பயிரை வீட்டினுள் அல்லது பச்சை வீட்டினுள் இடமாற்றவும்.
- தீந்தையிடப்பட்ட (Painted) சுவர் மற்றும் மேற்பரப்புகளில் ஈரலிப்பு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறதா என பரிசோதிக்கவும்.
- குளிராக்கும் வெப்பமாக்கும் உபகரணத்தின் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய கழிவுகள் சேர்ந்திருக்கின்றதா என சரிபாருங்கள்.

### சூழல் புல்தரையை எவ்வாறு உருவாக்கலாம்?

எந்த ஒரு விதையை விதைப்பதற்கும் மண்ணை பண்படுத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.. புதிய விதையை விதைப்பதற்கு முன்னர் களைகள் இல்லாது ஒழிப்பது அவசியம்.

### எப்போது விதையிட வேண்டும்?

இவ் விதையை விதைப்பதற்கான சிறந்த காலம் ஆகஸ்ட் பிற்பகுதியிலிருந்து செப்டம்பர் பிற்பகுதி வரையிலாகும். தொழிலாளர் தின (Labour day) விடுமுறை மிகவும் உகந்ததாகும். குளிரான பின்னேர வெப்ப நிலைகள், அதிகாலை பனி மற்றும் இலையுதிர்கால மழை ஆகியன புல் முளைக்கவும் வளரவும் சரியான நிலைமைகளை உருவாக்குகின்றது. அத்துடன் இயற்கையில், இலையுதிர்காலத்தில் ஒருசில களைகளே முளைக்கின்றன. ஆகவே உங்கள் புதிய சூழல் புற்தரையானது குறைந்த களைகளின் போட்டியுடன் மிகவும் விரைவாக ஸ்தாபிக்கப்படுகின்றது.

ஏப்ரலின் நடுப்பகுதியிலிருந்து ஜுன் மாத நடுப்பகுதி வரை விதையிடல் இரண்டாவது தெரிவாகும். மண்ணின் வெப்பநிலை $15^0$C ($60^0$F)ஆக வரும்போது விதைகளை தூவுங்கள். அநேகமான களைகள் வசந்த காலத்திலும் கோடைகாலத்தின் ஆரம்பத்திலும் முளைப்பதுடன், இது உங்கள் சூழல் புற்தரையுடன் தவிர்க்க முடியாதவாறு போட்டியிட்டு வளரும். சூழல் புற்தரை 3 அங்குல நீளமானதாக வந்த பின்பு, நீங்கள் களைகளை பல்வேறு விதமான களை கொல்லிகளைப் பயன்படுத்தி அகற்ற வேண்டியிருக்கும்.

களைகள் மிக வேகமாக வளர்வதால், அவை, வசந்த காலத்தில் நடப்பட்ட விதைகளை விட வேகமாகவளரும். மண் ஈரலிப்பாக இருந்தாலொழிய வசந்த காலததில் நடப்பட்ட நாற்றுகளுக்கு நாளாந்தம் நீர் விட 15-30 நிமிடங்கள் தேவைப்படும். பின்னேரங்களில் நீர்விடுவதால் ஏற்படும் பங்கசு நோய்களிலிருந்து தவிர்ப்பதற்கு அதிகாலையில் நீர் விடுங்கள். புதிதாக நடப்பட்ட பகுதி பச்சை நிறமாக வந்தவுடன், உங்கள் மண் வகை மற்றும் வானிலை நிலைமைகளிற்கு ஏற்ப நீரை பாய்ச்சுங்கள். இப் புற்களை நாட்டி ஒரு வருடத்தின் பின்னர் நீங்கள் மீண்டும் நீர் விடும் அளவை மிகவும் குறைத்துவிடலாம்.

### சூழல் புல் விதையை விதைத்ததன் பின்னர்

சூழல்புற்கள் 7-14 நாட்களில் முளைக்கும்.

16ம் பக்கம் பார்க்க...



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES
PAKEER
PAKERATHAN SAHADEVAN
Licensed Insurance Agent

வீடு வாங்க விற்க
Life Insurance (All kinds),
RESP/RRSP
Direct : 416.908.6003



Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
208-80 Corporate Drive,
Toronto, ON. M1H 3G5
Office : 416.290.1200


PAKEER
PAKERATHAN SAHADEVAN
Sales Representative

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## தேர்தல் களம் சூடு பிடித்துவிட்டது.

வழக்கத்தைவிட அதிகமான பரபரப்போடு களமிறங்கியிருக்கின்றன அரசியல் கட்சிகள்.

ரொரான்ரோ பெரும்பாகத்தில் அனைத்துத் தொகுதிகளும் தமக்கே என்ற வழக்க மான எதிர்பார்போடும், பொதுவாக லிபரலுக்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது என்ற கருத்துகணிப்பு மீதான நம்பிக்கையுடனும் அடுத்த ஆட்சியையும் தக்க வைக்கத் தயாராக இருக்கிறது லிபரல் மாநில அரசு.

ஒன்றாரியோ மாநிலத்தின் வெளிப்புறத் தொகுதிகள் தமக்கே என்ற எதிர்பார்ப்புட னும், மத்திய ஆட்சியின் ஆதரவு உண்டு என்ற நம்பிக்கையுடனும் வெற்றிக்காய் காத்திருக்கிறது கன்சவேட்டிவ் அணி. இவற்றுக்கு இடையே கணிசமான வாக்குகளை அள்ளிக் கொண்டு போகக் காத்திருக்கின்றது புதிய ஜனநாயகக் கட்சி.

இத் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் ஒன்றை உணர்ந்திருக்கின்றன, அதாவது அதிக அக்கறையுடன் வாக்களிக்கும் குடிவரவாளர்களே இத்தடவை வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றார்கள் என்பதுதான். பிரதான கட்சிகள் இந்த முடிவுக்கு வரக் காரணமாக இருந்தது கடந்த ஆண்டில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களே.

இதனால்த்தான் குடிவரவாளர்களை இலக்கு வைத்து வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன இக்கட்சிகள். புதிய ஜனநாயக்க கட்சி மற்றும் கன்சவேட்டிவ் என்பன ஒருபடி மேலாகச் சென்று குடிவரவாளரகளான சிறுபான்மை இனத்தவர் களை வேட்பாளர்களாக நிறுத்தியும் உள்ளன. வேட்பாளர்கள் யாராக இருந்தால் என்ன.... குடிவரவாளர்களின் வாக்குகள் தனக்கே என்ற வழக்கமான எதிர்பார்ப் புடன் காத்திருக்கும் லிபரல் அரசு இத் தடவை ஏமாறும் வாய்ப்பே அதிகம் உள்ளதா?. அதாவது ரொரான்ரோ பெரும்பாகத்தில் லிபரலின் சில தொகுதிகளைக் கைப்பற்றும் வாய்ப்பு இத் தடவை ஏனைய கட்சிகளுக்கும் கிட்டியுள்ளது. ரொரான்ரோ பெரும்பாகத்தில் லிபரல் மூன்று தொகுதிகளை இழந்தாலே வெற்றி வாய்ப்பை இழந்துவிடும் என அரசியல் அவதானி ஒருவர் தக் கருத்தையும் கூறி யுள்ளார்.

வழக்கத்தைவிட இத் தேர்தலில் ஆழமாகச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கும் குடிவர வாளர்கள் சரியான முடிவை எடுப்பார்கள்.

சில முக்கிய கட்சிகள் குறிப்பிட்ட இனம் சார்ந்த வேட்பாளர்களைக் களமிறக்கி யுள்ளது. அந்த வேட்பாளர்கள் சார்ந்த இனத்தின் வாக்குகளைக் குறிவைத்தே அவர்கள் களமிறக்கப்பட்டிருக்கின்றார்கள். இது அந்தந்த இனத்தின் பலம் சார்ந்தது. இது போலவே தமிழரின் வாக்குப்பலமும் கடந்த தேர்தலில் அடையாளம் காணப் பட்டது. அதன் விளைவே இத் தடவை தமிழர்கள் வேட்பாளர்களாக மாநிலத் தேர் தல் களத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இது பாரிய பொறுப்பை தமிழர்களுக்கு வழங்கியுள்ளது. தமிழர் போட்டியிடும் தொகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் பலம் தமிழ் வாக்குகளுக்கு முழுமை யாக இல்லை. இந்நிலையில் இவர்கள் வெற்றிக்காகப் போராட வேண்டிய தேவை அனைத்துத் தமிழர்களுக்கும் உள்ளது. பெறக்கூடிய இவ் வெற்றிகள் எமது எதிர் காலத்தை காத்திரமாக்கும் வல்லமை பெற்றவை என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்தத் தேர்தல் இரண்டு வாக்குப் பதிவுகளைக் கொண்டதாக அமையப் போகின் றது. விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான பொதுசன வாக் கெடுப்பும் நடைபெறப்போவதை அனைவரும் அறிவர்.

இது மிக முக்கியமானது. அனைத்துக் கட்சிகளும் பாராளுமன்றத்தில் அங்கம் பெறக்கூடிய வாய்ப்பை வழங்க வல்லது. சிறுபான்மை இனங்கள் தமது பிரதிநிதி- களைத் தெரிவு செய்யும் வாய்ப்பைக் கொண்டது. இப் பொதுசன வாக்கெடுப்பானது வெற்றி பெறுவதற்கு 60 சதவீத வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அதாவது அதிக அளவில் மக்கள் ஆதரவை இக் கோரிக்கை பெற வேண்டும். எம்மாலான பங்களிப்பாக ஒன்றாரியோ எங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களும் இவ்வாக் கெடுப்பில் பங்கு கொள்ள வேண்டும். ஏனையோரையும் தூண்ட வேண்டும்.

இதுவே எமது விருப்பமாகும்.

■ ■ ■

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

inayam
www.inayam.net
இது முற்றிலும் இலவசமான சேவை!!

# அசமந்த மனோபாவம்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

என்று பிறிதொரு சாரார் கேள்வி எழுப்புகின் றனர். "விடுதலை விரும்பிகள் யாவருமே பயங்கரவதிகள் தான்" என்ற நவீன மேற்கு லக ஜனநாயகக் கோட்பாட்டையே தாரக மந்திரமாக உச்சாடனம் செய்யும் இந்தக் கட்சிகளுக்கு இனியும் இரையாகத் தயாராக இல்லை என்பது இவர்களது வாதம். இதே வேளை ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சாத்தியமே இல்லாத ஒரு கட்சிக்கு வாக்க ளித்து எமது வாய்ப்புக்களை வீணடிக்க வேண்டுமா என மூன்றாவது கட்சி குறித்து அவநம்பிக்கை தெரிவிக்கும் மூன்றாவது சாராரும் எம்மவரிடையே காணப்படுகின் றனர்.

ஈழத் தமிழரது விடுலைப் போராட்ட முன் னெடுப்புக்களை ஒரு 'துடக்குச் சமாச்சாரம்' போலக் கருதிச் சில கட்சிகள் ஓரமாக விலகி ஒதுங்கி நின்றமையை தமிழ் மக்கள் மறந்ததாகத் தெரியவில்லை. இத்தருணங் களில், துணிச்சலோடு முன்வந்து, குரல் கொடுத்து, ஆதரவளித்தவர்களையும் இவர் கள் நன்றி மறந்து துறந்ததாகத் தெரிய வில்லை. தமிழ்ச் சிறுபான்மையினரின் பிரச் சினைகளை இதய சுத்தியோடு அணுகும் நேர்மையும் சிந்தனைத் தெளிவும் உள்ள கட்சி எதுவோ, அதுவே இவர்களது ஆதர வைத் தனதாக்கிக் கொள்ளும் எனத் தெரிகிறது. இதேவேளை எம்மவருக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும் என்ற இனப் பற்று றுதி காரணமாக, கட்சி பேதத்தைக் கடந்து, தமிழினத்தவர் தமிழ் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பர் என்பதுவும் உண்மையே!

சிறுபான்மை இனத்தவர்களது நலன்களுக்கு எதிரான கட்சிகளுக்காகக் காவடி எடுப்ப தால், காத்திரமான காரியம் எதுவும் எமக் குக் கைகூடப் போவதில்லை என்பதும், தேர்தல் காரியம் கைகூடிய பின்னர் எம் மைக் கறிவேப்பிலையாகத் தூக்கி வீசிவி டும் கட்சிகளையிட்டு – அவை எந்தக் கட்சி களாயினும் சரி - கவனமாக இருக்கப் பழ கிக்கொள்ள வேண்டும் என்பதும் வாஸ் தவம் தான்!

ஒன்றாறியோ மாநிலத்தில் கல்வி, அரசியல், பொருளாதாரம் என்பன உட்பட பல்வேறு துறைகளிலும் வேகமாக வளர்ந்துவரும் ஓர் இனமாகத் தமிழினம் கணிக்கப்பெற்று வரு கின்றது. இந்த நாட்டின் அரசியல் தலைவர் கள் தமிழனின் தயவுக்காகத் தலைவாசல் வரை தேடிவரத் தலைப்பட்டுள்ளனர். இந் நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே நோக்குடன் ஒன்றுபட்டு, எதிர்வரும் தேர்த- லைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் அநேகமானோர் ஆர்வ மாக உள்ளனர்.

"ஆர் குத்தினாலும் அரிசியானால் சரி" என்ற ஒருசிலரது அசமந்த மனோபாவம் அரசியலில் ஆரோக்கியமற்றது - ஆபத்தா னது! ஆசாபூதிகளிடம் உலக்கை அகப்பட் டால் அரிசியும் தேறாது – பசியும் தீராது! இந்த உண்மையை இங்குள்ள பெரும் பாலான ஈழத் தமிழர்கள் உணரத் தலைப் பட்டுள்ளமை, ஒரு பெரீரீரீய நிம்மதி!

■ ■ ■

# ஒன்ராரியோவில் குழந்தைகள்...

1ம் பக்கத் தொடர்ச்சி...

இதே சமயம் ஏறத்தாள 44,000 குடும்பங் கள் Child welfare service and parenting supports ஐ கடந்த வருடம் பெற்றுள்ளதாக Children's Aid கூறியுள்ளது. இது Stress, poverty, addiction and mental health prob- lems களுக்கு இந்த உதவி அளிக்கப்பட் டுள்ளது. இது 33 வீதமாக (2000-2001ல் இருந்து) அதிகரித்துள்ளது.

குழந்தைகளின் மீதான இந்த துன்புறுத்தல் பலவகைப்பட்டது. வன்முறை, கவனிக்கா மல் விடுதல்,மனோரீதியாக துன்புறுத்தல், உடல் ரீதியான துன்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல் என்று பலவகைப்பட்ட துன் புறுத்தலுக்கும் ஒன்டாரியோ குழந்தைகள் உள்ளாக்கப்படுகின்றனர்.

பெற்றோர்களோ உங்கள் குழந்தைகளுடன்



இது பற்றி பேசுங்கள். நீங்கள் உங்கள் குழந்தைகளை துன்புறுத்துகின்றீர்களா என்ற கேள்வியை அவர்களிடமே கேளுங் கள். மறந்த விடாதீர்கள், இம் மாதம் குழந்தைகளின் நலன் காக்கும் மாதம்.

■ ■ ■

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.


வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சு. சின்னையா
1-514-299-3186

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
e-mail: thaiveedu@gmail.com

CALL FOR MORE DETAILS 416.937.8090 OFFICE: 416.321.6969










**"Sitara"**

The largest South Asian Indoor Mall in North America

CANDLE BROOK CRES,
Warden & Finch

Open House on Saturday
Oct. 6th (3 pm – 6pm.)

- Gorgeous 4 Bdrm Home, 2800 sqft
- Two apartments in BSMT
- Close to all amenities
- Rare Opportunity don't miss it.

1470 MIDLAND AVE. # 401
Midland & Lawrence

- Luxuary Scarborough Fair Condo
- Bright Corner Unit
- 2+1 Br and 2 full w/Room

CELL: 416.937.8090 ஞானேந்திரன் நரசிங்கம்
CELL: 416.629.9797 ஜூடி ஞானேந்திரன்

Sales Representatives

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED




MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும் (Upgrading)

## புதிய வீடுகள் - வீடும் விடியலும்

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



புதிய வீடு கொள்வனவு செய்பவர்கள் மிகக் கவனம் எடுக்கவேண்டிய விடயம் தரம் உயர்த்துதல் பகுதியாகும். கட்டிட அமைப்பாளர்கள் வீடுகளைக் கட்டுவதைவிட, அவற்றைத் தரம் உயர்த்துவதிலேயே



அதிக இலாபம் ஈட்டுகின்றார்கள். அவர்கள் நன்றாகத் திட்டமிட்டு நுகர்வோரைக் கவரும் விதத்தில் மாதிரி வீடுகளை (Model Home) அமைத்திருப்பார்கள். விற்பனைத் திறன் கொண்ட விற்பனை முகவர்கள் கதைக்கும் விதம், பொருட்களைக் காண்பிக்கும் விதம் என்பவற்றில் இருந்து தப்பிக் கொள்வது மிகக் கடினம். எனவே, முன் கூட்டியே எவற்றைத் தரம் உயர்த்துதல் அதிக நன்மைதரும், எவற்றைத் தவிர்த்துக் கொண்டால் அதிகஇலாபம் தரும் என்பதை அறிந்துகொண்டு கட்டிட அமைப்பாளர்களிடம் சென்றால் அவர்களின் பொறியில் விழாது தப்பிக்கொள்ளலாம்.

புதிய வீடுகள் கட்டப்பட முன்னரே, மாதிரி வீடுகளையோ அல்லது படங்களையோ பார்த்து வீடுகளுக்கு முற்பணம் செலுத்தி புதிய வீடுகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கே தங்களது விருப்பத்தற்கு ஏற்ற விதத்தில் தரம் உயர்த்தும் பூரண சுதந்திரம் இருக்கும். மாறாக, ஏற்கனவே கட்டி முடிந்த புதிய வீடுகளை வாங்குபவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக் குறைவாக இருக்கும். எது எப்படி இருப்பினும் தரம் உயர்த்தும் சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து, அதற்கான முடிவுகளை உடனடியாக எடுக்கவேண்டிய அவசியம் கிடையாது. பொதுவாக கொள்வனவுப் பத்திரங்களில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பிறிதொரு நாளிலேயே இதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதற்கு முன்னர் எவற்றைத் தவறவிடக் கூடாது? எவற்றைத் தவிர்த்தல் வேண்டும்? என்பது பற்றி அறிந்து கொண்டு செல்லவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கட்டிட அமைப்பாளர்களிடம் வீடுகளைத் தரம் உயர்த்தும்போது செலவு மிக அதிகம் என்பது மறக்க முடியாத உண்மை. சாதாரண வேலையைவிட 2 அல்லது 3 மடங்கு விலை அதிகமாக இருக்க வாய்ப்பு உள்ளது. மறு வார்த்தைகளில் கூறுவதானால் 25,000 டொலரில் செய்யக்கூடிய வேலைக்கு கட்டிட அமைப்பாளர்கள் மூலம் செய்ய முற்படுமிடத்து, 50,000 தொடக்கம் 75,000 டொலர்கள் வரை செலுத்தவேண்டிநேரிடும். இதுபற்றி தனித்தனி உற்றுநோக்குதல் பொருத்தமாகும்.

### நன்மை, தீமைகள்

கட்டிட அமைப்பாளர்கள் மூலம் தரம் உயர்த்தும் போது ஏற்படும் செலவு முழுவதும் வீட்டின் விலையில் உள்ளடக்கப்படுவதால் அத்தொகை முழுவதும் அடமானத்துள் (Mortgage) அடங்கிவிடும். ஆதலால் செலவுத் தொகையை மாதாமாதம் வட்டியுடன் சேர்த்துக் கட்டி முடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதே சமயம் கறுப்புப் பணத்தை சட்டரீதியான சொத்தாக்க முனைபவர்களுக்கு இது பாதகமாகவே அமையும். அதாவது, அத்தகைய நோக்கம் கொண்டவர்கள் தனிப்பட்ட முறையில் வெளியாரைக்கொண்டு தரம் உயர்த்துவதே பொருத்தமாக அமையும்.

கட்டிட அமைப்பாளர்களிடம் எடுக்கும் தரம் உயர்த்தலுக்கு பூரண உத்தரவாதம் இருக்கும். அதாவது 1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையான 'Tarion' உத்தரவாதத் திற்குள் அவை உள்ளடக்கப்படலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் செய்யப்படும் தரம் உயர்த்தலுக்கு தனிப்பட்டவர்கள் தரும் உத்தரவாதத்தையே நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் தரமற்ற, தனிப்பட்டவர்களின் முறையற்ற வேலையால் ஏற்கனவே இருக்கக்கூடிய உத்தரவாதத்தை இழக்க வேண்டிய நிலையும் உருவாகலாம். எனவே, தரமான, அதிகாரம் பெற்றவர்களின் மூலமாக தரம் உயர்த்துதல் மிக அவசியமாகும்.

வீட்டிற்குள் பிரவேசிக்க முன்னரே பெரும்பாலான வேலைகளைக் கட்டிட அமைப்பாளர்கள் முடித்து விடுவார்கள். இதனால் வீட்டிற்குள் பிரவேசித்த பின்னர் ஏற்படும் சிரமங்கள், தூசு அழுக்குகள் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ள வாய்ப்புண்டு.

மேற்கூறப்பட்ட அசௌகரியங்களையும் பொறுத்துக்கொண்டு, அதிக அக்கறை எடுத்தால் பல ஆயிரக் கணக்கான டொலர்களைச் சேமிக்க வாய்ப்பு இருக்கிறது. அது பற்றி விரிவாக ஆராய்வோம்.

குறிப்பு: கொள்வனவு செய்யும் வீட்டில் நீண்ட காலத்திற்கு வசிக்கும் எண்ணம் உள்ளவர்களுக்கு மட்டுமே வீட்டினைத் தரம் உயர்த்துதல் மிகப் பலன் உடையதாக அமையும். குறுகிய காலத்தில் வீட்டை நல்ல விலைக்கு விற்று விட்டு வேறு வீட்டுக்கு மாறும் எண்ணம் கொண்டவர்களுக்கும், வீட்டை வாங்கி விற்பதையே ஒரு இலாபமீட்டும் தொழிலாகச் செய்பவர்களுக்கும் தரம் உயர்த்தலில் பணம் செலவழிப்பது இலாபகரமாக அமையாது. அதாவது தரம் உயர்த்துவதற்குச் செலவழித்த முழுச் செலவையும் ஒரு வீட்டை விற்கும் போது அதன் விற்பனை விலையில்இருந்து பெற்று விடமுடியாது. மறு வார்த்தைகளில் கூறுவதானால் தரம் உயர்த்திய பின்னர் விற்கும் வீட்டில் பெறும் இலாபத்திலும் பார்க்க தரம் உயர்த்தாது விற்கும் வீட்டில் அதிக இலாபத்தைப் பெறலாம் என்பது பொதுவான உண்மையாகும்.

### ENERGY STAR APPLIANCE AND FIXES:

ENERGY STAR

வீட்டைத்தரம் உயர்த்தும் போது "ENERGY STAR" என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டால் காலப்போக்கில் அதிகபலனைப் பெறமுடியும். உண்மையில் குறுகிய காலத்தில் இத்தகைய ENERGY STAR உபகரணங்களுக்கும் பொருத்துக்களுக்கும் செலவழிக்கும் பணம் ஒரு மேலதிக செலவுபோலத் தென்பட்டாலும் காலப்போக்கில் அதன் மூலம் அதிக இலாபம்

**அங்கம் - 20**

ஈட்ட வாய்ப்பு இருக்கிறது.

### 1.TOILETS:

தற்போது கட்டப்படும் வீடுகளில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அளவு தண்ணீரை உள்வாங்கும் toiletகளே பயன் படுத்தப்படுகின்றன. 20 லீற்றரில் இருந்து 13 லீற்றர் ஆகி 1996ம் ஆண்டில் இருந்து ஒன்ராறியோ கட்டிட நியமங்களுக்கு அமைவாக 6 லீற்றரை உள்வாங்கும் toiletகளே பயன் படுத்தப்படுகின்றன.

Figure 1 & 2 : Dual-Flush Toilet & Flush Selection



அதாவது ஒரு தரப் பாவனையில் 6 லீற்றர் தண்ணீர் செலவாகும். ஆனால் நாளாந்தப் பாவனையை எடுத்துக் கொண்டால் பல தடவைகள் சலம் கழிக்கும் போது ஒவ்வொரு தடவையும் 6 லீற்றர் தண்ணீரை விரயம் செய்வது வீணானது என்பது தெட்டத் தெழிவு. இதனைக் கருத்திற் கொண்டே DUAL - FLUSH toilets கள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. அதாவது சலம் கழிக்கும் சந்தர்ப்பத்தில் 3 லீற்றர் தண்ணீரைப் பயன் படுத்தவும், மலம் கழிக்கும் போது 6 லீற்றர் தண்ணீரையும் பயன்படுத்தலாம். இத்தகைய தரம் உயர்த்தல் மிக்க பயன் உள்ளது.

### 2. சாளரங்கள்:

பொதுவாக வீட்டில் உள்ள சாளரங்கள் வீட்டினை வெப்பமாக்கலிலும், கோடை காலங்களில் குளிராக வைத்திருப்பதிலும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. பல வகையான சாளரங்கள், பலதரப்பட்ட விலையிலும் பலதரப்பட்ட தரங்களிலும் சந்தைப் படுத்தப் படுகின்றன. தற்போதய சாளரங்கள் பெரும் பாலும் Double - Glaze ஆக இருந்தாலும் அவற்றிலும் பலதரப்பட்ட தரங்கள் உண்டு. Triple - Glaze சாளரங்களும் உள்ளன. பின்வரும் தன்மைகளைக் கொண்ட ENERGY STAR சாளரங்கள் காணப்படுகின்றன. பொதுவாகக் கனடாவில் 20% - 30% வெப்பம் அல்லது குளிர் சாளரங்கள் ஊடாக விரயமாவதாகச் சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. Energy Star சாளரங்களைப் பாவிப்பதன் மூலம் 9% - 18% செலவைக் குறைக்க முடியும் என ஆராய்ச்சிகளில் இருந்து அறியக் கிடக்கின்றது. எனவே சாளரங்களின் விலையையும் தரத்தையும் கவனித்து தரம் உயர்த்தல் நன்மை பயக்கும்.

தொடரும்...





ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations
Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# Buying or Selling Business / Property...

## UP TO $ 250,000 SMALL BUSINESS LOAN CAN BE ARRANGED

**Call for Complementary Market Evaluation & Professional Advice of your business or property**


**Fish farm**
Property with Business
Established Business with clientele
**$ 900,000**


**Keswick**
Fast food franchise
Good Rent
Sales Over 600K
**$ 200,000**


**Toronto**
Chicken place
Established Business
Easy to Run
**$ 350,000**


**Barrie**
Pizzaville Restaurant
Good Price!
Good Location
**$ 175,000**


**Gerogetown**
Bakery / Deli
36 Seats near industrial Area
Good Location
**$ 200,000**





**Simcoe**
Car wash with 2 Acres
Open 24 Hrs
Completely Touch less & Fully Computerized
**$ 700,000**


**West of Toronto**
Gas station
Successfuly Family Run Business
**$ 500,000**



**Toronto**
Molly maid Franchise Available
Good Location
**$ 150,000**



**Toronto**
Restaurant for Sale
Established Bar
Sale Over 700K
**$ 295,000**


**Scarborough**
Bottle Water Production / Distribution
Profitable Business
Established Almost 10 Years
**$ 320,000**

**CHANDRAN Sornalingam**
Real Estate Broker
**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED








வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்

**CEYLINGO FINANCIAL GROUP.**

# 416.430.0111

2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8


**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**


**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

## வீடு - வினாவும் விடையும்.

# கனடிய நாணயமும் வீட்டின் விலையும்



கருணா கோபாலபிள்ளை
வீடு விற்பனைப் பிரதிநிதி -

இணைபிரியாத வீடு வாசகர்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. சென்ற இதழில் பல ரின் ஆதங்கங்களை கேள்வி பதில் தரவு கள் மூலம் பார்த்தோம். அதன் அடிப்படை யில் எமக்கு கிடைத்த தரமான கேள்வி களுக்கான விளக்கங்களை இந்த இதழில் தொடர்வோம். குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருப்பதனால அவை சார்ந்த தகவல் களை ஆராய்வதே காலத்தின் தேவை.

- **ஒரு சாதாரண வீட்டினை பராமரிப் பதற்காக நாங்கள் செய்யும் செல வீனங்களை எவ்வாறு முற்கூட் டியே தெரிந்து கொள்வது?**

சாந்தினி.க
ஸ்காபுரோ

வீட்டிற்குரிய செலவீனங்கள் வீட்டின் தரம், அளவு, மற்றும் பாவனை முறைகளைப் பொறுத்து வேறுபடும். உதாரணமாக ஸ்காபுரோ பகுதியிலுள்ள மூன்று படுக்கை அறைகளையுடைய வீட்டினைப் பார்ப்பின், Mortgage செலுத்தும் தொகை தவிர்த்து, மற்றைய செலவீனங்களைப் பார்ப்போம். வீட்டுக்குரிய வரி (Property tax) வருடாந்தம் சுமார் $2200 தொடக்கம் $2500 வரை இருக்கும். வீட்டுக்குரிய தற்போதைய பெறு மதிக் கணிப்பீட்டின் பிரகாரம் இவ் வரி நிர்ணயிக்கப்படுகின்றது. மின்சாரம், இயற்கை எரிவாயு மற்றும் தண்ணீர் போன்றவை பாவனை அளவைப் பொறுத்து வேறுபடும். பொதுவாக மின்சாரம் மாதாந்தம் சுமார் $40- $50 வரை காணப்படும். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இவை கணக்கிடப்படுகின்றது. தண்ணீர் சுமார் $40-$50 வரையும் இயற்கை எரிவாயு சுமார் $180- $200 வரையும் மாதாந்தம் காணப்படும். இவை மட்டுமல்லாது வீட்டுக் கான காப்புறுதி $40-$60 வரை மாதாந்தம் காணப்படும். சராசரி கணிப்பீட்டின் பிரகா ரம் $250-$350 வரை செலவீனங்கள் மாறுபடும்.

- **வீடுகளுக்கான குளிர்கால பராமரிப்புக்கள் பற்றி...?**

செந்தில். வி
ஸ்காபுரோ

வீடுகளுக்கான குளிர்கால பராமரிப்புக்கள், பல வேறுபட்ட கோணங்களிலும் தேவைகளி லும் வசதிகளின் அடிப்படையிலும் தீர்மா னிக்கப்படுகின்றது. பொதுவாக குளிர்காலங் களில் வீட்டுக்குள் உள்ள வெப்பம் விரய மாகாமல் தடுப்பது, சீரான வெப்ப நிலையை பேணுதல், குளிர் உட்புகாவண்ணம் கத வோரங்கள் மற்றும் ஜன்னல் ஓரங்களை சரிபார்த்தல் மற்றும் வீட்டுக்கு வெளிப்புற பராமரிப்பு அதாவது றோஸ் போன்ற செடி களை மூடிப் பாதுகாத்தல் என்பனவும், Furnace Tune-ups. சூடேற்றிகளை துப்பரவு செய்வதுடன் தயார்படுத்துதலும் அவசியம்.

- **வளர்ந்து செல்லும் கனடிய நாண யத்தினால் எதிர்காலத்தில் வீடு களின் விலை எவ்வாறு மாறுவ தற்கு வாய்ப்புகள் உள்ளது?**

மகாதேவன். க
ஸ்காபுரோ

சுமார் 30 வருடங்களின் பின்னர் நாணய மாற்று விகிதம் சமநிலையை எட்டியுள்ளது. இது ஒரு சுழற்சியே. இருப்பினும் நாணய வளர்ச்சியால் நன்மைகளும் தீமைகளும் உண்டு. எமது பொருளாதாரம் அமெரிக்க வணிகத்தில் பெரிதும் தங்கியிருப்பதால், அமெரிக்காவில் ஏற்படும் மாற்றங்கள் எம் மையும் கணிசமாக பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளன. தற்போது வட்டி விகிதம் குறைக் கப்பட்டுள்ளது. அதன் பாதிப்பாக விரைவில் இங்கும் வட்டி விகிதம் குறைப்பது இடம் பெறலாம். ஜப்பான் போன்ற நாடுகளில் பொருளாதார வளர்ச்சியின் ஒரு கட்டமாக சமீப காலம் வரை வட்டி விகிதம் 0% ஆக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இவ் வாறு கடன் பெறுவது சுலபமாகின்ற பட்சத்தில் அனேகர் வீடுகளை வாங்கவோ அல்லது விலையுயர்ந்த வீடுகளுக்கு இடம் பெயரவோ வாய்ப்புகள் அதிகம். கடந்த வருடங்களில் சீரான வளர்ச்சியை கண்டு கொண்டிருக்கும் வீடு சந்தை நிலவரமானது தொடர்ந்து செல்லும் என்று சில ஆய்வாளர் களும், சமநிலையில் சிறிது காலம் இருக் கும் என்று சிலரும் கருதுகின்றனர்.

- **வீட்டுக்கு வெளியேயுள்ள A/C இயந்திரத்தினை மூடிப் பாதுகாப் பது அவசியம் தானா?**

மீனலோசினி
நோத்யோர்க்


இது பற்றி பலவிதமான சர்ச்சைகள் உண்டு. பொதுவாக வெளிப்புற சூழலுக்கு

> “ எமது பொருளாதாரம் அமெரிக்க வணிகத்தில் பெரிதும் தங்கியிருப்பதால், அமெரிக்காவில் ஏற்படும் மாற்றங்கள் எம்மையும் கணிசமாக பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளன. ”

ஏற்ப அமைக்கப்பட்ட கருவிகளே அவை கள். எந்த விதமான காலநிலைகளையும் தாங்கிக் கொள்ள வல்லன. மழைநீரோ, பனித்துளிகளோ உட்செல்வதனால் எந்த விதமான சேதங்களும் ஏற்படப் போவதில்லை. மாறாக மூடிப் பாதுகாக்காத வேளைகளில் வேண்டாத பொருட்கள் உட்செல்வதன் மூலம் ஏதாவது தடங்கல்கள் ஏற்படலாம். அதிக கவனத்துடன் பாதுகாப்பாக மூடி வைத்திருப்பவர்கள் A/C இனை இயக்கு வதற்கு முன்னர் மூடியினை அகற்றுதல் வேண்டும். ஏனெனில் A/C இன் மேற்புறமோ பக்கங்களோ காற்று உட்புகுவதற்கு ஏது வாக இருத்தல் அவசியம்.

- **நான் புது வீடு வாங்குவதற்காக**

18ம் பக்கம் பார்க்க...






# FOR YOUR REAL ESTATE AND MORTGATE NEEDS

**Buying or Selling Residential, Commercial, Land and Investment Properties**

Meet a Realty Expert

18 YEARS BANKING EXPERIENCE

- No Income / No Credit / New Immigrants
- Renewals / Refinancing / Switching
- Self Employed
- Bank Turn Down / Previously Bankrupt
- Amortization up to 40 years
- Fast Approval



## One Stop Solution

**Mobile Mortgage Service at your Door Step with Best Rates!**

**Pleasant Service with Lowest Commission Starting at 1%**

RE/MAX

**Nilani Ravindran**
Sales Representative
**Cell: 647.836.6502**
Associates Realty Inc., Brokerage
Independently owned and operated
900 Middlefield Road #4, Toronto, ON M1V 4X1
Tel: 416.293.1100, 416.293.6700



digi

Not intended to solicit properties currently listed for sale

# எமக்கென்று ஒரு தனிக்குழல்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# குழாய்களில் நீர் உறைவதினால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்த்தல்

செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

கனடாவில் வாழும் யாவரும் முகம் கொடுக்க வேண்டிய பனிக்காலம். ஒருவார விடுமுறையில் மத்திய அமெரிக்க நாடுகளில் ஓய்வு எடுத்துவிட்டு வீடு திரும்பும் வேளையில் நீங்கள் எதிர்பார்ப்பது வீட்டின் வெப்ப உலை சரியாக வேலைசெய்து, ஒரு நல்ல கொதி நீரில் குளித்துவிட்டுப் படுப்பதுவே. ஆனால், அதற்கு மாறாக உங்களை வேதனையின் உச்சத்திற்கே கொண்டு செல்லக் கூடிய விடயம் உங்கள் வீட்டுக் குழாய்கள் யாவும் உறைந்து வெடித்திருப்பதே.

உங்கள் வீட்டுக் காப்புறுதி உங்கள் நட்டத்தை ஈடுசெய்யும் என்று அமைதிகொள்ளலாம். ஆனால், அதற்கும் சில நிபந்தனைகள் உண்டு. நீங்கள் நாலு நாட்களுக்கு மேல் வெளியே செல்கையில் தினமும் வீட்டிற்கு ஒருவர் வந்து எல்லாம் சீராக உள்ளதா எனப் பார்த்துக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு. முக்கியமாக குளிர்காலத்தில் தினமும் ஒருவர் உங்கள் வெப்ப உலை சரியாக இயங்குகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். அல்லாவிடில் காப்புறுதி உங்கள் நட்டத்தை ஈடுசெய்யாமல் விடலாம்.

### உங்கள் நீர்க்குளாய் உறைந்தால் செய்யவேண்டியது என்ன?

முதலாவதாக குளாயை கொஞ்சம் திறந்து விடுங்கள், உறைந்த நீர் உஸ்னமடைந்து மெதுவாக வெளிவரும். நீங்கள் எங்கும் பயனிப்பதென்றால் (வேலைக்குப் போகும் வேளை) முழுமையாகத் திறப்பது நல்லதல்ல. ஒன்றில் வீட்டில் தங்கிவிடுங்கள் அல்லது வீட்டிற்கு உள்வரும் குளாயை மூடிவிடுங்கள்.

உங்கள் நீர் திரவமாக இருப்பதிலும் பார்க்க கூடிய கனமுடையதுமலல்லாமல் மிகவும் சக்திவாய்ந்ததுமாகும். அதற்கு குழாயை உடைப்பதற்கு வேண்டிய வலு உள்ளது. மேலும், கொதி நீர் ஓடும் குழாய் தண்ணீர் செலுத்தும் குழாயிலும் விரைவாக உறைந்துவிடும். நீங்கள் எந்தக் குழாய் உறைந்துள்ளது என்ற தெரிந்தால் அதனை முதலாவதாக உருகச் செய்யலாம். அதற்கு குழாய் உறைந்துள்ள இடத்திற்கு வெப்பத்தை ஊட்டலாம். இதற்காக இரும்பை ஒட்டுவதற்குப் பாவிக்கும் விளக்கை (Welding torch) ஒருபோதும் பாவிக்க வேண்டாம். அப்படிச் செய்வதால் முழு வீட்டிற்கும் நெருப்புப் பரவி, பெரும் நட்டத்தை ஏற்படுத்தக்கூடும். குழாயை உஸ்ணப்படுத்துவதற்கு தலைமுடி உலர்த்தியைப் பாவிக்கலாம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா?

குழாய் நீர் உறையும் எல்லா வேளையும் குழாய் பழுதாகும் என்பதில்லை. ஆனால், அவை பெரும் நட்டத்தை ஏற்படுத்தக் கூடுமாகையால் அதில் வல்லுனரைக் கொண்டு கவனிக்க வேண்டும்.

### குழாய்கள் உறை வதை எப்படித் தவிர்க்கலாம்?

வருமுன் காத்தல் எப்போதுமே நலமல்லவா? எனவே, எப்படி குழாய் உறைவதைத் தவிர்க்கலாம் என்று கவனிப்போம்.

பொதுவாகக் குழாய்கள் உறைவதற்கு இரு காரணிகள் உண்டு.

- முதலாவது, தொடர்ச்சி யாக பல தினங்களுக்கு கொடிய குளிர் நிலைப்பது.
- இரண்டாவது, குழாய் புறச் சுவர்களுக்கு மிக அண்மையில் இருப்பதுடன் போதிய அளவு insulation இல்லாதிருப்பது.

இயற்கையின் சீதோஷணத்தை ஒருவராலும் மாற்ற முடியாது. ஆனால், உங்கள் குழாய்களுக்கு தகுந்த insulation தரலாமல்லவா? சுற்றாடல் சீதோஷணம் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால், உங்கள் குழாய்களுக்குத் தகுந்த இன்சுலேசன் தருவதும், புறச் சுவர்களுக்கு தக்க இன்சுலேசன் தருவதால் குழாய் வெடிக்கும் விபத்தைத் தவிர்க்கலாம். புறச் சுவர்களில் இருந்து காற்று உட்புகாவண்ணம் இன்சுலேற் பண்ணுவது மிக முக்கியம். இவை குழாய்களில் நீர் உறைவதைப் பெரிதும் தவிர்க்கும்.

பலசந்தர்ப்பங்களில் புறச்சுவர்களின் உள்ளும் புறமும் சில திருத்தவேலை செய்யவேண்டி வரலாம். உதாரணமாக புறச் சுவர்களில் கற்களுக்கிடையில் உள்ள சிமெந்துக் கலவை வெடித்து உடைந்திருந்தால் அவற்றை உடனே சரிசெய்ய வேண்டும். ஒரு சிறு வெடிப்புக்கூடாக வரும் குளிர் குழாயை வெடிக்கச் செய்யலாம்.

இது நெடுங்கால தீர்வு அல்ல. ஆனால், திருத்துவதற்கு ஆள்வரும் வரை குழாயை சற்று திறந்து வைப்பது நீர் உறைவதைத் தவிர்க்கும். ஆனால், இப்படி நெடுங்காலம் விடுவது அறிவுடமை அல்ல. ஆனால், உடனடியாகதக்க நடவடிக்கைகளை எடுப்ப தவசியம்.

வீட்டின் உரிமையாளர் என்ற நிலையில் உங்களுக்கும் சில கடமைகளும் எதிர்பார்ப்புகளும் உண்டு. மிக முக்கிய எதிர்பார்ப்பு குழாய் வெடிப்பதால் ஏற்படும் நட்டத்தை இயன்றவரை குறைவாய் இருக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உங்கள் காப்புறுதி நிறுவனம் எதிர்பார்க்கும். உதாரணத்திற்கு வீட்டிற்குள் வரும் குழாயை உடனே நிறுத்திவிட வேண்டும். இயன்ற அளவு நீர் உள்ள இடங்களிலிருந்து உங்கள் உடமைகளை அப்புறப்படுத்த வேண்டும். அடுத்து, காப்புறுதி ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு ஏற்பட்ட அனர்த்தத்தைத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் நீங்கள் செய்யவேண்டியதை உடன் அறிவிப்பார்கள்.

பொதுவாகக் குழாய்கள் வெடித்து ஏற்படும் அனர்த்தங்கள் பெரும் நட்டத்தை ஏற்படுத்துவதுடன், இவை பெரும்பாலும் பேஸ்மென்ரில் தான் நடக்கும். எனவே, வீட்டு உரிமையாளர்கள் பேஸ்மென்ரை வாடகைக்கு விடும் வேளைகளில் அதைக் காப்புறுதி அமைப்புக்கு அறிவித்திருப்பது அவசியம்.

■ ■ ■

$100,000
லைவ் இன்சூரன்ஸ்
மாதம் $12.42 மட்டுமே
புகை பிடிக்காத 35 வயது ஆணுக்கு, 10 வருட தவணைக் காப்புறுதி
உங்களுக்கான மாதக்கட்டணத்தை அறிய அழையுங்கள்...

KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave. Toronto. ON
Unity Life of Canada
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
கென் கிருபா
காப்புறுதி முகவர்
416 294 9322
E&OE

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

**Mccowan/Steeles**



**$254,900**

3 Bedrooms, 2 Washroom, Prime Location At A Realistic Price And Premium Lot - Backs Onto Mccowan Rd. - No Neighbours Behind!

**Markham/14th**



**$325,000**

3 Bedrooms, 3 Washroom, Remington Model-Duke!!!Most Popular Spacious & Immaculate Home.

**Middlefield/14th Ave**



**$329,000**

3 Bedrooms, 2 Washroom, Immaculate & Cozy Home, Premium Lot & Extra Long Driveway With Lots Of Upgrades

**14th Ave &Markham**



**$349,000**

3 Bedrooms, 3 Washroom, Clean, Bright, Beautiful, Ceramic In Hall, Kitchen, Washroom, Appliances, Neutral Decor Thru-Out

**Markham Rd/ 14th Ave**



**$364,500**

3 Bedrooms, 3 Washroom, Spectacular Home In A Great Locatio, Many Upgrades, Fabulous Living/Dining/Family & Kitchen

**Markham & 14th Ave**



**$369,900**

3+1 Bedrooms, 4 Washrooms, Absolutley Well Maintained, Beautifull Decorated King Model Plus Basement Apt With Seperate Entrance

**Lawrence/Orton Park**



**$105,000**

2 Bedrooms, 1 Washroom, Beautifully Maintained, Update Kitchen, Upgraded Wiring To Breakers


**Markham/Eglinton**



**$115,000**

2 Bedrooms, 2 Washroom, Large Spacious Unit Balcony, Steps To Ttc, Schools, Shopping, Priced To Sell Fast.

**Mccowan/Eglinton**



**$176,800**

2+1 Bedrooms, 2 Washroom, Newly Renovated Spacious Unit. Excellent Condition! Renovation Includes New Laminate Flooring

**Westney/Hwy 2**



**$239,900**

3 Bedrooms, 2 Washroom, Ideal For The First Time Buyer, Fantastic Neighbourhood. Very Close To Hwy 401

**W.Oak Tr / 3rd Line**



**$299,900**

3 Bedrooms, 3 Washroom, End Unit!Hardwood Floors.Modern Shaker-Stlye Kitchen Cabinets.Neutral Colours Througout


**Lawrence & Manse**



**$309,000**

3+1 Bedrooms, 3 Washroom, Close To Schools, Transit, Go Station, Park, Library, Amenities.


**Yonge/Major Mac**



**$334,500**

3+1 Bedrooms, 3 Washroom, uge Fully Fenced Yard. Great Opportunity! Don't Miss This! All Elfs

**Markham/Mclevin**



**$334,900**

3 Bedrooms, 3 Washroom, Beautiful 5 Years New, 3 Bedroom. Stunning Unique Design. Many Upgrades Throughout.


**Church & Rossland**



**$369,900**

4+1 Bedrooms, 4 Washroom, Very Attractive & Well Kept Home, Approximately 2500 Sq Ft. Very Attractive & Well Kept Home, Approximately 2500 Sq Ft.


**Morningside/Finch**



**$369,900**

3 Bedrooms, 3 Washroom, Almost 5 Years New. New Carpet, Newly Painted. Larger Lot. Family Room With Gas Fireplace.


**Mccowan & 16th Ave**



**$379,000**

4 Bedrooms, 3 Washroom, New Home-Never Lived In*4 Bedroom Detached-Linked By Garage Only*Great Location

**Markham/14th**




**$479,000**

4+2 Bedrooms, 4 Washrooms, Gorgeous 10+ 4-Bdrm 2500 Sq Ft Home, Circular Oak Staircase

***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***


**Kingston/Harwood**




**$169,000** **Plus Stock**

This Family Owned Single Newer Store In The Business Since 1967, Used To Be High Volume Macs Store. Located In A Densely Populated Area.

**Eglinton / Markham**



**$1,250,000**

Neighbourhood Commercial Plaza. Fully Leased - 4 Retail Units. Busy Eglinton Ave. Near Home Depot.

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**



digi Media Creations - 416.467.4952

**Elaguppillai (Mike) Srinathan,** B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

esrinathan@trebnet.com

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

HOMELIFE HIGHER STANDARDS

# வங்கிகள், நிதி நிறுவனங்களுடன் பிரச்சினைகள்!

# தீர்வு என்ன?

## அறியவில்லையானால்றிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்



சிவ
பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

கனடாவில் இயங்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் வாடிக் கையாளர் ஒருவருக்கு ஏதாவது ஒரு வழி யில் "முரண்பாடுகள்", "இழப்புகள்" "அதி ருப்தியீனங்கள்" என ஒன்று ஏற்படுமானால் அதனை முறைப்பாடு செய்து நியாயம் பெற்றுக்கொள்ளும் நியாய மன்றங்கள் வங்கிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் எதுவிதமான செலவுகளும் இல்லாது தீர்வு வழங்கத் தயாராயுள்ளன என்பதனை அறிந்து கொண்டீர்களா?

முறைப்பாட்டினை ஒழுங்கு விதிகளின்படி மனுச்செய்துவிட்டால் போதும்; நியாயம் இரு ந்தால் அது தேடி வரும். வங்கிகள், நிதி நிறுவனங்களுடன் ஏற்படும் அதிருப்திகளை உதாரணமாக பின்வருமாறு குறிப்பிடலாம்;

- **கடன் அட்டைகள், வங்கி அட்டை களில் ஏற்படும் மோசடிகள், பிரச் சினைகள்**
- **வங்கிக் கணக்குகளில் ஏற்படும் பிரச்சினைகள்**
- **அடமானக் கடன்களின் கொடுப் பனவுகளும் தாமதங்களில் ஏற்படும் தேவையற்ற தண்டனைகளும்**
- **வாடிக்கையாளரை நோக்கிய வங்கி யின் நடவடிக்கைகளில் உருவாகும் உதாசீனங்கள்**
- **முதலீடுகள், கடன்கள் தொடர்பாக வங்கி உத்தியோகத்தர்கள் செய்யும் தவறுகள்**

இப்படி ஏராளமான பிரச்சினைகளை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இங்கு வாடிக்கையாளர்களின் பிரச்சனை-களை நடுநிலையோடு அலசி ஆராய்ந்து தீர்த்து வைப்பவரை வட அமெரிக்காவின் ஆங்கில அகராதியில் "Ombudsman" எனக் குறிப்பிடப்படும். இப் பதவியில் உள்ளவரை ஒரு நீதிபதி எனக் குறிப்பிடும் நிலை இருந் தாலும் பிரச்சினைகளை ஆராய்ந்து விசா ரித்துத் தீர்க்கும் ஒரு 'நடுவர்' எனக் குறிப் பிடலாம். இந்நடுவரின் கீழ் உள்ள திறமை மிக்க ஊழியர்களும், இவ் அலுவலகமும் மிகப் பெரிய பணியினை, பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களை நோக்கி ஆற்றிக் கொண்டுள்ளனர்.

கனடாவில் உள்ள வங்கிகள், நிதி நிறுவ னங்கள் ஆகியவற்றுடன் வாடிக்கையாள ருக்கு உள்ள பிரச்சினைகளை விசாரித்துத் தீர்க்கும் இந்நடுவர் மன்றத்தின் விவரங்கள் பின்வருமாறு:

**Ombudsman for Banking Services & Investment**
P.O. Box 896
Station Adelaide,
Toronto, ON
M5C 2K3
Tel: 1-888-451-4519
Fax: 1-888-422-2865
Email: ombudsman@obsi.ca
**மின் தகவல் மையம்:** www.obsi.ca

இந்நிறுவனத்தின் மின்கணனி தகவல் மையத்தினுள் தமிழிலும் விபரங்கள் உள் ளன. மேற்குறிப்பிட்ட நிறுவனம் முறைப்பாட் டினை முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடைசி நிறுவனம். கனடாவின் சகல வங்கி கள், நிதி நிறுவனங்களுடன் வாடிக்கை யாளரோடு உள்ள பிரச்சிகைளை எது விதமான வக்கீல் செலவோ, சட்டச்செலவு களோ இன்றி தீர்த்துவைக்கும் ஒரு சிறு நியாய மன்றம்.

> "கனடாவின் சகல வங்கிகள், நிதி நிறுவனங்களுடன் வாடிக்கையாளரோடு உள்ள பிரச்சிகைளை எது விதமான வக்கீல் செலவோ, சட்டச் செலவுகளோ இன்றி தீர்த்துவைக்கும் நியாமன்றம் ஒன்று செயல்பட்டுக்கொண்டே உள்ளது."

ஆனால், இந்நியாய மன்றத்திற்கு பிரச்சினை ஒன்றினை முன்னெடுப்பதற்கு முன்பு ஒவ்வொரு வங்கி, நிதி நிறுவனத்திற்கு உள்ளேயும் பிரச்சினை-களைத் தீர்க்கும் நியாயமன்றம் ஒன்று செயல்பட்டுக்கொண்டே உள்ளது. முதலில் அவர்களுக்கு முறைப்பாடு செய்து, அவர்கள் சரியான தீர்வினைத் தராவிட்டால் மட்டுமே மேல் குறிப்பிட்ட சகல வங்கிகள், நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் நியாய மன்றத்திற்கு பிரச்சினையினை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே இங்கு உள்ள ஒழுங்கு விதியாகும். கனடாவில் உள்ள சில வங்கிகளின் உள்ளே இயங்கும் நியாய மன்றங்களின் விபரங்கள், விலாசங்கள் பின்வருமாறு:

**TD Bank Financial Group office of the Ombudsman**
P.O. Box 01, Toronto - Dominion Centre
Toronto, ON M5K 1A2
Tel: 1–888-381-0319 or 416-982-4884
Fax: 416-983-3460
Email: TD.Ombudsman@td.com

**Royal Bank Financial Group Office of the Ombudsman**
P.O. Box 01, Royal Bank Plaza
Toronto, ON M5J 2J5
Tel: 1-800-769-2542 or 416-974-4591
Fax: 416-974-0922
Email:ombudsman@rbc.com

**Scotia Bank Ombudsman**
44, King St. West
Toronto, ON M5H 1H1
Tel: 1-800-785-8772 or 416-933-3299
fax: 1-866-787-7061
Email: ombudsman@scotiabank.com

**Bank of Montreal Financial Group Ombudsman**
55, Bloor St. West, 8th floor
Toronto, On, M4W 3N5
Tel: 1-800-371-2541
fax: 1- 800-766-8029

**CIBC Bank Ombudsman,**
P.O.Box 342, Commerce Court,
Toronto, ON, M5L 1G2
Tel: 1- 800-308-6859 or 416-861-3313
Fax: 1- 800-308-6861 or 416-980-3754
Email: ombudsman@cibc.com

மேற்குறிப்பிட்ட வங்கிகளின் தனிப்பட்ட நியாய மன்றங்களுக்குப் பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு முன்பு, எந்த வங்கிக் கிளையில் பிரச்சினை உள்ளதோ முதலில் அந்த வங்கிக் கிளையின் அல்லது குறிப் பிடப்பட்டபிரிவின் அதி உயர் அதிகாரிக்கோ அல்லது அப்பிரிவுகள், கிளைகளில் உள்ள வாடிக்கையாளர் சேவை பிரிவுக்கோ

**தகவல் தொடர் - 10**

(Customer service Department) முறைப் பாடு செய்து, தீர்வு காண முடியாவிட்டால் குறிப்பிட்ட வங்கிகளின் நியாய மன்றத்திற் கும், அங்கும் தீர்வு கிடைக்காவிட்டால் சகல வங்கிகளையும் கண்காணிக்கும் மேலே விலாசம் குறிப்பிடப்பட்ட நியாய மன்றத்திற்கும் முறைப்பாடு செய்யுங்கள். பிரச்சினைகளைத் தீர்க்க தயாராக உள் ளோம் என இவ் நிறுவனங்களின் சட்ட ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரி! இந்த வங்கிகளுடன் உள்ள பிரச்சினை களை நியாய மன்றத்திற்கு முன் எடுத்து தீர்வு கண்ட நேரடி அனுபவங்களுக்கு வருவோம்.

**இது எனது நேரடி அனுபவம்!**

கனடாவில் உள்ள வங்கி ஒன்றின் ஊடாக கம்பனிகளின் பங்குகளை வாங்கி விற்று லாபம் உழைக்கும் தொழிலை மெல்ல மெல்ல செய்து வந்த என்னோடும், என் நண்பர் ஒருவருடனும் இதே வங்கியில் பங்குகள் வாங்கி விற்பனை செய்யும் உயர் அதிகாரி ஒருவர் (Bank stock Trading Broker) எங்களுடன் தொடர்புகொண்டு, தமது அதிகாரத்தினையும் திறமையினையும் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களாகிய எங் களில் சிலரை உபயோகப்படுத்தி, எங்கள் சார்பில் பங்குகள் வாங்கி விற்கும் தீர்மா னங்கள் எடுக்கும் பொறுப்பினை எடுத்துக் கொண்டார்.

பங்குகளின் வளர்ச்சிபற்றி நுண்ணறிவு படைத் தவர் என்பதால், இவ்வளர்ச்சியின் லாபத்

17ம் பக்கம் பார்க்க...

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999



இந்த அழகிய வீட்டை வாங்க
விரும்புகிறீர்களா?
240 Bedrooms, 78 Washrooms, 825,000 square feet, 40 acre garden, 1500 doors, 750 windows, movie theatres, swimming pools, many more..
இன்னும் பல வசதிகள்... அது
பக்கிங்காம் அரண்மனை
துரதிஷ்டவசமாக அது விற்பனைக்கில்லை. ஆனாலும் என்னால் உங்களுக்கு பொருத்தமான, பிடித்த அழகியதோர் இல்லத்தை வாங்கித் தரமுடியும்.

SHRI PARAMSOTHY
Sales Representative
Dir: 647.285.4663
Office: 905.812.9000, fax: 905.812.6909
shri@shri.ca, www.shri.ca
COLDWELL BANKER
TERREQUITY REALTY, BROKERAGE,
Independently Owned And Operated
2690 Erin Centre Blvd., Unit A5,
Mississauga, ON L5M 5P5



# புதுப் புல்லு புது நாத்து

6ம் பக்கத் தொடர்ச்சி...

(இது மிக விரைவில் முளைவிடுவதுடன், பின்னர் மிக மெதுவாக வளர்கிறது). முதல் சில கிழமைகளில், விதைப்படுக்கையின் மேல் நடந்து செல்வதைத் தவிர்க்கவும். மென்மையான முளைகள் மிதிபடுவதை தாங்கமாட்டா. புற்கள் 4-5 அங்குலங்கட்கு (10-12 செ.மீ) வளர்ந்த பின்னர், நீங்கள் வெட்ட விரும்பினால் வெட்டலாம். இது புற்கள் வளர்ந்த 4-6 கிழமைகட்குப் பின்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒரு களைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க வேண்டுமென நீங்கள் நினைத்தால், விதைத்த பின்னர் 6 கிழமை வரை பொறுத்திருங்கள். சில இடங்களில் மற்ற இடங்களைப் போல் அடர்த்தியானதாக இராவிடில், இவை போதியளவு விதைகளைப் பெற்றிராததாக இருந்திருக்கும். இந்த இடங்களின் மேலாக விதைகளைத் தூவுவதற்கு பயப்பட வேண்டாம். இந்த இடங்கள் வெளியாக இருந்தால், உங்கள் புற்தரைகளினுள் களைகள் ஊடுருவ வழி ஏற்படும்.

## சூழற்புற்தரையை வெட்டுதல்

பாரம்பரிய "நன்கு வெட்டிய புற்தரை தன்மையை" நீங்கள் விரும்பினால், இடையிடையே வெட்டுதல் அவசியமாகும். உங்கள் புல்வெட்டும் இயந்திரத்திற்கு கூரிய அலகுகள் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இதன் மூலம் புல்லிற்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். உங்கள் புல்வெட்டும் இயந்திரத்தை 3 அங்குல (7.5 செ.மீ) உயரத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள். 3 அங்குலத்திற்கு குறைவாக வெட்டும் போது உங்கள் சூழல் புற்தரைக்கு சேதத்தை ஏற்படுத்தும். எல்லா தாவரங்களையும் போல சூழற் புற்தரையும், உயிர் வாழ்வதற்கு, ஒளித் தொகுப்பு செயல்முறை தேவைப்படும். புற்களின் வளர்ச்சியின் 1/3 பகுதிக்கு குறைவாக வெட்ட வேண்டாம். மிகவும் குட்டையாக வெட்டுவது புல் வளர்ச்சியைப் பாதிப்பதுடன் அதன் பலத்தையும் குறைக்கும். மக்கள் தமது புற்தரைகளை மிகவும் குட்டையாக வெட்டுவது மிகவும் பொதுவான புற்தரை பிரச்சனைகளுள் ஒன்றாக உள்ளது.

## ஏற்கனவே இருக்கும் புற்தரைகளை சூழல்புற்தரைகளாக மாற்றுதல்

ஏற்கனவே ஒரு பாரம்பரிய புற்தரை காணப்பட்டால், குறைந்த பராமரிப்புள்ள சூழல்புற்தரையாக மாற்ற வேண்டுமெனில், நீங்கள் பின்வரும் வழிகளை பின்பற்றலாம்.

## சேதன மாற்றம் (Organic Conversion)

விரைவான மாற்றத்திற்கு, பழைய புற்தரையை 2-3 அங்குல ஆழத்தில் வெட்டி முற்றிலுமாக அகற்றி விட வேண்டும். பின்னர் நன்கு கிளறி கூட்டி, ஓர் விதை மேடையை உருவாக்கவும். பின்னர் விதையைப் பரவி மண்ணினுள் விதைகள் உள் செல்லுமாறு கிளறி விடுங்கள். முடிந்தால் புற்தரையை மட்டமாக்கும் உபகரணத்தால் நிலத்தை மட்டமாக்குங்கள்.

இன்னோர் முறையாக, ஏற்கனவே காணப்படும் உங்கள் புற்தரையில் 4 அங்குலத்திற்கு புதிய மண்ணையிடுங்கள். நீங்கள் புதிய மண்ணை வாங்கும் போது வேறு ஒருவருடைய நிலத்தில் இருக்கும் களை களையும் வாங்குகின்றீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இம்முறையில் உள்ள குறைபாடு இதுவாகும். இச் சந்தர்ப்பத்தில் மேலே விவரிக்கப்பட்டபடி, நீங்கள் இந்த களைகளை அகற்ற வேண்டும்.

## சேதனமற்ற மாற்றம் (Non – Organic Conversion)

ஏற்கனவே இருக்கும் புற்றரையில் களை-களை, களை நாசினியைக் கொண்டு அழிக்கலாம். சந்தையில் சூழலுக்கு ஏற்றவாறான புதிய சேதன களை கொல்லிகள் காணப்படுகின்றன. இவை நன்கு வேலை செய்யக் கூடியவை. அநேகமான களைகொல்லிகள் செயற்படுவதற்கு 2 கிழமைகள் காலம் எடுக்கும். உங்கள் பழைய புற்தரை இறந்து போனால், இறந்த புற்களையும் கழிவுகளையும் அகற்றி கடினமாக கூட்டுவதன் மூலம் இறுக்கமாக்குங்கள். அல்லது உங்கள் பழைய புற்தரையில், இறந்த புற்களுக்கிடையில் இலகுவாக விதையுங்கள். இறந்த புற்களுக்கிடையில் நேரடியாக விதைக்க வேண்டுமெனில், உங்கள் புதிய சூழல் புற்தரையினால் பழைய இறந்த புற்களை மறைப்பதற்கு 8 கிழமைகள் எடுக்கும். அத்துடன் உங்கள் புற்தரை இக் காலப்பகுதியில் கபில நிறமாகக் காட்சியளிக்கும்.

## உங்கள் சூழல் புற்தரையை பராமரித்தல்

உங்கள் சூழல் புற்தரை அமைக்கப்பட்ட பின் மிக வரண்ட பருவத்தில் மட்டுமே நீங்கள் நீர்ப்பாய்ச்ச வேண்டியிருக்கும். நீர் விட வேண்டும் என நீங்கள் எண்ணுவீர்களாயின், அடிக்கடி மெல்லிய தூறலாக நீர் விடுவதை விட எப்போதாவது நன்கு நீர் நிரம்பக் கூடியதாக நீர்ப்பாய்ச்சுவது சிறந்ததாகும். இதன்மூலம் வேர்கள் ஆழமாகச் செல்வதற்கு வழிவகுப்பதுடன், புற்களை அதிக வரட்சியைத் தாங்கக் கூடியதாக்குவீர்கள். தேவையெனின், வசந்த கால ஆரம்பத்தில் அல்லது கோடைகால பிற்பகுதியில் மட்டும் மிகச் சிறியளவில் இடலாம். நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகியவற்றின் சமனான அளவுடனான வளமாக்கியை சிறிதளவில் இடல் சிறப்பானதாகும். இதன் மூலம், புற்கள் ஆரோக்கியமாகவும் அதே சமயம், வெட்டத் தேவையில்லாத அளவு மேல்வளர்ச்சி குறைவாகவும், இருக்கக் கூடியதாக பலம் வாய்ந்த வேர் வளர்ச்சிக்கு உதவும். அதிகுறைந்த வளமாக்கியிடல், நீர்ப்பாய்ச்சல் என்பவற்றுடன் குறைந்தபராமரிப்பு, குறைந்த செலவு மற்றும் ஆரோக்கியமான சூழலை நீங்கள பெறமுடியும். அடர்த்தியான, ஆரோக் கியமான புற்றரையானது களைகள், நோய், வரட்சி, பூச்சித் தாக்கம் என்பவற்றுக்கெதிரான சிறந்த பாதுகாப்பாக அமையும். வருடாந்த அடிப்படையில் உங்கள் சூழல் புற்தரையை அளவுக்கதிகமாக விதையிடலானது, புதிய வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உங்கள் சூழல் புற்தரையை அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். அத்துடன் குளிர்காலத்தில் ஏற்படும் சேதம், பூச்சிகள் மற்றும் ஏனைய சேதங்களிலிருந்து விரைவாக மீளமைக்கவும் இவ் விதையிடல் உதவுகின்றது.

எப்படா இதிலிருந்து ஒரு விடுதலை கிடைக்கும் என எண்ணியிருந்த எம்மில் பலருக்கு கிடைத்தது நிம்மதி.

■ ■ ■

Restaurant For Sale

Markham

80 Seats + Patio

மார்க்கம் நகரில் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு

$79,900

416 302 7283

!! BUYERS ALERT !!

Birchmount & Ellesmere

DON'T MISS IT

Luxury Condo
2 Bedroom + 2 Washroom
Available Immediately

விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லத்திற்கு....



www.PowerofSaleHome.com

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive, Unit #208, Toronto, ON. M1H 3G

Suresh Sellathurai
Sales Representative
Dir. : 416.356.7330

Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.

# வங்கிகள், நிதி நிறுவ...

15ம் பக்கத் தொடர்ச்சி...

தில் ஒரு சிறு பகுதி இரகசியமாகத் தமது மனைவியின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட கம்பனி பெயரில் அறவிடும் உடன்படிக்கையும், வாடிக்கையாளராகிய எங்களில் சிலருடன் கைச்சாத்திட்டார். அவரது நடவடிக்கைகளும் தொடர்ந்தது.

எங்கள் சார்பில் எங்களின் அனுமதியில்லாது துரித கதியில் பங்குகளின் வாங்கல், விற்றல் என நடந்து இறுதியில் ஏராளமான பணம் நட்டம். எங்கள் பணத்தில், தமது பதவியில் ஒரு சுறுசுறுப்பான முகவர் எனக் காட்டி பதவி உயர்வு பெற முயற்சிப்பதே அவரது நோக்கம் என்பதைப் பின்னர் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

பிரச்சினை உச்ச கட்டத்தில் வந்தபோது இதனை அந்த வங்கியின் நியாய மன்றத்திற்கு முறைப்பாடு செய்தோம்.

ஒரு வங்கி ஊழியரின் இரகசியமான செயல்பாட்டினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளருக்கு இழப்பீடு தரவேண்டியது வங்கியின் பொறுப்பு என்பதே எங்கள் வாதம். நியாய மன்றத்தின் தீர்ப்பின்படி, அந்த குறிப்பிட்ட கனடாவின் வங்கி வாடிக்கையா-ளர்களான எங்கள் இருவருக்கும் இழப்பீட்டினை வங்கி தந்து தீர்க்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, இழந்த பணம் திரும்பி வந்தது.

இந்நேரடி அனுபவம் தவிர வங்கிகளின் மின் கணணி தகவல் செய்தி பிரிவுகளில் இருந்து எடுத்துக்கொண்ட இன்னொரு சுவையான அனுபவம்!

வங்கியொன்றின் வாடிக்கையாளர் ஒருவருக்கு கடந்த 2005இல் கணக்கிலிருந்து 4,900 டொலர் பணம் அவருக்கு எதுவும் தெரியாது வெளியே போயிருந்த விடயம் ஆச்சரியமாக இருந்தது. உடனே குறிப்பிட்ட தமது வங்கிக் கிளைக்கு ஓடிப்போய் விசாரித்தார்.

வங்கிக் கணக்கு திறந்தபோது வழங்கப்பட்ட மாதிரி காசோலையில் இவர் மாதிரி மோசடி கையெழுத்திட்டு பணம் சூறையாடப்பட்டது தெரியவந்தது. ஆனால், வாடிக்கையாளர் ஒருவர் தமது காசோலையினை இன்னொருவர் கைக்குப் போகவிடாமல் பத்திரமாக வைத்திருக்கவேண்டிய கடமைப்பாடு உள்ளது என்ற சட்டத்தினைக் குறிப்பிட்டு, இம்மோசடிக்குத் தங்களால் இழப்பீடு வழங்க முடியாது எனக் குறிப்பிட்ட வங்கி கைவிரித்துவிட்டது.

இது பின்னர் நியாய மன்றத்தின் விசாரணைக்கு வந்தது. காசோலைகளைக் கவனமாகப் பாதுகாக்கத் தவறியது வாடிக்கையாளரின் தவறு! கையொப்பத்தினைக் கூர்மையாகப் பரிசீலனைசெய்யாது பணத்தினை வெளியே போகவிட்டது வங்கியின் தவறு. இருவரின் தவறுக்கும் தீர்வாக பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக அரை வாசிப் பணம் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இன்னொரு அனுபவம் 2004இல் நடந்தது. வங்கியின் வாடிக்கையாளர்களான தம்பதிகள் தாம் தற்போது குடியிருக்கும் வீட்டினை விற்றுவிட்டு, இன்னொரு வீட்டுக்கு மாற நினைத்த நேரம், வங்கிக்குப் போய் தங்கள் வீட்டு அடமானக் கடனை ரத்து செய்து, வாங்கவிருக்கும் வீட்டிற்கு அடமானக் கடன் எடுக்கப் போகும்போது, ஏற்கெனவே இருந்த வீட்டின் அடமானக் கடன் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிக்கு முன்னர் முறிக்கப்படுவதால் வங்கிக்கு 4,000 டொலர் தண்டப்பணம் செலுத்த வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், சில மாதங்களின் பின்னர் இவர்கள் புதிய வீடு வாங்கிய பின்பு இவ்வடமானக் கடன் முறியடிக்கப்பட்டபோது தண்டப் பணம் 5,900 டொலர் எனக் கணக்கிட்டு வங்கி அறவிட்டிருந்தது. ஒப்பந்தத்தில் உள்ள சரியான தண்டப்பணம் 5,900 டொலர். ஆனால் அதனைக் குறைத்து 4,000 டொளர் என தவறாகக் குறிப்பிட்டுவிட்டனர்.

இப்பிரச்சினை நியாய மன்றத்திற்கு விசாரணைக்கு வந்தது, இது வங்கியின் தவறு என நியாயம் வழங்கப்பட்டு, மிகுதி 1,900 டொலர் வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக ஒரு விடயம்!
கனடாவில் உள்ள தமிழர்களுக்கு இப்படி வங்கிகளோடு உள்ள நடவடிக்கைகளில் ஏராளமான பிரச்சினைகள் ஏற்கனவே வந்திருக்கலாம்.

இனிமேலும் வரலாம்!

இப்படி பிரச்சினைகளை எதிர்கொண்டவர்களுக்கு நியாயமான முறையில் எதுவித மான செலவும் இல்லாமல் தீர்த்து இழப்பீடுகளைத் திரும்பப் பெறும் விடயங்களை எவ்வளவு தூரம் அறிந்துகொண்டீர்கள்? அறியவில்லையானால் இன்றிலிருந்து அறிந்துகொள்ளுங்கள்!

(இன்னுமோர் விடயம்!
இந்த வங்கிகளின் நியாய மன்றங்களில் கனடாவாழ் எம் ஈழத் தமிழர்கள் பலர் பணியாற்றுகிறார்கள் என்பதும் ஒரு பெருமையான விடயம். சில இடங்களில் தீர்வு வழங்கி கைச்சாத்திடும் கடிதம் அனுப்பும் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருப்பது சகல தமிழரையும் தலை நிமிரவைக்கும் விடயம்!)

■ ■ ■

Cube Truck

For Sale

Ford E 450

A/C 23,0000 k.m
Year 2000

Call:
647 887 3997

For Rent

2 Bed Room + Den For Rent

Brand New Condo

Kennedy & Sheppard
Never Lived In, Continent
Location

Asking $ 1400.00

Possession - Immediate

416-845-8272
416-418-5749

Buy & Sell Residential and Commercial Properties



Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative

416-726-8055
416-299-8570

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

$ 339,900



Markham/Elson

2 years old semi with 4 bedrooms and 3 Wr. Includes all appliances

$ 328,900



Markham & Steels

Semi bright and excellent condition. Parquet in living and Dining. Close to TTC.

$369,900



Nightstar/Morningside

Immaculate Condition, Main Floor Hardwood Flooring, Many Upgrades, Pot Lights, Premium Lot Size, 9 Ft. Ceiling, Access To Garage From House. Close To School, Steps To Ttc.

$ 404,900



Markham/14th Ave.

Gorgeous home with 3 Bed room, 3 Wash room. Living, Dining and Family room with hard wood floor

$ 339,000



Neilson/Finch

Beautiful detached with 3 Bedroom and 3 washrooms. Close to TTC and school

$ 375,900



Dixie & Peter Robertson
Brampton

Beautiful home in Absolutely Awesome Premium Wide Lot with 4 Bedroom, 4 Washroom. Finished apartment with Sep. Ent. Close to Trinity mall, School and Transportation

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

416-726-8055

# கனடிய நாணயமும்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

**கடந்த வருடம் பணம் செலுத்தி யிருந்தேன். அவர்கள் நாட்களை பிற்போட்ட வண்ணம் உள்ளனர். இப்போது இருக்கின்ற வீட்டினை விற்காமல் புது வீடு வாங்கிய வுடன் இதனை விற்பதென்றால் எவ்வாறு நான் முற்பணம் செலுத்த முடியும்?**

காந்தன். வே
ஸ்காபுரோ

இதுபோன்ற சந்தர்ப்பங்கள் இடம் பெறுவது வழமை. இவை மட்டுமன்றி இருக்கின்ற வீட்டினை விற்பதற்காக சந்தைப்படுத்தி விற்க முன்னரே வேறு வீடு வாங்கும் பட்சத்தில் முதலீடு செய்யும் தொகைக்காக பல சிரமங்கள் ஏற்படலாம். இவைகளுக் காக "Bridge Mortgage" என்று சொல்லப் படுகின்ற கடன் வழங்கும் முறை கையாளப் படுகின்றது. இம்முறையானது இருக்கின்ற வீட்டினை அடமானமாக வைத்து (வீட்டி லுள்ள முதல்) புதிதாக வாங்குகின்ற வீட்டி னை பெற்றுக் கொள்வதாகும். அதன் பின்னர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் அடமானமாக வைத்த வீட்டினை விற்ற பின் கடனை மீள செலுத்தலாம். அனேக Mortgage நிறுவனங்கள் இம்முறையை கையாள்கின்றனர். இதற்கான படிவங்கள் முற்கூட்டியே உரிய முறைப்படி ஒழுங்கு செய்தால் கடைசி நேர இடர்பாடுகளை தவிர்க்கலாம்.

- **நான் தொடர்மாடிக் கட்டடம் ஒன் றில் வசித்து வருகின்றேன். எனது வருமானத்திற்கு ஏற்ப வீடு ஒன் றும் வாங்கும் எண்ணம் எனக்கும் மனைவிக்கும் உண்டு. Mortgage எங்களுக்கு கிடைக்குமா? என்கி ன்ற ஆதங்கமும் எவ்வாறு ஆரம் பிப்பது என்பதும் தான் எமது நிலைப்பாடு.**

சுரேஸ்குமார்.ப
பிராம்டன்

"வருமானத்திற்கு ஏற்ப வீடு வாங்கும் எண்ணம்" என்றவுடனேயே என்னைப் பொறுத்தவரை நீங்கள் தகுதியானவர் தான். கடன் வழங்கும் நிறுவனங்கள் மூன்று முக்கிய விடயத்தினை கருத்தில் எடுப்பார் கள்.

- ஒன்று நீங்கள் கொடுத்த கடனை முறைப்படி (நாள் தவறாமல்) திருப்பி செலுத்தும் வழமையுடையவரா?
- இரண்டாவது உங்களுக்கு போதிய வருமானம் உண்டா?
- மூன்றாவது நீங்கள் வாங்கும் வீட்டின் பெறுமதிக் கணிப்பீடு.

இவைகளுக்காக பல காரணிகளை மைய மாக வைத்து முடிவுகள் மேற்கொள்ளப் படுகின்றது. நாங்கள் கடன் மீள் செலுத்து வதில் எவ்வளவு கிரமமாக உள்ளோம் என்பதனை "Credit Report" மூலம் தெரிந்து கொள்ளலாம். உங்களின் உடன்பாட்டுடன் Mortgage செய்பவர்கள் அதனை பெற்றுக் கொள்வார்கள். மற்றயது வருமானம். வரு மானம் என்று சொல்லும்போது, குடும்ப வருமானம் கணக்கிடப்படுகின்றது. கணவன் மனைவி அல்லது சகோதரர்கள், பிள்ளை கள், யார் யாரெல்லாம் ஒரு வீட்டினை சேர்ந்து வாங்குகின்றார்களோ அவர்களின் வருமானத்தினை சேர்த்து பார்க்கலாம். உதாரணமாக உங்கள் குடும்ப வருமானம் $80,000 ஆக இருப்பின், நீங்கள் $240,000 வரை கடன் பெற தகுதி பெறுவீர்கள் (கடன் அட்டைகளின் கடன் இல்லாத பட்சத்தில்) இவை தரவுகள் மாத்திரமே. ஒவ்வொரு விண்ணப்பமும் தனிப்பட்ட ரீதியில் வேறு படும். அவைகளை சீரமைப்பதே இத்துறை சார் வல்லுனர்களின் கடமை.

- **இரண்டு மாதங்களுக்கு முன்னர் நான் புதிதாக குடியேறிய வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இதன் Basement இனை தயார் படுத்த முனைந்த போது பலர் இரண்டு வருடங்களுக்கு செய்யக் கூடாது என்கிறார்கள். இது உண்மையா?**

ரமணன். வ
மார்க்கம்

இக் கூற்று உண்மையானதா என்பதனை விட, ஏன் அவ்வாறு சொல்கிறார்கள் என் பதனை பார்ப்பதே தகும். புதிதாக நிர்மா ணிக்கப்படும் வீடுகள் படிமானத்துக்கு வரும் போது அத்திவாரங்களில் வெடிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வாறு ஏற்படும் வெடிப்புக்களால் தண்ணீர் கசிவு ஏற்படுமா யின் அதனை சீர் செய்வது உட்புறமாக மேற்கொள்வது இலகுவானது. நீங்கள் Basement இனை finish பண்ணினால் இதனை வெளிப்புறமாக மட்டுமே சரி செய்ய முடியும். அது மட்டுமன்றி வீட்டிற்கான Builders Warranty இது போன்ற திருத்த வேலைகளை செய்யாமல் விடக்கூடிய சாத் தியக் கூறுகள் உள்ளன. மாறாக, அத்தி வாரங்களுக்கிடையில் ஏற்படும் Settlement Crack இனை வெளிப்புறமாக சீர் செய்வ தற்கு இப்போது சுமார் $250-$300 வரை-தான் செலவாகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் நான் அறிந்தவரை சுமார் $2,000-$3,000 வரை அறவிட்டார்கள். சாதாரண மாக ஒருவீடு படிமானத்துக்கு வரும் வேளை களில் இரண்டு அல்லது மூன்று வெடிப் புக்கள் தான் ஏற்படும். சில வேளைகளில் ஒன்று கூட வருவதும் இல்லை. வருமானத் தையும் செலவீனத்தையும் கருத்தில் கொண்டு நீங்கள் முடிவு செய்யலாம்.

- **Hot water tank இலுள்ள Control Dial எந்த அளவில் இருப்பது சக்தி சேமிப்புக்கு உகந்தது?**

வான்மதி. வி
பிராம்டன்

உற்பத்தியாளரின் வடிவமைப்புக்கு ஏற்ப "Control Dial" வேறுபட்ட அமைப்புக்களில் காணப்படும். கனடாவில் 6 வயதுக்கு உட் பட்ட குழந்தைகள் உள்ள வீட்டுச் சொந்த க்காரர்கள் $120^0$F க்கு குறைவாக தண்ணீர் வெப்பநிலையை வைத்திருக்க வேண்டியது சட்டமாகும். அனேகமான சந்தர்ப்பங்களில் $120^0$F தொடக்கம் $130^0$F வரையும் நீங்கள் வைத்திருந்தால் (அதாவது 'MED') எரி வாயு சேமிப்பு மாத்திரமன்றி கடும் சூடான நீரின் பாதிப்புக்களையும் தவிர்க்கலாம். கொண்டாட்ட காலங்களிலோ வீட்டில் அள வுக்கு அதிகமானவர்கள் தங்கும் வேளை களிலோ சற்று அதிகரிப்பு செய்வதன் மூலம் சுடுநீர் தட்டுப்பாட்டை கட்டுப்படுத் தலாம்.

நேயர்களே, உங்கள் அனேகரது வினாக்க ளுக்கும் விடைதர இடம் போதவில்லை. இருப்பினும் முடிந்த வரை முயன்றுள்ளேன். மீண்டும் உங்களுக்கு வீடு, Mortgage சம்பந்தப்பட்ட கேள்விகள் இருப்பின் தயவு செய்து கீழ்காணும் தொலைநகல் இலக்கத் திற்கு அனுப்பி வைக்கவும். 416-849 0594 அல்லது thaiveedu@gmail.com.

■ ■ ■

கணபதி இரவீந்திரனின்

**நாடகப் பெருவிழா**

ஒக்ரோபர் 27

647-274-7829

647-408-1417

**வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க...**


1700 Sq. Space For Lease For Any Retail. Or Plaza For $1,250,000 Net Income $82,000


15000 Sq. Plaza Asking Only $1,500,000


Canadian Restaurant Asking Only $39,000


Space For Any Retail In Brand New Plaza Available October 2007


Tamil Catering! Asking Only $69,000


Italian Restaurant With Property And Apartment Asking Price $649,000



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206
Toronto, ON. M1S 2Y3
416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

Your #1 choice agent for commercial properties!

Commission as low as 1% *
* some conditions apply.



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416.880.8585**



சலரோக உபாதைகளிலிருந்து நீங்குவதற்கான ஆரோக்கிய பானம்!
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
Diabina
மலச்சிக்கல் மற்றும் குடல் உபாதைகளுக்கான நிவாரணி!
கொன்சிடாப் மூலிகைப் பானமானது மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது. மூலவியாதி, வாயுப் பிரச்சினையினால எழக்கூடிய அடிவயிற்று வலியை தவிர்க்க உதவுவதோடு பசியை அதிகப்படுத்தவும், நீரோட்ட தொழிற்பாட்டை சீராக வைத்திருக்கவும் உதவுகிறது. எவ்வித அசௌகரியமின்றி சிறுநீர் கழிக்கக்கூடிய சக்தியை வழங்குகிறது.
Consitap
உடலின் கெடுதியான கொழுப்பைக் குறைத்து உடல்த்தென்பைப் பேண வேண்டுமா?
க்லுாட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லுாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
Gluteala
லோங்லைஃப் ஆனது முற்றிலும் இயற்கையான மூலிகையினைக்கொண்டு இருப்பதால் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம். இருப்பினும் இது குறிப்பாக நோய் எதிர்ப்புச் சக்தியினை பலப்படுத்துவதற்கும், பசியை அதிகப்படுத்தற்கும் அத்துடன் அடிவயிறு உஷ்ணத்தை தடுத்து எரிவைத் தடுக்கவும், சிறுநீரகப் பிரச்சினையிலிருந்து நிவாரணமளித்து உடலிலிருந்து கழிவுப் பொருட்களை சீரான முறையில் வெளியேற்ற உதவியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.
LongLife
The ERVAMATIN™ HAIR LOTION
provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, thin Hair, baldness, fragile and dry hair.
Hair Lotion
Haarlotion
Eruamatin
Herbal Scrub
Scrub
Henna
SABONA
www.mediherbs.ca & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

## கனேடிய தமிழ் கலைஞர்கள் கழகம், பாரதி கலைக்கோயில் வழங்கும்

கே. எஸ். பாலச்சந்திரனின்

# “ அண்ணை றைற் ”

முதலான தனிநடிப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு
இறுவட்டு (CD) வெளியீட்டு விழா




**October 7th 2007**
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.00க்கு

**இடம் மாற்றப்பட்டுள்ளது**

இடம்: **Agincourt Community Centre**

**31, Glen Watford Drive, Scarborough, Ontario**
Main Intersection: Midland and Sheppard (On Sheppard)

தொடர்புகளுக்கு: **(416)529-2821, (416)457-8424, (416)400-6406, (416)520-9771, (416)893-0399**




எல்லோரையும்போல் அல்ல நான்.
புதிதாகச் சொல்ல நிறையவே உண்டு.



digi Media

**Guna Selliah**
Life Insurance Broker

RBC
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**416.371.7776**


வீடு வாங்க, விற்க...
Royal Team ஐ அழையுங்கள்.......
Over 30 Team Members Serving in your Area
Karu Kandiah FRI. CRES
Real Estate Broker
19 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்......
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!!
Ranked # 7 in all of Canada-2006
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA
THE CHAIRMAN'S CLUB
NATIONAL Award Winner 2003-2006
Top 1% in Canada
Praba Jeganathan*
Chandran Sornalingam*
Siva Kandiah*
Charles Deva*
Malini Muhunthan*
Ranjan Franics Xavier*
Naren Sanbasivam*
Joy Emmanuel*
Sri Ganesh Thambaiah*
Ananthi Selvasivam*
Neelan Thambiah*
Paul Premraj*
Austin Flavius*
Ken Seyan*
Kumar Varatharajah*
Raj Ariyam*
Ganesh Thangarajah*
Meera Ram*
Ramanan Ramachandran*
Pharmacy/Finch
- 3+1 Bedrooms, 2 Washrooms
- End Unit Like A Semi!
- Well Maintained Complex
- Close To Ttc Bus Stop, School & Mall, 404 & Seneca College
$ 229,900
Taunton/Baycliffe-Whitby
- 4 Bedrooms, 3 Washrooms
- Corner Lot 3200 Sq Ft. 4 Years Old, 9'Ceiling On Ground Fl
- Close To 4 Schools,3 Pakrs & Major Shopping Centres
$ 479,000
Rossland/Harwood (Ajax)
- 4 Bedrooms, 4 Washrooms
- Premium Lot Of Montebello Enclave. Over 3000 Sq. Ft.
- Upgraded Kitchen Tall Cabinets
- Prof Landscaped & Fully Fenced
$ 464,900
Markham/Denison
- 3 Bedrooms, 3 Washrooms
- Brand New Home!
- Living/Dining Has Hardwood Floors
- Location! Location! Location!
$ 399,900
Staines/Steeles
- 4 Bedrooms, 4 Washrooms
- Executive Yorkwood Home
- Over 3900 Sq. Ft
- Hardwood Floors & Clalf Shutters On Both Floors
$ 599,900
Markham Rd/14th Ave
- 5 Bedrooms, 5 Washrooms
- Appr 4000 Sq Ft 2-Storey
- Gleaming Hdwd Thru-Out Main & 2nd Floor
- Close To Park, Schools, 407
$ 624,900
Mccowan/Denison
- 5+2 Bedrooms, 3 Washrooms
- Stunning House, Monarch Built.
- Basement Finished, Interlocking Driveway, Double Enclosed Porch
- Close To Schools, Shopping,407
$ 599,900
Sheppard/Neilson
- 4+3 Bedrooms, 2 Washrooms
- Superb Brick Bungalow Fenced Backyard
- Close To Hwy 401, Ttc, Schools Shopping
$ 299,000
Neilson/Mclevin
- 1 Bedrooms, 1 Washroom
- Lake View From Lr&Balcony
- Ceramic Floor In Foyer
- Steps To Medical, Shopping, Mall, T.T.C, Schools & 401
$ 122,000
Rossland/Garrard
- 4 Bedrooms, 3 Washrooms
- Custom Built Brand New Home
- About 2800 Sq.Ft, 9 Ft Ceiling in Main Floor
- Hardwood Floor & Staircase Beautifully Stained
$ 439,900
Kennedy/Steeles
- 3+1 Bedrooms, 3 Washrooms
- Finished 1 Bedroom Basement
- New Interlock Walkway In 2004
- Walking Distance To Pacific Mall, School
$ 409,900
Steeles/Middlefield
- 4+2 Bedrooms, 5 Washrooms
- Spacious 4 Bedroom House With Sep.Entrance To Basement
- Live Upstairs & Rent 2 Units In The Basement
$ 489,000
New Price
Midland/Eglinton
- Medical/Dental Office
- Finished Basement(800 Sq Ft.)
- This Is An Investment Property Allowing Mulpiple Uses Currently Used As Medical Walk-In Clinic
$ 749,000
Bur Oak/Mccowan
- 4 Bedrooms, 3 Washrooms
- California Shutters, 9' Ceiling New Fence
- Close To Go Station, Plaza & Schools.
$ 439,000
Pickering
- 7 Bedrooms, 4 Washrooms
- 4-Plex With Address Corner Unit
- Enough Parking, 4 Fridges
- Closer To School, Shopping & Hwy 401
$ 550,000
SOLD
16th/9th Line
- 3 Bedrooms, 3 Washrooms
- Upgraded Eat-In Kit Including Backsplash,Removable Island & Seperate Mud Rm
- Close to Hosptl,Bus,Schools
$ 334,900
Mccowan/Steeles
- 2+1 Bedrooms, 2 Washrooms
- Hardwood Floor, Laminated Floor, Ceramic Tiles, New Paint
- Close To School, Library & Shopping Mall, Steps To Ttc
$ 196,900
Hwy 401/Mill St
- 2 Bedrooms, 1 Washroom
- Brand New Condominium With Excellent Views Of Lake Ontario
- Very Good Place For Living And Boating & 748 Sq.ft
$ 187,000
Markham/Finch
- Commercial/Retail
- Over 1100 Sq Ft
- 4 Professionally Finished Offices With 1 Kitchen, Bathroom
- Close To Public Transit, Mall
$ 145,000
Warden/Finch
- 2 Bedrooms, 1 Washroom
- Well Maintained Building In High Demand Area
- Close To Schools, Malls, Ttc, Library, Hwy 401 & 404
$ 149,900
Keele/Finch
- 2 Bedrooms, 1 Washroom
- Ultra Large Inspiring West View
- Proposed Subway, Banks, York University, Schools, Shops, Go Station & More
$ 159,900
Warden/Finch
- 3+1 Bedrooms, 2 Washrooms
- End Unit Like Semi! Lowest Maintenance Fee
- Close to Schools, Library, Mall Ttc(24Hrs), Park
$ 199,900
Kennedy/Eglinton
- 1+1 Bedrooms, 1 Washroom
- In House Daycare, Ensuite Laundry
- Excellent Location 24 Hour Gate Security, Walk To Subway
$ 149,900
Midland/Lawrence
- 2 Bedrooms, 2 Washrooms
- Newer Paint, Clean & Bright
- Ensuite Laundry, Indoor Swimming Pool, Exercise Room
- Close To Ttc,Rt,Shops & School
$ 174,900
Vithi Thillainayaham*
Ragu Paramsothy*
Roger Kuhan Thambiah*
Nitharshan Kumar*
Saba Ganeash*
Kannan Kankesu*
Siva Ratheesan*
Murali Kanagasbai*
Sajanthan Shan*
* Sales Representative
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Tel: 416-284-5555
880 Ellesmere Road. Suite 203, Scarborough, ON
www.royalteamonline.com

# உயரப் பறந்தாலும் லூணி கழுகாகுமா?


மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -




**கடந்த வார இறுதி - கோடை காலத்தின் கடைசி வார இறுதி.** இந்த வார இறுதியை கனடிய பெருங்குடி மக்கள் அமெரிக்க எல்லையில் நீண்ட வரிசையில் காத்திருந்து கொண்டாடினார்கள். இதற்குக் காரணம் கனடிய நாணயம் வலிமை மிக்க அமெரிக்க நாணயத்திற்குச் சமனாக வந்து விட்டது. இதை அமெரிக்காவுக்குச் சென்று, அங்கு எதை மலிவாக வாங்கலாம் என்ற நோக்கத்துடன் அமெரிக்க எல்லையில் காத்திருந்தார்கள் கனடிய நாட்டுப் பற்றாளர்கள்.

இதற்குக் காரணம் - என்னதான் கனடிய நாணயம் அமெரிக்க நாணயத்தின் பெறுமதியை அடைந்து விட்டாலும், பொருட்களின் விலை இன்னும் அமெரிக்காவில் சராசரியாக 24 வீதம் மலிவு என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இப்போது அமேசன், ஈபே போன்ற பெயர்களைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இந்த நிறுவனங்களுக்காக பொருட்களைப் பட்டுவாடா செய்யும் நிறுவனமான TSB Shipping Plus என்ற நிறுவனத்தின் பேச்சாளர் கனடிய விநியோகத்தின் பொருட்களைச் சேமிக்கும் பகுதி (Storage ware house) நிறைந்து விட்டதாகவும், இன்னும் இடம் வாங்க வேண்டியதன் அவசியத்தையும் தெரிவித்துள்ளார். இவர் மேலும் கூறுகையில் கனடியர், அமெரிக்காவில் எதை வாங்குவது என்றில்லை. கார் இயந்திரங்கள், ரயர்கள், வீட்டில் பாவிக்கும் சொகுசு ஆசனங்கள் என பல்வேறுபட்ட பொருட்களை வாங்குகிறார்கள் என்றார். இது போல பல நிகழ்வுகள் அமெரிக்க எல்லையில் எல்லா மாநிலங்களிலும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

> “*Lament for a Nation* என்ற புத்த கத்தில் இறந்துகொண்டிருக்கும் கனடிய இறைமையை, ‘வற்றிக் கொண்டிருக்கும் ஒரு ஏரிக் கரையிலே இறந்துகொண்டிருக் கும் மீனுக்கு’ ஒப்பிடுகிறார்”

அண்மையில் கனடிய, அமெரிக்க பொருட்களின் விலைகளை ஒத்துப் பார்த்த Bank of Montreal பொருளியல் அறிஞர் ஒருவர் இந்த Big Mac இன் விலைகூட இந்த நாணயத்தின் வலிமையைக் காட்டவில்லை எனக் கவலை தெரிவித்தார். இந்த அறிக்கைக்கு அவர் கொடுத்த தலைப்பு The Price is wrong.

சில சந்தர்ப்பங்களில் கனடாவிலும் அமெரிக்காவிலும் கடைகள் வைத்திருக்கும் நிறுவனங்கள் விற்கும் பொருட்களின் விலைகள் கனடாவில் அதிகமாகத்தான் இருக்கின்றது.

இந்த கனடிய டொலர் அமெரிக்க நாணய பெறுமதியை அடைந்ததனால் அமெரிக்காவில் பொருட்களை வாங்குவதால் சேமிக்கப்படக்கூடிய அளவை குழந்தைகளும் கணக்கிடக்கூடியதாக இருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள Bellis Fair Mall இல் உள்ள Jc Penny, Target போன்ற நிறுவனங்களின் நடத்துனர்கள் தங்களது வாடிக்கையாளர்களில் 35 வீதமானோர் கனடியர்கள் என்று தெரிவித்துள்ளனர். கடந்த கோடை காலத்தைவிட இந்த கோடை காலத்தில் 20வீதம் விற்பனை அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஒரு Toyota Dealership கனடியர்களுக்கு விற்கும் கார்களின் எண்ணிக்கை மூன்று மடங்காகி இருக்கிறது எனத் தெரியவந்துள்ளது. ஒருவர் அமெரிக்காவிற்கு பஸ்ஸில் வந்து, காரை வாங்கி கனடிய சுங்கத்தால் அதை வெளியே எடுக்கும் வரை 3 நாட்கள் ஒரு மோட்டலில் தங்கிச் சென்றதை அந்த விற்பனை முகவர் நினைவுகூர்ந்தார். இவற்றுக்குப் பின்னால் அந்தக் காரை வாங்கியவர் 3000 டொலர் மட்டில் சேமித்திருக்கக்கூடும் என்றார் அந்த முகவர். ஆனாலும் கார் விலை இடைவெளி குறைந்துகொண்டு வருகிறது.

ஆனாலும் 1991ஆம் ஆண்டில் CAD$, 89¢ US ஆக இருக்கும்போது, கனடியர்கள் அமெரிக்காவிற்குச் சென்ற அளவு இன்னும் கடக்கப்படவில்லை. இதற்கு கனடாவில் தற்போது வந்துள்ள புதிய சர்வதேச சில்லறைக் கடைகள் காரணமாக இருக்கலாம். அல்லது அமேசன்(Amazon) அல்லது ஈபே(eBay) காரணமாக இருக்கலாம். ஏனென்றால் 1991இல் இன்ரநெற் வியாபாரம் இருக்கவில்லை. இதில் எல்லையற்ற நேரம் காத்திருக்கத் தேவையில்லை. வாங்குவதை மிக இலகுவாக்கிவிட்டது இது.

கனடிய நாணய பெறுமதியுடன், எல்லோரும் வேலையுடன் இருப்பதும் கனடியர்களின் வாங்கும் சக்தியை அதிகரித்து விட்டது. இன்ரநெற் தொழில்நுட்பம் இதை இலகுவாக்கிவிட்டது.

இதனால் கனடிய நிறுவனங்கள் விலைகளைக் குறைப்பதுபற்றியோ அல்லது கனடிய அரசு வரிகளை மீளப் பரிசோதிப்பது பற்றியோ சிந்திக்க வேண்டும். இது எப்படி இருந்தாலும் அமெரிக்காவில் பொருட்கள் மலிவு என்ற மக்களின் அபிப்பிராயத்தை மாற்றுவது கடினம்.
இந்த நேரத்தில் George Grant என்பவர் எழுதிய Lament for a Nation என்ற புத்தகத்தில் இறந்துகொண்டிருக்கும் கனடிய இறைமையை, ‘வற்றிக் கொண்டிருக்கும் ஒரு ஏரிக் கரையிலே இறந்துகொண்டிருக்கும் மீனுக்கு’ ஒப்பிடுகிறார். இதிலே என்ன புதினமான விடயம் என்றால் இந்த நாட்டுப் பற்றாளர் எழுதிய அந்தப் புத்தகத்தைக்கூட அமெரிக்காவில் 3 டொலர் மலிவாகப் பெறுக்கொள்ளலாம் என்பதுதான்!

■ ■ ■






# COMMERCIAL MORTGAGE

- Commercial Interest starts from 5.5%
- New Business Loans
- Bussiness Loans
- New Plazas

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

- Ist & 2nd Mortgage
- Commercial Mortgage
- Re-Finance to get rid of your loans
- Bridge Financing
- Cottage Properties Financing
- Up to 90% LTV
- Non-Permanent Residents
- Rental Properties Financing
- Self-Employed
- No Money Down Mortgage



**K.N. KANNAN**
Mortgage Consultant
**Montréal: 1-514-787-9486**
**Tel: 416-854-6183**
Office: 416.273.8232
Fax: 416.214.1999
inviskana@gmail.com, www.invis.ca

HSBC The world's local bank
FIRST NATIONAL FINANCIAL LP
INTERBAY FUNDING, LLC

2857 Lawrence Ave. E, Suite 11, Scarborough, ON M1P 2S9
90 Kennedy Rd. S., Unit C, Brampton
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, On M9C 1A3

## ‘வீடு’ வரை உறவு! ‘வீதி’ வரை மனைவி!

# ‘காடு’ வரை பிள்ளை! ‘கடைசிவரை’ காப்புறுதி!



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

தொடர் - 5

### வீடு வரை உறவு

**5(a) பிள்ளைகளுக்கான அரசாங்க மாதாந்த சலுகைப் பணத்தை மாதாந்த கடன் வட்டிக்கு மட்டும் செலுத்தி வங்கி மூலம் எடுக்கும் கடனை காப்புறுதி நிறுவன சேமிப்புத் திட்டத்தில் அமுல் படுத்தும் திட்டம்**

பெற்றோராகிய உங்கள் இருவரது சம்பளத்தைப் பொறுத்து, பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதாந்த சலுகைப் பணமும் வேறுபடலாம் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே. இந்த மாதாந்த தொகை உதாரணமாக மாதம் 300 டொலராக இருப்பின் இது சாதாரண சேமிப்புத் திட்டத்தில் ஏறத்தாழ 8 வீத வட்டியைக் கொடுக்குமாயின் ஒரு வருட முடிவில புதிய சேமிப்பு 3,888 டொலர்களாகும்.(3600 x8% = 288, 3600+288 =3,888) பதிலாக இந்த மாதாமாதம் கிடைக்கும் 300 இனை வட்டிப் பணமாக மட்டும் பிரயோகித்து காப்புறுதி நிறுவனம் மூலமாக அவர்களோடு தொடர்பு கொண்டுள்ள வங்கிகளில் கடனுக்கு மனுச் செய்யலாம். இதற்கு உங்களது அன்றாட பணப்புழக்கம் சிறப்பாக இருக்கவேண்டும். (இதை ஆங்கிலத்தில் Credit History என்று அழைப்போம்)இதன்மூலம் ஏறத்தாழ 75,000 டொலர் கடனாகப் பெறமுடியும். இதையே ஆங்கிலத்தில் Leveraging loan concept என அழைக்கிறோம். இந்த 75,000டொலரை முன் இதழ்களில் குறிப்பிட்டபடி Market reset Guarantee, Diversified Portfolio உள்ள சேமிப்புத் திட்டங்களில் போடுவோமேயானால் மேற்கூறிய வட்டி வீதத்தின்படி வருட முடிவில் 6,000 டொலர் சேமிப்பு கிடைக்கும். இதன் காரணமாக புதிய சேமிப்புத் தொகை 81,000 டொலர்களாகும். இது அடுத்த வருட முடிவில் 87,480 டொலர்களாகும். அதாவது இரு வருட முடிவில் இந்த கடன் ஒழுங்கு மூலம் கிடைக்கப்பெறும் சேமிப்பு 12,480 (87,480-75,000)ஆகும். மாதாமாதம் கிடைக்கும் பணத்தினை மட்டும் சேமிப்புத் திட்டத்தில் போட்டு, கிடைக்கப்பெறும் மேலதிக சேமிப்பிலும் பார்க்க இது பன்மடங்கு பெருகுவதோடு மட்டுமல்லாது இந்த இரண்டாவது வழிமுறையில் கட்டும் வட்டிப்பணத்தை மட்டும் வருமான வரிப் பத்திரத்தில் காட்டி, உங்கள் வருமான வரியையும் ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இந்த மாதிரியான சேமிப்பு வளர்ச்சிக்காக கட்டும் வட்டிப் பணத்திற்கு வருமான வரி விலக்கு உண்டு. இந்த ஒழுங்குபடுத்தலால் இரு பக்கமும் உங்களுக்கு சாதகமாக சேமிப்பு வளர்ச்சியடைவதனால் ஏறத்தாழ 10 அல்லது 15 வருட முடிவில் ஆரம்பத்தில் வாங்கிய கடனைத் திரும்ப வங்கிக்கே கொடுத்து விட்டு, மீதிப் பணத்தை உங்கள் பிள்ளையின் படிப்பிற்கோ அல்லது எந்த அவசர தேவைக்கோ பயன்படுத்தலாம். காரணம், எப்போதும் இந்தத் திட்டம் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் சேமிப்புத் திட்டமாக இருப்பதனால் பிள்ளைகள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வளர்ந்து வருவாராயின் மட்டும் இதை பிள்ளைகளின் மேலதிக படிப்பிற்கு பிரயோசனப்படுத்தலாம். ‘சுருக்கமாகக் கூறின் சாமர்த்தியமாக செயற்படுத்தும் சேமிப்புத் திட்டம். சாதாரணமாக கடின முறையில் செயற்படுத்தும் சேமிப்புத் திட்டத்தைவிட பெருமடங்கு வளர்ச்சியையும் மன ஆறுதலையும் கொடுக்கும் திட்டம்’ என்றால் மிகையாகாது.

அத்துடன் காப்புறுதி நிறுவனங்கள் மூலம் இந்த ஏற்பாட்டைச் செய்வதனால் நிறுவனம் குலையாமல், சேமிப்பின் வளர்ச்சி வீதம் குலையாமல் கடனாளிகளோ அல்லது அரசாங்கமோ அல்லது எந்த பிரத்தியேக நிறுவனங்களோ எக்காரணம் கொண்டும் அபகரிக்க முடியாத நிரந்தர மன ஆறுதல் சேமிப்புத்திட்டமாக அமைவதற்கும் வழி வகுக்கும்.

5(b) (i) நீங்கள் வதியும் வீட்டின் பெறுமதியின் வளர்ச்சி வருமான வரியின்றி வளரும் சேமிப்பு என்றபடியால் மாதாந்த சலுகைப் பணம் முற்றாக கிடைக்காத பெற்றோர்கள் (சம்பள உயர்வு காரணமாக) அவர்களது வீட்டைத் திரும்பவும் அடமானம் செய்து (Mortgage Refinancing) ஒரு கணிசமான தொகையை மீளாய்வுபெற்று, இந்தப் பணத்தைக் காட்டி இதற்கு நிகரான ஏறத்தாழ 4 மடங்கு பணத்தைக் காப்புறுதி நிறுவனம் சிபாரிசு செய்யும் வங்கியிலிருந்து கடனாகப் பெற்று காப்புறுதி நிறுவனம்மூலம் சேமிப்புத் திட்டத்தை ஏற்கெனவே கூறியபடி அமுலாக்கலாம்.


5(b)(ii) Mortgage Refinancing மூலமாக ரொக்கத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டிப்பணம் வருமான வரிக்கு உட்பட்டது.

> “அத்தனை சேமிப்புத் திட்டங்களும் உங்கள் அதிகாரத்தில், உங்கள் கட்டுப்பாட்டிற்குள் அமுலுக்குக் கொண்டுவரும் திட்டங்களேயொழிய, ‘பிறரின்’அதிகாரத்தில், நிபந்தனைக்குட்பட்டு வளரும் சேமிப்புத் திட்டங்கள் அல்ல.”


பாடுகளைத் தெளிவாக விளக்கும் என்பது எனது நம்பிக்கை.

6. காப்புறுதி நிறுவனத்தினால் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சேமிப்புடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதி

பொதுவாகவே, பிள்ளைகளுக்குக் காப்புறுதி செய்வதென்றாலே பெற்றோர் தயங்குவார்கள். காரணம் ‘காப்புறுதியின் மறுபெயர் மரணம்’ என்ற மூட நம்பிக்கை. பிள்ளையின் மரணத்திற்குப் பிறகு எமக்கு ஏன் காப்புறுதி இழப்பீட்டுத் தொகை என்ற தெளிவற்ற கருத்து. இந்தக் காப்புறுதியுடன் சேர்ந்து வளரும் சேமிப்புத் திட்டத்தை ஆங்கிலத்தில் universal life என்று அழைக்கிறோம். இதன்படி, மனுச்செய்யும் காப்புறுதித் தொகைக்கேற்ப நீங்கள் வருமான வரியின்றி (முற்றிலும்) வளர்ச்சியடையும் சேமிப்புத் திட்டத்தில் போடக்கூடிய, மாதாந்த அல்லது வருட கட்டுப்பணம் நிர்ணயிக்கப்படும். இதன் பிரகாரம் இந்தத் திட்டத்திற்கு மனுச் செய்வதானால் பிள்ளையின் காப்புறுதிக்கான கட்டுப்பணத்தை மிகக் குறைந்த அளவிற்கு மனுச் செய்யலாம். இதன் காரணமாக, அவர்களின் தேகநிலை பாதுகாப்பை மிகக் குறைந்த செலவில் மனுச் செய்து மீதி மேலதிக பணத்தை ஏற்கனவே கூறிய சேமிப்புத் திட்டத்தில் சகல விதமான பாதுகாப்புகளுடன் - மத்திய, மாகாண அரசாங்கங்களின் பாதுகாப்புடன், நிறுவனம் குலையாதபடி ஏற்படுத்திப் பயன்பெறும் திட்டம்தான் இந்த Universal life. இந்த சேமிப்பு Mutual Fund இலும் பார்க்க அதி சிறந்தது என்பதை முன்னைய இதழ்களில் குறிப்பிட்டுள்ளேன்.




5(b)(i), 5(b)(ii) இற்கான வரைபடம்





கிடைக்கப்பெறும் ரொக்கமான பணத்தை தொடர்ச்சியாக ஏறத்தாழ ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி வீதத்தைக் கொடுக்கும் பல்வேறு சேமிப்புக்களை அடக்கிய திட்டத்தில் (Well Balanced Portfolio) ஆரம்பித்து அதிலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தை 5(a) இல் குறிப்பிட்டபடி வங்கியிலிருந்து கிடைக்கும் கடனுக்கான வட்டியாகக் கட்டி, சேமிப்பின் வளர்ச்சியை பெருக்கிக்கொள்ளலாம்.

ஆனால், அதே பணம் கடனுக்கான வட்டியாகக் கட்டும்போது வரிவிலக்குண்டு. இந்த ஏற்பாடு மூலம் சேமிப்பை அதிகரிப்பதோடு மட்டுமல்லாது வருமான வரியை அறவே தவிர்க்கும் அல்லது பெரும்பாலும் தவிர்க்கும் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கலாம். மேற்கூறிய அத்தனை சேமிப்புகளும் தொடர் வட்டியில் வளரும் சேமிப்பேயொழிய தனி வட்டியல்ல. பின்வரும் வரைபடம் இந்த ஏற்

இந்தத் திட்டத்தில் காப்புறுதியின் முகாமையாளராக நீங்களும், காப்புறுதி செய்யப்பட்டவர் உங்கள் பிள்ளை, பிள்ளைகளாகவும் ஏற்பாடு செய்யலாம். அத்துடன் மாதாந்த கட்டுப்பணத்தை நீங்களே செலுத்தி வருபவர் என்ற காரணத்தால் உங்களுக்

26ம் பக்கம் பார்க்க...

திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



Thavaraj Logasundaram
Sales Representative
thavarajl@yahoo.ca
Cell: 416 277 1453

HomeLife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated, REALTOR ®
262 Markham Road, Scarborough
Ontario, M1J 3C5
Tel: 416.264.0101
Fax: 416.261.1519

# வீடுவரை உறவு வீடு...

25ம் பக்கத் தொடர்ச்சி...

குத் திடீர் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் தறுவாயில் காப்புறுதி நிறுவனம் வரி விலக்குக்கு உட்பட்ட அதிகப்படியான தொகையினைக் கட்டுவதற்கு மனுச்செய்ய லாம். (அது Maximum Monthly deposit or Maximum Annual deposit for death or disability of the payer.)

உதாரணமாக உங்கள் பிள்ளையின் வயது 3 ஆகவும் உங்கள் வயது 35 ஆகவும், பிள்ளைக்கு மனுச்செய்யும் காப்புறுதித் தொகை 150,000டொலர்களாகவும் இருப் பின் நீங்கள் கட்டவேண்டிய அதிகப்படியான மாதத் தொகை ஏறத்தாழ 230 டொலர்க ளாகும். பதிலாக, பிள்ளையின் மனுச்செய் யும் காப்புறுதித் தொகை 250,000 டொல ராக இருப்பின் நீங்கள் கட்டக்கூடிய அதி கூடியதொகை 360 டொலராக இருக்கும் இந்தக் கட்டுத் தொகையில் காப்புறுதிக்கு மட்டும் தேவைப்படும் மாதாந்தப் பணம் (Guaranteed Cost of Insurance ) ஏறத்தாழ 10 டொலரிருந்து 15 டொலர் மட்டுமே மீதிப் பணத்தில் ஏறத்தாழ 90 வீதம் சேமிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும். மீதி 10 வீதத் தில் உங்களுக்கு மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு கொடுக் கும் செலவும் காப்புறுதி ஒப்பந்தம் அளிப் பதற்கான மாதாந்த செலவும் அடங்கும். தப்பித் தவறி உங்களுக்குத் திடீர் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் தறுவா யில் உங்கள் வயது 60 அல்லது 65 வரை (நிறுவனத்தைப் பொறுத்து) இந்த அதிகப் படியான மாதாந்த கட்டுப்பணத்தை நிறுவ னமே உங்கள் சார்பாக கட்டுவதனால் பிள்ளையின் எதிர்கால கல்விச் செலவு தேவைகளுக்கோ அல்லது எந்த அவசர தேவைகளுக்கோ "உங்கள் கையெழுத் திட்ட" அல்லது நீங்கள் உயிரோடு இல் லாத பட்சத்தில் நீங்கள் ஆரம்பத்திலேயே நியமிக்கும் உப முகாமையாளரின் (Contingent owner) 'கையெழுத்திட்ட' மனுப் பத்திரம் மூலம் முகாமையாளர் அல்லது உப முகாமையாளர் மூலம் பிள்ளையின் செலவிற்கு உபயோகப்படுத்தலாம். காரணம், பிள்ளை வளர்ந்து பொறுப்புள்ள வாலிப வயதுவந்த பிள்ளையாகவிருப்பின் மட்டும் முகாமையாளர் பொறுப்பை பிள்ளைக்கு நீங்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கலாம். பிள்ளையும் 3 வயதிலேயே காப்புறுதி செய்யப்பட்ட பிள்ளையென்றபடி யால், அவரின் மாதாந்த காப்புறுதிக்கான மாதாந்த செலவான cost of insurance ஒரு போதும் மாறவே மாறாது. இந்தத் திட்டத் தின் மேலதிக விவரங்கள் எதிர்வரும் இதழ் களில் Universal Life என்ற தலைப்பில் விவரிக்கப்படும்.

இதுவரை விவரித்த அத்தனை சேமிப்புத் திட்டங்களும உங்கள் அதிகாரத்தில், உங்கள் கட்டுப்பாட்டிற்குள் அமுலுக்குக் கொண்டு வரும் திட்டங்களேயொழிய, 'பிறரின்' அதிகாரத்தில், நிபந்தனைகளுக்குட்பட்டு வளரும் சேமிப்புத் திட்டங்கள் அல்ல.

சுருங்கக் கூறின், 'கல்வி' என்ற தாகத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கும் அவர்களை நல்வழிப்படுத்த முயலும் உங்களுக்கும் 6 விதமான முற்றிலும் வேறுபட்ட 'தடாகங் களைக்' கூறியுள்ளேன். அத்தனையும் உங் கள் கடிவாளத்தில் (கட்டுப்பாட்டுக்குள்) இருக்கும் திட்டங்கள். எந்த 'தடாகம்' உங்க ளுக்கு, உங்கள் சூழ்நிலைக்கு அமைய உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அமைகிறதோ அதை நீங்களே தேர்ந்தெடுத்து, பிறரின் தலையீடின்றி உங்கள் பிள்ளைக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தலாம் என்பது எனது பரிபூரண நம்பிக்கை.

(தொடரும்)

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## வீடு வாங்க, விற்க...

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED



**Markham/Denison**
- 3 Bedrooms, 3 Washrooms
- Location! Location! Location!
- Brand New Home! Back On Ravine
- Living/Dining Has Hardwood Floors.

**$ 399,900**



**Warden/Finch**
- 3+1 Bedrooms, 2 Washrooms
- End Unit Like Semi!
- Lowest Maintenance Fee In Agincourt Area
- Close To Schools, Library, Mall

**$ 219,900**




**Lawrence/Bellamy**
- 3+1 Bedrooms, 2 Washrooms
- All Appliances As-Is Condition
- Close To All Amenities
- Call for more info....

**$ 315,900**



**Kennedy/Eglinton**
- 1+1 Bedrooms, 1 Washroom
- Excellent Location 24 Hour Gate Security
- Walk To Kennedy Subway, In House Daycare

**$ 149,900**





**Keele/Finch**
- 2 Bedrooms, 1 Washroom
- Extra Large 2 Bdrm Condo Apt!
- Open Concept Lr & Dr With Sunken Lr W/Out To Balcony
- Close To York U,Ttc,Shopping

**$ 149,900**



**Finch/Middlefield**
- 2 Bedrooms, 1 Washroom
- Low Maintenance Bright Corner Unit
- 677Sq Ft Plus 119 Sq Ft Deck
- Close To Ttc, Hwy 401/407.

**$ 174,900**



**Lawrence/Bennett**
- 4 Bedrooms, 2 Washrooms
- Well Manicured Yard !
- Pride Of Ownership!
- Walking Distance To Schools Shopping, Ttc, & Amenities.

**$ 299,000**



**Bur Oak/Mccowan**
- 4 Bedrooms, 3 Washrooms
- Granite Countertop, Marble Backslash & Fireplace
- Close To Go Station, Plaza & Schools.

**$ 439,000**

**SIVA KANDIAH**
Sales Representative
**CELL: 416 301 9540**
**BUS: 416 284 4751(24 Hrs)**

SALES ACHIEVEMENT AWARD 2006




**Midland/Eglinton**
- Medical Clinic/Dental
- 1,600 Sq Ft Total Area
- Finished Basement(800 Sq Ft.)
- High Traffic Location With Superior Interior Finishes With Multiple Offices And Training Rooms And Reception Areas

**Asking $ 749,000**

**-Hey ! This Guy Can Do It Better-**

### எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

# மங்காத கடன் என்று சங்கே முழங்கு



பெரி முத்துராமன்
- Senior Prsonal Banking Officer -

பல மாதங்களாக வெளிவந்த இந்தக் கட்டுரைத் தொடர், இந்த மாதத்துடன் நிறைவுறுகின்றது. இதை நிறைவு செய்யுமுகமாக, என்னிடம் கேட்கப்பட்ட சில பொதுவான கேள்விகளையும் அதற்கான பதில்களையும் கீழே தந்துள்ளேன்.

**எனது கடன் சரித்திரத்தை நான் ஏன் பேணவேண்டும்?**

நீங்கள் எவ்வளவு கடன்கள் எங்கெல்லாம் வாங்கியிருக்கிறீர்கள் என்ற விபரத்தைக் கடன் சரிதத்தில் பார்க்கலாம். கடன் கொடுக்கும் போது, உங்கள் பண சக்தி எவ்வளவு? (ability to pay) உங்களுக்குப் பண சக்தி இருந்தாலும் அதைத் திரும்பச் செலுத்தும் மனப் போக்கைக்கொண்டவரா? (Willingness to pay) என்றெல்லாம் கடன் கொடுக்கும் நிறுவனம் கடனைக் கொடுக்கு முன் உங்களைப் பற்றிக் கணிக்க முற்படுகின்றது. அவ்வாறு இரண்டாவது கேள்விக்கான பதிலையே முக்கியமாக உங்கள் கடன் சரிதத்தில் கடன் கொடுக்கும் நிறுவனம் கண்டறிய விரும்புகின்றது. மற்ற நிறுவனங்களில் வாங்கிய கடனைக் கடந்த காலங்களில் எவ்வாறு கட்டிவந்துள்ளீர்கள் என்ற விவரம் கடன் சரிதத்தில் உள்ளது. கால தாமதமாகக் கட்டிவந்திருந்தால் அதே போக்கு இப்போதும் தொடரலாம் என்று கடன் கொடுக்க விளையும் நிறுவனம் நினைக்க இடமுண்டு. உங்கள் பண சக்தியை உங்கள் வருமானத்தைக் கொண்டு தீர்மானிக்கிறார்கள்.

**என்னுடைய கடன் சரிதத்தில் என்னென்ன விபரங்கள் உள்ளன என்று நான் பார்க்க முடியுமா?**

நிச்சயமாகப் பார்க்க முடியும். இலவசமாக உங்கள் கடன் சரிதத்தை ஆண்டுக்கு ஒரு முறை தபாலில் பெறலாம். இந்த விவரங்களை முன்பே எழுதியிருக்கிறோம். இணையத் தளத்திலும் பார்க்கலாம். சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச தொலைபேசி எண்களை இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடன் சரிதத்தை யார் எல்லாம் பார்க்க முடியும்?**

கிரடிட்காட் மற்றும் கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது அந்த நிதி நிறுவனம் உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்கிறது. அதற்கு உங்களிடம் ஒப்புதல் பெறப்பட்டிருக்கும். வேலைக்கு விண்ணப்பிக்கும்போதும், இன்சூரன்ஸ் கேட்கும்போதும் வீட்டு வாடகைக்கு விண்ணப்பிக்கும்போதும் கூட உங்கள் கடன் சரிதம் பார்க்கப்படலாம்.

**அடிக்கடி கடன் சரிதத்தைப் பார்த்தால் கிரடிட் ஸ்கோர் குறையுமா?**

ஆமாம். தேவையில்லாமல் கடனுக்கு விண்ணபிக்காதீர்கள். வருடத்துக்கு மூன்று முறை வரை உங்கள் கடன் சரிதம் பார்க்கப்பட்டிருந்தால் உங்கள் கிரடிட் ஸ்கோர் ஒன்றும் பெரிதாகப் பாதிக்கப்பட்டிராது. மேலும் உங்கள் கடன் சரிதத்தை நீங்களே பார்ப்பதும் கூட ஸ்கோரைக் குறைக்காது.

**கடன் பாக்கியைக் கட்டிவிட்டேன். ஆனால், இன்னும் பாக்கி இருப்பதாக எனது கடன் சரித்திரம் தெரிவிக்கிறது..?**

தகுந்த ஆதாரங்களுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் தொலைபேசியாலும், தபால் மற்றும் தொலைநகல் மூலமும் தொடர்பு கொண்டு நிரூபியுங்கள். ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில், சரியில்லாத விவரங்களை கடன் சரிதத்தில் சரி செய்ய முடியும். இதற்கு விடாமுயற்சி தேவை. முற்றிலும் தவறான செய்தி நீக்கப்படும்வரை தொடர்ந்து நீங்கள் கண்காணிக்க வேண்டும்.

**சில நிறுவனங்கள் பணம் பெற்றுக் கொண்டு குறுகிய காலத்தில் ஸ்கோரை உயர்த்தித் தருவதாக விளம்பரங்கள் செய்கின்றனவே..?**

பணத்தையும் நேரத்தையும் இழக்கத் தயார் என்றால் நீங்கள் அத்தகைய நிறுவனங்களை அணுகலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

**பாங்க்ரப்சி விவரங்கள் என் கடன் சரிதத்தில் காண்பிக்கப் படுகின்றனவே...?**

ஆம். ஆறுமுதல் ஏழு ஆண்டுகள் வரை இத்தகைய விவரங்கள் இடம்பெற்றுத்தான் இருக்கும். புதிய கடன்கள் ஒன்றும் கிடைக்காது. இந்தக் காலகட்டம் வனவாசம் போன்றது. இந்தக் காலகட்டத்தில் முடிந்தால் ஒரு முன்பணம் செலுத்தப்பட்ட கிரடிட் கார்ட்டை (Secured credit card) பெற்று வைத்துக்கொள்ளுங்கள். கேப்பிடல் ஒன், ஹோம் டிரஸ்ட் போன்ற நிறுவனங்கள் இத்தகைய முன்பணம் செலுத்தப்பட்ட கிரடிட் கார்ட்டைத் தருகின்றன.

**எனக்கு விவரகரத்து ஏற்பட்டுள்ளது என்னுடைய முன்னைய வாழ்க்கைத் துணையுடன் ஏற்படுத்திக் கொண்ட கடன்களை இரத்துச் செய்ய முடியுமா?**

விவாகரத்து தானாகவே எந்த சூழ்நிலையையும் மாற்றிவிடாது. ஒவ்வொரு கடன் கொடுத்த நிறுவனத்துடனும் தொடர்பு கொண்டு உங்கள் நிலையைக் கூறி, மாறிய சூழ்நிலையில் நீங்கள் நினைப்பது நடைபெறுமா என்று தெரிந்துகொள்ள வேண்டும். சாதாரணமாகச் சொல்வதானால் விவாகரத்தினால் முன்னைய கடன்கள் ஒன்றும் இரத்துச் செய்யப்பட மாட்டாது. மேற்கொண்டு கடன் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளலாம். இப்போது இருக்கும் கடனுக்கும் உங்களுக்கும் தொடர்ந்து பொறுப்பு உள்ளது.

**என்னுடைய கிரடிட் ஸ்கோர் என்னுடைய கடன் கோப்பில் ஒரு பகுதியா? அதை நான் பார்க்க முடியுமா?**

கடன் கோப்பில் கிரடிட் ஸ்கோர் ஒரு பகுதி அல்ல என்று கடன் சரிதத்தைப் பராமரிக்கும் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. எனவே, உங்கள் கிரடிட் ஸ்கோரை இலவசமாகப் பெற முடியாது. பணம் செலுத்திப் பார்க்க முடியும்.

**இறுதியாகத் தரும் அறிவுரை:**

- திருப்பிச் செலுத்த முடியாத கடனைக் கேட்டு ஒருநாளும் விண்ணப்பிக்காதீர்கள்.
- கடனும் ரொக்கத்தைப் போன்றது. எண்ணிப் பார்த்துச் செலவழியுங்கள்.
- தவணைகளை உரிய திகதிக்கு முன்னரே - முடிந்தால் முழுவதையும் கட்டிவிடுங்கள்.
- அடிக்கடி கடன் கேட்டு விண்ணப்பிக்காதீர்.
- உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மொத்தக் கடன் அளவில் ஏறத்தாழ சரிபாதியை அதிகபட்சம் உபயோகியுங்கள்.
- ஒருநாளும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கடன் அளவுக்கு மேல் கடன் பாக்கி இருக்குமாறு சூழ்நிலையை ஏற்படுத்தாதீர்.
- ஆண்டுக்கு ஒருமுறை உங்கள் கடன் சரிதத்தைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.
- வீட்டுக் கடன் போன்ற முக்கியமான பெரிய கடன்களுக்கு விண்ணப்பிக்கு முன் உங்கள் கடன் சரிதத்தை நீங்களே முதலில் பார்த்துவிடுவது பின்னால் ஆச்சரியங்களைத் தவிர்க்கும்.

திட்டமிட்ட வாழ்க்கை, முன்னேற்றத்தின் அறிகுறி. இந்த நாடு வாய்ப்புக்களும், வசதிகளும் நிறைந்த நாடு. திட்டமிட்டு, தெளிவான சிந்தனையுடன் தொடர்ந்து முயன்றால் நீங்களும், உங்கள் சந்ததிகளும் இந்த மண்ணில் செழிப்பாக வாழலாம். வாழ்த்துக்கள்!

■ ■ ■

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை
Scotiabank™
Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Financial Advisor
Direct Line: 416.439-3040 x:2008

KESAVAN LAW OFFICE



• Real Estate
• Business Law
• Immigration Law
• Family Law
• Last Wills
• Power of Attorney
• Affidavits

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

THANGAVEL M. KESAVAN
Barrister & Solicitor

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
TEL: (416) 754-9843
Fax: (416) 754-2362

VJ'S
RENOVATION &
CARPET CLEANING



• HARDWOOD FLOORING
• PLUMBING
• BASEMENT WORKS
• ELECTRICAL WIRING
• CARPET CLEANING
(RESIDENTIAL/COMMERCIAL)
• TOTAL RENOVATION

CONTACT: VJ. KUMAR
647.588.2880

**PAID**


**DEC. 31.2007** திகதிக்கு முன் வீடு, வியாபார நிலையம் வாங்குபவர்கட்கு சட்டத்தரணிக்கான **FEE** இலவசம்.

HOMELIFE HIGHER STANDARDS


**HomeLife/ Future Reality Inc.,** *Brokerage*
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com

# 416-399-8093


**நட்பான சேவைக்கும்**
**உங்கள் மனம் நிறைய**
**வீடு, வியாபார நிலையம்**
**வாங்க, விற்க...**





**Mccowan / Steeles**
2+1 Bedrooms
2 Full washrooms
Close to shopping, bank, schools & TTC




**Kipling / Steeles**
2+1 Bedrooms
2 Full washrooms
Close to shopping, bank, schools & TTC
Laminate floor & new paint




**Williams Pkwy/Vodden**
4 Bedrooms, 4 Washrooms
Finished Basement
Apx Sqft : 2300




**Brimley / Highglen**
3 Bedrooms, 3 washrooms
Freshly painted
New Laminated
Close to school




**Markham / Buroak**
4 Bedrooms, 3 washrooms
Apx Sqft: 2000-2500
Walk to go station & shopping
Built by Senator Homes




**Finch/Staines**
4+2 Bedrooms, 3 washrooms
Sep. Entrance, 9 ft Celling
ork stairs Apx Sqft: 2000-2500
Close to shopping, schools & TTC

**Restaurant for Sale**
New Market
Long lease, Short hours, LLBO

**Cafe for Sale**
Markham
Surrounded by offices
5.5 days open

**Restaurant for Sale**
401 / Meadowvale
6 days open
LLBO, No competition
Surround by appatments



**PIRABAA NALLATHAMBY**
*Sales Representative*
**(BABU)**

**Connectiong tutors & students in the GTA**

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

**தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று**
**பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.**

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH




## Call Kuna Today

**416-291-4684, 905-507-8470, 647-295-5862**

We will visit your home

**Over 100 Tutors**

**Over 1500 Students**

**JK to GRADE 8**
**$80⁰⁰/MONTH**

**1 ON 1 OR GROUP**

**9 to University 2nd Year**
**$90⁰⁰/MONTH**

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajex, Malton, New Market

digi Media - 416-467-4952

# மீன்போன போக்கிலே...

கடலுணவு என்பது உண்மையில் ஒரு தவறான சொல்வழக்காகும். இதனுள் அடங்குவதுள் அநேகமானவை கடலிலிருந்து மட்டுமல்லாது ஏரிகள், ஆறுகளிலிருந்தும் பெறப்படுகின்றன. பண்ணையில் வளர்க்கப்படும் கடலுணவுகள் இயற்கையான கடலுணவுகளை விட வேறுபட்டவை. கடலில் தாமாக வளரும் மீனினம் மற்றும் ஆழ்கடலில் காணப்படும் உயிரினங்கள் சிறப்பான வாழிட அமைப்பையும் உணவு உட்கொள்ளும் முறையையும் கொண்டவை. சில டியுனா மீனினம் தமது வாழ்க்கைக் காலத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் நீரோட்டத்திற்கு எதிராக நீந்திச் செல்லக் கூடியவை. இது பெரிய விடயமல்ல என்று நீங்கள் நினைக்கலாம். மீன் பிடிப்பவர்களுக்கு இதனைப் பற்றி அதிகமாகவே தெரியும். மீன் அதிகமாக நீந்தும் போது தான் அதன் சதை கொழுப்பற்று மெலிந்ததாக மாறுகிறது. எனவே வாழிடம் வேறுபடுவதற்கேற்பவே அதன் தன்மைகளும் மாறுபடுகின்றது.

உதாரணமாக சல்மன் மீனினம் நோர்வேயின் கரையிலிருந்து கனடாவரை நீந்திச் சென்று திரும்புகிறது. இவற்றின் உணவு வழியில் எதிர்ப்படும் சிறிய ஓடுள்ள கடலுணவுகளாகும். இதன் காரணமாகவே இவற்றின் தசை இளஞ்சிவப்பு நிறமாக காணப்படுகின்றது. மறுபுறமாக பண்ணையில் வளர்க்கப்படும் சல்மன்கள் கடலினுள் பாரிய வலைகளுள் காணப்படுகின்றன. இவை நீண்ட தூரம் பயணம் செய்வதற்கு முடியாமலிருப்பதுடன், மீன் பண்ணையாளர்கள் போடும் மீனுணவுகளிலேயே தங்கியிருக்கின்றன. இவற்றின் தசை இளஞ்சிவப்பு நிறமாக மாறுவதில்லை. எனவே இவை செயற்கையாக மாற்றப்படுகின்றன. நாட்டுக் கோழிகளுக்கும் பண்ணையில் வளர்க்கப்படும் கோழிகளுக்கும் உள்ள வேறுபாடு போலவே இங்கும் காணப்படுகின்றது. (நாட்டுக் கோழி சாப்பிடுவது உடலுக்கு நல்லது. பண்ணைக் கோழி சாப்பிட்டால் பரியாரிக்கு நல்லது.) எனினும் சில நாடுகள் விஞ்ஞான ரீதியில் மீன்களைப் பண்ணையில் வளர்க்கின்றார்கள். மனிதருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தை விட பெரும் செல்வம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கம் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

நன்னீர் மீன்கட்கும் கடல்நீர் மீன்கட்கும் இடையேயான ஒப்பீடும் மக்களிடையே காணப்படுகின்றது. கடல் மீன்களை உண்ணுவோர் நன்னீர் மீன்கள் சேற்றுத் தன்மையைக் கொண்டு காணப்படுகின்றன என கூறும் அதே வேளை நன்னீர் மீன்களை விரும்புவோர் நன்னீர் மீன்கள் இனிப்பானவை எனக் கூறுகின்றனர். எனினும் கடல்மீன்களை விரும்புவோர் பண்ணைகளில் வளர்க்கப்படாமல் ஆறுகளில் இயற்கையாக நீந்தும் மீன்களை மறுக்க மாட்டார்கள்.

கடலுணவு என்பது மீன்களைப் பற்றியது மட்டுமல்ல. இதனுள் கடல் மற்றும் நன்னீர் மீன், பதப்படுத்தப்பட்ட மீன் என்பனவும் அடங்குகின்றன. புகையூட்டப்பட்ட மீன்கள், கருவாடு, இறால், நண்டு போன்ற ஓடுள்ள உயிரினங்கள், மட்டி போன்ற மெல்லுடலிகள், கணவாய், கடலட்டை, சுறாவின் செட்டை போன்றனவும் கடலுணவுள் அடங்குகின்றன. மிக ஆழத்தில் வாழும் உயிரினங்களுக்கேற்ப இவற்றின் விலை அதிகரிக்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்று எண்ணுகிறீர்கள்? முதல் 500 மீற்றர்களுக்கு அப்பால் கடல் நீரானது, அமைதியாக இருக்கும். அத்துடன் சூரிய கதிர்களால் அதிக தாக்கத்திற்கு உட்படாததாக இருக்கும். எனவே வெப்பநிலை மாற்றங்கள் அதிகம் காணப்படாது. இதுவே சிப்பிகள் வளர்ந்து மெதுவாக முதிர்வுறுவதற்கு ஏற்ற நிலமையாகும். ரோக்கியோவின் பிரபல மீன் சந்தையான Tsukiji இற்கு மீன்களை வழங்கும் மீன் இழுவைக் கப்பல்கள் தமது உற்பத்திப் பொருட்களை எங்கு பிடிக்கப்பட்டது என்று மட்டுமல்லாது எந்த ஆழத்தில் பிடிக்கப்பட்டன என்ற அடிப்படையிலும் தரம் பிரிக்கின்றன. இதுவே உலகெங்கும் Tsukiji சந்தையின் புகழ் பரவக் காரணமாகும்.

மிக ஆழத்தில் பிடிக்கப்படும் மீனை சாப்பிடுவது நல்லது. கடலடியில் நன்னீருடன், நல்ல உணவுகளையே இந்த மீன்கள் சாப்பிடுவதனால், இவை உடலுக்கு நல்லது.

ஜப்பானியரின் உணவில் கடலுணவு அதிக முக்கியத்துவம் வகிக்கின்றது. ஸ்பானியரின் உடனடி உணவில் கடலுணவைப் புதுமையான முறைகளின் மூலம் தயாரிப்பது முதலிடம் வகிக்கின்றது. மார்செயில்ஸ் தீவுகளின் மீனவர் எவரும் பயன்படுத்தாது ஒதுக்கிய சிறிய வகை மீனினத்தைக் கொண்டு சூப் தயாரிக்கின்றார்கள். இது ஏழைகளின் உணவாக இருந்தது. எனினும் இன்று இது தோன்றிய தீவின் தலைநகரில் கூட நீங்கள் இந்த சூப்பை வாங்க வேண்டுமெனின், நீங்கள் ஏழையாக இருக்க முடியாத அளவில் இந்த சூப் விலை உயர்ந்து விட்டது. மீன்பிடியின் தன்மை இடைப்பட்ட காலத்தில் மிக வேகமாக மாறுபட்டதன் காரணமாக தற்போது குறிப்பிட்ட இம் மீனைப் பிடிப்பது முற்றிலுமாக விலையுயர்ந்த ஒரு தொழிலாக மாறிவிட்டது. நியூயோர்க், பரிஸ் ஆகிய நகரங்களில் இம் மீனின் சூப் மார்செயில்ஸ் தீவுகளின் சூப்பின் அதே தன்மையுடையதாக தயாரிக்கப்படுவது இல்லை.

ஜப்பானியரின் உணவுகளில் கடலுணவு முக்கியத்துவம் பெறுகின்றது என்று கூறினோம். இதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், இவர்களின் கடலுணவு சந்தையான Tsukiji ஐ நோக்குங்கள். இதுவே உலகின் மிகப் பெரிய மீன் சந்தையாகும். ஆனால் அதன் புகழுக்கு இது மட்டும் காரணமல்ல. இந்த அதிசய உலகிற்கு மீன் வழங்கும் இழுவைக் கப்பல்கள் மிகச் சிறந்த உறையவைக்கும் குளிரூட்டி வசதிகளைக் கொண்டுள்ளன. எனவே கடலுணவு பிடிக்கப்பட்டதும், இவை ஒரு சில செகண்டுகளில் உறைநிலைக்குக் கீழ் 44 பாகை செல்சியஸில் உறைய வைக்கப்படுகின்றன. ரோக்கியோவிலிருக்கும் ஒவ்வொரு உணவு விடுதியின் சமையற்காரரும் Tsukiji வில் மீன் வாங்குவார். இவர்களின் மிகவும் சுறுசுறுப்பாக வாங்கும் நேரம் அதிகாலை 4 மணியிலிருந்து 6 மணிவரையிலாகும்.

ஜப்பானியரின் கடலுணவு சமையலானது அநேக ருசிகரமான உணவுவகைகளைக் கொண்டுள்ளது. சூஷி, சஷ்மி எனும் கடலுணவுகள் உலகெங்கும் பிரபலமானவையாக உள்ளன. உங்கள் கடலுணவு சமைக்கப்படாமல் பச்சையாக ஒரு துளி சோயா சோஸ் உடன் பரிமாறப்படும் போது எவ்வளவு புத்தம் புதிதாக காணப்படும் என்பதை இவ் உணவு மூலம் அறிவீர்கள். சூஷி, சஷ்மி சமைப்பதற்கு புத்தம் புதிதான மீன் தேவையாகும். உள்நாட்டுப் பகுதியில் இத்தகைய உணவுகளைப் பெறுவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். இதிலும் டியூனா மீனினம் அதிக விலையுடையதாக இருக்கும். ஜப்பானில் மீனின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு விலை கொடுக்கிறார்கள். மஞ்சள் செட்டையுள்ளது நீலச் செட்டையுள்ளதை விட விலை கூடுதலானதாகும். வயிற்றுப் பகுதிக்கு உடலின் ஏனைய பகுதிகளை விட அதிக விலை கொடுக்கிறார்கள். அதே நேரம் வயிற்றுப் பகுதியிலும் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு விலை கொடுக்கிறார்கள். கொழுப்பு குறைந்த பகுதிகள் அதிக விலையைப் பெறுகின்றன. சஷ்மி தயாரிப்பதற்கு ஒரு சில மீன் துண்டுகளே போதுமானவையாகும்.



சல்மன் மீன் *(Salmon Fish)*

சவான்மஷி என்னும் உணவு ஜப்பானியர் தமது கடலுணவுகளை எவ்வளவு திறமையுடன் சமைக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். முட்டையும் பாலும் சோந்த மீன் துண்டுகள், நண்டுக் கால்கள் மற்றும் காளான்களுடன் சேர்த்து நீராவியில் அவிக்கப்படுகின்றன. டெம்பூரா எனும் உணவில் மிக மெல்லிய படையாக அரிசிமா புத்தம் புதிய கடலுணவில் பூசப்பட்டு நன்கு பொரிக்கப்படுகின்றது. நெருப்பில் சுடுவது இன்னோர் முறையாகும். இம்முறையில் தோல் நன்கு மொறுமொறுப்பாக இருக்க வேண்டிய நிலையில் தசையில் ஈரப்பதன் குறையாது இருக்க வேண்டும்.

Fugu எனும் மீனினம் ஜப்பானில் மட்டுமே உண்ணப்படுகின்றது. இங்கு இதன் விலை மிக அதிகமாகும். இதன் ஈரப்பகுதியில் நஞ்சு காணப்படுவதால், அனுமதி பெற்ற மீனவர் மட்டுமே இதனைப் பிடித்து வெட்டியெடுக்க வேண்டும். இதன் எந்த பகுதியும் வீணாக்கப்படுவதில்லை. இதன் செட்டைகள் மென்மையாக அனலில் வாட்டப்பட்டு பல போத்தல்கள், சேக் எனப்படும் ஜப்பானிய மது வகையில் ஊறவைக்கப்படுகின்றது.



*Tsukiji* சந்தை



30ம் பக்கம் பார்க்க...

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



# மீன்போன போக்கிலே...

29ம் பக்கத் தொடர்ச்சி...

அதிக காலம் ஊறவிடுவதற்கேற்ப சுவையைப் பெறுகின்றது. சதைப்பகுதி மெல்லிய துண்டுகளாக வெட்டப்படும் அதே வேளை தோற்பகுதி வெளிற வைக்கப்பட்டு சதையுடன் உண்ணுவதற்காக அருகில் தனியாக வைக்கப்படுகின்றது.

ஜெலி மீனினத்தை (Jelly fish) பயன்படுத்தும் நாடுகள் ஜப்பானும் கொரியாவுமே ஆகும். இவை சலாட் போடுவதற்கு கடுகுடன் சேர்த்து இதனைப் பயன்படுத்துகின்றன.



ஹொங்கொங்கின் Forum Restaurant இல் சிப்பியின் தசை உணவு மட்டுமே விற்கப்படுகிறது. உங்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவை நீங்கள் தெரிவு செய்து அதற்கு பணத்தைச் செலுத்தலாம். ஜப்பானில் புத்தம்புதிய மட்டியின் தசையானது காய்ந்த தசையைவிட விலை கூடியது. ஆனால் சீனாவில் உடன் மட்டியுடன் காய்ந்த மட்டி மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மட்டித்தசை போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன. தகரத்தில் அடைக்கப்பட்ட 600 கிராம் மட்டித்தசை $60 ஆக விற்கப்படுகின்றது. தகரத்தில் அடைக்கப்பட்ட மற்றும் கருவாடாக்கப்பட்ட மட்டித்தசை ஏனைய காய்ந்த கடலுணவுகளைப் போலவே மிக விலையுயர்ந்தது. எனினும் சீன உணவு தயாரிப்பில் இவை பின்னணி சுவையைக் கொடுக்குமுகமாக சேர்க்கப்படுகின்றன.

காய்ந்த கடலுணவுகளை பயன்படுத்தும் ஹொங்கொங்கின் வீதிகள் ஒரு மைல் தூரத்திலிருந்தே வாசனை வீசுகின்றன. ஆனால் கணவாய், சுறா, இறால், கடல் அட்டை மற்றும் பல உயிரினங்கள் அவற்றின் சுவைக்காகவும் மணத்திற்காகவும் இவற்றின் கலப்பினைக் கொண்ட சோஸ் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சமையற்காரரும் தமக்கேற்ற விதமாக இவ் உயிரினங்களைக் கொண்டு இரகசிய கலப்பினை கொண்டு சோஸ் தயாரிக்கிறார்.

சுறாவின் செட்டை ஹொங்கொங்கின் கடைகளில் பெருமையாக விற்கப்படுகின்றது. இது புற்றுநோய் தடுப்பு தன்மைகளைக் கொண்டிருக்கிறது என நம்பப்படுகின்றது.

இயற்கையில் புற்றுநோய் இல்லாத ஒரே ஒரு உயிரினம் சுறாவாகும். நீங்கள் வாங்கும் செட்டையின் நீளத்தைப் பொறுத்தும் நிறத்தைப் பொறுத்தும் விலை வேறுபடும். செட்டையின் நிறம் அதிக சிவப்பு நிறமாக இருந்தால் விலை அதிகமாக இருக்கும்.

காயந்த கடலுணவைப் போன்றல்லாது தகரத்திலடைத்த மட்டித்தசையும் சுறாவின் செட்டையும் தமக்கேயுரிய சுவையையும் மணத்தையும் கொண்டிராது. மட்டியைப் பொறுத்தவரை அதனை மென்மையாக்கவும் அதற்கு சுவையையும் மணத்தையும் ஏற்படுத்தவும் நன்கு கொதிக்க விடப்படுகின்றது. இதைப் போலவே சுறாவின் செட்டையும் மென்மையாக்குமுகமாக கொதிக்க விடப்படுகின்றது.

தென்சீனாவைத் தவிர கடலுணவு சிறப்பாக பரிமாறப்படும் இடம் ஷங்காயின் மேற்கு ஏரிப் பகுதியாகும். செப்டம்பரிற்கும் நொவம்பரிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி உரோமம் உள்ள நண்டுகள் காணப்படும் பருவமாகும். இது முட்டையிடும் பருவமாதலால் பெண் நண்டுகளே கடலுணவிற்காக சிறப்பாகப் பிடிக்கப்படுகின்றன. சீன மருத்துவத்தின்படி நண்டுகள் குளிரை ஏற்படுத்தும் என நம்பப்படுவதால் மாவோ தாய் (Mao Tai) எனப்படும் சூட்டை ஏற்படுத்தும் மஞ்சள் நிற வைனுடன் ஷாங்காயின் ஏரிகளில் ஒவ்வொரு நாளும் பலமணி நேரம் படகுகளில் இருந்து இந்த நண்டுகளைப் பிடித்து சமைத்து சுவைக்கின்றனர். இது உரோமம் உள்ள நண்டுகளை சுவைத்துண்ணும் பாரம்பரிய முறையாக சீனாவில் காணப்படுகின்றது.

தட்டைமீன் (Turbot) கடலடித்தளத்திலிருந்து உணவைப் பெறும் மீனினமாகும். இவை அவற்றின் தசைப்பகுதியில் காணப்படும் நெய்த்தன்மைக்காக அதிக விலை பெறுகின்றன. இவ்வகை மீன்களுக்கு உடலின் மேற்பகுதியில் ஓரே பக்கத்தில் கண்கள் காணப்படும். ஏனைய உருளையான மீன்களுக்கு ஒவ்வொரு கண்ணும் ஒவ்வொரு பக்கத்தில் காணப்படும்.

சினைகளை அதிகளவில் கொண்டிருக்கும் ஸ்ருஜியன் (Sturgeon) எனப்படும் மீனினம் கஸ்பியன் கடலில் அதிகளவில் காணப்பட்டது. தற்போது சூழல் மாசடைவின் காரணமாக இம்மீனினம் பெருமளவில் அழிந்து விட்டது. சல்மன், ட்ரவுட் ஆகியவற்றின் முட்டைகள் தகரத்தில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன.

ஓடுகளைக் கொண்ட மீனினங்கள் (Crustaceans) வெளியே கடின ஓட்டையும் உள்ளே தசையையும் கொண்டவை. இவை குளிரான நீர்ப்பகுதியில் காணப்படும்போது அவற்றின் சுவை அதிகமாகும். இவற்றுள் பெண் இனத்தின் தசை அதிக சுவையானது. அலாஸ்காவின் உரோமங்களைக் கொண்ட நண்டுகள் அலாஸ்காவின் பனிக்கட்டிப் பகுதியில் இருந்து வருகின்றன. அதிக அளவில் இறைச்சியைக் கொண்ட இவற்றின் பெரிய கொடுக்குகளால் இவை பெயர் பெற்றவையாக உள்ளன. உலகெங்கும் உள்ள உணவு விடுதிகள் இவற்றை பெறுமதியான உணவாக கருதுகின்றன. இதற்கு நண்டு கொடுக்குகள் பரிமாற இலகுவாக இருப்பதுடன் நண்டு ஓடுகளை உண்பதை விட இலகுவானவை. மெக்ஸிக்கோ மற்றும் அத்திலாந்திக் கரையோரங்களில் நீல நண்டுகள் சுவையான வெள்ளை இறைச்சியைக் கொண்டவை.



**அமெரிக்க வகை லொப்ஸ்ரர்களை விட ஐரோப்பிய வகை லொப்ஸ்ரர்கள் மென்மையான இனிமையான நறுமணச் சுவை கொண்டவை**



மெல்லிய ஓடுகளைக் கொண்ட நண்டுகள் தமது பழைய ஓட்டைக் கழற்றி விட்டு புதியதை விருத்தி செய்யும் நிலையில் உள்ளவை. எனவே எல்லா வகை நண்டுகளும் தமது வாழ்க்கைக் காலத்தில் மென்மையான ஓட்டைக் கொண்டவையாகும்.

நீண்ட வாலையும் பெரிய கொடுக்குகளையும் கொண்ட பெரிய இறால்கள் (Lobsters) இரண்டு பாரிய வகைப்படும். ஒன்று அமெரிக்க (மற்றும் கனேடிய) வகை மற்றது ஐரோப்பிய வகை. அமெரிக்க வகையை விட ஐரோப்பிய வகை மென்மையான இனிமையான நறுமணச் சுவை கொண்டது என இவற்றின் சுவைகளை நன்கு அறிந்தோர் கூறுவர். இவற்றுள் சிறந்தவை குளிரான நீர்ப்பகுதியில் இருந்தே கிடைக்கின்றன. கொடுக்குகளற்றவை லொப்ஸ்ரர் என அழைக்கப்பட முடியாது.

இறால்களும் (Prawns), கூனி இறால் (Shrimps) என அழைக்கப்படும் மிகச்சிறிய இறால்களும் கடலின் ஓடுள்ள உயிரினங்களுக்குள் (Crustaceans) மிகவும் பிரபலமானவை. பொதுவாக நம்பப்படுவது போல் இவற்றின் அளவு பெரிய விடயமானது அல்ல. இவை நன்னீரில் வளர்கின்றனவா? கடலில் வளர்கின்றனவா? என்பதுவும் இவை இயற்கையாக வாழ்கின்றனவா? பண்ணையில் வளர்க்கப்படுகின்றனவா? என்பதை கவனத்துக்குரிய விடயமாகும். சிங்க இறால்கள்(Tiger Prawns) அல்லது இராஜ இறால்கள் என அழைக்கப்படுபவை வெப்பமான நீர்ப்பகுதியில் வாழும் வகைகளாகும். இவை தென்னாசிய சமையலில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

மட்டிகளுள் பிரான்ஸ், இங்கிலாந்து, பெல்ஜியம் ஆகிய பகுதிகளில் பெறப்படுபவை மிகவும் சுவை மிக்கவை. மட்டிகள் சமைக்கப்படும்போது அவற்றின் நறுமணச் சுவை அற்றுப் போகின்றது. அழகான நிறங்களுடன் கூடிய விசிறிவடிவிலான சிப்பிகள் 300 வகையானவை காணப்படுகின்றன. குளிரான நீர்ப்பகுதியில் வாழ்பவை மிகவும் சிறந்த சுவையும் மணமும் கொண்டவை. எனவே கடலுணவுகள் எவையாக இருந்தாலும் அவற்றின் சுவையும் மணமும் அவற்றின் வாழிடத்தை (Habitat) பொறுத்ததே என்பதை நாம் அறிந்து அவற்றிற்கேற்ப தேடி உண்ணும்போது உண்பதனால் அதிகூடிய திருப்தியைப் பெறலாம்.

■ ■ ■


**N.K.S**

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**


**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

## சலரோகம் என்னும்

# உணர்வுக் கொல்லி நோய் அபாயம்!

இராஜசேகர் ஆத்தியப்பன்



1849 ஆம் ஆண்டில் Dr.Claude Bernard என்பவர் தான் முதன் முதலில் இந்த சலரோகம் (Diabeties) என்ற நோயைக் கண்டு பிடித்தார். “உங்கள் மன நெருக்கடியை உங்களால் குறைக்க முடியுமானால் சலரோகத்தை எளிதில் குணப்படுத்தலாம்” என்று Dr.Bernard குறிப்பிடுகின்றார். மனக் குழப்பங்கள் (அ) மன அழுத்தம் மூளையின் ஹைபோதாலமஸ் பகுதியைப் பாதிக்கின்றது. இதனால் சலரோகம் ஏற்படுகின்றது. உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, உடலுறவு, உறக்கம் இவைகளை முறைப்படுத்தி வாழ்வதன் மூலம் நீரிழிவைக் குணப்படுத்தலாம்.

நீரிழிவு என்றால் என்ன?

நாம் உட்கொள்ளும் உணவுகளிலிருந்து மாவுச் சத்துப் பிரிக்கப்பட்டு ஜீரணத்தின் போது குளுகோஸாக மாறி (சக்தி) செல்களினுள் செலுத்தப்பட வேண்டும். இச் செயலை செய்யப் பயன்படும் ஹார்மோன் தான் ‘இன்சுலின்’ இது நமது உடலின் கணையம் என்று அழைக்கப்படும். மண்ணீரலில் (Pancreas) இருந்து சுரக்கின்றது. மண்ணீரல் பாதிக்கப்படும்போது இன்சுலின் சுரப்பது குறைகின்றது. இதனால் குளுகோஸ் சரியாக செல்களில் செலுத்தப்பட முடியாமல் நம் இரத்தத்தில் கலந்து உலா வருகின்றது. அளவு அதிகமாகும்போது சிறுநீர் வழியே வெளியேறத் துவங்கும். சிறுநீர் அதிகமாகக் கழிக்கப்பட்டால், நாவறட்சி உண்டாகும். தாகத்தினால் உடல் சோர்வடையும். நீர் உட்கொள்ளல் + நீர் வெளியேறல் = நீரிழிவு

நீரிழிவிற்கான அறிகுறிகள்

இரத்தத்தில் குளுகோஸின் அளவு அதிகரித்துக் கொண்டே போகும்பொழுது நமது சிறுநீரகங்கள் (Kidneys) எச்சரிக்கை அடைந்து மிகுந்த அளவில் வேலை செய்து சிறுநீர் வழியாக அவற்றை வெளியேறத் துவங்கும். இதனால் சிறுநீர் பரிசோதனையின் மூலம் நீரிழிவு நோயைக் கண்டறிகின்றோம். குளுகோஸை நமதுஉடல் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை வரும்போது எடை இழப்பு, எரிச்சல் உண்டாகி...கோமா நிலைக்குக் கூட இட்டுச் செல்லும். கீழ்க்கண்ட அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகுங்கள்.

- உடல்சோர்வு – தளர்ச்சி
- காயங்கள், புண்கள் குணமாவதில் தாமதம்
- அதிகப் பசி மற்றும் தாகம்
- எடை கூடுதல் அல்லது மெலிதல்
- பிறப்புறுப்புக்களில் புண்
- தாம்பத்திய உறவில் ஆர்வம் குறைதல்
- அடிக்கடி (அல்லது) அதிக அளவில் சிறுநீர் கழித்தல்
- தலைசுற்றுதல்
- பாதங்களில் எரிச்சல்
- அதிக வெள்ளைப்படுதல் (பெண்களுக்கு)
- அடிக்கடி தோல் நோய் ஏற்படுதல்
- நுரையீரல் தொற்றுநோய் அடிக்கடி ஏற்படுதல்
- கண்பார்வை மங்கிப் போதல்
- அதிக இரத்த அழுத்தம், கை கால் நடுக்கம், கோபம்.

மேற்கண்ட அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருக்குமாயின், தவறாமல் மருத்துவரை அணுகி முறையான இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.

### நீரிழிவில் இரண்டு வகைகள் உண்டு.

வகை 1: இன்சுலின் பற்றாக்குறை மிகவும் அதிகமாகக் காணப்படும். ஆயுள் முழுவதும் இன்சுலின் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை இவர்களுக்கு. இதை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தாவிட்டால், சில வருடங்களில் நமது உடலின் இரத்தக் குழாய்கள், சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலங்கள் என அனைத்தையும் செயல் இழக்கச் செய்யும் ஆற்றல் இந்த நோய்க்கு உள்ளது.

‘இன்சுலின்’ என்பது புரத வகையைச் சேர்ந்த ஒரு ஹார்மோன். இதன் உற்பத்தி கணையத்தின் பின்பகுதியிலிருந்து ஏற்படுகின்றது. நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் உற்பத்தி குறைவாக இருப்பதால், மாடு மற்றும் பன்றிகளிலிருந்து இன்சுலினை எடுத்து நோயாளிகளின் உடலில் செலுத்துகிறார்கள்.

Recombinant DNA தொழில்நுட்பம் மூலம் பன்றிகளின் இன்சுலினை எடுத்து என்ஸைம் சிகிச்சை மூலம் மாற்றியமைத்து நம் உடலில் செலுத்துகிறார்கள்.

வகை 2: இவ்வகை நோய் பரவுவதற்கு அல்லது வருவதற்கு முக்கிய காரணங்கள்:

- பரம்பரை,
- உடல் பருமன்,
- மன நெருக்கடி
- கல்லீரலினால் குளுக்கோஸ் கையாளப்படும் முறையில் மாற்றம்
- பீட்டா செல்களின் இன்சுலின் உற்பத்தி இயலாமை.
- அதிக உழைப்பு, உணவுப் பழக்கம், மது அருந்துதல்
- பல மருந்துகள் எடுத்ததால் பின் விளைவுகள்
- நாளமில்லாச் சுரப்பிகளில் ஏற்படும் நோய்கள்
- மரபுக் குறைபாடு
- கருத்தடை மருந்துகளைத் தொடர்ந்து பாவித்தல்

இதுதவிர, கர்ப்பகால நீரிழிவும் உண்டு. இதைக் குறித்துக் கவலைப்பட அவசியமில்லை.

நீரிழிவு குறித்த புதிய தகவல்கள்

- நீரிழிவு உள்ள ஆண்களுக்கு (Testosterone) டெஸ்டிரோஸோன் என்னும் ஹார்மோனின் அளவு குறையும். இதனால் பாலியல் ஆர்வம் (உடலுறவு) குறையலாம்.
- நீரிழிவு மனக்குழப்பத்தைக் கொண்டு வந்து மனநோயாளியாக மாற்றும் தன்மையுள் ளது.
- 50 வயதுக்கு மேல் ஆனால் PAD (Peripheral Arterial Disease) ஏற்பட்டு பக்க வாதம் (Stroke) உண்டாக வாய்ப்பு அதிகம்.
- சாப்பிட்டவுடன் உறக்கம் - கண்ட நேரத்தில் நொறுக்குத் தீனி – உடல் பருமன் இவைகளெல்லாம் நீரிழிவை வரவேற்கும் வாசல்படிகள்.
- நீரிழிவும் அதிகக் கொலஸ்ட்ரோலும் கண் பாதிப்பைக் கொண்டு வரும்.
- சிறுவயது முதலே அதிகக் குண்டாக இருக்கும் பெண்களுக்கு மூளைச் சதை செயல் இழக்கலாம் (Brain Atrophy)
- உடற்பயிற்சியினால் சாதாரணமானவர்களை விட நீரிழிவு நோயாளிகளுக்கே பயன் அதிகம்.
- நீரிழிவு நோயாளிகள் விட்டமின் சி யைத் தவிர்க்க வேண்டும். ஓறேஞ்ச், தேசிக்காய் பயன்பாட்டைக் குறைக்கவும்.
- வெள்ளை ரொட்டி கூடவே கூடாது.
- மண்ணீரல், புற்றுநோய் என்பன நீரிழிவு நோயாளிகளுக்கு வரலாம்.
- Inhaled Insulin - மூக்கு வழியாக எடுத்துக் கொள்ளப்படும் இன்சுலின் ஊசியால் எடுத்துக் கொள்வதை விட சக்தி வாய்ந்தது.
- உணவுக் கட்டுப்பாடு இல்லாத நீரிழிவு நோயாளிகளின் கை, கால்கள் வயதாகும் பொழுது செயலிழந்து விடும்.
- இங்கிலாந்தில், கடந்த 5 வருடங்களில் 1.8 மில்லியனிலிருந்து 3 மில்லியனுக்கு நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.
- இரத்தச் சர்க்கரை ஒரு சதவீதம் அதிகரித்தால், இதயநோய் 18% அதிகரிக்கின்றது.
- நீரிழிவு நோயாளிகள், நியோரபதி செய்யும்போது வலியைக் குறைக்க ‘லிடோசியன் பாட்ச்ஸ் உதவுகின்றது. இது ஒரு புதிய கண்டுபிடிப்பு.
- நீரிழிவு நோயாளிகளுக்கு உடலுறவில் ஆர்வம் அதிகமாக லெவிட்ரா என்னும் மருந்து உதவுகின்றது.
- ‘மது’ மிகப்பெரிய எதிரி
- 45 நிமிடங்களில் தினமும் நடந்தால் மூளையின் செயல்பாடு அதிகமாகும்.
- அல்ஸமீர் என்னும் மூளை பாதிப்பு நோய் வர நீரிழிவும் ஒரு காரணம்.
- காது கேட்கும் திறன் குறைகின்றது.
- இரும்புச் சத்து எடுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கே கர்ப்பகால நீரிழிவு ஏற்படுகின்றது.
- கொழுப்பு, ஈரல் மற்றும் எலும்புகளில் இன்சுலின் தயாரிக்கும் செல்கள் அதிகம் காணப்படுகின்றது.
- நீரிழிவு நோயாளிகளின் இறப்பு வீதம் அதிகம்.
- பரம்பரையாக வரும் நீரிழிவுக்குக் காரணமான ஜீனின் பெயர் HNF4
- பன்றிகளில் ஒரு ரகமான Gilamonster இன் எச்சிலில் இருந்து எடுக்கப்படும் ஒரு வகையான மருந்து வகை 2 நீரிழிவைக் குணப்படுத்தக் கூடியது. இதன் பெயர் Exenatide.
- இன்சுலினுக்குப் பதிலாக triple therapy என்ற புதிய முறையும் கையாளப் படுகிறது.

நீரிழிவைக் குணப்படுத்தவல்ல G.T. நாயுடுவின் கண்டுபிடிப்பு, New chapter ன் கருவாப்பட்டை மருந்து, மற்றும் நம் நாட்டு புனிதத் துளசி இன்னும் பல மூலிகைச் செய்திகளுடன் அடுத்த ‘தாய் வீடு’ இதழில் சந்திக்கின்றேன். –

வாசகர்கள் தங்கள் கேள்விகளை தாய்வீடு பத்திரிகைக்கு எழுதலாம். கேள்விகள் இருப்பின் தயவு செய்து 416-849 0594 என்னும் தொலைநகல் இலக்கத்திற்கோ அல்லது thaiveedu@gmail.com என்னும் இணைய முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்

■ ■ ■



## Looking out for your best interest™

**Looking** for a

**Mortgage?**

call 416.548.8000 now...



**Myuran Ramachandran**
Mortgage Consultant

CENTUM™
One Financial Group Inc.

**Bus: 416.548.8000 • Fax: 416.548.8001**

Each Office is Independently Owned And Operated







சிகையலங்காரம் உங்களை
மெருகூட்டுகிறது,
எமது அலங்காரம் உங்கள்
இல்லத்தை உருமாற்றுகிறது!

visit or call
**www.4168316397.com**

digi Media

அயலவரையும் ஆச்சரியப்படுத்த அழையுங்கள்...

**Best Way**
**BLINDS & SHUTTERS**
DISCOVER THE WORLD FROM YOUR WINDOW

www. bestwayblinds.com
bestwayblinds@yahoo.ca

**FREE ESTIMATE**

8 Shaddock Cres, Toronto, ON

**416.831.6397, 416.269.6117**

# "ஓகஸ்ட்" புதிய சாதனையை நிலைநாட்டியது

## சந்தை நிலவரம் (ஓகஸ்ட் 2007)

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



"ஓகஸ்ட் புதிய சாதனையை நிலைநாட்டியது. 8000 விற்பனை வரம்பை முறியடித்தது. ரொறொன்ரோ பெரும்பாகம் முழுவதிலிருந்தும் TREB அங்கத்தவர்கள் அறிவிப்பின்படி ஓகஸ்ட் 2007இல் 8059 விற்பனையுடன் தொடர்ச்சியாக 5ஆவது மாதம் சாதனை படைத்துள்ளது" என்று TREB தலைவர் டொனால்ட் பென்ட்ஸ் அறிவித்தார்.

இந்தத் தொகை சென்ற வருடம் ஓகஸ்ட் மாதத்தைவிட 15வீதம் அதிகமாகவும் 2005 அதே மாதம் நடந்த விற்பனையான 7.498ஐ விட ஏழு வீதம் அதிகமாகும். அதுவே ஓகஸ்ட் மாதத்துக்கான அதிகபட்ச செயற்பாடாக இதுவரை இருந்தது. 2007 கோடை கால ரொறன்ரோ றியல் எஸ்டேட் சபையின் சரித்திரத்தில் இதுவே மறு விற்பனைச் சந்தையின் மிகச் சுறுசுறுப்பான விடுமுறைக் காலமாகும்' என்று TREB தலைவர் டொனால்ட் பென்ட்லி அறிவித்தார்.

விற்பனை முன்னேறினாலும் ஓகஸ்டில் விலைகள் வாங்கக்கூடிய சராசரி $ 361,890 இல் இருந்தது. இது ஓகஸ்ட் 2006இல் இருந்த $ 338,192ஐ விட ஏழு வீதம் அதிகமாகும். கடந்த பத்தாண்டுகளில் ஐந்து ஆண்டுகளில் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அத்துடன், ஆறாவதாக 2007இல் நடக்கவும் கூடும்.

ஒவ்வொரு வருடமும் விலை உயர்வு ஒற்றை எண்ணிலேயே இருந்தது. இப்படியான செயல்முறை நீண்டகாலம் இருக்கும்.

### விற்பனையை ஆய்வுசெய்தல்:

| எண்ணிக்கை | மாவட்டம் | சராசரி | விற்பனை |
|---|---|---|---|
| 28 | மேற்கு மாவட்டங்கள் | $343, 493 | 3067 |
| 14 | மத்திய மாவட்டங்கள் | $453,718 | 1532 |
| 23 | வட மாவட்டங்கள் | $403,539 | 1814 |
| 21 | கிழக்கு மாவட்டங்கள் | $285,565 | 1905 |

### அயல்வட்டாரச் சதுக்கம்
**றொஸ்டேல்**

இந்த வருடம் மொத்தம் நூறு குடியிருப்புக்கள் விற்பனையாயின. றொஸ்டேலில் (Port of CO9) சராசரி விலை 1,208,414 டொலர்களாகும்.

இது சென்ற முதல் எட்டு மாதங்களில் கிடைத்ததைவிட நான்கு வீதம் அதிகமாகும். இவற்றுள் 34 தனி வீடுகள். அவை சராசரி 2,203,457க்கு விற்கப்பட்டன. இது சென்ற வருடம் இதே காலத்தில் பதிவுசெய்யப்பட்ட 2,087,600 டொலரைவிட நான்கு வீதம் அதிகமாகும்.

**தனிக்குடியிருப்புகளின் விற்பனையும், வீதமும் மீடியனும்:**

| வசிக்கும் வீட்டின் மாதிரி | விற்பனை | % | மீடியன் |
|---|---|---|---|
| 1. Detached | 3,728 | 98 | $385,000 |
| 2. Semi Detached | 908 | 99 | $315,000 |
| 3. Condo Town house | 745 | 98 | $244,150 |
| 4. Condo Apt. | 1,946 | 98 | $232,500 |
| 5. Link | 170 | 98 | $299,000 |
| 6. Alt. Row Townhouse | 525 | 99 | $302,000 |
| 7. Co-Op Apt. | 33 | 98 | $175,400 |
| 8. Det. Condo | 09 | 97 | $353,000 |

### கொமேர்ஷல் வோச்

2006 ஓகஸ்டில் 800,000 சதுர அடி இடம் குத்தகைக்கு விடப்பட்டது. 2007 ஓகஸ்டில் 806,743 சதுர அடி குத்தகைக்கு விடப்பட்டதோடு அந்த நாள் ரொறொன்ரோ பெருநகர் பகுதி தொழில்,வர்த்தக சந்தைக்கு ஒரு முக்கிய நாளாகும்' என்றார் வர்த்தக சங்க உப தலைவர் காரி லாண்ட்ர் இன்று. இந்த கோடைக்கு மொத்தம் 3,070,102 சதுர அடி வர்த்தகம் ரொறொன்ரோ MLS முறையில் நடந்துள்ளது. இது 2006 கோடை காலத்தில் பதிவான 2,716,065 ஐ விட 13 வீதம் அதிகம். $ 6.35 SFN சகல வகையான தொழில் இடங்கள் 2006ம் ஆண்டு ஓகஸ்டை விட 12 வீதம் உயர்ந்தது. வர்த்தக இடங்களும் $ 15.86 SFN இல் இருந்து 12 வீதம் உயர்ந்து $ 17.86 SFN ஆக இருந்தது.

### விற்பனைச் சந்தை

ஓகஸ்டில் 53 வர்த்தக தொழில் சொத்துக்கள் விற்கப்பட்டன. (ரொறன்ரோ MLS முறையில்) அவற்றுள் 23 தொழிற் கட்டடங்கள்(சகல அளவிலும்). அவை. சராசரி $10.30 சதுர அடிக்கு என விற்கப்பட்டன. இவை MLSஇல் இல்லாத இடங்களுடன் ஒப்பிடலாம்.

■ ■ ■






# Thanksgiving Day Special

# வான்கோழி சமைப்போம், வாங்கோ!

Thanksgiving Day. உங்கள் மகள், 'இன்று Turkey செய்து தாருங்கள்' என்று கேட்கின்றாள் என்று வைத்துக்கொள்ளுவோம். வழமையாக மேற்குலகில் உள்ள தமிழ்பெற்றோரிடம் கேட்கப்படும் கேள்வி இது. அனேகமான நேரங்களில் இந்தக்



கேள்விக்கான பதில் ஒரு சமாளிப்பாக இருக்கும். அல்லது எவ்வாறு Turkey சமைப்பது என்று தெரியாமல் முயன்றதில், தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதமாகிப்போன சந்தர்பங்ளும் நிறையவே உண்டு. இதனாலேயே, சைப்பிரஸ்காரர்களை விட Turekyஐ பிடிக்காமல் போன நிறைய தமிழர்களும் இருக்கவே செய்கிறார்கள். (நான் Turkey என்ற நாட்டைப் பற்றி சொன்னதாக நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பல்ல)

இந்த Turkey சமைப்பதில் உள்ள மர்மம் தான் என்ன? சேதாரமின்றி இந்த Turkeyஐை வெற்றிகொண்டு பிள்ளைகளிடம் நல்லபெயர் வாங்க இதோ Turekyஐ சமைப்பதற்கான வழிமுறை.

Thanksgiveng Day தினத்தில் முழு Turkeyஐ Ovenக்குள் வைத்து சமைப்பது வழமை. ஒரு முழு Turkeyயின் நிறை ஏறத்தாள 13 இறாத்தலாக இருக்கும். இந்த நிறையை யுடைய Turkey யின் உள்ளே வைப்பதற்கு 10 Cup Stuffing தேவை. அத்தோடு தேவையான அளவு பட்டர், உப்பு, மிளகு மற்றும் Turkey Stock or chicken stock இருந்தால் நல்லது. முதலில் stuffing எவ்வாறு செய்வது என்று பார்க்கலாம்.

ஒரு இறாத்தல் துண்டுகளாயுள்ள வெள்ளைப் பாண் ஒன்றை, அரை அங்குல கியூப்(Cubes) களாக வெட்டிக்கொள்ளுங்கள். இந்த கியூப்புகளை தட்டில் இரவு முழுவதும் காய விடுங்கள் அல்லது Ovenஇல் வைத்து மெதுவாக வாட்டிக்கொள்ளுங்கள். இவ்வாறு காயவைக்கப்படும் பாண் துண்டுகளை குருட்டான்கள் என அழைக்கலாம்.

இவ்வாறு பெறப்பட்ட குருட்டான்களை பெரிய பாத்திரமொன்றில் வையுங்கள். அத்னுடன் அவித்து துண்டுகளாக்கப்பட்ட காய்கறிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். என்ன காய்கறியென்பது உங்கள் சுவையைப் பொறுத்தது. பார்ஸ்லீ இலைகள் சிறிதளவு சேர்த்துக்கொள்ளலாம். எல்லாவற்றையும் நன்றாகக் குழையுங்கள். உப்பும் மிளகும் தேவையானளவு சேர்த்துக் கொள்ளுங்கள்.

1 1\2 கப் புரொத் (இறைச்சி அல்லது காய்கறி அவிக்கப்பட்ட நீர்) சேருங்கள். மீண்டும் குழைத்துக்கொள்ளுங்கள். Stuffig தயார். இப்போது Turkeyயை எடுத்துக்கொள்வோம்.

Turkeyயின் உள்ளே Stuffigஐ வைக்க வேண்டும். வைக்கும் போது Turkeyயின் உள்புறம் காற்றே புக முடியாத அளவுக்கு அடைந்து வைக்கக் கூடாது. அப்படி செய்தால் தேவையான அளவு வெப்பம் Turkeyயின் உட்புறம் செல்லமாட்டாது. எனவே காற்று போகக் கூடியவாறு அளவான Stuffig ஐ உள்ளுக்குள் திணிக்க வேண்டும்.

Turkeyயின் உள்ளுக்குள் திணித்த Stuffig வெளியில் வந்து விடாதபடி இருப்பதற்காக இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும்.

ஒன்று: Turkey யின் கழுத்துப் பகுதியில் இருக்கும் தோலை எடுத்து நன்றாக மூடி அதை ஒரு metal skewer அல்லது ஒரு wooden skewerஆல் குத்தி விட வேண்டும்.

இரண்டு: Turkey யின் பின்புறம் இருந்து Stuffig வெளியே வராமல் இருக்க Turkey யின் கால்கள் இரண்டையும் இணைத்துக் Twineஆல் கட்டிவிடவேண்டும்.

பின்னர் உப்பு, மிளகு, பட்டர் என்பனவற்றை தேவைக்கு ஏற்றவகையில் Turkey யின் தோலின் மேல் பூசவேண்டும். பின்னர் இந்த Turkeyஐ ஒரு Roasting panஇல் வைத்து இரண்டு கப் Turkey stock அல்லது இரண்டு கப் chicken stock ஊற்ற வேண்டும்.

பின்னர் இதை 450பாகை வெப்பநிலையில் Ovenக்குள் முப்பது நிமிடங்கள் வைக்க வேண்டும். முப்பது நிமிடங்களின் பின்னர் வெப்பநிலையை 375 பாகைக்கு குறைக்க வேண்டும்.

அதன் பின்னர் ஒவ்வொரு அரைமணி நேரத்தின் பின்னரும் Roasting pan உள்ள Turkey stock ஐ எடுத்து Turkey மீது ஊற்றிவிடவேண்டும். சில சமயம் போதுமான அளவு Turkey stock, Roasting pan இல் இல்லாது போய்விட்டால் மேலதிகமான Turkey stock ஐ விடவேண்டும்

ஒரு Turkey ஐ முழுமையாக cook பண்ணி முடிய குறைந்த பட்சம் 3 - 4 மணிநேரம் ஆகும். உங்களிடம் Thermometer இருந்தால் Turkey யின் கழுத்துப்பகுதியில் Parallel ஆக அதை முழுமையாக உட்செலுத்தி Turkey எந்த வெப்பநிலையில் உள்ளது என்று பரிசோதிக்ககலாம். அது 160-165பாகையில் இருந்தால் Turkey முழுமையாக cook பண்ணப்பட்டு விட்டது என்று ஆகும்.

இதன் பின்னர் Turkeyஐ வெளியில் எடுத்து அதன் உள்ளுக்குள் நாம் அடைந்த Stuffing எல்லாவற்றையும் வெளியில் எடுத்து ஒரு பாத்திரத்தில் சேமித்துக் கொள்ளவேண்டும். இந்த Stuffing ஐ நாம் பின்னர் Turkeyயுடன் சேர்த்து பறிமாற வேண்டும்.

எடுக்கப்பட்ட Turkeyஐ மீண்டும் Ovenக்குள் ஒரு 20 - 30 நிமிடங்கள் வைக்கவேண்டும். அதன்பின்னர் மீண்டும் வெளியில் எடுத்து 20 நிமிடங்கள் ஆறவிட்டு பின்னர் வெட்டி பறிமாறலாம். இவ்வாறு Turkey பதமாக சமைத்தால் அதன் சுவை தனியானது.

### Stock செய்யும் முறை:

தண்ணீரில் கோழி எலும்பை, அல்லது Turkey எலும்பை போட்டு சில மணிநேரம் அவிக்க வேண்டும். (இந்த எலும்பில் சற்று இறைச்சியும் சேர்ந்து இருக்கும்). விருப்பமானால் அத்தோடு கரட், லீக்ஸ், சலரி, வெங்காயம், என்பனவற்றையும் சேர்த்து அவிக்கலாம். பின்னர் இதை வடித்து தண்ணீரை மட்டும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இது Stock என்று அழைக்கப்படும். இது போல கோழியிலும், மாட்டிலும், மரக்கறியிலும் Stock செய்து கொள்ளலாம்.

■ ■ ■

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு

அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை

"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"

**ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?**

வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா? வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Want to become a Mortgage Consultant?**
We provide you free workshops, training and seminars to become a certified Mortgage



digi Media Creation

BonaFide
Mortgage Solutions

1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: **416.548.7475**, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com

- Mortgages
- Re-Finance
- Seminar
- Workshops

www.bmsic.com
one stop solution for all your mortgage needs



# மீளாக்கடனில் தத்தளிக்கிறீர்களா?

Small Claims Court - Collection Agencies - Loss Business - Student Loan

31 வருடகால சிறந்த அனுபவம்!

வீடு வாகனங்களை இழக்காமல் உங்கள் கடன் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வை எட்டிடவும்!


உங்கள் கடன் தொகையில் ஒரு பகுதியினை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துவதன் மூலம் மீளாக்கடனில் இருந்து முற்றாக விடுதலையாகிறீர்கள்!

பறிமுதலாகும் ஊதியத்தை நிறுத்திடவும்
கடன் வழக்குகளில் இருந்து உங்களைக் காத்திடவும்!

Consultation - Consumer Proposals - Bankruptcy

Canada Revenue Agency யின்
வரி சம்மந்தப்பட்ட பிரச்சனைகள்!

மொன்றியாலிலும் சேவை தரப்படுகின்றது!



crc
Credit Recovery Canada
416-264-1272
55 Town Centre Court Suite 700

தமிழர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ் நிறுவனம்!

CLARICA




Clarica is becoming Sun Life Financial.
Your trusted Clarica advisor remains your trusted Sun Life Financial advisor.

Ask us how these changes will benefit you.



I'm Chandran Rasalingam.
I have been your trusted Clarica advisor and am now becoming your Sun Life Financial advisor. Please call me at 416 412-0401 ext 305 so I can talk about the benefits to you.

Sun Life Financial

Associated with Clarica Financial Services Inc. and Clarica Investco Inc., a Mutual Fund Dealer. These companies intend to change their names to reflect the Sun Life Financial brand. Both companies are wholly owned subsidiaries of Sun Life Assurance Company of Canada, one of the Sun Life Financial group of companies.



**$ 320,000.**



**Mccowan/ McNicoll**

3 BR, 2 WR. Well Maintained Home. Move-In Condition. Steps To Ttc. Established Area Close To Schools, Shopping And Parks.


**$ 154,900.**



**Mccowan/Steeles**

Corner Unit.Den Has Window, Can Be A 2nd Bedroom. Wrap Around Windows.Unit Is Above Ground Level.Huge Master BR .Ttc At Door,Minutes To Supermarket,Community Centre,School And Church. Low Maintenace Fee

**$ 477,000.**



**Weston/ Rutherford**

4+1 BR, 4 WR, Extra Bright. Many Windows, Spacious, Wood And Ceramic Floors Through-Out. Very Wide Irregular Side Yard. Convenient To All Amenities.



**Logan Manikkavasagar**
Associate Broker

Century 21

Percy Fulton Ltd.
**416•298•8200**

**416•708•9903**
www.loganhotproperties.com

**Kalai Logan**
Sales Representative

# THINKING OF BUYING OR SELLING PROPERTY

for professional, reliable and honest service

- **Residential-Commercial-Industrial-Investment**
- **List Your Home (Low Commission)**
- **Mortgage, Lawyer, Home Inspection**



## Manickanadarasa Karunahkaran

Sales Representative

Dir: 647.272.8597

1345 Morningside Ave., Suite: 8, Toronto, ON M1B 5K3,
Office: 416.759.6000 fax: 416.759.6005
www.veedu.com

VEEDU REALTY INC. BROKERAGE

I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**We are giving the best rate in town and pay your mortgage faster with good advise**

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, AMP

*Senior Mortgage Consultant,*

**416.895.4321**

701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
Fax: 416.644.0943, akilasenthil@invis.ca



## "Make Your Dream Home Come True"

**Professional Realtor**
**24/7**
# 416-230-1107

**Param Gnanaswaran** Broker


**Home Life GTA Realty Inc., Brokerage**

**Office West**
145 Traders Blvd.
Suite # 28
Mississauga
Tel: 905-712-2666

**Office East**
1711 McCowan RD.
Suite # 206
Scarborough
Tel: 416-321-6969





Sold with in 10 days





2 storey Town home. finished basement. 3 bed rooms , 2 washrooms Excellent Location Spacious & Bright Well Kept Freehold Townhouse On Quiet Cul-De-Sac *Large Principle Rooms





Sold with in 14 days




Immaculate Well Kept 3 Bed, 3 Wash Detached 2 Storey, In A Quiet Neighborhood Finished basement. This Is A Condo But Listed On Freehold For Greater Exposure. Ideal For First Time Buyers!




Sold with in 30 days




Detached bungalow 4+1 bedrooms and 2 wash finished basement. Very Motivated Vendor. Well Maintained Home Ideal For First Time Buyers. Freshly Painted




Semi det. 2 storey Free hold townhouse, Full basement. 3 bedrooms and 2 washrooms 10++Home. Great Area. 3 Minute Walk To Park And Conservation Area (Credit River)




Sold with in 8 days




Sold with in 7 days




Semi-det 2 storey house with full basement 3 bed rooms and 2 washrooms Gorgeous Home In Sought-After Area. Huge Deck, Beautiful Interlocking walkway. 2 Parking Spaces On Driveway, Covered Porch




Detached 2 storey house, full basement 3 bedrooms and 3 washrooms Immaculate home in high demand location




Det. 2 storey house, finished basement 3+1 bed rooms and 2 washrooms. Well-Maintained Link Home, New 3-Car Driveway, No Sidewalk, Garage Direct Access, New Ceramic Foyer Thru Eat-In Kitch




Det. 2 storey house with finished basement3+1 bed & 4 wash, Absolutely Move In Condition, Close To Public & High School, Park, Masjid, Church & Temple, Basmt. Apt. With Sep. Entrance




Sold with in 12 days




Detached 2 Storey full basement 4 bed and 3 wash. Simply Gorgeous Loaded With Tons Of Upgrades. Better 1Yr Old Brick & Stone Exterior. Welcoming Double Door Entry




Detached 2 storey home with finished basement 3+1 bedrooms and 2 washrooms. Terrific Starter Home Or For Investment! Home Rented, Tenants Are Willing To Stay.

- ***INVESTMENT*** **- Luxury Condominiums, Commercial Properties and Vacant Lands.**
- **Selling and Buying your Properties or Businesses.**
- **Arranging Mortgages for LOWEST INTEREST RATE.**

**For all your real estate questions and needs Call Param G**



தேவகாந்தன்

# பின்நவீனத்துவம் குறித்த சில ஆரம்பச் சிந்தப்புகள்

புதிய புதிய ஆய்வுகளின் பின்பும், புதுப் புதுக் கண்டுபிடிப்புக்களின் பின்பும் புராதனமாய் நம்பப்பட்டு வந்த ஓர் உண்மை மாற்றமடைவது தவிர்க்கப்பட முடியாதது தான். ஆனாலும் இந்தத் தவிர்க்கப்பட முடியாதது என்ற விதியை வைத்துக்கொண்டு வரலாற்றுப் புரட்டுகளும் நடக்கின்றன என்ற உண்மையும் இருக்கிறது.

வரலாறு மாறும் என்று சொல்லப்படுவதுண்டு. இல்லை, அது வளர்வதுதான் செய்கிறது. புதிய வரலாறு ஒன்று தானாக உருவாகும். அது ஒரு புதிய கண்டுபிடிப்பின் பின்னாய் இருக்கலாம், தாங்கொணா வறுமையிலும் கொடுமையிலும் வெடித்த புரட்சிகளினாலாய் இருக்கலாம். ஆனால் வரலாற்றை மாற்றுவதென்பது புரட்டுகளினாலேயே நடக்கிறது. அது ஒரு திட்டமிடப்பட்ட இலக்கினை நோக்கிய பயணத்தின் பின்னணியாகவே நிகழ்கிறது. ஆனாலும் அது ஒரே நாளில் திட்டமிடப்பட்டோ நடைமுறைப்படுத்தப்பட்டோ விடுவதில்லை. மிகவும் அறிவுப் புலத்தோடுகூடிய ஒரு நீடிய காலத் திட்டம் அது.

சோவியத்தின் சிதறுலுக்கான திட்டம், மிகேல் கோர்ப்பசோவின் காலத்தில் போடப்பட்டதில்லை. அது ஜார் அலெக்ஸாண்டர் ஆட்சியதிகாரத்திலிருந்து இறக்கப்பட்டு சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்ட அன்று விழுந்தது.

இவற்றையெல்லாம் ஒரு பெரும் ஆட்பலத்துடனோ, பாடாடோபத்துடனோ செய்துமுடிக்க முடியாது. திட்டம்தான் முக்கியம். மீதியை அறிவும் பணமும் செய்து முடித்துவிடும்.

எதிரியை அழிக்க பில்லிப் பேயை ஏவிவிடுவது என்று ஒரு முறை இருந்ததாகச் சொல்வார்கள். சூனியத்தில் பில்லிப் பேயை ஏவிவிட்டுவிட்டால் போதும். அது காரியமாற்ற முடியாமல் திரும்பிவரும் போதெல்லாம் தீனியாக அரிசிப் பொரி போடவேண்டுமாம். அவ்வளவுதான். அது சரியான நேரத்தில் காட்டப்பட்ட ஆளை முடித்துவிட்டு அப்படியே காற்றில் கலந்துவிடும்.

இங்கே தம் உறுதிப்பாட்டுக்காக நாடுகளை அழிக்க, ஏவி விடப்படுவது இன்றைய நவீன உலகில் கருத்துநிலையாகவே இருக்கிறது. ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வதற்கான மனநிலையை மக்களிடத்தில் உருவாக்குவது இதன் வேலை.

அண்மையில் The Liveliest Art என்ற Arthur Knight என்பவர் எழுதிய சினிமா சம்பந்தமான நூலைப் படிக்கக் கிடைத்தபோதும் இந்தக் கருத்து என் மனத்தில் மீளுருவாக்கம் பெற்றது. பிரான்சின் லூமியர் சகோதரர்களதும், இங்கிலாந்தின் றொபேர்ட் டபிள்யூ. போலினதும், ஜேர்மனியினது மக்ஸ் மற்றும் எமில் ஸ்கலடானோவ்ஸ்கியினதும் சாதனைகளை ஒன்றுமேயில்லை என்னுமளவுக்கு எடிஸனின் சாதனைகளை வானளாவப் புகழ்ந்திருந்தது நூல்.

மேலாதிபத்தியம் என்பது மனித இயல்பாக ஆக்கப்பட்டிருக்கிறது. தன் சகல சவுகரியங்களை இழந்தும், இயற்கை அளித்த சுதந்திரங்களை இழந்தும் மனிதன் செல்வந்தனாக இருக்க இச்சித்தல் கொள்வது நடந்துகொண்டே இருக்கிறது. இதைத்தான் மாயை என்று மதவாதிகள் குறிப்பிட்டார்களோ என் பதுபற்றி நிறைய யோசிக்க முடியும். சைவ சமயவாதி பதி, பசு, பாசம் என்று உலகத்தையே மூன்றாகப் பிரிப்பான். பாசம் என்பது மாயை. மாயை அநாதியானது என்பது அவனது வாதம். செம்பில் களிம்புபோல அது உயிரில்பு என்பான் அவன். பார்க்கப் போனால் ஏதோ ஒரு அந்தலையை அவன் பிடித்துள்ளதுபோலவே தோன்றுகிறது.

ஆசை வயப்பட்டதிலிருந்து இந்த மேலாதிக்க உணர்வு ஆரம்பித்ததாக நாம் இதற்கு விளக்கம் கொள்ளலாம். மேலாதிக்க உணர்வானது இனம், மதம், மொழி, நிறம் சார்ந்து எழுகிறது. 'எல்லா நதிகளும் சமுத்திரத்தில் கலக்கின்றன, அதுபோல் எல்லா மதங்களும் கடவுளுடன் கலப்பதற்கானவை' என்றுதான் மதவாதி மேலெழுந்தவாரியாகக் கூறுகிறான். ஆனாலும் ஆதாரத்தில் அந்த மேலாதிக்க உணர்வு இருக்கவே செய்கிறதுதான். ஜனநாயகமானது ஜனப் பெரும்பான்மை மூலமாக ஆட்சிமன்ற முறைப்படி நிர்ணயமாகிறது என்பது வெளிப்படையான விளக்கம். அதன் உள்விளக்கம் பணத்தின் பெரும்பான்மை என்பதுதான். இதற்கு மேலே கீழே அதன் உண்மை இல்லை.

'ஆஹா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என்று பாரதி கூவிய ரஷ்யப் புரட்சி ஒரு புதிய பாதையைத் திறந்த கணம், மேற்குலகும் ஐக்கிய அமெரிக்காவும் விதிர்ப்படைந்த கணமாகவும் இருந்தது. 1950 களின் பிற்பகுதியில் ரஷ்யாவின் விண்வெளிப் பயணம் வெற்றியடைந்த நிமிடத்திலிருந்து ஐக்கிய அமெரிக்கா போட்ட திட்டத்தின் வெற்றியே சோவியத்தின் சிதறல் என்பது மிகையான கூற்று அல்ல.



தன் விண்வெளிப் பயணத் திறன்களை அது அதிகரித்துக்கொண்டிருந்த வேளை, வேறு உபாயங்களையும் கைக்கொண்டிருந்தது. அதுதான் அதன் கருத்தியல் யுத்தம்.

இருண்ட காலத்திலிருந்து மறுமலர்ச்சி யுகம் தோன்றியது எப்படி நிஜமோ, அப்படியேதான் மறுமலர்ச்சி யுகத்திலிருந்து நவீன யுகம் தோன்றியதென்பதும் நிஜமானதே. மார்க்சியம் ஏற்கனவே தோன்றிவிட்டிருந்த அக்காலகட்டத்தில், ரஷ்யாவில் சோஷலிசக் குடியரசு தோன்றியிருந்த பின்னணியில் பின்நவீனத்துவம் அடியெடுத்து வைக்கிறது ஓரளவு நிலைகெட்டுப் போயிருந்த உலகத்தில். அது மார்க்சீயத்துக்கு எதிரானதென்று இடதுசாரிகளால்கூட காரசாரமாக விமர்சிக்கப்பட்டது. இத்தனைக்கு ரஷ்யர்களின் பங்களிப்பு கணிசமாக இருந்தது அதில்.

ஒரு உண்மையை நாம் நோக்கவேண்டும். பின்நவீனத்துவ தத்துவவாதிகள் அனைவருமே ஒருவகையில் மார்க்சீயர்களாய் இருந்தவர்கள்தான். மார்க்சீயத்தின் போதாமையை வளர்த்தெடுத்தவர்கள் அவர்கள். ஆனாலும் அக்காலகட்டத்து இடதுசாரி அரசுகளின் நடைமுறைப் பிழைபாடுகளில் அதிருப்திகொண்டு, அவ்வரசுகளை அவர்கள் விமர்சிக்கவே செய்தார்கள்.

இது மார்க்சீயத்தை அவர்கள் மறுதலித்ததாக ஆகாது. அதன் குறைகளை அவர்கள் சுட்டிக்காட்டியபோதும், அதை ஆரோக்கியமானதாகச் செய்தார்கள். சமூகத்தையும் அரசுகளையும் பொருளாதார அடிப்படையில் பகுத்தாய்ந்த கார்ல் மார்க்ஸ், இலக்கியத்தைப்பற்றி கலைகளைப்பற்றி வெகுவாகப் பேசவில்லை. தம் மகத்தான நூலில் இலக்கியங்களைப்பற்றிக் குறிப்பிட்டு உதாரணங்கள் காட்டிய மார்க்ஸூம் ஏங்கல்ஸூம் யதார்த்த இலக்கியம்பற்றி அல்லது எந்த வகை இலக்கியத்தைப்பற்றியும்கூட அச்சொட்டாக எதையும் சொல்லிவைக்கவில்லை.

மார்க்ஸிலிருந்து வளர்ந்த மொழியியலாளர், தர்க்கவியலாளர், தத்துவார்த்தவாதிகள்தான் இலக்கியத்தை ஆராய்ந்தார்கள். நடைமுறை அரசியலின் ஒரு கூறையேனும் ஆய்வதற்கு, அதன் அடிநாதத்தை விளங்கிக் கொள்வதற்கு மார்க்சீயம் எப்படி உதவுகிறதோ, அதேபோலத்தான் இலக்கியத்தைப் புரிந்துகொள்ள பின்நவீனத்துவமே உதவுகிறது. பின்நவீனத்துவம் வெளிப்படையும் முன்னர் ஒரேயொரு இலக்கிய நவீனத்துவமாக இருந்தது 'புதிய விமர்சனம்' ஆகும். அமெரிக்காவில் தோன்றி வளர்ந்தது. அதை உதைத்து விழுத்திவிட்டுத்தான் பிராக் பல்கலைக்கழகச் சூழலிலும், பிரான்ஸிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பின்நவீனத்துவமும் பெருவளர்ச்சி கண்டது.

அதைச் சமயோசிதமாகப் பயன்படுத்திக்கொண்டன அமெரிக்காவும் மற்றும் சில முதலாளித்துவ நாடுகளும். ஐம்பதுக்களின் பின் இரண்டாயிரம் வரையான காலகட்டம் பின்நவீனத்துவத்தின் உச்சபட்ச நிலைபேற்றுக் காலமாக இருந்தது. அதைப் பேசாத, எழுதாத, தீவிர படைப்பாளியோ வாசகனோ இல்லையென்னும் அளவுக்கு அது பெரு வீச்சுப் பெற்று கற்றோர் படித்தோர் எல்லார் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதற்கான ஆதரவுப் புலங்கள் முதலாளித்துவ அரசுகளாயிருந்தன. அல்லது முதலாளித்துவ அரசுகளின் பின்னணியில் இயங்கிய நிறுவனங்களாயிருந்தன.

மார்க்சீயம் காலாவதியாகிவிட்டது என்ற மாயை படரும்வரை பின்நவீனத்துவத்தின் செல்வாக்கு வெகு ஜோராகத்தான் இருந்தது.

ஆனால் என்றைக்கு சோவியத் முற்றுமுழுதாய்ச் சிதறிபோனதோ, அன்றிலிருந்து பின்நவீனத்துவத்தின் ஆதரவுப் புலங்கள் களத்திலிருந்து பின்வாங்கிக்கொண்டன. அவற்றின் இலக்கு அடைந்தாயிற்று.

இலக்கியம் இருக்கும்வரை பின்நவீனத்துவம் இருக்கும். அரசுகள் இருக்கும்வரை மார்க்சீயமும் இருக்கும். படைப்பு உத்தியாக இல்லையெனினும், அதை விளங்கிக் கொள்வதற்கானதும், அதை விமர்சிப்பதற்கான மூலாதாரமாகவும் அது இருப்பதைத் தவிர்த்துவிடவே முடியாது.

இது பின்நவீனத்துக்கு நேர்ந்த சோதனையின் குறிப்புகள் மட்டுமே. தருணம் நேர்ந்தால் பின்நவீனத்துவம்பற்றி இன்னொரு தடவை பேசுவோம்.

■ ■ ■

# ஒப்பரேஷன் யோனதன்



## கருணா

**"இஸ்ரேலினால் நடத்தப்பட் இந்தத் தாக்குதல் பணயக்கைதிகள் வரலாற்றில் முக்கிய மாற்றமொன்றை ஏற்படுத்தியது. அன்றிலிருந்து இராணுவக் கல்லூரிகளில் இது ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறது"**

**ஜூன் 27, 1976. ஞாயிற்றுக்கிழமை.** கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் விமான நிலையம் கோடை வெய்யிலிலும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. விமான நிலையத்தில் மிதமான பாதுகாப்புக் காணப்படுகிறது. பயணிகள் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். நேரம் மதியத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. சிறிது நேரத்தில் இஸ்ரேலியத் தலைநகர் ரெல் அவீவிலிருந்து ஏதென்ஸுக்கு வந்து, இங்கிருக்கும் பயணிகளை ஏற்றிக்கொண்டு பாரிஸ் செல்லவிருக்கும் எயர் பிரான்ஸின் 139ம் இலக்க விமானத்திற்காக ஐம்பதிற்கும் அதிகமான பயணிகள் ஒரு புறத்தில் காத்திருக்கிறார்கள். பயணிகளுடைய பொதிகள் சோதனையிடப்படுகின்றன. மெட்டல் டிடெக்டரை இயக்குபவர் சமுகமளிக்க வில்லை. பொதிகளை ஊடுருவிப் பார்க்கும் எக்ஸ்ரே கருவிக்கு முன் ஒரேயொரு பொலிஸ்காரர் மட்டும் இருக்கிறார். அவரும் பொதிகளை காண்பிக்கும் திரையை அவதானித்துப்பார்ப்பதாகத் தெரியவில்லை.

பயணிகளுடைய வரிசையில் ஒட்டேகா என்ற பெயருள்ள ஈக்குவடோர் கடவுச்சீட்டுடன் ஒரு வெள்ளையினப் பெண் நிற்கிறாள். அவளுக்கு ஏறக்குறைய 25வயது இருக்கலாம். அவளுக்கு சற்றுத்தள்ளி கார்சியா என்ற பெயருள்ள பெரு நாட்டின் கடவுச்சீட்டுடன் ஒரு வெள்ளை மனிதன் நின்று கொண்டிருக்கிறான். இவர்களுக்குப் பின்பாக இரண்டு மத்தியகிழக்கு இளைஞர்கள் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவர் பஹ்ரெய்ன் கடவுச்சீட்டும், மற்றவர் குவைத் கடவுச்சீட்டும் வைத்திருக்கிறார்கள். அங்கு எல்லோருடைய பயணஇலக்கும் பரிஸ் நகரமாக இருக்க இவர்கள் நால்வரும் வேறு திட்டங்களுடன் இருந்தார்கள். இவர்களுக்குத் தெரியும் யாரும் பரிஸுக்குப் போகப் போவதில்லை என்பது.

சோதனைகள் முடிந்து விமானத்தில் பயணிகள் ஏறத்தொடங்குகிறார்கள். எல்லாம் வழமைபோலவே நடக்கின்றன. சரியாக மதியம் 12:30க்கு 139ம் இலக்க எயர் பிரான்ஸ் விமானம் 246 பயணிகளுடனும் 12 விமானப் பணியாளர்களுடனும் விண்ணில் எழுந்தது. 10நிமிடங்களுக்குப் பின் ஒட்டேகாவும், கார்சியாவும், நண்பர்களும் பயணப்பொதிகளிலிருந்து தானியங்கித் துப்பாக்கிகளையும், கைக்குண்டுகளையும் எடுக்கிறார்கள். நிமிட நேரத்தில் விமானம் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. விமான ஓட்டிகளின் அறையில் குண்டுகள் பொருத்தப்படுகின்றன. விமானத்தை செலுத்திக் கொண்டிருந்த கப்ரன் மிஷேல் பாகோஸின் தலையில் துப்பாக்கியை வைத்தபடி ஒருவர் நிற்கிறார். தொலைத்தொடர்புகள் யாவற்றையும் துண்டிக்கும்படியும், பயணப்பாதையை மாற்றும்படியும் விமானிகளுக்கு உத்தரவிடப்படுகிறது. ஆம், எயர் பிரான்ஸ் விமானம் 139 கடத்தப்பட்டுவிட்டது.


உடனடியாகவே இஸ்ரேலிலுள்ள பென்கூரியன் விமானக்கட்டுப்பாட்டு மையமும், எயர் பிரான்ஸ் அதிகாரிகளும் 139ம் இலக்க விமானம் தொடர்புகளற்றுப் போனதை உணர்கிறார்கள். தீவிரவாத விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது எங்காவது விழுந்து நொருங்கியிருக்கலாம்.

இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ரபீன், பாதுகாப்பு அமைச்சர் ஷிமோன் பெரஸ், போக்குவரத்து அமைச்சர் யாக்கோபி, வெளிநாட்டமைச்சர் யீகல் அலொன் ஆகியோருக்குத் தகவல் வருகிறது. அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு முக்கியமான அமைச்சர்கள் அவசரக்கூட்டமொன்றில் சந்திக்கிறார்கள். என்னநடந்தது என்று தெரியாத போதும் பயணிகளுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி பிரான்ஸ் அரசை வெளிநாட்டமைச்சர் அலொன் கேட்டுக் கொள்கிறார்.


விமானத்தில், விமானத்தைக் கடத்தியவர்கள் தாம் பலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான PFLPஐச் (Popular Front for the Liberation of Palestine) சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கிறார்கள். இவர்களுக்கு உதவிய இரு வெள்ளையர்களும் ஜேர்மனியத் தீவிரவாத அமைப்பான Revolutionäre Zellen (RZ)ஐச் சேர்ந்தவர்கள். கடத்தல்காரர்கள் பயணிகளைச் சோதனையிட்டதுடன் அவர்களின் கடவுச்சீட்டுக்களையும் பறிமுதல் செய்கிறார்கள். பலர் துப்பாக்கிகளின் பிடிகளால் தாக்கப்படுகிறார்கள். தலைகளை உயர்த்தாது குனிந்தபடியே இருக்கும்படி அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

விமானம் இஸ்ரேலுக்குத் திரும்பிவரலாம் என்ற சந்தேகத்தில், விமானத்தை அதிரடியாகத் தாக்கி பயணிகளை விடுவிக்க இஸ்ரேலிய இராணுவம் திட்டமிட்டது. விமானநிலையத்தில் அவர்கள் நிலையெடுத்தனர். ஆனால் விமானம் லிபியாவின் பென்காசி விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டது. தகிக்கும் வெப்பத்தில் பயணிகள் குனிந்தபடியே இருக்கைகளில் இருக்கும்படி பணிக்கப்படனர். தாக்கப்பட்ட பல பயணிகள் காயங்களுடன் இருக்கிறார்கள்.


Tricia Martel என்ற பயணி தான் நான்கு மாதக் கர்ப்பமாயிருப்பதாயும், தனக்கு அதிக உதிரப்போக்கு ஏற்பட்டிருப்பதாயும், தன்னை விடுவிக்கும்படியும் கடத்தல்காரர்களிடம் மன்றாடுகிறார். கடத்தல்காரர்கள் அவரை மட்டும் விடுவிக்கிறார்கள். ஆனால் அவர் உண்மையில் கர்ப்பமடைந்திருக்கவில்லை. அங்கிருந்து தப்ப அவர் கூறிய பொய்யே அது. அவர் உடனடியாக லிபியாவிலிருந்து இங்கிலாந்து செல்கிறார். லண்டனில் ஸ்கொட்லண்ட் யார்ட் அவரிடமிருந்து கடத்தல்காரர்கள் பற்றியதகவல்களைப் பெறுகிறது. ஸ்கொட்லண்ட் யார்ட், இஸ்ரேலிய அரசுக்கு தகவல்களை வழங்க அதிகாரிகள் கடத்தல்காரர்கள் பற்றிய மேலதிக தகவல்களைத் திரட்டத்தொடங்குகிறார்கள். விமானத்தில் 77 இஸ்ரேலியர்கள் இருப்பதாக பிரதமர் ரபீனுக்கு அறிவிக்கப்படுகிறது.



மிஷேல் பாகோஸ்
பிரஞ்சு விமானத்தின் விமானி




எஹுட் பராக்
இஸ்ரேலியப் புலனாய்வுத்துறைத் தலைவர்




யிற்சாக் ரபீன்
இஸ்ரேலியப் பிரதமர்



முகி பெற்சார்
கமாண்டோ படையணிகளின் சிறப்புத் தளபதி



யோனதன் நற்றன்யாஹு
சயிரட் மட்கால் படையணியின் தளபதி



ஷிமோன் பெரஸ்
இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர்

**"பென்கூரியன் விமானக்கட்டுப்பாட்டு மையத்தினர் 139ம் இலக்க விமானம் தொடர்புகளற்றுப்போனதை உணர்கிறார்கள். விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது எங்காவது விழுந்து நொருங்கியிருக்கலாம்."**

பென்காசியில் விமானம் எரிபொருள் நிரப்ப லிபிய அதிபர் முகம்மர் கடாபி அனுமதி வழங்கிய போதும், விமானம் தங்கிநிற்க அனுமதி மறுத்துவிடுகிறார். எயர் பிரான்ஸ் 139 மீண்டும் பறக்கத் தொடங்குகிறது. விமானம் மத்தியகிழக்கு நோக்கி செல்லப் போவதாக எல்லோரும் எதிர்பார்த்திருக்க, அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அது தெற்கு நோக்கி பறக்கத்தொடங்குகிறது. ஆச்சரியமாக அதிகாலை 3:30 மணிக்கு உகாண்டாவின் என்ரர்பே விமான நிலையத்தில் அது தரையிறங்குகிறது.

உகாண்டா அப்போது இடி அமீனின் அதிகாரத்தின் கீழிருந்தது. இடிஅமீன் டாடா 300,000க்கும் அதிகமான உகாண்டா குடிமக்களைக் கொன்றுகுவித்ததாக நம்பப்படுகிறது. 5மனைவிகளுடனும் 35 பிள்ளைகளுடனும் வாழ்ந்த அமீனால் கொடூரமான ஆட்சியொன்றையே உகாண்டா மக்களுக்குத் தரமுடிந்தது.

இடிஅமீனுக்கும் இஸ்ரேலுக்கும் ஆரம்பத்தில் நல்லுறவே நிலவியது. ஒரு கட்டத்தில் அண்டைநாடான தன்சானியாவைத் தாக்க யுத்தவிமானங்களைத் தரும்படி அமீன் கோரிக்கை விடுக்க, இஸ்ரேல் மறுத்துவிட்டது. அத்துடன் அமீனுக்கும் இஸ்ரேலுக்குமான உறவு முறிவடைய பலஸ்தீன விடுதலை அமைப்புக்களை ஆதரிப்பவராக, அமீன் தன்னைக் காட்டிக்கொண்டார்.

28 ஜூன் திங்கட்கிழமை மதியம். பயணக்கைதிகள் யாவரும் என்ரர்பே விமானநிலையத்திலுள்ள பழைய Terminal கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். பழைய Terminal கட்டிடம் பாவனையில் இருக்கவில்லை. விமானநிலையத்துக்குள்ளேயே சற்றுத் தள்ளி இருந்தது. ஏற்கனவேயிருந்த நான்கு கடத்தல்காரர்களுடன் மேலும் ஆறு தீவிரவாதிகள் இணைந்து கொள்கிறார்கள். புதிதாக இணைந்தவர்கள் அனைவரும் பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவர்கள்.

இஸ்ரேலில், இஸ்ரேலியப் புலனாய்வுத் துறையின் தலைவர் (பின்னர் பிரதமராக இருந்தவர்) எஹுட் பராக், உகாண்டாவில் முன்னர் இராணுவ ஆலோசனையாளராக பணிபுரிந்த ஒரு அதிகாரியை சந்திக்கிறார். அவரிடமிருந்து உகாண்டா ராணுவத்தின் தளங்கள், விமான நிலையப் பாதுகாப்பு முறைகள், கட்டிட அமைப்புப் பற்றிய தகவல்கள் பெறப்படுகின்றன. என்ரர்பே விமான நிலையத்தின் படங்கள், அங்கு எடுக்கப்பட்ட ஒரு விவரணப்படம், அது பற்றிய செய்திகள் யாவும் திரட்டப்படுகின்றன.

பின்னர் பராக் ராணுவத்தளபதிகளுடன் சாத்தியமான ராணுவ நடவடிக்கை ஒன்று பற்றி ஆராய்கிறார். இந்த சந்திப்பில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் 'சயிரட் மட்கால்' என்கிற கமாண்டோ படைப்பிரிவின் தளபதியான யோனதன் நற்றன்யாஹு. இவர் பின்னாளில் இஸ்ரேல் பிரதமராக இருந்த பெஞ்சமின் நற்றன்யாஹுவின் சகோதரர். யோனதன் 6நாள் போரில் முக்கிய பங்கு வகித்து காயமடைந்தவர். இஸ்ரேலின் வாள் என இஸ்ரேலியர்களால் அழைக்கப்பட்டவர். அவருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை 'இந்த ராணுவ நடவடிக்கையே பின்னாளில் தனது பெயரில் தான் அழைக்கப்படப் போகிறது' என்பது.

இஸ்ரேலிய சிறப்பு கமாண்டோ படையணி

அடுத்த பக்கம் பார்க்க...

களின் தளபதி முகி பெற்சரிடம் ராணுவ நடவடிக்கையின் சாத்தியப்பாடு பற்றி ஆராயும்படி கூறப்படுகிறது.

இஸ்ரேலியர்களுக்கு பல தடைக்கற்கள் இருந்தன. உகாண்டா 2500 மைல்களுக்கு அப்பால் இருந்தது. உகாண்டாவைச் சுற்றியுள்ள பெரும்பாலான நாடுகள் இஸ்ரேலுடன் நல்லுறவில் இல்லாதவை. உகாண்டாவுக்கு செல்வதானால் அரபு நாடுகளைத் தாண்டியே செல்லவேண்டும். இஸ்ரேல் விமானங்கள் வருவதை அரபுநாடுகள் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு அறிவித்து விடலாம். விமான நிலையக் கட்டடம் எப்படியிருக்கும் என்று தெளிவாகத் தெரியவில்லை. கிடைத்த தகவல்கள் யாவும் நான்கு வருடங்களுக்கு முற்பட்டவை. உகாண்டா ராணுவத்தினர் கடத்தல்காரர்களுக்கு உதவுகிறார்களா என்பதும் தெரியவில்லை. அப்படி உதவினால் எதிர்ப்பு பலமாக இருக்கும். விமான நிலையத்தில் எத்தனை ராணுவத்தினர் இருக்கறார்கள்? பயணக்கைதிகள் கட்டிடத்தில் குண்டுகளுடன் வைக்கப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் குண்டுகளுடன் இருந்தால் தாக்குதலணி வருவது தெரிந்ததுமே குண்டுகளை வெடிக்கவைத்து அனைவரையும் கொன்று விடலாம். இதற்கெல்லாம் முதல் தாக்குதல் அணி எங்கு போய் இறங்குவது. இப்படி பல தடைக்கற்கள்...



என்ரர்பே விமான நிலையத்தின் அன்றைய தோற்றம்

## ஜாலி அமீன்



- இடி அமீன் 1971இல் நடந்த சதி ஒன்றின்மூலம் அதிபர் மில்டன் ஒபேடேயை பதவியிலிருந்து அகற்றி, உகான்டாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- உகான்டாவில் லடசக்கணக்கானோரைக் கொலை செய்த அமீனுக்கு, சமாதானத்துக்கான நோபல் பரிசு தனக்கு வழங்கப்படவேண்டும் என்ற விருப்பமும் இருந்தது.
- 1972இல் திடீரென 60,000 ஆசியநாட்டவரை (பெரும்பாலும் இந்தியர்கள்) வெளியேறும்படி அமீன் உத்தரவிட்டார்.
- 1977இல் பிரித்தானிய நிறுவனங்களை தேசியமயமாக்குதல் தொடர்பாக எழுந்த பிணக்குகளில் பிரித்தானியா, உகான்டாவுடனான உறவுகளை முறித்துக்கொண்டது. உடனடியாக பித்தானியாவைத் தான் தோற்கடித்துவிட்டதாக அறிவித்த அமீன் தனது பெயருக்குப் பின் CBE என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொண்டார். CBE என்றால் Conqueror of the British Empire.
- பின்னர் ஸ்கொட்லாந்தின் மன்னராகவும் தன்னை அறிவித்துக்கொண்டார்.
- ஏராளமான பதக்கங்களை தனக்குத்தானே வழங்கி அணிந்து கொண்ட அமீன், அவையனைத்தையும் அணிவதற்காக தனது இராணுவ உடையையும் நீளமாக்கிக் கொண்டார்.
- அமீன் மனித இறைச்சியை உண்டு வந்ததாக நம்பப்படுகிறது. வெட்டப்பட்ட தனது எதிரிகளின் தலைகளை குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்துப் பார்த்து மகிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.
- 1979இல் அமீன் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டு சவுதி அரேபியாவில் அடைக்கலம் புகுந்தார். 2003ம் ஆண்டு இயற்கையாக மரணமடைந்தார்.

28ம் திகதி மாலையில் என்ரர்பே விமான நிலையத்துக்கு இடிஅமீன் வருகிறார். பயணிகளை “ஷலோம்! ஷலோம்!!” என்று வாழ்த்தியபடியும் கைகாட்டியபடியும் பழைய Terminal கட்டிடத்திற்குள் நுழைகிறார். பயணக்கைதிகளுடன் உரையாடுகிறார். ஒரு பயணக்கைதி அவரை “Mr. President” என்று விழிக்க கோபமடைந்த அமீன் “I am His Excellency President for Life, Field Marshal Al Hadji Doctor Idi Amin Dada appointed by God almighty” என்று கூச்சலிடுகிறார்.

விமான நிலையம் எப்படி அமைந்திருக்கும் என்று யோசித்துக்கொண்டிருந்த இஸ்ரேலிய இராணுவத்துக்கு அன்று மாலையில் முதலாது கதவு திறந்தது. விமான நிலையத்தை கட்டிக்கொடுத்தது ஒரு இஸ்ரேலிய கட்டுமான நிறுவனம் என்ற விடயம் தெரிய வந்தது. அந்த நிறுவனம் உடனடியாக முகி பெற்சர் குழுவினருக்கு விமான நிலையத்தின் சகல, விபரமான வரைபடங்களையும் வழங்கியது. எனினும் விமானநிலையம் இப்போது திருத்தியமைக்கப்பட்டிருக்கலாம். மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கலாம். பெரும்பாலான ராணுவ உயரதிகாரிகள், ராணுவ நடவடிக்கையொன்று சாத்தியமில்லையென்றே பிரதமர் ரபீனுக்குக் கூறுகிறார்கள்.

**29ம் திகதி செவ்வாய்க்கிழமை.** உகாண்டாவின் கம்பாலா வானொலி கடத்தல்காரர்களின் கோரிக்கைகளை அறிவிக்கிறது. இஸ்ரேல் சிறைகளிலுள்ள 40 பலஸ்தீனியத் தீவிரவாதிகளையும், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, கென்யா நாடுகளின் சிறைகளிலுள்ள 13 தீவிரவாதிகளையும் விடுவிக்கும்படியும் 5 மில்லியன் டொலரை பிரான்ஸ் அரசு தரவேண்டும் எனவும் கோரிக்கை விடப்படுகிறது. இதற்கான காலக்கெடு வியாழக்கிமை மாலை 2 மணி. கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பயணக்கைதிகள் கொலைசெய்யப்படுவார்கள் எனவும் கடத்தல்காரர்கள் கூறுகிறார்கள்.

தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு உடன்படும்படி பிரதமர் ரபீனுக்கு அரச உயர் மட்டத்தில் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. 72ம் ஆண்டு மியூனிச்சில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளின்போது இதேபோன்ற கடத்தல் சம்பவமொன்று நடந்தது. இஸ்ரேலியர்கள், கடத்தல்காரரின் கோரிக்கைக்கு செவிசாய்க்க மறுத்துவிட்டனர். தீவிரவாதிகளுக்கு பணிவதில்லை என்பது இஸ்ரேலின் கொள்கையாக இருந்துவந்தது. இறுதியில் இஸ்ரேலின் மிகச்சிறந்த 11 விளையாட்டு வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அந்த நினைவுகளிலிருந்து இஸ்ரேலியர்கள் இன்னும் மீளவில்லை. இப்போது கடத்தப்படிருப்பவர்கள் 250க்கும் அதிகம். அதிலும் 77பேர் இஸ்ரேலியர்கள்.

முன்னர் உகாண்டாவில் பணியாற்றிய இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர் மூலமாக இடிஅமீனுடன் இஸ்ரேல் அரசு தொடர்பு கொள்கிறது. இடிஅமீன் எந்த உதவியும் செய்ய மறுத்துவிடுகிறார். வேறு வழிகளில் கடத்தல்காரர்களுடன் இஸ்ரேல் அரசு பேசுகிறது. இராணுவ நடவடிக்கையொன்று சாத்தியமில்லையென்றே அரசில் பலரும் நம்புகிறார்கள்.

**30ம் திகதி புதன்கிழமை.** 43 பயணக்கைதிகள் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்படுகிறார்கள். ஆனால் அவர்களில் எவரும் யூதர்களோ அல்லது இஸ்ரேலியர்களோ இல்லை. விடுதலை செய்யப்படவர்கள் பரீஸ் வந்துசேரமுன்பே மொசாட் ஏஜன்டுகள் பரீஸ் போய்விட்டனர். அவர்களிடம் ஏஜன்டுகள் நீண்ட விசாரணை நடத்துகின்றனர். கட்டடத்தில் எங்கு பயணக்கைதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள், பாதுகாப்பு எவ்வாறு உள்ளது, எத்தனை உகாண்டா வீரர்கள் உள்ளனர் என்பது போன்ற தகவல்கள் பெறப்படுகின்றன. இஸ்ரேலிய இராணுவத்துக்கு இரண்டாவது கதவும் திறந்து கொண்டது.

43ம் பக்கம் பார்க்க...

Elect
Markham - Unionville
PC
Ki Kit Li
John Tory's Team
PC Party
For a Better Ontario
Leadership Matters



மார்க்கம் - யூனியன்வில் தொகுதி வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்

உங்கள் தேவை - எனது சேவை

தயவு செய்து உங்கள் வாக்குகளை எனக்கு அளியுங்கள்

அன்புடன் K. K. Li




www.kkli.ca
4568 Hwy 7E - Unit 5, Unionville, ON L3R 1M5
Tel: 647-835-9110
www.kkli.ca
AUTHORIZED BY CFO FOR MARKHAM - UNIONVILLE PROV. PC ASSOC.
Apex 647-439-3310

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**SCARBOROUGH/LAWRENCE**
3 B/Room Basement for rent
(Separate Entrance)
Call: 416 567 6266
416 299 4848

**VICTORY PARK/YORK MILLS (NEAR)**
3 B/Room, 2B/Room Condo want to buy
Call: 416 439 5405

**EGLINTON/MCCOWAN**
1 B/R Basement (Furnishes) for Rent
(With Parking)
Call: 416 825 7302

**KENNEDY/FINCH**
1 B/Room Basement for Rent
(TTC, Sun TV) from October 1st
Call: 416 291 9305 / 647 208 9305

**MORNINGSIDE/SHEPPARD**
2 B/Roo/3 B/Room Houses for Rent
TTC & All facilities
Call: 416 283 5530

**MORNINGSIDE/SHEPPARD**
3 B/Room House for Rent
(from November 1st)
Call: 905 497 6086/647 444 2209

**DUNFORTH/EGLINTON**
2 B/Room Basement for Rent
Call: 416 455 5821

**LAWRENCE/SCARBOROUGH GOLF CLUB**
2 B/Room Basement for Rent
Call: 416 430 0117

**EGLIN TON/BELLAMY**
1 B/Room Basement for Rent (Separate Entrance)
Call: 416 438 2941

**MCCOWAN/EGLINTON**
1 B/R Basement for Rent
Mcnicoll/Kennedy
2 B/Room Basement for Rent
Separate Entrance
Call: 416 998 4752

**NEILSON/FINCH**
1 B/Room. $400.00
Call: 416 893 5418

**BIRCHMOUNT/MCNICOLL**
3 B/Room Basements
1 B/Room for Rent
Call: 416 335 8055

**HOT TON PARK/LAWRENCE**
1 B/Room & Dining table for Rent
Call: 416 289 1951

**MCCOWAN/EGLINTON**
1 B/Room Basement for Rent
Separate Entrance, Close to Park & School
Call: 416 438 2941

**MARKHAM/BRAMPTON**
2 B/Room Basement for Rent
Separate Entrance
Call: 416 433 6344

**MIDDLE FIELD. MANICALL**
2 B/Room Basement for Rent
416 648 9775

**DUNFORTH/EGLINTON**
2 B/Room (Big)Basement for Rent
Call: 416 898 1469

**MIDLAND/EGLINTON**
2 B/Room Basements for Rent
All Facilities
Call: 416 792 0793

**NEILSON/SHEPPARD**
1 B/Room Basement for Rent
Separate Entrance
Call: 647 898 7618

**MORNINGSIDE/OLD FINCH**
3 B/Room Separate House for Rent
Call: 416 286 2190 / 416 283 5530

**BRAMPTON**
! B/room Basement for Rent
Call: 905 970 9207
416 669 5012

**NEAR MORTON**
3 B/Room Town House for Rent form Nov.1
1 B/Room finished Basement
Call: 905 673 0870

**LAWRENCE/SCARBOROUGH CLUB**
2 B/Room Basement for Rent
Call: 416 430 0119

**BRAMPTON**
1 B/Room for Rent in House
Call: 416 543 4494

**MARKHAM/ELSON**
(2 B/Room Basement )
1B/Room for Rent
Call: 416 520 0496

**DUNFORTH/EGLINGTON**
1 Room for Rent
Call: 416 877 5918 / 416 917 1500

**MCCOWAN/MCNICOLL**
1 B/Room Basement for Rent
$325
Call: 491 917 8336

**STEELS/STANCES**
! B/Room for rent (Food Alivable)
Call: 417 299 6759

## HOUSE / CONDO FOR SALE

**MARKHAM/EGLIN TON**
3 B/Room 1700Sq.feet
2 Years Old House for Sale
Call: 416 459 0417

**KEEL/FINCH**
2 B/Room Condo
Call: 416 456 8895

**NEILSON/FINCH**
2 B/Room Condo (Private)
2 W/Room.
Call: 416 786 5145

**MCCOWAN/EGLINTON**
2 B/Room, 2 full W/R
Call: 416 977 4256

**MCCOWAN/EGLINTON**
2 B/Room Condo
New Renovation
Close to TTC and All Facilities
Call: 416 977 4256

**S.GOLF CLUB / LAWRENCE**
1994 Volvo 2 Sil.
Call: 416 823 3552

**NEILSON/FINCH**
4 B/Room Town House
Call: 416 910 0487

**MARKHAM/ELLINGTON**
Town House for Sale (1700sqf.)
Call: 416 459 0417

## AUTO FOR SALE

**89/EXI HONDA ACCORD**
Call: 416 750 4077

**1994 TOYOTA CAMRY**
Call: 416 278 6584

**98 TOYOTA**
147K
Call: 416 716 2918

**91 TOYOTA CAMRY**
for Sale
Call: 647 500 8215

**2000 CIVIC MANUAL**,
5 Speeds
$3500.00
Call: 416 527 0023

**TUITION**
Gr. 1 – Gr.8
2003 Honda Civic LX 96 for Sale
Call: 647 401 2886

**2004 CRV**
50k
$20,000 + Safety Emission (Silver)
Call: 905 472 2440

CTR
கனடியத் தமிழ் வானொலி
**416.264.8798**

**93 HONDA ACC. EX**
(Good Condi son)
A/C - $1800, 2000 CRU 161km
&11,500.00
Call: 905 501 1762

## OTHERS

**JOB VACANT**
Down Town,
Dish Wash
Line Cook ,
Salad Maker
Call: 416 799 6318

**PAINTING FOR HOUSES**
Call: 416 828 5745

**SWING MACHINE**
Call: 905 803 9265

**COMPUTER TAMIL TYPIST**
கொம்பியூட்டர் தமிழ் தட்டெழுத்தாளர் வேலை தேடுகிறார்.
முழு நேரம், பகுதி நேரம், அல்லது வீட்டில் இருந்து வேலைசெய்வது என்றாலும் பரவாயில்லை.
பெனிற்றா – 416 439 2064

**OFFICE ROOM FOUR RENT**
Markham & HW 401
416-833 0152

**REASTAURANT FOR SALE MARKHAM**
L.L.B.O அனுமதியுடன்
மார்க்கம் நகரில்
உணவகம் ஒன்று
விற்பனைக்கு உன்டு
**$ 99.900**
**416 302 7283**

கூர்
கனடா நவீன கலை, இலக்கியத் தொகுப்பு
2008 பனிக்கால ஆரம்பத்தில் வெளிவரவிருக்கிறது.
தெகுப்பிற்கான சிறுகதை, கவிதை, விமர்சனக் கட்டுரை, நூல் மதிப்புரை, மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் வரவேர்க்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு 416 458 9426, 416 551 0087, 416 500 9016.

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்
உங்கள்
சிறு விளம்பரங்களும்
வீடு
பத்திரிகையில் விளம்பரமாவதற்கு
416-646-3422

# ஒப்பரேஷன் யோனதன்

41ம் பக்கத் தொடர்ச்சி...

கென்யாவில் இயங்கிக்கொண்டிருந்த மொசாட் ஏஜன்ட் ஷ்லோமோ கல், என்ர்ரபே விமானநிலையத்தை ஆகாயத்திலிருந்து படம்பிடிக்கும்படி பணிக்கப்படுகிறார். ஒரு சிறியவிமானத்தில் உகாண்டாவுக்கு மேலாகப்பறந்த அவர், தனது விமானத்தில் கோளாறெனவும் என்ர்ரபே விமானநிலையத்தில் இறங்கவேண்டியிருப்பதாயும் உகாண்டா அதிகாரிகளிடம் கூறுகிறார். நான்கு, ஐந்து வட்டமடிப்புகளுக்குப் பிறகு தன்னால் விமானத்தை இறக்க முடியவில்லை என்று கூறி திரும்பவும் கென்யாவுக்கு செல்கிறார். ஆயிற்று! என்ர்ரபே விமானநிலையத்தை ஆகாயத்திலிருந்து தெளிவாகப் படம்பிடித்தாயிற்று. இஸ்ரேலியர்களுக்கு மூன்றாவது கதவும் திறந்து கொண்டது.

**1ம் திகதி வியாழக்கிழமை.** ஏனைய நாடுகளுடனும்பேசி தீவிரவாதிகளின் விடுதலையை ஒழுங்கு செய்ய வேண்டியிருப்பதால் காலக்கெடுவை நீட்டிக்குமபடி இஸ்ரேலிய அரசு கோரிக்கைவிடுக்கிறது. அரசின் பாணி சாதமாக இருப்பதாக நம்பிய கடத்தல்காரர்கள் காலக்கெடுவை ஜுலை 4ம்திகதி மதியத்திற்கு நீட்டிக்கின்றனர். அது மாத்திரமல்லாது 101 பயணக்கைதிகளையும் விடுவிக்கின்றனர். விமானத்தின் கப்டனும், பணியாளர்களும் இறுதிவரை பணிகளுடனேயே இருப்போம் எக்கூறி வெளியே செல்ல மறுத்துவிடுகின்றனர். இப்போது எஞ்சியிருப்பது இஸ்ரேலியர்களும், யூதர்களும், விமானக் குழுவும் மாத்திரமே. பிரதமர் ரபீன் ராணுவ நடவடிக்கையொன்றை முழு வேகத்தில் திட்டமிடும்படி பெற்சரிடம் கூறுகிறார்.

1ம் திகதி விடுதலைசெய்யப்பட்டவர்களில் இருந்த பிரஞ்சுப் பிரஜையொருவர் முன்னாள் இஸ்ரேலிய ராணுவ வீரர். கடத்தல்காரர்கள் அவருடைய இஸ்ரேலியப் பின்னணியை கண்டுகொள்ளவில்லை. அவருக்கு அசாத்திய ஞாபக சக்தியும், ராணுவ ரீதியான தகவல்களைக்கூறும் வல்லமையும் இருந்தது. மொசாட் ஏஜன்டுகள் அவரைச் சந்தித்தபோது இஸ்ரேலுக்குப் பல கதவுகள் திறந்து கொண்டன.

இஸ்ரேலில் 1ம்திகதி மாலையில் ஏராளமான கட்டடப்பணியாளர்கள் இரகசியப் பணியொன்றுக்காக அழைக்கப்படனர். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரமளவில் அவர்கள் வீடு திரும்பமுடியாதென்பதும் அதுவரையில் குடும்பத்தினருடன் அவர்கள் தொடர்புகொள்ள முடியாதென்பதும் அவர்களுக்குக் கூறப்பட்டது. என்ர்ரபே விமான நிலையத்தின் பிரதியொன்றை சிலமணி நேரத்தில் கட்டித்தரும்படி அவர்கள் கேட்கப்பட்டனர். கடத்தல்காரர்களின் மீது அதிர்ச்சித் தாக்குதலொன்றை நடத்துவதே இஸ்ரேலின் திட்டம். அதற்கு ஒவ்வொரு ராணுவத்தினருக்கும் கட்டடம், காவலாளிகள் இருக்குமிடங்கள், பயணிகள் வைக்கப்பட்டிருக்கும் முறை என்பன துல்லியமாகத் தெரிந்திருக்கவேண்டுமென பெற்சர் நம்பினார்.

**2ம் திகதி வெள்ளிக்கிழமை.** தாக்குதலுக்கு தலைமை தாங்க சயிரட் மட்கால் படைப்பிரிவின் தளபதியான யோனதன் நற்றன்யாஹு அழைக்கப்படுகிறார். யோனதன் தனது இணைத்தளபதியாக முகி பெற்சரை நியமிக்கிறார். தாக்குதலில் ஈடுபடுவதற்காக 29 கமாண்டோக்கள், சயிரட் மட்கால் படைப்பிரிவிலிருந்து தேர்வு செய்யப்படுகின்றனர். தாக்குதல் நேரம் கமாண்டோக்கள் அணிவதற்காக உகாண்டா ராணுவத்தின் சீருடையை ஒத்த உடைகள் தயாரிக்கப்படுகின்றன. முழுவேகத்தில் கட்டிமுடிக்கப்பட்ட என்ர்ரபேயின் பிரதியில் பயிற்சி நடக்கிறது. இதே நேரம் இஸ்ரேல் அரசு சிறையிலுள்ள தீவிரவாதிகளையும், பயணக்கைதிகளையும் எங்கு வைத்துப் பரிமாறலாம் என்று கடத்தல்காரர்களுடன் நட்பாக பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

திட்டம் இதுதான். நான்கு C-130 ஹேர்குலீஸ் விமானங்களில் உகாண்டா என்ர்ரபே செல்வது. உகாண்டாவின் அனுமதியின்றி அங்கு இறங்குவது. விமானங்களில் தாங்கிகளும், கவசவாகனங்களும் செல்லும். யாருடைய விமானம் இது என்று அதிகாரிகள் கண்டுபிடிக்குமுன் தாக்குதல் நடத்தி கைதிகளை மீட்டு மீண்டும் இஸ்ரேல் திரும்புவது. பிரச்சினை என்னவென்றால் பெரும்பாலான இஸ்ரேல் அமைச்சர்களுக்கு இந்த விடயம் தெரியாது. அமைச்சரவை தாக்குதலுக்கு அங்கீகாரமும் வழங்கவில்லை. அமைச்சர்கள், இஸ்ரேல் கைதிகளை விடுவிக்கப் போவதாகவே நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

என்ர்ரபே விமான ஓடுபாதையில் விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கலாம். எனவே இருட்டில் விமானங்களை இறக்குவதற்கான பயிற்சி நடக்கிறது. அப்போதைய நைற் விஷன் கண்ணாடிகள் சிறந்தவையென்று சொல்லமுடியாது. எனினும் இஸ்ரேலியர்கள் அவற்றைப் பாவித்து இரவில் வெற்றிகரமாக விமானங்களை பாலைவனங்களில் இறக்கிக் காட்டினார்கள். சனி இரவு பிரித்தானிய விமானமொன்று என்ர்ரபேயில் இறங்க இருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அந்த விமானத்துக்கு மிக நெருக்கமாகப் பயணித்தால் ரேடார்களை சமாளித்து விடலாம்.

**3ம் திகதி சனிக்கிழமை.** நாளை மதியத்துடன் தீவிரவாதிகளின் காலக்கெடு முடிகிறது. கமாண்டோக்கள் பயிற்சிகளை முடித்து தாக்குதலுக்கு தயாராகிறார்கள். இடி அமீன் பாவிப்பதை ஒத்த கறுப்பு நிற பென்ஸ் கார் ஒன்று உகாண்டா கொடிகளுடன் தயாராகிறது. தரையிறங்கும் முதலாவது விமானத்திலிருந்து கறுப்பு பென்ஸ் கார் முன்செல்ல பின்னே கவசவாகனங்கள் செல்வதாகத் திட்டமிடப்படுகிறது. இடிஅமீன் வருவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி காவலாளிகளைக் குழப்புவதே நோக்கம். அதே நேரம் இஸ்ரேல் சிறைகளிலுள்ள கைதிகளை விடுவித்து உகாண்டா கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.


மதியம்... அவசர அமைச்சரவைக் கூட்டத்தில் "ஒப்பரேஷன் தண்டபோல்ட்" என்ற பயணக்கைதிகளை விடுவிக்கும் திட்டம் பற்றி பிரதமர் யிற்சாக் ரபீனும், பாதுகாப்பு அமைச்சர் ஷிமோன் பெரசும் அறிவிக்கிறார்கள். அமைச்சர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. எல்லோருக்கும் தெரியும், சிறிய தவறு நேர்ந்தாலும் நூற்றுக்கும் அதிகமான பயணக்கைதிகளையும் இழக்க வேண்டிவரும் என்று. அது இஸ்ரேலுக்கு பெருத்த தலைக்குனிவையும், உள்நாட்டில் பாரிய எதிர்ப்பலைகளையும், தீவிரவாதிகளுக்கு அதிக உற்சாகத்தையும் கொடுத்துவிடும்.

**பிற்பகல் 2:00 மணி.** இனியும் விமானங்கள் தாமதிக்க முடியாது. ஷிமோன் பெரஸ், அமைச்சரவையில் காரசாரமான விவாதம் நடந்துகொண்டிருக்கும்போதே விமானங்களைப் புறப்படும்படி உத்தரவிடுகிறார். அமைச்சரவை அனுமதி தராவிட்டால் இடையில் வைத்து விமானங்களை திருப்பி அழைத்துக் கொள்ளலாம். இஸ்ரேலின் சயனாய் முனைக்கு அண்மையிலுள்ள தளமொன்றிலிருந்து நான்கு C-130 போக்குவரத்து விமானங்கள் புறப்படுகின்றன. முதலாவது விமானத்தில் இடிஅமீனின் வாகனத்தைப்போன்ற பென்ஸ் கார், கவச வாகனங்கள், கமாண்டோ அணி என்பன இருக்கின்றன. இரண்டாவது விமானம் பிரதியீடாக வருகிறது. மூன்றாவது ஒரு பறக்கும் மருத்துவமனை. அதில் வைத்தியர்கள், அவசர சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள், காயமடைபவர்களுக்கு வழங்க இரத்தம் என்பன இருக்கின்றன. நான்காவது பயணக்கைதிகள் திரும்பி வருவதற்கானது. அதில் பயணக்கைதிகளை ஏற்றி இறக்க ஒரு ட்ரக் வண்டியும் வருகிறது. ஆனால் அமைச்சரவையில் இன்னும் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

என்ர்ரபே விமான நிலையம் 4,000kmகளுக்கு அப்பால் இருக்கிறது. C-130 களுக்கு மீண்டும் எரிபொருள் நிரப்பப் பட்டாலே திரும்பி வரமுடியும். இரண்டு வழிகள் இருந்தன. என்ர்ரபே விமான நிலையத்தைக் கைப்பற்றிய பின் அங்கேயே எரிபொருள் நிரப்புவது. அதற்கு நீண்ட நேரம் எடுக்கலாம். அதற்கிடையில் மேலதிக உகாண்டா துருப்புக்கள் வந்து சேர்ந்துவிடலாம். இரண்டாவது அருகிலுள்ள நாடொன்றில் எரிபொருள் நிரப்புவது. உகாண்டாவுக்கு அருகில் கென்யா மாத்திரமே இஸ்ரேலுடன் ஓரளவு நட்புடன் இருந்தது. ஆனாலும் தகவல்கள் கசிவதை இஸ்ரேல் விரும்பவில்லை.

விமானங்கள் புறப்பட்டு இரண்டு மணிநேரத்துக்குப் பின் தளபதி யோனதனுக்கு "சனெக்" என்ற தகவல் பாதுகாப்பு அமைச்சர் ஷிமோன் பெரஸ் இடமிருந்து கிடைக்கிறது. "சனெக்" என்றால் பாய் (Jump) என்று ஹீப்ருவில் அர்த்தம். ஆம்! அமைச்சரவை அனுமதி வழங்கிவிட்டது. "Operation Thunderbolt" இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது.

பயணநேரம் முழுவதும் விமானங்களின் விளக்குகள் முழுமையாக அணைக்கப்பட்டிருக்கின்றன; தொலைதொடர்புக் கருவிகளும் அமைதியாகவே இருக்கின்றன. அரபு நாடுகளைத் தாண்டியே உகாண்டா செல்ல வேண்டும். அங்கு பாலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். அங்கு தொலைதொடர்புகள் ஒட்டுக்கேட்கப்







இடி அமீனுடையதைப் போன்று தயாரிக்கப்பட்ட பென்ஸ் வாகனத்தில் இஸ்ரேலியக் கமான்டோக்கள்



தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்கத் தயாரிப்பு C-130 விமானங்கள்

**இஸ்ரேல்**

- இஸ்ரேல் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதி பரப்பளவையுடைய நாடு. (இஸ்ரேல் - 20,770 sqKm, இலங்கை - 65,610 sqKm)
- இஸ்ரேல் இலங்கையின் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டது.
- இஸ்ரேலின் தனிநபர் வருமானம் $35,000. பல ஐரோப்பிய நாடுகளை விட அதிகமானது.
- இஸ்ரேல் வீதாசாரத்தில் அதிகளவு பல்கலைக்கழகப் பட்டதாரிகளைக் கொண்ட நாடு
- 1967இல் இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமான 6நாள் போர் ஆரம்பமானது. இந்தப்போரின் முடிவில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலேம், காசா, சயனாய், மேற்குக் கரை, கோலான் குன்றுப்பகுதி ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டது.



மொசாட் ஏஜன்ட் வானத்திலிருந்து எடுத்த என்ர்ரபே விமான நிலையத்தின் புகைப்படம்

44ம் பக்கம் பார்க்க...

# ஒப்பரேஷன் யோனதன்

43ம் பக்கத் தொடர்ச்சி...

பட்டால் தகவல் தெரிந்துவிடும். அது கடத்தல்காரர்களையும், உகாண்டா துருப்புக்களையும் உஷாராக்கி விடலாம்.


இரவு 11மணிக்கு சில நிமிடங்களுக்கு முன்பு முதலாவது விமானத்தின் விமானி ஓடுபாதை விளக்குகளைக் காண்கிறார். அவை அணைக்கப்படவில்லை. பிரித்தானிய விமானம் தரையிறங்கியதற்குப் பின் உகாண்டா விமான நிலையப் பணியாளர்கள் ஓடு பாதை விளக்குகளை அணைக்க மறந்திருக்கலாம்.

11:01 மணியளவில் முதலாவது விமானம் தரையைத் தொடுகிறது. விமானம் ஓடு பாதையில் ஓடிக்கொண்டிருக்கும்போதே வால் பகுதியில் உள்ள கதவு திறக்கிறது. விமானம் நிறுத்தத்திற்கு வரமுன்பாகவே பென்ஸ் வாகனமும் கவசவாகனங்களும் எதிர்ப்புறமாக இறங்கி வேகமாக பழைய Terminal கட்டடத்தை ஓடத்தொடங்குகின்றன. பென்ஸ் காரில் யோனதனும், பெற்சாரும் அமர்ந்திருக்கிறார்கள். கட்டடத்திற்கு அண்மையில் காவலிலிருந்த இரண்டு உகாண்டா இராணுவ வீரர்கள் ஆரம்பத்தில் குழப்பமடைந்தாலும் வாகனங்களை நிறுத்துமாறு சமிக்ஞை செய்கிறார்கள்.

பென்ஸ் காரிலிருந்த வீரர்கள் சைலன்ஸர் பொருத்திய துப்பாகிகளால் சுடுகிறார்கள். காவலாளிகளில் ஒருவர் வீழ்ந்துவிடுகிறார். மற்றவர் ஓடத்தொடங்குகிறார். கவசவாகனத்திலிருந்த ஒரு கமாண்டோ இயந்திரத் துப்பாக்கியால் சுடுகிறார். ஓடிய காவலாளி வீழ்ந்துவிட்டாலும் அந்த சத்தம் விமான நிலையமெங்கும் கேட்டுவிடுகிறது. கட்டுப்பாட்டுக் கோபுரத்திலிருந்தவர்கள் விமான நிலைய விளக்குகளை அணைத்துவிட்டு வாகனங்களை நோக்கி சுடத் தொடங்குகிறார்கள். அதற்கிடையே வாகனங்கள் பழைய Terminal கட்டடத்தை அடைந்து விட்டிருந்தன.

கட்டடத்தின் உள்ளே திடீர் துப்பாக்கிச் சத்தங்களால் திடுக்கிட்டெழுந்த கடத்தல்காரர்கள் வெளியே எட்டிப்பார்க்கிறார்கள். உண்மையில் அவர்கள், தவறுதலாக யாருடைய துப்பாக்கியோ வெடித்துவிட்டது என்றே எண்ணியிருக்கவேண்டும். ஏனெனில் துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் பயணிகளை நோக்கி கைக்குண்டை வீசவோ அல்லது துப்பாக்கப்பிரயோகம் செய்யவோ அவர்கள் முனையவில்லை. அது தேவையான அவகாசத்தை கமாண்டோக்களுக்கு வழங்கிவிட்டிருந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் கமாண்டோக்கள் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்திருந்தார்கள். கடத்தல்காரர்கள் நிலைமையைப் புரிந்கொண்டபோது துப்பாக்கிக் குண்டுகள் அவர்களை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன.

கடத்தல் காரர்களுக்கும் கமாண்டோக்களுக்குமான சண்டை ஒன்றரை நிமிட நேரமே நடந்தது. மூன்று நிமிட நேரத்தில் பழைய Terminal கட்டடம் கமாண்டோக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது. ஜேர்மனியர்கள் உட்பட ஏழு கடத்தல் காரர்கள் சுட்டுக்கொல்லப்படிருந்தனர். மூன்றுபேர் தப்பியோடிவிட்டனர். கடத்தல் காரர்கள் சுட்டதில் 3 பயணக்கைதிகள் இறந்துபோயிருந்தனர். எட்டுப்பேர் காயமடைந்திருந்தனர்.



**ரதீர் ஹதாத்**

இந்த கடத்தல் நடவடிக்கையைத் திட்டமிட்டவர். கடத்தல்காரர்கள் உகாண்டா சென்றபோது என்ரர்பேயில் இணைந்துகொண்ட கடத்தல்காரர்களில் ஒருவர். இஸ்ரேலியக் கமாண்டோக்களின் தாக்குதலில் உயிர் தப்பினார். பின்னர் தொண்ணூறுகளில் புற்றுநோயால் மரணமடைந்தார் என நம்பப்படுகிறது.

“ **கட்டடத்தின் உள்ளே திடீர் துப்பாக்கிச் சத்தங்களால் திடுக்கிட்டெழுந்த கடத்தல்காரர்கள் வெளியே எட்டிப்பார்க்கிறார்கள். உண்மையில் அவர்கள், தவறுதலாக யாருடைய துப்பாக்கியோ வெடித்துவிட்டது என்றே எண்ணியிருக்கவேண்டும்.** ”

துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன், நீண்டநேரமாகத் தாம் காத்திருந்த கொலைசெய்யும் படலம் ஆரம்பித்து விட்டதாகவே பயணக்கைதிகள் முதலில் நினைத்தனர். உகாண்டா ராணுவத்தினரின் உடையணிந்தவர்கள், கடத்தல்காரரை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது அவர்கள் குழப்பமடைந்தனர். துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்து தலையை நிமிர்த்தியவர்கள் தமது வாழ்விலேயே மறக்கமுடியாத காட்சியொன்றைக் கண்டனர். அங்கு இஸ்ரேலிய கமாண்டோக்கள் நின்றுகொண்டிருந்தனர். “பயப்படவேண்டாம்! உங்களை வீடுகளுக்கு அழைத்துச் செல்லவே வந்திருக்கிறோம்” என்று அவர்கள் கூறியபோது பயணிகள் கண்ணீருடன் ‘நெஸ்! நெஸ்’ என்று சத்தமிட்டனர். நெஸ் என்றால் அற்புதம் என்று ஹீப்புரு மொழியில் அர்த்தப்படுகிறது.

11:25க்கு இரண்டாவது விமானமும் தரையிறங்கியது. அப்போது ஓடுபாதையின் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. ஆயினும் நைற் விஷன் கருவிகள் மூலம் விமானம் சிக்கலின்றி தரையிறங்குகின்றது. அது மருத்துவர்களையும், மருத்துவ உபகரணங்களையும் கொண்ட வைத்தியசாலை விமானம். அதைத் தொடர்ந்து ஏனைய விமானங்களும் தரையிறங்கின.

விமான நிலையத்தின் ஏனைய கட்டடங்களிலிருந்த உகாண்டா இராணுவத்தினருக்கும், இஸ்ரேலிய கமாண்டோக்களுக்கும் கடும் சண்டை நடக்கிறது. கடும்பயிற்சிக்குபின் வந்திருக்கும் இஸ்ரேலியர்களுக்கு, இடிஅமீனின் ‘மந்தகாசப்’ படையினரால் ஈடுகொடுக்கமுடியவில்லை. சண்டையை வழிநடத்திக்கொண்டிருந்த யோனதன் தீடீரென சரிந்து கீழே விழுகிறார். கட்டுப்பாட்டுக் கோபுரத்திலிருந்து வந்த சினைப்பர் தோட்டா ஒன்று அவரது கழுத்தில் பாய்ந்திருந்தது. முகி பெற்சார் பொறுப்பேற்று சண்டையை வழிநடத்துகிறார். இஸ்ரேலிய கவசவாகனங்களின் கடும் தாக்குதலின்பின் கட்டுப்பாட்டுக் கோபுரமும், ஏனைய கட்டடங்களும் அமைதியாகின்றன. ஏறக்குறைய 20 நிமிடங்களில் ஆங்காங்கே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டாலும் விமானநிலையம் பெருமபாலும் கமாண்டோக்களின் கட்டுப்பாட்டில் வந்துவிடுகிறது. தாக்குதலணிக்கு தலைமைதாங்கி வந்த யோனதன் உயிரிழந்த செய்தியை பெற்சார் இஸ்ரேலுக்கு அறிவிக்கிறார்.

4000 கிலோமீட்டருக்கு அப்பாலிருந்து இதற்கென வந்திருந்த ட்ரக் வண்டியில் காயமடைந்த, வயதுமுதிர்ந்த பயணக்கைதிகள் ஏற்றப்பட்டு விமானத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். ஏனையவர்கள் தொகுதி தொகுதியாக விமானத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். கட்டடத்திலுள்ள பயணக்கைதிகளில் ஒருவரும் விடுபட்டு விடக்கூடாதென்பதில் கமாண்டோக்கள் கவனமாயிருக்கின்றனர். எல்லோரும் அழைத்துச்செல்லப்பட்டதும் பழைய Terminal கட்டடத்தை கமாண்டோக்கள் இறுதியாகச் சோதனையிடுகின்றனர். கடத்தல்கார் ஏழு பேரின் உயிரற்ற உடல்களைத்தவிர வேறொன்றும் அங்கு இருக்கவில்லை. பெற்சார் விமானத்தின் கதவுகளை மூடும்படி உத்தரவிடுகிறார்.

கமாண்டோக்கள் என்ரர்பே சேமிப்புக் கிட்டங்கிகளிலிருந்து விமானத்துக்கு எரிபொருள் நிரப்ப ஆயத்தமாகின்றனர். மிகவிரைவாக இந்தப்பணியை செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. வேறுதளங்களிலிருந்து துருப்புக்கள் வந்துகொண்டிருக்கலாம். அவர்கள் வந்துசேர்ந்தால் நிலமை சிக்கலாகிவிடும்.

இதே நேரம் தாக்குதல் தொடங்கிய உடனேயே நைரோபியிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தினர், முக்கியமான, இரகசியமான விமானங்கள் நான்கு வருவதாயும் அவற்றுக்கு எரிபொருள் நிரப்ப அனுமதி தரும்படியும் கென்ய அரசிடம் கேட்கின்றனர். கென்யா அனுமதி வழங்குகிறது. ஆனால் கென்யாவுக்கு உண்மையில் என்ன நடந்ததென்பது தெரியாது. என்ரர்பேயில் எரிபொருள் நிரப்ப ஆரம்பமாகிக்கொண்டிருந்த பெற்சார் குழுவினருக்கு, உடனடியாகப் புறப்பட்டு கென்யாவில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு வரும்படி தகவல் வருகிறது. எரிபொருள் நிரப்பும் வேலையை விட்டு விட்டு விமானங்களைப் புறப்படும்படி பெற்சார் பணிக்கிறார்.

**இரவு 11:52 மணி.** பயணக்கைதிகள் இருந்த விமானம் வானில் கிளம்புகிறது. விமான நிலையத்திலிருந்த ஏனைய கமாண்டோக்கள் விமானநிலையத்திலிருந்த உகாண்டாவின் ஏழு மிக் போர் விமானங்களையும் பீரங்கிகளால் சுட்டு அழிக்கின்றனர். இரவு 12:30 மணிக்கு கடைசி இஸ்ரேலிய விமானமும் புறப்படுகின்றது. ஒரு விமானத்தில் தாக்குதலுக்கு தலைமை வகித்த யோனதன் நற்றன்யாஹுவின் உயிரற்ற உடல் கிடத்தப்பட்டிருக்கிறது. உடலைச் சுற்றி ஏனைய கமாண்டோக்கள் அமைதியாக உட்கார்ந்திருக்கின்றனர். பயணக்கைதிகளும், விமானப் பணியாளர்களும் பாதுகாப்பாக இன்னொரு விமானத்தில் வந்துகொண்டிருக்கின்றனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனை விமானத்தில் தீவிர சிகிச்சை நடந்துகொண்டிருக்கிறது. முடிந்தது.... ஒப்பரேஷன் தண்டர் போல்ற் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. பிரதமர் ரபீனுக்கு தாக்குதல் முழுமையான வெற்றி என்ற தகவல் தரப்படுகிறது.

கென்யாவின் நைரோபியில் விமானங்கள் தரையிறங்குகின்றன. வழமையான வர்த்தக விமானங்களுக்கான நடைமுறையில் ஆவணங்கள் நிரப்பப்பட்டு சம்பிரயாதங்கள் முடிவடைகின்றன. காயமடைந்தவர்களில் அவசர சிகிச்சை தேவைப்பட்டவர்கள் நைரோபி மருத்துவமனை கொண்டுசெல்லப்படுகின்றனர். விமானங்கள் இப்பொழுது இஸ்ரேல் நோக்கி பறக்க ஆரம்பிக்கின்றன.

விமானங்கள் இஸ்ரேல் வந்து சேர்வதற்கு முன்பாகவே பிரஞ்ச் செய்தி சேவை உகாண்டாவிலிருந்து பயணக்கைதிகள் இஸ்ரேலியர்களால் விடுவிக்கப்பட்ட சேதியை சர்வதேச வானொலிகளுக்கு தெரிவிக்கிறது. ஜுலை 4ம் திகதி அதிகாலையில் பீபீசி வானொலி என்ரர்பேயில் பயணக்கைதிகள் விடுவிக்கப்பட்ட செய்தியை இஸ்ரேலெங்கும் அறிவிக்கிறது. இஸ்ரேல் முழுவதும் மகிழ்ச்சியில் மூழ்கியது. விமான நிலையத்தில் பயணக்கைதிகளை வரவேற்க ஆயிரக்கணக்கானோர் கூடினர். பாதுகாப்பமைச்சர் ஷிமோன் பெரஸ் உட்பட பல அமைச்சர்கள் கமாண்டோக்களையும், பயணக்கைதிகளையும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய யோனதன் நற்றன்யாஹு மாத்திரமே இஸ்ரேல் ராணுவத் தரப்பில் கொல்லப்பட்டவர். ஆரம்பத்தில் ஒப்பரேஷன் தண்டர் போலட்ற் எனப்பெயரிடப்பட்டிருந்த இந்தத் தாக்குதல் நடவடிக்கை தளபதி யோனதன் நற்றன்யாஹுவின் ஞாபகமாக “ஒப்பரேஷன் யோனதன் (Mivtza Yonatan)” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஜுலை 6ம் திகதி ஜெருசலேமில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருக்க யோனதன் நற்றன்யாஹுவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. விமானங்களைக் கடத்துவோருக்கு இந்த விடயம் அத்துணை இலகுவானதல்ல என்ற பாடத்தையும் அது கற்றுத்தந்தது.

சரியான தலைமையும், நுணுக்கமான திட்டமிடலும், கடுமையான பயிற்சியும், மதியூகமும் இருந்தால் பெரிய இலக்குகளைக்கூட சிறிய ஆட்பலத்துடன் எட்டமுடியும் என நிருபித்த இந்தத் தாக்குதல் இவ்வாறு முடிவுக்கு வந்தது.

## பின்னர் நடந்தவை

- தாக்குதல் விடுவிப்பின் பின் ஐ.நா. விற்கான உகான்டாத் தூதர் உகான்டாவின் இறையாண்மையை இஸ்ரேல் மீறிவிட்டதாக ஐ.நாவிடம் முறையிட்டார். ஆனால் இஸ்ரேல் தூதரோ இத்தாக்குதலை நடத்தியதையிட்டு தாம் பெருமைப்படுவதாகக் கூறினார். ஐ.நா. இது தொடர்பாக எதுவுமே கூறவில்லை.
- பிரஞ்சு விமானி மிஷேல் பாகோஸ் விடுவிக்கப்பட்டும், பயணிகளுடன் இருப்பேன் என்று கூறியமைக்காக பிரஞ்ச் எயர்லைன்ஸ் நிறுவனத்தால் தற்காலிக வேலைநிறுத்தம் செய்யப்பட்டார். பிரஞ்சு அரசு விமானக்குழுவை விடுவிக்கும்படி தீவிரவாதிகளுடன் திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தியதாக நம்பப்படுகிறது. பாகோஸ் பின்னர் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.



- என்ரர்பேயில் பயணக்கைதிகளில் ஒருவரான டோரா புளொ∴ என்ற வயோதிபப் பெண்மணிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அவர் கம்பாலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கைதிகளின் மீட்புநடவடிக்கையின்போது அவர் மருத்துவமனையில் இருந்தார். தாக்குதல் நடந்த மறுநாள் காலை மருத்துவமனைக்குச் சென்ற இடி அமீனின் படையினர் அவரைச் சுட்டுக்கொன்றார்கள்.
- தாக்குதல் விமானங்கள் கென்யாவில் தரித்துச்சென்றதை அறிந்த இடிஅமீன் கம்பாலாவில் இருந்த நூற்றுக்கணக்கான கென்யர்களைக் கொலைசெய்ய உத்தரவிட்டார்.
- 79இல் ஆட்சியிருந்து அகற்றப்பட்டபின் சவுதி அரேபியா சென்ற இடி அமீன் மிகவும் வசதியான வாழ்க்கையை அனுபவித்துவந்தார். 2003இல் ஜெட்டாவில் காலமானார்.

■ ■ ■

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY

## 10th Anniversary Sale !!!

**Prepaid**

**UNLIMITED LOCAL CALLING !!!**

(Incoming and Outgoing)

**$40/Month**

Caller ID and Voicemail Included

- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light

Travelling to Sri Lanka ?

You can buy and activate the Sri Lankan phone number(SIM card) from us.

Dealers for: Mobilel, Celltel, Hutch and Dialog GSM.

Mobitel Celltel Hutch Dialog

Call us for more details.

**10th Anniversary Sale !!!**

Geunine Leather Case



From $2.99

Reg. $19.99

Offer Expairs August 30 2007

One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**10th Anniversary Sale !!!**

Smart car charger



From $4.99

Reg. $39.99

Offer Expairs August 30 2007

One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**10th Anniversary Sale !!!**

Hands free



From $3.99

Reg. $29.99

Offer Expairs August 30 2007

One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Call Toll free:- 1.877.312.5123** SHOP ONLINE @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER

NOKIA,MOTOROLA,PANASONIC
SONY ERICSSON,SAMSUNG.

Display,Antenna replacement
and all other repairs........

## PHONE RENTALS

Planning a vacation ? You can rent a world wide GSM phone

**We also**
**UNLOCK (GSM) phones**

2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818

220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859

5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# C$, U$

# ஏறு முகமா? இறங்கு முகமா? ஆறு முகமா?



- ரதன் -

## டொலர் கடை பார்வைகள் சில

தை 1990ல் ஒரு கனடிய டொலரை வாங்குவதற்கு அமெரிக்க 85 சதங்களே தேவை. ஆனால் இந்த நிலை 1999ல் 65 சதமாக மாறியது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. பெரும்பாலான கனடியர்கள், அமெரிக்காவில் பொருட்களை வாங்கினார்கள்; விடுமுறைக்கு அமெரிக்கா சென்றார்கள்; முதியோர் குளிர் காலங்களை புளோரிடாவில் செலவிட்டனர் இவை சில காரணங்கள்.

கனடாவின் பொருளாதாரம் பெருமளவு ஏற்றுமதியில் தங்கியுள்ளது. மரப்பலகை, இயற்கை வாயு, விவசாயப் பொருட்கள் போன்றனவே பெருமளவு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. 1990களில் கனடிய மத்திய வங்கி, வரி விகிதத்தை மிக வேகமாகக் குறைத்தது. இதனால் ஏற்பட்ட நாணய விகித வீழ்ச்சி ஏற்றுமதியை அதிகரித்தது.

அண்மைக் காலங்களில் அமெரிக்க பொருளாதாரம் மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (நன்றி புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்) அதே சமயம் கனடிய பொருளாதாரம் சிறப்பாக முன்னேறுகின்றது. Ronald Regan அறிமுகப் படுத்திய குறைந்த வரி விகிதம் முன்னேற்ற கரமானதாக இருந்த போதும், செலவுகள் குறையாமையால் அமெரிக்கா திண்டாடியது. ஆனால், பின்னர் வந்த கிளின்ரன் அமெரிக்க பொருளாதாரத்தை முன்னேற்றினார். அவரின் பின்னால் வந்த புஸ், அமெரிக்க பொருளாதாரத்தை புஸ்வாணமாக்கி விட்டார்.

கனடிய பிரதமர் கிறிச்சியனின் காலத்தில் முன்னேறத் தொடங்கிய பொருளாதாரம் இன்று உறுதியாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

அமெரிக்காவின் கடன், அவர்களது தேசிய உற்பத்தியை விட 7 மடங்கு அதிகமாக காணப்படுகின்றது. (தேசிய உற்பத்தி $12.8 trillion, debt $40 trillion) கனடிய பொருளாதாரம் உண்மையில் வளர்ச்சியடைந்து விட்டதா? 1900களின் ஆரம்பத்தில் ஐக்கிய இராச்சியத்துடன் கனடாவிற்கு இருந்த ஏற்றுமதி, இறக்குமதி உறவுகள் இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவுடன் மாறத் தொடங்கியது. இன்று பெருமளவு வியாபாரம் அமெரிக்காவுடனேயே உள்ளது. இதனால் அமெரிக்க பொருளாதார வீழ்ச்சியையும், அமெரிக்க டொலரின் வீழ்ச்சியையும் மட்டும் கவனத்தில் கொண்டு கனடிய பொருளாதாரத்தைக் கணக்கிட முடியாது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள்

### Canadian Dollar vs. 6 Currencies

1. Against U.S. Dollar: Up 11.88%
2. Against Euro: Up 5.52%
3. Against British Pound: Up 8.80%
4. Against Japanese Yen: Up 7.79%
5. Against South Korean Won: Up 7.75%
6. Against Mexican Peso: Up 12.86%

### U.S. Dollar vs. 6 Currencies

1. Against Canadian Dollar: Down 10.58%
2. Against Euro: Down 5.69%
3. Against British Pound: Down 2.74%
4. Against Japanese Yen: Down 3.66%
5. Against South Korean Won: Down 6.21%
6. Against Mexican Peso: Up 0.88%


மேற்கூறிய அட்டவணை கனடிய பொருளாதார உறுதி நிலையைக் காட்டுகின்றது. அமெரிக்கா கடந்து வந்த ஒவ்வொரு போரின் போதும் அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் இம்முறை போருடன் யூரோ, மற்றும் உலக பொருளாதார மாற்ற நிலை போன்ற பல காரணங்கள் அமெரிக்க பொருளாதாரத்தை மிகவும் மோசமடையச் செய்துள்ளது. இது நிரந்தரமாகலாம்.

அமெரிக்கா தொடர்ச்சியாக வட்டி விகிதத்தைக் குறைத்து வருகின்றது. இது அமெரிக்க முதலீட்டாளர்களை கனடாவை நோக்கி திருப்பும். இது மேலும் கனடிய டொலரின் தேவையை அதிகரிப்பதனால், அதன் வலு அதிகரிக்கும். அதிகரிக்கப்பட்ட வலு, ஏற்றுமதியாளர்களைப் பாதிக்கும். அமெரிக்க நிறுவனங்கள் மூலப் பொருட்களுக்கு மெச்சிக்கோ போன்ற விலை குறைவான நாடுகளை நோக்கி நகர்த்தும்.

இறக்குமதிப் பொருட்களின் விலை குறைவாக இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலை இன்னமும் அதிகமாகவே உள்ளது. இதற்கு பணவீக்கம் ஒரு காரணம்என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிலர் இதனை மறுக்கின்றனர்.

ஒரு நாணயத்தின் மிதக்கும் வலு விகிதத்தை பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன:

- வியாபார நடவடிக்கைகள் - நாணயத்தின் கேள்வியும், பாவனையும் வியாபார நடவடிக்கைளிலேயே தங்கியுள்ளது.
- சர்வதேச சந்தை முதலீடுகள், சர்வதேசச் சந்தையில் கனடிய பங்குகளின், மற்றும் முதலீடுகள், பொருட்களின் தேவை அதிகரிப்பு.
- தொடர்ச்சியாக உறுதியாக கனடிய டொலர் அதிகரிப்பின், பல முதலீட்டாளர்கள் கனடிய டொலருக்கு கூடுதலான லாபம் பெறும் நோக்குடன் தமது முதலீட்டை கனடிய டொலருக்கு மாற்றுவார்கள். இது டொலரின் தேவையை அதிகப் படுத்துவதனால் விலை அதிகமாகும்.
- அரசாங்கக் கொள்கைகள்
- மத்திய வங்கியும், அதன் தீர்மானங்களும். உ-ம்: வட்டி விகிதங்கள்
- **வட்டி விகிதங்கள்:** ஒரு நாடு வட்டி விகிதத்தை அதிகரித்தால், அந்த நாட்டு நாணயத்தின் தேவை அதிகரிக்கும். எனவே விலை விகிதம் அதிகமாகும். வட்டி விகிதம் குறையும்பொழுது நேர் எதிரான விளைவுகள் ஏற்படும்.
- **பண வீக்கம்:** பண வீக்கம் குறைவாக இருக்கும் பொழுது நாணய விகிதம் அதிகமாக இருக்கும்.
- **அரசியல் உறுதி நிலை:** உறுதியான நிலையான அரசுகள் சீரான பொருளாதார வளர்ச்சிக்குஉதவும். எனவே நாணய விகிதமும் நிலையானதாக இருக்கும்.




### பணவீக்கத்தைத் தீர்மானிப்பவை

1. அதிகரித்த நாணயத்தின் விநியோகம்
2. பொருட்களின் தேவை குறைந்து விநியோகம் குறையும்
3. பணத்தின் தேவை குறையும்

### நாணயத்தின் வலு விகிதம் குறையும் பொழுது

- ஏற்றுமதி அதிகரிக்கும்.
- வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும். மிகக் குறைந்த விலையில் (நாணய மாற்று விகிதத்தால்) முதலீடுகள் செய்யலாம். வியாபார நிறுவனங்களை வாங்கலாம்.
- உல்லாச பயணிகளின் வருகை அதிகரிக்கும்.

### வலு அதிகரிக்கும் பொழுது

- உல்லாச பயணிகளின் வருகை வீழ்ச்சியடையும்.
- இறுக்கமான பொருளாதாரக் கொள்கைகள் ஏற்படுத்தப்படும்.
- இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும்.
- அண்மைக் காலங்களாக பல அமெரிக்க நிறுவனங்கள் கனடிய நிறுவனங்களைச் சொந்தமாக்கி உள்ளன. இவர்களின் அமெரிக்க டொலர் வருமானங்கள் குறையும். ஆனால் இது தற்காலிகமானதே.

கடந்த 30 வருட கனடிய நாணய மாற்று விகிதம் பெரும்பாலும் பின்வரும் மூன்று விடயங்களிலேயே தங்கியிருந்துள்ளது.

1. அத்தியாவசிய பொருட்களின் விலை
2. வட்டி விகிதம்
3. பண வீக்கம்.



இந்த கனடிய டொலரின் விலை விகிதம் தொடர்ந்து இன்னமும் சில காலங்களுக்கு இதே நிலையில் நிடிக்கலாம். அதே சமயம் ஐரோப்பாவில் யூரோ தோன்றியது போல் இங்கும் பொது நாணயம் ஒன்று தொடங்கப் படலாம். அவ்வாறு தொடங்கப்படின் அது கனடாவிற்கு ஆபத்தையே அதிகரிக்கும்.

### கனடிய டொலரின் வரலாறு

**1685** நியு பிரான்ஸ் கார்ட்(அட்டை) காசு அறிமுகப்படுத்தியது.

**1812** போரினால் நாணயத் தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது, இராணுவ தாள்காசு விநியோகிக்கப்பட்டது.

**1817** மொன்ரியல் வங்கி முதன் முதலாக டொலரை விநியோகித்தது.

**1841** Upper Canada, Lower Canada இணைந்து புதிய டொலர் திட்டத்தை அமைத்தன. இவ் வருடம் பிரிட்டிஷ் தங்கம், கனடிய 4.8666 டொலராக விற்கப்பட்டது. US $10 = C$ 10 ஆக இருந்தது..

**1862** அமெரிக்கா போரில் ஈடுபட்டமையினால், அதன் ஒரு டொலர், கனடிய 2.62ஆக மிக மோசமான நிலையில் இருந்தது. அதாவது ஒரு அமெரிக்க டொலரை வாங்குவதற்கு வெறும் 38 கனடிய சதங்களே தேவையாக இருந்தது.

**1879** மீண்டும் அமெரிக்க டொலர், கனடிய டொலருக்கு சமமானது.

**1920** Can$1= US$ 0.84

**1931** நீண்ட காலமாக ஒரு பவுண் 4.8666 கனடிய, அமெரிக்க டொலர்களாக நிலையாக இருந்த பவுண், 3.40 அமெரிக்க டொலர்களாக மாறியது.

**1935** மார்ச் 11 கனடிய மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

**1939** Can$1= US$ 0.90

**1946** Can$1=US$ = C$

**1949** Can$1= US$ 0.88

**1960** Can$1= US$ 1.0614,

**1970** Can$1= US$ 0.98,

**1971** Can$1= US$ 0.99

**1972** Can$1= US$ 1.0443

**1976** Can$1= US$1.03

**1978** Can$1= US$ 0.84

**1986** February Can$1=US$ 0.6913

**1992** Can$1=US$ 0.7868

**1901** மணித்தியால சம்பளம் 15 ¢ an hour

■ ■ ■




ATEAM Towing

"Affortable and Trusted Services"

Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars

Call Esan or Donald
Direct: 416-835-1700

525 Bloor St W
Toronto, ON, M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

# அமெரிக்காவில்
# கார் வாங்கினால் அதிக லாபம்

கனடிய டொலரும் அமெரிக்க டொலரும் பெறுமதியில் ஒன்றாகி விட்டன. கனடாவிலிருந்து பொருட்கள் வாங்க அமெரிக்கா செல்லும் கனடியர்களின் எண்ணிக்கை எப்போதுமில்லாதவாறு அதிகரித்துவிட்டது. சாதாரண பாவனைப்பொருட்களை வாங்கும்போதே 20வீதமளவில் இலாபம் கிடைக்கிறது என சொல்லப்படுகிறது. இந்நிலையில் சாதாரண கார் ஒன்றை அமெரிக்காவில் வாங்கும்போது 5,000 டொலரிலிருந்து 20,000 டொலர் வரை இலாபம் கிட்டுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் அமெரிக்காவில் கார் ஒன்றை வாங்கினால் சட்டரீதியாக எவ்வாறு அதைக் கனடாவுக்குள் கொண்டுவரலாம்? இந்தக்கேள்வி எங்களில் பலருக்கு உண்டு. அமெரிக்காவில் கார் ஒன்றை வாங்கி கனடாவிற்குள் கொண்டுவருவதற்கான சட்டரீதியான படிமுறைகளை இங்கு தருகிறோம்.

## கனடாவிற்குள் ஒரு மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்வதற்கான படிமுறைகள்

கொள்வனவு செய்ய திட்டமிடும் மோட்டார் வாகனமானது கனடாவினுள் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்படக் கூடியதா என அறியுங்கள். http://www.riv.ca/english/US_vehicle_admissibility.pdf எனும் இணையத்தள முகவரியானது நீங்கள் இறக்குமதிசெய்யக்கூடிய மற்றும் மாற்றங்கள் செய்து கனடாவுக்குள் இறக்குமதி செய்யக்கூடிய வாகனங்கள் பற்றிய விபரங்களைத் தருகிறது.

உங்கள் கனடிய காப்புறுதி கம்பனியால் உங்கள் புதிய மோட்டார் காரை காப்புறுதி செய்யுங்கள். நீங்கள் ஐக்கிய அமெரிக்காவில் இருக்கும் போது உங்கள் காப்புறுதி உங்களை உள்ளடக்குமா என்பதை உறுதி செய்யுங்கள். காப்புறுதி நடவடிக்கையானது உங்கள் வாகனத்தை எடுக்க திட்டமிடும் முதலாம் நாளில் ஆரம்பிக்கின்றது.

முறை பூர்த்தியாக்கும் வரை இந்த தற்காலிக அனுமதியுடன் காரை செலுத்தலாம். வாகனத்தின் சான்றிதழ் பத்திரத்தை (Certificate of Title) அமெரிக்காவை விட்டு நீங்கள் வெளியேறும் எல்லையில் அமெரிக்க சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்புங்கள். உங்கள் வாகனத்தை ஏற்றுமதி செய்வதற்கான அதிகாரத்தை வழங்குவதற்கு அமெரிக்க சுங்கத் திணைக்களத்திற்கு மூன்று

### கனடாவிலும் அமெரிக்காவிலும் வாகனங்களின் விலைகள்

2007-model MSRPs compared on the Internet. Prices at end of August, based on $0.99 Canadian/$1U.S. dollar exchange rate

| | Price in U.S. | Equivalent in Cdn. $ | Prince in Canada |
|---|---|---|---|
| Acura MDX | $39,995 | $39,847 | $52,300 |
| Chevrolet Corvette | $45,075 | $44,908 | $68,565 |
| Ford Freestyle AWD/SEL | $27,770 | $27,667 | $32,791 |
| Honda S2000 | $34,250 | $34,125 | $50,600 |
| Mazda 6 Sportwagon | $28,395 | $28,289 | $33,995 |
| Porche 911 Carrera | $72,400 | $72,132 | $100,700 |
| Subaru Impreza Sedan WRX | $24,995 | $24,902 | $35,495 |
| Toyota Prius | $22,175 | $22,092 | $31,280 |
| Volvo XC70 AWD | $36,420 | $36,285 | $47,495 |
| VW Passat Wagon 3.6 | $31,370 | $31,253 | $44,115 |

அமெரிக்க கார் விற்பனையாளரிடம் நீங்கள் காரை வாங்கியபின், அவர்கள் உங்களுக்கு ஒரு மாத தற்காலிக அனுமதி தகடு (License plate) தருவார்கள். நீங்கள் அமெரிக்காவிலும் கனடாவிலும், இறக்குமதி செயல்

வர்த்தக நாட்கள் (Business days) தேவை. (கனடாவினுள் காரை இறக்குமதி செய்வதற்கு ஒரு முத்திரை தேவை). அமெரிக்க சுங்கத் திணைக்களத்தை தொலைபேசியில் அழைத்து உங்கள் தொலைநகல் (Fax) கிடைத்ததா என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்கள் வாகன உற்பத்தியாளரிடம் அனுமதி ஆவணத்தின் நிரூபணத்தை ("Proof of recall clearance document") தருமாறு கோருங்கள். இது உங்கள் காரை கனடாவில் பதிவு செய்வதற்குத் தேவையாகும்.
கனடாவிற்குள் காரை செலுத்திச் செல்லுங்கள். அமெரிக்க சுங்கத் திணைக்களத்திற்கு தொலைநகல் அனுப்பிய பின் மூன்று நாட்கள் கழிந்த பின் எல்லைப் பகுதிக்குச் செல்லுங்கள் (அல்லாவிடின் நீங்கள் ஏற்றுமதி முத்திரையை பின்னர் பெறுவதற்காக நீங்கள் எல்லைப் பகுதிக்கு மீண்டும் வர வேண்டி ஏற்படும்). கனடா சுங்கத் திணைக்களமானது அமெரிக்க அனுமதி தகட்டுடன் கனடாவினுள் கனடா வதிவிடவாளர் காரை செலுத்த அனுமதிக்க மாட்டாது. இதற்கு கனடாவில் காரிற்கு அனுமதிப்பத்திரம் பெறும் செயல்முறையில் இருக்கிறார் என்பதை காரின் சொந்தக்காரர் உறுதிப்படுத்த வேண்டும். உங்கள் தொலைநகலைப் பெற்ற ஐக்கிய அமெரிக்க சுங்கத் திணைக்களத்தினூடாகச் செல்வதை உறுதிப்படுத்துங்கள். உங்கள் சான்றிதழ் பத்திரத்தை(Certificate of Title) அமெரிக்க சுங்கத் திணைக்களத்தினால் ஏற்றுமதிக்கான முத்திரை குத்தும்படி செய்யுங்கள்.

கனடிய சுங்கத் திணைக்களத்திற்கு செல்லுங்கள். இவர்களுக்கு விற்பனைச் சிட்டையும் (Bill of Sale) ஐக்கிய அமெரிக்க சுங்கத் திணைக்களத்தினால் ஏற்றுமதிக்காக முத்திரை குத்தப்பட்ட சான்றிதழும் தேவைப்படும். நீங்கள் 7%பொருட்கள் சேவைகள் வரியையும் (GST) உங்கள் வளிச் சீராக்கியை கொண்டிருந்தால் (Air conditioner) CAD $100 ஐயும் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான பதிவாளருக்கு CAD$182 உம் (ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடாவில் உற்பத்தி செய்யப்படும கார்கள் மேலதிக இறக்குமதி வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன). கொடுப்பனவுக்காக நீங்கள் கடன் அட்டையைப் பயன்படுத்தலாம். நீங்கள் வாகன இறக்குமதி படிவமான படிவம் 1 (Form 1) இனைப் பெற்றுக் கொள்வீர்கள். இரண்டாவது படிவம், படிவம் 2ஆனது உங்கள் வீட்டு முகவரியிற்கு 5 தொடக்கம் 7 வேலை நாட்களுக்கிடையில் அனுப்பப்படும்.

ஒன்ராறியோவில் நீங்கள் ஒரு பாதுகாப்பு பரிசோதனை மற்றும் வாகன பரிசோதனைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

கனடாவிற்கு வந்ததன் இரு கிழமைக்குப் பின்னர், நீங்கள் வாகன இறக்குமதி படிவம்- படிவம் 2ஐ தபாலில் பெற்றுக் கொளவீர்கள்.
படிவம் 1, படிவம் 2, அனுமதி ஆவணத்தின் நிரூபணத்தையும் (உங்கள் மோட்டார் வாகன உற்பத்தியாளரின் கடிதம் - இது படி 5 இல் நீங்கள் கோரியது) ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட மாநில பரிசோதனை மையத்திற்கு (Federal Inspection Centre) எடுத்துச் செல்லுங்கள். இவ் வாகனம் கனடிய தராதரத்திற்கு அமைய காணப்படுகின்றது என்பதை இம் மையம் பரிசோதித்து உறுதிப்படுத்தும். உங்களது வாகனத்திற்கு பாரிய திருத்தங்கள் எதுவும் செய்யத் தேவையில்லையெனில் இந்த பரிசோதனையை எந்தப் பிரச்சனையும் இல்லாது கடந்து செல்லும். மாற்றம் எதுவும் இல்லாவிடில் இந்த பரிசோதனைக்கு எந்தச் செலவும் ஏற்படாது.

எமது கடைசி பரிசோதனைக்கு CAD $8.04 ஆகவே செலவு இருந்தது இது பொருத்தும் ஒரு திருகாணி (tether bolt) வாங்குவதற்கே செலவாகியது. இது கனடாவில் விற்கப்படும் எல்லா கார்களுக்கும் தேவைப்படுவதாக உள்ளது. மாநில பரிசோதனை முடிந்த பின்னர் பரிசோதகர் படிவம் 1ல் முத்திரையிடுவார்.
படிவம் 1, மூலாதார தலைப்பு (Original title), விற்பனை ரசீதுகள், பாதுகாப்பு பரிசோதனை சான்றிதழ் (ஒன்ராறியோ), உங்கள் வாகனத்திற்கான காப்புறுதி சான்றிதழ் (ஆவணங்கள் ஏனைய மாகாணங்களுக்கு வேறுபடும்). ஒன்ராறியோவில் நீங்கள் 8% மாகாண விற்பனை வரியையும் (PST), உங்கள் அனுமதித் தகடு வாங்கவும் "ஸ்டிக்கர்"க்காகவும்(Sticker) நீங்கள் மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

ஒரு சில நாட்களுக்குள் நீங்கள் உங்கள் காருக்கான கனடிய உத்தரவாத அடையாளத்தை தபாலில் பெறுவீர்கள் (Canadian Certification Label). இதனை நீங்கள் உங்கள் காரில் ஒட்ட வேண்டியிருக்கும்.

இந்த படிமுறைகள் ஐக்கிய அமெரிக்காவில் அல்லது கனடாவில் உற்பத்தி செய்யப்பட்ட காரை இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்தக் கூடியவை. இந்த தகவல்களின் அவ்வப்போதைய நிலைமைகளுக்கு (Up-to-date) கனடாவின் RC-4140 "Importing a Vehicle Into Canada என்பதை பார்க்கவும். இதனை http://www.cbsa-asfc.gc.ca/E/pub/cp/rc4140/rc4140-e.html. என்பதில் பார்க்கலாம்.

■ ■ ■

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி
• Loans
• Mortgages
• Insurance Claims
• Traffic Ticket
• Auto/Life Insurance
• Scholarship Plan (RESP)
• Real Estate Related
• Credit Counselling
• Accounting
• Tax Services

R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்
வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!
416-400-6406




typros
typros printing

| | |
|---|---|
| Business Cards | Message Pads |
| Invitation Cards | Note Pads |
| Wedding Cards | Tickets |
| Brochers | Business Forms |
| Booklets | Aplication Forms |
| Bulletins | Order Forms |
| Flyers | Stickers |
| Posters | Labels |
| Letter Heads | Much More....... |

உங்கள் நினைவுகளை நாங்கள் அச்சில் கொண்டுவருகிறோம்

- வியாபார அட்டைகள்
- தன்னறிமுக அட்டைகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- பூப்புனித நீராட்டு விழா
- அழைப்பிதழ்கள்
- அரங்கேற்ற மலர்கள்
- விழா மலர்கள்

இது போன்ற உங்கள் அனைத்து அச்சுத் தேவைகளையும் உங்கள் விருப்பப்படி நீங்கள் அச்சில் ஏற்றிட இன்றே நாடுங்கள் Typros அச்சகம்

**Call Us Today!**

t. **416.635.8761**
f. **416.635.7244**

3957 Chesswood Drive,Downsview,
ON, M3J 2R8

digi

# மனிதன் தீண்டத் தயங்கும் "தீ"

'தீ' என்ற சொல்லைக் கேட்டவுடன் மனிதன் ஒரு அடி பின்னே தள்ளி நிற்கிறான். தன்னை அழித்துவிடுமோ என்ற பயம் அவனுக்கு. மரணத்துக்குப் பின்னர் மனிதன் தீயோடு கலந்துவிட்டாலும் அவனது ஆன்மா அழிக்கப்படாத ஒன்று என்பது இந்துக்களினிதும் பௌத்தர்களினதும், வேறு சில மதங்களினதும் நம்பிக்கை. ஐம்பூதங்களின் ஒன்றான நெருப்பினது சக்தியானது, அழிப்பதற்கு மட்டுமே பாவிக்கப்படுவது

**- பொன் குலேந்திரன் -**

மட்டுமன்றி பரிசுத்தப்படுத்துவதற்கும் பாவிக்கப்படுகிறது - நீரைப் போன்று. அதனால் தான் திருவண்ணாமலையில் உள்ள அருணாலீஸ்வரக் கோயில் தீ என்ற பஞ்ச பூதத்தின் நினைவாக இன்றும் கருதப்பட்டு வருகிறது. சிவனுக்கும் நெருப்புக்கும் தொடர்புண்டு. காரணம்: கையில் நெருப்பினை ஏந்தி நடனம் புரிகிறார் நடராஜர். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயற்பாடுகளில் சிவனை அழித்தலின் தெய்வமாக கருதுகிறார்கள் இந்துக்கள். அந்த அழித்தல் மூலம் எரிந்து சாம்பலா வதை திருநீறாக நெற்றியில் சைவசமய வாதிகள் பூசிக் கொள்கிறார்கள். அதாவது காலப்போக்கில் எல்லா மனிதர்களும் சாம்பலாக வேண்டும் என்ற தத்துவத்தை நினைவூட்டுவதாக திருநீறு அமைகிறது.

பிரபஞ்சத்தின் தோற்றத்தோடு நெருப்பும் உருவாகியுள்ளது. அது சக்தியின் ஒரு வடிவம். நெருப்பைப் பாவித்து, நீரை ஆவியாக்கி புகையிரதத்தை இயங்க வைத்தான் மனிதன். இரண்டாம் உலக யுத்தத்தின் போது அணுக்குண்டின் பிரயோகத்தால் தோன்றிய நெருப்பே நாகசாக்கி, ஹிரோசிமா ஆகிய ஜப்பானிய நகரங்களின் அழிவுக்கு காரணம். நெருப்பை நாம் எப்போதும் ஒரு பயங்கர ஆயுதமாகவே பார்க்கிறோம். அதே நேரம் ஹோமம் வளர்ப்பதற்கும், தீபத்தை இறைவனுக்கு காட்டும் போதும், உணவை பரிசுத்தமாக்கி கிருமிகளை அழித்து உண்ணும் போதும் நெருப்பிற்கு மதம் முக்கியத்துவம் கொடுக்கிறது. கற்பூரத்தைக் கொளுத்தி நெருப்பைத் தோற்றுவித்து இறைவனுக்குச் சமர்பிக்கிறான். தீயிலிருந்து ஒளி பிறக்கிறது. அதை புனிதமாக மதங்கள் கருதுகின்றன.

இயற்கையில் ஒரு சிறு தீப்பொறி சூழலை அழித்துப் பொசுக்கி விடும். காட்டுத் தீயால் அழிந்த மிருகங்கள் தாவரங்கள் ஏராளம். இது அடிக்கடி அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இடம்பெறுகின்றன. உதாரணத்துக்கு எரிமலை வெடிக்கும் போது அதோடு தீக்குழம்பும் வெளிவருகிறது. இது போன்று மனிதனின் மனதுகுள் புகைந்து கொண்டு இருக்கும் கோபம், வெறுப்பு, தீயாக சொற்கள் மூலமும். தாக்குதல் மூலமும் வெளிவருகிறது. இந்து மதத்தில் நீரை வருணன் என வழிபடுவது போல் நெருப்பை அக்னி என் வழிபடுவார்கள். நெருப்பின் உக்கிரத்தை நீர் அடக்கக் கூடியது.

## தீக்குளிப்பு

தீ என்றவுடன் நமது நினைவுக்கு வருவது தீக்குளிப்பு அல்லது "பூ மிதித்தல்" என்ற மைக்கப்படும் வைபவம். இது அரசியல் காரணத்துக்காக தமிழ்நாட்டில் பெட்ரலை உடலில் ஊற்றி தீமூட்டும் சில மக்களின் பயித்தியக்கார செயல் அல்ல. பூ மிதித்தல் இந்து மதத்தினருக்கு மட்டுமே பொதுவான ஒரு சடங்குமல்ல. பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், பிறநாட்டவர்கள் கூட இந்தச் சடங்கைக் கடைப்பிடித்து வருகிறார்கள். நீராடி, ஈரத்துணியணிந்து பக்திப் பரவசத்துடன் அனல்கக்கும் தீத்தணலின் மேல் வெறுங் கால்களுடன் குறிப்பிட்ட தூரம் வரை நடந்து செல்வதே தீக்குளிப்பு எனப்படும். இச்செயற்பாட்டின் முக்கிய அம்சமாகும். மரக்கட்டைகளை எரித்து, தணலாகிய பின் அதைப் பரப்பி, தணலைப் படுக்கையாக்கு வார்கள். மேள தாளத்துடன் தீக்குளிப்பவர்கள் இறைவனை முதலில் வணங்கி தணல்படுக்கைமேல் நடந்து செல்வார்கள். தீக்குளிப்பு இந்தியாவில் கி.மு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்த மதக் கிரிகைகளில் ஒன்றாகும்.

இலங்கையில், புத்தளத்துக்குத் தெற்கே கடற்கரை ஓரமாக அமைந்துள்ள உடப்பூர் என்ற கிராமத்தில் இத்தீக்குளிப்பு வருடாந்தம் திரௌபதை அம்மன் கோயிலில் நடைபெறும். இதே போன்று மட்டக்களப்பு பகுதியில் உள்ள பண்டிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள திரௌபதை அம்மன் கோயிலிலும், யாழ்குடாநாட்டில் உள்ள பல கோயில்களிலும் இது நடைபெறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாகயிருக்கிறது. இவ்வைபவம் திரௌபதை அம்மனுடன் தொடர்புடையது. மகாபாரத யுத்தத்தில் திரௌபதை மிகமுக்கிய கதாபாத்திரம். பல கொடுமைகளை அனுபவித்து தர்மத்தை நிலைநாட்டி வாழ்ந்து வெற்றியும் பெற்றதை நிலை நாட்டவே அவள் தீக்குளித்தாள். அதுவே பின்னர் சடங்காக அவள் வழிவந்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. இதுவே திரௌபதி அம்மன் கோயிலில் தீக்குளிப்பு நடைபெறுவதற்குக் காரணமாகும்.

சிங்கப்பூரில் 1840ஆம் அண்டு முதல் இச்சடங்கு கடைப்பிடித்து வரப்படுகிறது. சுமார் 2500 மக்கள் தீக்குளிப்பில் ஈடுபடுவார்கள். இதில் பத்து விகிதம் சீனர்கள். சிங்களவர்களுக்கு சக்தி வழிபாட்டில் நம்பிக்கையுண்டு. அதனால்தான் கண்ணகி, மாரியம்மன், திரௌபதை கோயில்களுக்குச் சென்று அவர்கள் வழிபடுவது வழக்கம். தெற்கே கதிர்காமத்திலும் தீக்குளிப்பு வைபவம் நடைபெறுவதுண்டு. பௌத்தர்கள் கூட தீக்குளிப்பதை மதக்கிரிகையாக நடத்துகிறார்கள் என்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். புத்தளப் பகுதிகளில் உள்ள சில முஸ்லீம்களின் மசூதிகளிலும் இவ் வைபவம் நடைபெற்றதற்கு சான்றுகள் உண்டு. இது மக்களை ஈர்ப்பதற்காக நடத்தப்படுவதாகவும், இஸ்லாமுக்கும் இச்சடங்கிற்கும் தொடர்பு இல்லை என்பதும் பல இஸ்லாமிய அறிஞர்களின் கருத்து. முஹர்றம் மாதத்தில் பஞ்சா எடுப்பதைத் தொடர்ந்து "பூக்குழி இறங்குதல்" எனப்படும் தீ மிதிப்பு நடைபெறும். இவ்வனுட்டானம் முஸ்லீம் அறிவாளிகள், செல்வந்தர்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறாவிட்டாலும் சாதாரண குடிமக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற சடங்காகும். இஸ்லாமியர் குடியேறிய காலத்தில் இந்துக்களாக இருந்து இஸ்லாமிற்கு மதம் மாற்றப்பட்டோர் பரம்பரையாக கடைப்பிடித்த இவ் வழக்கத்தை இன்றும் பின்பற்றுவதாகவும் எண்ண இடமுண்டு. பல இஸ்லாமிய திருமணத்தில் மணமகளுக்கு தாலி கட்டுவது இப்போதும் வழக்கமாக இருந்த வருகிறது.

கண்டிப் பெரஹராவின் போது தீக்குளிப்பு இடம்பெறும். இதைப் பார்ப்பதற்காக பல உல்லாசப் பயணிகள் திரளுவார்கள். தீக்குளிக்கும் தணல் படுக்கையின் வெப்பமானது முப்பதடி தூரத்திலும் உணரக் கூடியதாயிருக்கும். தீக்குளிப்பவர்கள் தீக்குளிக்குமுன் விரதமிருந்து மத ரீதியாக தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வார்கள். அதன் பின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உருவந்து நடப்பது போல் செயற்படுவார்கள். பிறநாட்டவர்கள் தீக்குளிப்பதில் தாமும் இறங்குவதுமுண்டு. இங்கு தமது மத நம்பிக்கையையும் மனத் தூய்மையையும் நிரூபிக்க பலர் தீக்குளிக் கிறார்கள் - தூக்குக் காவடி எடுப்பது போல்.

## பிற நாடுகளில் தீக்குளிப்பு

இந்தியா, இலங்கையில் மட்டுமல்லாது, பல் கேரியா, டிரினிடாட் என்ற மேற்கிந்திய தீவு, பீஜித்தீவு, தகித்தீவு, மொரீஷியஸ், ஜப்பான், மலேசியா, தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து, சீனா, பண்டைய கிரேக்கம், சிங்கப்பூர் போன்ற தேசங்களிலும் இவ்வைபவம் நடைபெறுகிறது. இச்சடங்கு முறையும் அதன் நோக்கமும் நாட்டுக்கு நாடு மாறுபடும். அனேகமாக இளவேனில் கால உற்சவங்களுடன் இவ்வைபவம் இடம்பெறும். குப்பிளாய்கான் ( Kublai Khan) காலத்தில் டாவோ (Tao) பௌத்த மத்தினர் உற்சவகாலங்களில் வெறும் கால்களுடன் தணலின் மேல் சென்றதாகச் சீன வரலாறு சொல்கிறது. இதில் பங்கு கொள்பவர்கள் மூன்று தினம் உபவாசம் இருந்து ஒரு கிழமைக்கு தாம்பத்திய உறவில் ஈடுபடாமல் இருப்பது அவசியம். டாவோ புத்தகுருமார் தணல் படுக்கையில் நெற் பொரியும் உப்பும் எறிவது வழக்கம். உருவந்து இருவர் தணல் மேல்நடக்க, அவர்களுக்குப் பின்னே சாதாரண குடிமக்கள் நடந்து செல்வார்கள். அவர்கள், தலையில் தமது தெய்வத்தின் சிலையைக் கொண்டுசெல்வார்கள்.

"

**மரக்கரியானது கரடுமுரடான பரப்பை உடையது. ஆகவே அதன் மேல் மனிதன் பாதங்களை வைத்து நடக்கும் போது, ஒரு சிறு பகுதியே, தணலாக இருக்கும் மரக்கரியைத் தொடுகிறது. இதுவும் உடம்பிற்கு வெப்பம் கடத்தப்படாததிற்கு ஒரு காரணமாகும்.**

"

## பீஜித் தீவில் தீக்குளிப்பு

பீஜித் தீவில் தீக்குளிப்பினை விலிமிலர்வோ என்பர். தீவுவாசிகள் 18 அடி நீளமும் 6 அடி அகலமும் உள்ள சுடு கற் படுக்கை ஒன்றின் மீது நடந்து செல்வார்கள். தீவில் உள்ள மலைக் கடவுளைச் சாந்தப்படுத்த செய்யும் மதக்கிரிகை இது. இத்தீவு எரி-மலையின் வெடிப்பினால் தோன்றியது. ஒரு காலத்தில் எரிமலை வெடித்ததினால் தீப் பிழம்பிற்கு பல தீவுவாசிகள் பலியாகினர். அதன் பின்னர் எரிமலைக் கடவுளின் கோபத்தை அடக்க தீக்குளிப்பு கிரிகை ஆரம்பிக்கப்பட்டதாக ஆராச்சியாளர்கள் கருதுகிறார்கள். டிரைசெனா ( Dracaena) என்ற மரத்தின் வேர் முற்றியவுடன் அதைத் தணலில் வேக வைத்து உண்பார்கள். அதைக் குறிக்கும் கிரிகையே தீக்குளிப்பு என்பது வேறு சிலர் கருத்து.

## ஜப்பானில் தீக்குளிப்பு

தீக்குளிப்பு ஜப்பானிலும் பல இடங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பிரகாசமான பட்டு உடையணிந்து கையில் மணியுடன் மந்திரம் சொல்லியபடியே தீயின்மேல் நடப்பார்கள் ஜப்பானியர்கள். மலை சார்ந்த பகுதியிலேயே இந்த வழக்கம் இருந்து வருகிறது. இந்த வழக்கம் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் தமது பரிசுத்தத்தை நிரூபிக்க கடைப்பிடிக்கப்பட்ட முறையாகும். ஜப்பானில் 1300ஆண்டுகளுக்கு முன் இயற்கையை வணங்குபவர்களும் பௌத்த மதத் தினருமாகிய யமபுஷி என்பவர்கள் தீக்குளிப்பு முறையைக் கடைப்பிடித்தனர்.

## சூழல் - 7

## கிரேக்கமும் தீக்குளிப்பும்

எரிமலைகள் நிறைந்த நாடு கிரேக்கம். பெரோனியா என்ற நகரத்தில் உள்ள Soracte என்ற மலையின் அடிவாரத்தில் தீக்குளிக்கும் முறை அனுடிக்கப்பட்டு வந்தது. இந்த மலைக் கடவுளினால் பீடிக்கப் பட்டவர்கள் தங்களை விடுவிக்க தீக்குளிப் பார்கள். ரோம் நகரத்திலிருந்து சிறு தூரத்தில் உள்ள பலிஸ்கன் என்ற ஊரிலும் சில குடும்பங்கள் தீக்குளிப்பது வழக்கம். இவர்கள் தங்களை இராணுவ சேவையிலிருந்து விடுவித்துக் கொள்ள இதனைச் செய்வார்கள்.

## வைக்கிங் காலமும் தீக்குளிப்பும்.

ஒரு காலத்தில் நோர்வேயைச் சேர்ந்த வைக்கிங் என்ற இனத்தவரிடையே கொதி நீரில் உள்ள இரும்புத்துண்டை கையில் எடுத்து ஒன்பது அடிகள் எடுத்து வைப்பது வழக்கமாயிருந்து வந்தது. அதைச் செய்வதை ஒரு சவாலாக அவர்கள் கருதினர். 1217 முதல் 1263 வரை நோர்வே நாட்டை ஆண்ட அரசன் அப்பதவி தனக்கே உரித்தென்பதை நிரூபிக்க இந்த முறையைக் கடைப்பிடித்தார் என்கிறது வரலாறு. ஹெரல்ட் கிலே என்ற நோர்வே தேசத்தை 1130 முதல் 1136 வரை ஆண்ட அரசன் தனது அரச உரிமையை நிலைநாட்ட நெருப்பில் சூடாக்கப்பட்ட இரும்பின் மேல் நடந்து நிரூபித்தார். இந்த முறைகளை கிறிஸ்தவ மதம் 1247இல் நோர்வே நாட்டில் இருந்து இல்லாமல் செய்தது.

## தீக்குளிப்பும் பௌதிகமும்

தீக்குளிப்பிற்குப் பௌதிக ரீதியாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. காய்ந்த மரங்களுக்கு நெருப்பூட்டி கிடைத்த மரக்கரி எவ்வளவுக்கு வெப்பம் (1,700பாகை) உடையதாயிருப்பினும் அதனுடன் எப்பொருளும் தொடும்போது வெப்பத்தைக் கடத்தாது. காரணம் மரத்தின் வெப்பக் கடத்தல் திறன் (Coefficient of Thermal Conductivity) மிகக் குறைவு. மரக்கரியானது கரடுமுரடான பரப்பை உடையது. ஆகவே அதன் மேல் மனிதன் பாதங்களை வைத்து நடக்கும் போது, ஒரு சிறு பகுதியே, தணலாக இருக்கும் மரக்கரியைத் தொடுகிறது. இதுவும் உடம்பிற்கு வெப்பம் கடத்தப்படாததிற்கு ஒரு காரணமாகும். தணலில் நடப்பவர்கள் அதிக நேரம் தணலாக இருக்கும் மரக்கரியைத் தொடுவதில்லை. மனித இரத்தம் விரைவாக வெப்பத்தைக் கடத்தி செல்லக் கூடியது. ஆகவே தணலில் இருந்து உடல் சிறிதளவு வெப்பத்தைப் பெற்றவுடன் அதை விரைவாக கடத்திச் சென்றுவிடும். அதனால் பாதங்கள் எரிவடையும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. நெருப்புத் தணலில் நடப்பவர், நீரில் குளித்து ஈரத்துணியுடன் நடப்பது வழக்கம். பாதங்களில் உள்ள நீர் வெப்பத்தில் ஆவியாகி பாதத்திற்கும் நெருப்புத் தணலுக்குமிடையே ஒரு நீராவிப் படலத்தை தோற்றுவிக்கிறது. நீராவியின் வெப்பக் கடத்தற் திறன் குறைவு. ஆகவே இதுவும், வெப்பம் பாதங்களை எரித்துவிடாததிற்கு ஒரு காரணமாகும், என்கிறார்கள் பௌதிக விஞ்ஞானிகள்.

மத நம்பிக்கையுடன், தமது சக்தியை வெளிப்படுத்தவுமே தீக்குளிப்பு பல தேசங்களில் மரபு வழிவந்த கிரிகையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. பலருக்கு அதனுள் புதைந்துள்ள விஞ்ஞான விளக்கம் புரிவதில்லை.

(தொடரும்)

■ ■ ■

## கனேடிய ஜனநாயகம் வளர

# ஒக்டோபர் 10ம் திகதி "ஓ" போடுங்கள்!

ஒக்டோபர் 10ம் திகதி கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இது இன்னமும் பல மில்லியன் ஒன்ராறியோ வாசிகளுக்குத் தெரியாமலே உள்ளது.

ஒன்ராறியோ மாநில தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகளை நீக்கி அதை மேலும் சீர்படுத்தி ஜனநாயகம் வளர வேண்டும் என்ற காரணத்திற்காக மக்களின் அங்கீகாரத்தை வேண்டியே இந்த சர்வசன வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இந்த சர்வசன வாக்கெடுப்பில் 60%மான மக்கள் "ஆம்" (yes) என்று வாக்களித்தால் ஒன்ராறிய தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படும். அந்த மாற்றம் ஜனநாயகத்தின் மிகப்பெரிய வெற்றியாக அமையும்.

தற்போது உள்ள ஒன்ராறியோ மாநிலத் தேர்தல் முறையின்படி, உண்மையில் அந்த மாநில மக்கள் வாக்களித்த கட்சி, தான் உண்மையில் பெறவேண்டிய ஆசனங்களை பெறுவதில்லை. வெல்லும் கட்சி நாற்பது வீதமான ஒன்ராறியோ மக்களின் வாக்குகளை மட்டும் பெற்று அறுபது வீதமான ஆசனங்களைப் பெற்று ஆளும் கட்சியாகி, 100 வீதமான அதிகாரத்தை பெறுகின்றது.

அதே சமயம் முப்பது சதவீதமான வாக்குகளைப் பெற்றகட்சி 25சதவீதமான ஆசனங்களையும், இருபது சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சி 15 சதவீதமான ஆசனங்களையும், 10 சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சி எந்த வித ஆசனங்களையும் பெறாமாலும் இருக்கின்றது.

ஆனால் புதிய தேர்தல்முறையின் படி நாற்பது சதவீத வாக்குகள் பெற்ற கட்சி நாற்பது சதவீதமான ஆசனங்களையும், பத்து சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சி பத்து சதவீதமான ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளும்.



இதனால் எந்த ஒரு கட்சியும் இராட்சத பலத்துடன் ஆட்சிக்கு வரமுடியாது. ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால் ஆட்சிக்கு வருபவர்கள் தாம் நினைத்த மாதிரியான மக்கள் விரோத சட்டங்களை இயற்றமுடியாத நிலைமை ஏற்படும். இது மக்களுக்கு கிடைக்கின்ற பெரிய வெற்றியாகும்.

இது மட்டுமல்ல இந்த புதிய தேர்தல் முறையின் மூலம் ஒன்ராறியோவில் வாழும் சிறுபான்மை இனங்கள் ஒன்ராறியோ பாரளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படு வார்கள். தமிழர்கள், இந்தியர்கள், என்று பல் தேசிய இனங்களும் ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருப்பார்கள். அத்தோடு பெண்களின் பிரதிநிதித்துவம், மற்றும் அங்கவீனம் உற்றோர்களின் பிரதிநிதித்துவமும் ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் ஒலிக்கும்.

இந்த புதிய முறை எளிமையானது. உண்மையில் இது இலங்கையில் தற்போது உள்ள தேர்தல் முறைக்கு சமமானது. ஆனால் அதைவிட காத்திரமான பயனை அளிக்கக் கூடியது.

தற்போது உள்ள தேர்தல் முறையின் படி எந்த ஒரு தமிழரும் ஒன்ராறியோ மாநில பாராளுமன்றத்திற்கு தற்சமயம் தெரிவு செய்யப்பட மாட்டார்கள். ஆனால் இந்த தேர்தல் முறைமாறினால் அடுத்த தேர்தலிலேயே சில தமிழர்கள் ஒன்ராறியோ மாநில அரசின் பாராளுமன்றத்தில் பிரதிநிதி களாக நியமிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் மிகப் பிரகாசமாக உள்ளது.

இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பு. இந்த சந்தர்ப்பத்தை சிறுபான்மை இனத்தவர்கள் தவற விடக்கூடாது. எனவே ஒவ்வொருவரும் மிகப் பொறுப்புடன் செயல்பட்டு தமது ஒவ்வொரு வாக்கையும் "ஆம்" என்று வாக்களிக்க வேண்டும்.

இது தொடர்பாக இன்னமும் விபரங்களை பெறவிரும்புகின்றவர்கள், www.voteyesfor-mmp.ca, www.fairvote.ca என்ற இணையத் தளங்களிற்கு சென்று பார்வையிடலாம்.

ஒன்ராறியோ மாநில அரசு அண்மையில் ஒன்ராறியோ மாநிலத்திற்கு சிறந்ததொரு தேர்தல் முறையினைப் பரிந்துரைப்பதற்காக 'தேர்தல் முறை சீரமைப்பு பிரஜைகள் அணியை' அமைக்க அங்கீகாரம் அளித்தது. இந்த அணி, ஏழு மாதகால ஆராய்வின் பின்னர் கலந்த அங்த்தவர் விகிதாசார (Mixed Member Proportional- MMP) தேர்தல் முறையினைப் பரிந்துரைத்துள்ளது. இது தற்போது உள்ள முறையினை விட காத்திரமானதும், ஜனநாயகமானதுமான தேர்தல் முறையாகும்.

இதன் படி ஒவ்வொருவரும் வாக்குச் சீட்டு ஒன்றைப்பெற்றாலும், வாக்குள் இரண்டைப் பெறுகின்றார்கள்.

■ ■ ■

# பி. விக்கினேஸ்வரனுக்கு அகேனம் விருது

சுயாதீன திரைப்பட மையத்தின் ∴ (அகேனம்) விருது -2007 பி.விக்கினேஸ்வரனுக்கு வழங்கப்படுகின்றது. அகேனம் விருது வருடா வருடம் ஊடகம். கலை போன்றனவற்றில் நீண்ட காலம் விசேட பணிபுரிந்த படைப்பாளிகளுக்கும், மாற்று ஊடகத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்தவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

விக்கினேஸ்வரன் 37 வருடங்களுக்கு முன்னர் 1970ல் இலங்கை வானொலியில் பணிபுரியத் தொடங்கினார். இலங்கையில் செய்தி வாசிப்பாளராக நன்கு பரிச்சயமான இவர், பின்னர் தயாரிப்பாளராக பல வானொலி நாடகங்களையும், பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளையும் தயாரித்துள்ளார்.

பின்பு இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்ட போது சிரேஷ்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பதவியேற்றார். 1984ல் ரூபவாகினி தமிழ்ப் பிரிவு பணிப்பாளராகப் பதவியேற்றார். இலங்கை இனப்பிரச்சினையின் விளைவால் நாட்டைவ விட்டு வெளியேறி கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

கனடாவில் "தேமதுரம்" வானெலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றினார். இதே காலப் பகுதியில் குழந்தை சண்முகலிங்கத்தின் "எந்தையும் தாயும்", N. சுந்தரலிங்கத்தின் "அபசுரம்", Eugene Ionescoன் "நாற்காலிகள்" போன்ற நாடகங்களையும் நெறியாள்கை செய்ததார்.

நவீன நாடகங்களில் நன்கு பரிச்சயமான இவர், பாலேந்திரா நெறியாள்கை செய்த "கண்ணாடி வார்ப்புக்கள்" போன்ற பல நாடகங்ளை இலங்கை தொலைக்காட்சிக்காக தயாரித்தளித்துள்ளார். இன்று பரப்பாக அறியப்படும் தொலைக்காட்சித் தொடர்களை முதன் முதலில் தமிழில்



தயாரித்து நெறியாள்கை செய்தவர் இவரே. இவரது நெறியாள்கையில் உருவான "கற்பனைகள் கலையவில்லை" தமிழில் உருவான முதல் தொலைக்காட்சித் தொடர் நாடகமாகும். புலம் பெயர் நாடுகளில் முதன் முதலாகவும் ஊடக கல்வி வட்டமான "முரசம்"த்தை ஆரம்பித்து நாடத்தினார். பேலினி, விக்ரோரியா டி சிகா போன்ற பல திரைப்பட மேதைகளின் படங்களை அறிமுகப்படுத்தியதுடன், அப்படங்கள் பற்றிய பல ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. செய்தி-யின் நிஜங்கள் பற்றிய விரிவுகைளும் நடாத்தப்பட்டன.

தற்பொழுது ரி.வி.ஜ யில் கடமையாற்றும் இவர், ஓர் முழு நேர கணக்காளருமாவார். அவரை வாழ்த்துவதில் "தாய் வீடு" பெருமை கொள்கிறது.

■ ■ ■

நூல் வெளியீடு



திரு. சுந்தர்ராஜ்

மலேசிய எழுத்தாளர்
திரு. சுந்தர்ராஜ்
அவர்களின்




Atlanta Banquet Hall
1240 Ellesmere Rd.
October 05, 2007
வெள்ளி மாலை 7 மணி

இந்நூலின்
வெளியீட்டு
விழாவிற் கலந்து
சிறப்பிக்குமாறு
அன்புடன்
அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு:
பொன்னையா விவேகானந்தன்: 416-670-8498
சு. இராசரத்தினம்: 416-573-7332
கி. சுந்தர்ராஜ்: 647-223-1420

# தாயகத்தின் நினைவுகளை மீட்டுத்தரும்

# மூங்கில் நாட்காட்டி




digi Media

நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு 2008ம் ஆண்டு நாட்காட்டிகளை வழங்க விரும்புகிறீர்களா? மூங்கில் நிறுவனத்தின் நாட்காட்டிகளை வழங்குங்கள். மூங்கில் நிறுவனம் தமிழீழத்தின் இயற்கை எழிலையும், மனிதர்களையும், பண்பாட்டு அழகையும் வருடம் முழுவதும் அழகிய நாட்காட்டிப் படங்களாக அழைத்துவருகிறது. பதின்மூன்று மாதத்திற்கான விபரங்களைக் கொண்ட இந்த நிறுவனத்தின் புகைப்படங்கள் எமது புகைப்படக் கலைஞர்களின் படைப்புக்களாகும். மூங்கில் நிறுவனத்தின் இந்த அழகிய நாட்காட்டிகளில் ஒவ்வொரு மாத விபரங்களின் கீழும் உங்கள் நிறுவனத்தின் பெயர், உங்கள் புகைப்படம், விபரங்கள் அச்சிடப்பட்டிருக்கும். மூங்கில் நாட்காட்டிகள் மூலம் புலம்பெயர் தேசமெங்கும் தமிழீழ எழிலையும், வாழ்வியலையும் பரவவிடுங்கள்.

மூங்கில்
MOONGIL

**www.moongil.ca**

TEL: **416-628-7109**


**1-(888)-401-3824**

# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை


# UPROPERTIES.COM





***Lakeshore/Bathurst***
2+1 Bedrooms,
3 Washrooms, Completely Custom Finished Condo Left With Selective Materials. Surreal View Of The Entire City & Lake. Heated Floor Throughout. All Light Fixtures, Plumping & Wiring Are Upgraded.




***Markham/Elson***
4 Bedrooms,
3 Washrooms, Excellent Location!!! Minutes To Highways, Shoppings, Restaurant, Close To T.T.C Park,Steps Away From School, New Double Door Entry, Easy To Convert W/O Basement




***Bramalea / Queen***
4 Bedrooms,
3 Washrooms, Spacious 4 Bdrm Semi-Detached Double Door Entry House In A Desirable Neighbourhood. Approx. 2058 Sq Ft. Master Bdrm With 5 Pc Ensuite




***Squre one (Mississauga)***
3+2 Bedrooms,
2 piece: 1 Washrooms, Great Neighbourhood, Convenient Location, Child Safety Cul De Sac Street, Potential Complete In-Law Suite, Closer To All Major Hwys, Malls, Restaurants, Schools In Walking Distance.

***UTHAYAN NADARAJAH***
*Broker*

**Cell: .416.727.9945**



ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

UTHAYA

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



புகைப்பிடிக்காத 30 வயதுடைய
ஆணுக்கு $200 000 காப்புறுதி
$17.28 மட்டுமே! (T10. R.C.)

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

## Life Insurance

### Critical Illness Insurance



## Disability Insurance
## Mortgage Insurance

**RRSP - Start from $25**
Loan approval within 24hrs - Bad credit no problem
**RESP - Start from $25**
(20%-40% Government Grant + 15% Company Bonus)

**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

FOR SALE SOLD

## *Congratulations To Our Winning Clients*

FOR SALE SOLD


எமது வாடிக்கையாளருக்கான இலவச சீட்டிழுப்பு கடந்த சனிக்கிழமை September 29, 2007 அன்று 2900 Markham Road இல் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.


Justin William***



Sasi Chelvaratnam**


Balan Kanesapillai**


Jayanthy Sritharan**


Vasanthy Niranjan**


Ravi Paramu***


Ravi Raveendran***


Raj Rasaratnam**













Shiva Maniam**


Seelan Siva Aiyadurai**


Kethees Seevaratnam**


Shan Thayaparan**


Kumar Sinnathamby**


Thana Suseendra**


Param.G Gnanaswaran***


Shiva Sharmah**

## வெற்றி பெற்ற 10 அதிர்ஷ்டசாலிகளுக்கும் எமது வாழ்த்துக்கள்

HOMELIFE

**HomeLife GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

REAL TEAM

This is not intend to solicit properties currently listed for sale.
*Independently owned and operated
**Sales representative ***Broker




M and M CONSULTANTS

Serving 22years in Canada
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathurst & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# கோடை விடுமுறை



திரு மகேசன்

உல்லாசப் பயணத்துறையில் ரொறொன்ரோ மாநகருக்கு விமான பயணங்களால் விடிவெள்ளி தோன்றுவதுபோல் தெரிகிறது. ஜெற் எயார்வேய்ஸ் தனது இறக்கைகளை ரொறொன்ரோ மண்ணில் இறக்கிவிட்டது. இந்திய விமானத்துறையில் முதலாம் இடத்தை வகிக்கும் மதிப்புக்குரிய திரு.கொயல் அவர்களின் ஜெற் எயார் வேய்ஸ் நிறுவனம் ரொறொன்ரோவிலிருந்து இந்தியா, இலங்கைக்கான தனது பயணச் சேவையை ஆரம்பித்து, எம்மை குதூகலிக்க வைக்க ஆரம்பித்துவிட்டது.

முன்னர் ஐரோப்பிய நாடுகளினூடாக இடறி விழுந்து, ட்ரான்சிற் பயணிகள் பட்ட வேதனைக்கு ஒத்தடம் கொடுப்பதுபோல், ஜெற் எயார் வேய்ஸ் எம்மை இங்கிருந்து நேராக இலங்கைக்கோ அல்லது இந்தியாவுக்கோ கொண்டு செல்லும் பணியை ஆரம்பித்துவிட்டது. மொத்தத்தில் நமக்கெல்லாம் கொண்டாட்டம்தான். காரணம் இனி ஏறினால் ரொறொன்ரோ இறங்கினால் சென்னை என்பதாகிவிட்டது. அதுமட்டுமல்ல, இந்தியாவில் விசாலமான சேவையைச் செய்யும் ஜெற் எயார் வேய்ஸ் நிறுவனத்தால், ஆன்மீகப் பயணம் செய்பவர்கள் எல்லாம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பறந்து திரிந்தே தரிசிக்கும் பரவசத்தைப் பெறப்போகிறார்கள்! இதுமட்டுமா, இந்த மாதத்திலிருந்து உல்லாசப் பயணிகள் பலரையும் தமது சேவையால் கவர்ந்திழுக்கும் எமரால்ட் எயர்லிங் நிறுவனமும் தமது சேவையை ரொறொன்ரோவிலிருந்து நேரடியாக இலங்கைக்கு ஆரம்பிக்கிறது.

சரி, இனி நமது பயணத் தொடருக்கு வருவோம். சென்ற மாதத்தில், இந்த பயணக் கட்டுரைமூலம் இந்திய திருத்தல யாத்திரை செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எனவே, நாமும் நமது வட இந்திய அலுவலகத்தில் பணிபுரிபவர்களினதும், வழிகாட்டிகளினதும் எண்ணிக்கையைக் கூட்டியுள்ளோம். பல்கலைக் கழகத்தில் அகழ்வாராய்ச்சி பட்டப் படிப்பை மேற்கொண்டவர்களே வழிகாட்டிகளாக இந்திய நிறுவனத்தில் பணிபுரிவதால் அவர்களின் விசாலமான ஆன்மிக அறிவு நம்மை புல்லரிக்க வைத்ததாக சென்று வந்த பயணிகள் குறிப்பிட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்னொரு குழுவினர், நாம் ‘தாய் வீடு’ பத்திரிகையின் மூலம் வழங்கிய அறிவுரைகள் தமக்கு நிறையவே உதவியதாக தொலைபேசி மூலமும், நேரடியாகவும் தெரிவித்துள்ளனர். இக்கட்டுரை வெளிவரத் தொடங்கிய பின்னர், சென்ற வாரம் முதல் தடவையாக பெண்கள் (மகளிர் மட்டும்) மட்டுமே அடங்கிய குழுவொன்று ஆன்மீகப் பயணம் புறப்பட்டு, சென்ற வாரம் நியூ டெல்லி சென்றடைந்துள்ளனர். இந்தக்



குழுவில் ஆண்கள் யாருமே இடம்பெறவில்லை என்பதும் இவர்களின் பயணம் முற்றுமுழுதாக பெண் வழிகாட்டிகள் மூலமே தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தொலைபேசி மூலம் அறியத் தந்தார்கள்.

வாரணாசியில் நாம் மாலையில் செய்யப்படும் கங்கா ஆராத்தி எனப்படும் தீபாராதனையை கடைசிவரை தவறவிடக் கூடாது. எமது வாழ்நாளில் நாம் செய்யும் பாவங்கள் இவ்வாராத்தி தீபத்தைக் காண்பதன் மூலம் போக்கப்படுவதாக ஒரு ஐதீகம் உண்டு. வாரணாசியின் அழகை இரவில் கண்டு தரிசிப்பது மிகவும் நல்லது. ஒரு இரவில் வாரணாசியில் நாம் கேட்கும் பக்தி கீதங்களும், ஆலய மணி ஒலிகளும், ஓம் என்ற மந்திர உச்சாடனங்களும் நம்மை மெய் சிலிர்க்க வைப்பதென்பது உண்மையிலும் உண்மை.

நமது காலை உணவை வாரணாசியில் முடித்துக்கொண்டு சூரிய உதயம் பட்டுத் தெறிக்கும் வாரணாசியைத் தொட்டு வணங்கி, நமது பயணத்தை அலகபாத் நோக்கி நகர்கின்றோம். வாரணாசியிலிருந்து புறப்படும் பயணிகள் சைடாபாட் (Saidabad), ஹண்டியா (Handia) வழியாக இலக்கம் 2 பாதையூடாக பஸ்ஸில் அலகபாத்தை அடையலாம்.

உத்தரப் பிரதேசத்தின் ஆங்கிலப் பெயரைத் தாங்கி நிற்கும் இடம் அலகபாத். முகலாயப் பேரரசர் அக்பரினால் 1583 இல் இப்பெயர் சூட்டப்பட்டது. ஆனால், இதன் புராதனப் பெயர் பிரயாகா (Prayaga) என்றே சமஸ்கிருதத்தில் குறிப்பிடப்படுகின்றது. சமஸ்கிருதத்தில் இந்த இடமானது “Place of Sacrifice” என்றே குறிப்பிடப்படுகின்றது.





இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்துக்களால் பெருமையுடன் பேசப்படும் திரிவேணி சங்கமம் இங்கேதான் அமைந்திருக்கிறது. கங்கை, யமுனா, சரஸ்வதி ஆகிய மூன்று புனித நதிகளும் சங்கமிக்கும் இடமென்பதால் இது திரிவேணி சங்கமம் என்று வழங்கப்படுகிறது. சித்தர்களும், யோகிகளும் வந்து கூடும் கும்பமேளா நடைபெறும் இடங்களில் இவ்விடமானது விசேடமானதாகும்.

இத்திரிவேணி சங்கமத்தில் சென்ற மாதம் ரொறொன்ரோவில் இருந்து சென்றிருந்த குழுவினர் மிகப் புனிதமான ஒரு நாளில் திரிவேணிசங்கமத்தில் நீராடும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றார்கள். ஆடி அமாவாசை தினத்தில் இவர்கள் இங்கே தமது பிதுர்க்கடன் செய்யும் பாக்கியம் பெற்றதைச் சொன்னபோது நமக்கெல்லாம் உடலில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. சும்மாவா சொன்னார்கள் திரிவேணி சங்கமம் என்று!

இங்கே நடைபெறும் கும்பமேளாவில் கலந்துகொள்ள வருபவர்களின் எண்ணிக்கை பல இலட்சத்தைத் தாண்டுவதால் ‘Largest gathering’ என்றே உலக நாடுகளால் குறிப்பிடப்படுகின்றது. இதுமட்டுமன்றி, இமய மலைச் சாரலில் நம் கண்களுக்குத் தெரியாது மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பல சித்தர்கள், இந்த கும்ப மேளாவில் மட்டுமே கலந்துகொள்ள வருவதாகவும், வரும் அவர்கள் திரிவேணி சங்கமம் எனப்படும் இம்மூன்று நதிகளும் சங்கமிக்கும் இடத்தில் புனித நீராடி மகிழ்வதாகவும் சொல்லப்படுகின்றது.

அலகபாத் கோட்டையினுள்ளே அமைந்திருக்கும் பாதாள ஆலயமான Patalpuri Temple அனைவரும் சென்று தரிசிக்கும் இடமாக விளங்குகிறது. காரணம் Lord Rama இவ்வாலயத்திற்கு வந்து தரிசித்ததாக ஒரு கதையுண்டு. இவ்வாலயத்திலிருந்து ஒரு ரகசிய வழியாக திரிவேணி சங்கமத்திற்குச் சென்று புனித நீராட வழியுண்டு என்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அச்சுரங்கப் பாதை களுக்கான வாசல் தாளிடப்பட்டு மூடப்பட்டுள்ளது. முகலாய மன்னர் அக்பர் முஸ்லிமாக இருந்தபோதும், இப்பாதை வழியாகச் சென்று சில இந்து சாஸ்திர வழிமுறைகளை இரகசியமாகக் கடைப்பிடித்ததாக வழிகாட்டிகள் சொல்கிறார்கள். அலகபாத் பல்கலைக்கழகத்தில் பல ஈழத்து தமிழ் மாணவ மணிகள் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருவது இங்கே குறிப்பிடத்தக்கது. அலகபாத்தில் நமது இரவைக் கழித்தபின், நாம் பெருமைக்கும், பிரச்சினைக்கும் பெயர்பெற்ற அயோத்தியா நோக்கி புறப்படுவோம்.

அதிகாலையில் நமது பயணம் அயோத்தியா நோக்கி ஆரம்பமாகிறது. ராமஜென்ம பூமி என்ற பெருமையோடு அழைக்கப்படும் அயோத்தியா (Ayodhya) ராமாயணத்தில் முக்கியமான நகரமாகக் கணிக்கப்படுகிறது. மனுவால்(Manu) அயோத்தியா நகரம் பிரஸ்தாபிக்கப்பட்டதாக இராமாயணத்தில் சொல்லப்படுகிறது. சரயு நதியோரம் அமைந்திருக்கும் இன்றைய அயோத்தியா பல சரித்திரச் சிறப்புக்களைக் கொண்டதாகும். அன்றைய காலத்தில் அயோத்தியா கோசல்டேசா (Kosaldesa) என அழைக்கப்பட்டிருக்கிறது.

அயோத்தியா நகரினுள் பிரவேசிக்கும்போதே காவி உடை அணிந்த சாதுக்கள், ‘ராமா ராம்’ பாடிக்கொண்டிருப்பதை எட்டுத் திசையிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. புத்தமதம், ஜெனிசம், இஸ்லாம் என்று பல தரப்பட்ட மதத்தால் இந்த அயோத்தி கலந்திருக்கின்றது. ராம ஜனன பூமி (Sri Ram Janma boomi) என்றழைக்கப்படும் Lord Rama பிறந்த இடமாகக் கருதப்படும் இவ்விடம் Ram Kotward இல் அமைந்திருக்கிறது. ராமன், லட்சுமணன் போன்றவர்களின் உருவச் சிலைகள் இங்கே வைத்து வணங்கப்படுகின்றன. இப்பிரதேசம் முன்னர் அக்பருக்குச் சொந்தமான மசூதி என்பதாக ஒரு சாரார் உரிமை கோருவதால். அரசு இவ்விடத்தை கையகப்படுத்தியுள்ளது. ஆனாலும், ராமர் பிறந்த இடமென்பதால் நாள்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் இவ்விடம் கூடி, ராம், ராம் கோஷம் எழுப்புவதைக் காண முடிகிறது. பாதுகாப்புக் கெடுபிடிகள் மிக அதிகமாகவே இருக்கிறது. ஆனாலும் இவற்றுக்கு மத்தியிலும் அவர் அவதரித்த இடத்தைப் பார்க்கும்போது மனம் சில்லிடுகிறது.

Sita ko Rasoi என்றழைக்கப்படும் இடமானது, ராமஜென்ம பூமியின் வடமேற்குப் பகுதியில் உள்ளது. இங்கேயும் ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்னன் இவர்களோடு, இவர்களது மனைவியர்களான சீதா, ஊர்மிளா, மாந்தவி, சுருத்திகீர்த்தி ஆகியோரின் சிலைகளும் காணப்படுகின்றன. ஸ்ரீராமபிரானைத் திருமணம் செய்தபின் சீதை முதன்முதலில் சமையல் செய்து பரிமாறிய இடம் இதுவென்று சொல்லப்படுகின்றது. Kaushalya Bawan என்றழைக்கப்படும் ராமரின் தாயார் கௌசல்யா வாழ்ந்த இடம் இதுவாகும். இந்த மாளிகை ராமர் இளம் பராயத்தைக் கழித்த இடமாகக் குறிப்பிடப்படுகிறது. பண்டைய கலாச்சாரப் பதிவுகளை, கெடாமல் பாதுகாத்து வைத்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. “ராமஜன்மபூமி” என்பதாலோ என்னவோ திரும்பிய பக்கமெல்லாம் ராமர் படங்களாகவே உள்ளன. அயோத்தியா பற்றி எழுத வேண்டுமானால் பல பக்கங்களுக்கு எழுதலாம். ஆனாலும் நாம் எமது பயணத்தை இன்னமும் நீண்ட தூரம் அடைய வேண்டியிருப்பதால் அயோத்தியின் விவரணத்தைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. இதற்கு மேலாக அயோத்தியில் ஒரு சமயச் சர்ச்சையும் நடந்துகொண்டு இருப்பதால் நாமும் இதனை நீடிக்க விரும்பவில்லை. இரவு அயோத்தியில் தங்கிவிட்டு, அதிகாலை லக்னோ நோக்கி புறப்படுகின்றோம்.

■ ■ ■

# VARNAM INSTITUTE OF FINE ARTS

## தமிழோடு இசை பயில வர்ணம் நுண்கலைப் பயிலகம்



பிரதான கிளையில் தமிழ், சமய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
(எமது பயிலகத்தில் பயிலுவோர்களுக்கு இவ்வகுப்புகள் இலவசம்)
மாணவர்களுக்கு ஏற்ற நேர ஒழுங்குகள் செய்து தரப்படும்.
பின்வரும் இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன:

Brimley & Lawrence
Dundas & Hwy 10
McCowan & Denison
Williams Pkwy & Chinguacousy
Nellson & Finch
Tobram & Bovaird Drive
Wellesley & Parliament
Albion & Finch

Carnatic Music (Vocal), Violin, Miruthangam, Veena, Bharatha Natyam, Keyboard (Piano), Guitar, Drums, Tabala
Scarborough, Toronto (Downtown) Mississauga, Brampton, Etobicoke, Markham ஆகிய இடங்களில் கற்பித்தல் துறையில் பல வருட அனுபவம் கொண்ட ஆசிரியக் கலைஞர்களினால்
விஜயதசமி தினத்தில்
(20-10-2007, சனிக்கிழமை)
புதிய இசை, நடன, வாத்திய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
கர்நாடகசங்கீதம், பண்ணிசை, வயலின், வீணை, மிருதங்கம், தபேலா, கீபோட், கிற்றார், றம்ஸ், பரதநாட்டியம் போன்ற கலைகளைப் பயில சிறியோர் முதல் பெரியோர்வரை இணைந்து கொள்ளலாம்

ஸ்காபிரோ, மிஸிஸாகா ஆகிய இடங்களில் தரம் 1 முதல் - தரம் 12 வரை கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், மற்றும் மாணவர்களுக்கான பாடசாலை உதவி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
சங்கீத, மிருதங்க கலாவித்தகர்
இசைக்கலைமணி
**வர்ண. இராமேஸ்வரன்**
வர்ணம் நுண்கலைப் பயிலகம்
2929 Lawrence Ave East ( # 202 )
**647 893 4010 / 416 265 8884**
varnam@gmail.com





# One Stop for
## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

- PENS
- CLOCKS
- CALENDERS
- MEMOS
- MEASURING TAPES
- CELL PHONE STANDS
- FRIDGE MAGNETS
- B. CARD HOLDERS
- CORPORATE GIFTS
- SEASONAL GIFTS
- LASER ENGRAVING
- PAD PRINTING
- AND MORE................

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும் சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்





**PRO MAR**
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5



**The Big choice**
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL

80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# குளிர் காலமும் செல்லப் பிராணியும்

மஞ்சுளா ராஜலிங்கம்

குளிர்காலம் நெருங்கிவிட்டது. அடுத்தவருட சித்திரை மாதம் வரை குளிரை வெல்ல நாம் எவ்வளவோ முன்னேற்பாடுகளை மேற்கொள்கிறோம். உதாரணமாக, வீட்டை குளிர்காலத்தில் பக்குவமாக வைத்திருத்தல், வாகனங்களுக்கு குளிர்காலத்திடையே பார்க்கவேண்டிய திருத்த வேலைகள் என்ற பலவிதமான கருமங்களையும் முன்னெச்சரிக்கையுடனே கருத்தில்கொண்டு அவற்றைச் செய்யும் முடிக்கின்றோம். நம் மனதில் முக்கியமாக பதியவேண்டிய இன்னொரு ஜீவன் யார் எனில் அது நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணியான நாய்! அவர்தான் இன்றய நாயகன்.

நாம் வீட்டில் வளர்க்கும் நாய்கள் மனதில் என்ன இக்கிறது என்பதை நம்மால் முழுதாக அறிந்து கொள்வதென்பது இயலாத காரியம்.

சில நாய்களுக்கு வெண்பனி என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால், சில நாய்களுக்கோ இம்மாதிரி கடுங்குளிர் காலங்களில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கப் பிடிக்கும். அவர்களின் விருப்பங்கள் எதுவாக இருந்தாலும் நம் வீட்டுப் செல்லப் பிராணிகளைப் பாதுகாப் பாகவும் ஆரோக்கியமாகவும் போனுவது நம் கடமையாகும்.

உங்கள் இனிய நண்பனை, உடன்பிறப்பை சந்தோஷமாக வைத்திருப்பதற்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சில குளிர்கால கவனிப்புக் குறிப்புக்கள் சிறப்பாக உதவலாம் என நம்புகிறேன்.

முதலில் சீதோஷணத்தின் அளவைப் பார்க்கலாம். உதாரணத்துக்கு ஒரு மனிதனை எந்த ஆடைகளும் இன்றி, காற்று மணித்தியாலத்துக்கு 20km வீசும் கடுங்குளிர் நேரத்தில் வெளியே போய் நிற்கச் சொன்னால் எப்படி இருக்கும்? அதே நிலைதான் கூடுதலான நாய்களுக்கும் இருக்கும். எல்லாஇன நாய்களுக்கும் அடர்ந்த ரோமம் இருப்பதில்லை. இவ்வளவு ஏன்? சில நாய்களுக்கு உரோமம் என்பதே கிடையாது. இம்மாதிரி நாய்களுக்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட குளிர் மேல் அங்கிகள் வீட்டுப் பிராணிகளுக்காகவே இயங்கி வரும் அத்தியாவசியப் பொருட்களை விற்கும் கடைகளில் கிடைக்கும். இவற்றை வாங்கி வைத்து, நாய்களை வெளியே நாம் அழைத்துப்போகும் தறுவாயில் அவற்றை நிச்சயம் பயன்படுத்தவேண்டும். ஒரு குளிர் கால நாளில், நாம் வாசற் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு குளிர்கிறது என உணர்ந்தால் அதே உணர்வைத்தான் நாய்களும் அனுபவிக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

அடுத்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது - நாயின் பாதப் பகுதிகளாகும். நாய்கள் வெறுங் கால்களுடனே உறைபனி, உப்பு, தண்ணீர், பனி உருகும்போது ஏற்படுகின்ற திண்மத் திரவ நிலை போன்றவற்றில் நடக்கின்றன. இதன்மூலம் ஒரு நாய் வருடத்தில் ஒரு முறையாவது தன் பாதங்களைக் காயப்படுத்திக் கொள்ளும் அபாயம் உள்ளது. நாம் உறைபனி கரைவதற்காகத் தூவும் உப்பில் இரசாயனப் பொருட்கள் மிதமாக உள்ளன. இவை நாயின் பாதங்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடியவை. இந்த நாய்களின் பாதத்திற்கென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கால் உறைகள் கடைகளில் விற்கப்படுகின்றன. இவற்றை நாய்களின் கால்களில் அணிந்துகொண்டால், பார்க்க கொஞ்சம் விநோதமாகத்தான் இருக்கும். ஆனால், காயங்கள், குளிர்தரும் அவஸ்தைகள் போன்றவற்றிலிருந்து பாதங்களை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனாலும் ஒரு கடினம் என்னவெனில் நாய்கள் தாங்களாகவே இந்த கால் உறைகளைக் கழற்றிப் போட்டு விடலாம். அல்லது இவ்வுறைகள் தாமாகவே கால்களை விட்டு நழுவிவிடுவதும் உண்டு. இதற்கு ஒரு உத்தி உள்ளது. அதாவது சிறு குழந்தைகள் பாவிக்கும் கையுறைகள் தொலைந்துவிடாமல் ஜோடியாக வைத்திருக்க, கடைகளில் ஒரு நாடா இரண்டு பக்கங்களிலும் பிடிக் கொக்கிகளுடன் கூடியதாக விற்கப்படுகின்றது. அதை வாங்கி இருபுறமும் கையுறைகளை ஆளுக்



கொன்றாக கொழுவிவிட்டால் தொலைந்து போகாது. நாயின் பின்புறக் கால்களில் இரு பாத உறைகளை மாட்டிவிட்டு, பின் வெளிப்புறக் கால்களிலுள்ள காலுறைப் பகுதிகளில் பக்கத்துக்கு ஒன்றாக இம்மாதிரி நாடாக்களைப் பயன்படுத்தி, முதுகின் இடையின் மேலாகக் கொண்டுவந்து பொருத்திவிட்டால் உறைகள் நழுவிவிழ வாய்ப்பில்லை. இவை இழுபடக் கூடிய நாடாக்கள் என்பதால், நாய்கள் இதில் அசௌகரியத்தை அனுபவிப்பதில்லை. அழகிய, பூப்போட்ட விதவித வடிவங்களில் உள்ள காலுறைகளைத் தேர்ந்தெடுக்காமல் மிகவும் எளிமையும் சாதாரண அமைப்பும் கொண்ட கால் உறைகளையே உங்கள் நாய்க்குத் தெரிவு செய்யுங்கள்.

ஒவ்வோர் முறையும் உங்கள் நாய் வீட்டுக்குள் நுழையும்பொழுதும், அதன் பாதங்களைத் தண்ணீரால் நன்றாகக் கழுவி, நாய்களுக்கென்று தனிப்பட வைத்திருக்கும் துவாலையால் பாதங்களை நன்றாக நீர் போகத் துடையுங்கள். பாத இடுக்குகளை ஆராய்ந்து கவனமாகக் கழுவிவிட வேண்டும். நாய்களின் பாதக் குளம்புகள் வெடிக்காமலிருக்க இரண்டு நாட்களுக்கொரு முறை இவற்றிற்கென்ற பிரத்தியேகமாக விற்கப்படும் விசேடமான களிகளை வாங்கி தடவிவரவேண்டும். குளம்புகள் குளிரின் உக்கிரம் தாளாமல் வெடித்துவிடும் வாய்ப்புகள் உண்டு. இவை தாளாத வேதனையை நாய்களின் கால்களுக்குத் தருவதோடு, அதில் இருந்து வடியும் இரத்தம் நம் வீட்டையே பாழாக்கிவிடும் அபாயமும் உள்ளது. உங்கள் நாய் உங்கள் வீட்டுச் சுற்றுப்புறத்தில் அதிகமாக புழங்கும் இடங்களில், கூடுமானவரை உப்பு போன்றவற்றை உபயோகிப்பதை அறவே தவிர்க்கப் பாருங்கள். அல்லது அம்மாதிரி இடங்களில் அவை அடிக்கடி போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால், உப்பைத் தூவாமல் இருந்தால் நீங்கள் விழுந்து கை, கால்களை முறித்துக்கொண்டு விடுவீர்கள். இரண்டையும் கருத்தில்கொண்டு சமயோசிதமாக செயல்படுங்கள்.

உறைபனி கடுமையாகக் கொட்டிக் கிடக்கும் நாட்களில் பனியானது நாலைந்து அடி உயரத்திற்கு மேட்டு நிற்கும். இதில் அபாயங்கள் உண்டு. பக்கத்து வீடுகளில் வேலிகள், சிறு மதில்கள் ஓரமாக மண்டிக் கிடக்கும் உறைபனியை உடனடியாக அப்புறப்படுத்துங்கள். ஏனெனில், நாய்களுக்கு வேலிதாண்டித் தொலைந்து போக நேரமாகாது. இந்த உறைபனி அகற்றப்படாமலே இருந்தால் இதில் இன்னொரு அபாயமும் உண்டு. பனி கொட்டியிருந்தாலும் மிகவும் மிருதுவாக இருக்கும். இதற்குள் ஏறுவதற்கு முயன்று, எதிர்பாராமல் நாய்கள் உள்ளே விழுந்து புதைந்து போகும் அபாயமும் உண்டு. எனவே, நாய்களை எப்பொழுது வெளியே விட்டாலும் அவற்றின் மேல் தீர்க்கமாக ஒரு கணணும் வைத்துக்கொள்ளுங்கள். அதேபோல், உங்களையும் வெளியே வரக்கூடிய மாதிரி தயார் நிலையில் வைத்துக்கொள்ளுங்கள். அவைகளுக்கு ஏதும் ஒன்று நிகழ்ந்து விட்டால், அவற்றைக் காப்பாற்ற நீங்கள் ஓடி வர வேண்டாமா? அதற்காகத்தான் இந்த முன்னேற்பாடு.

உறைபனி தரும் இன்னோர் அபாயம் என்ன தெரியுமா? உறைபனியானது கொட்டும் காலங்களில் வீட்டின் மேற்கூரைகளில் கெட்டியாகத் தங்கிவிடும். இவை இளவெயில் மெதுவாக எட்டிப் பார்க்கும் வேளைகளில் தன்னிச்சையாக கரையத் தொடங்கும். எதிர்பாரா ஒரு வேளையில் முழு உறைபனியும் திண்மமாகவே தரைநோக்கி விழும் அபாயங்கள் நிறையவே உண்டு. இது வெளியில் நடமாடும் எந்த ஒரு உயிரினத்தின் மேலும் விழுந்து விபத்தை ஏற்படுத்த வல்லது. இதையும் மனதில் நாம் கொண்டு எப்படி நம் வீட்டு செல்லப் பிராணிகளைப் பாதுகாக்கலாம் என்பதை நாம் ஆராய்தல் நலம். நாய்கள் பதுங்கக்கூடிய இடங்களிலும் கூட பனி வெகுவாக இருப்பின், அவற்றை அகற்றிவிடப் பாருங்கள். ஆனால், அது இயலாதபட்சத்தில், பிராணிகளை அப்பகுதிகளில் நடமாடாதவாறு பார்த்துக்கொள்ளல் மிக அவசியம். அல்லது ஏதாவது தடுப்புக்களை அமைத்து, நாய்கள் அம்மாதிரி இடங்களை அண்டாதவாறு பார்த்துக்கொள்ளலாம். தடுப்புக்களை குளிர்காலம் ஓயும் வரை அப்படியே அகற்றாமல் வைத்திருப்பது நல்லது.

நம் வீட்டு வாகனம் நிறுத்தும் சிறிய வெளி அறையில் (கராஜ்) நாம் வண்ணப் பூச்சு நிறைந்த வாளிகள், நம் வாகனப் பராமரிப்புக்கான எண்ணெய் வகைகள், மற்றும் வேறு இரசாயனக் கலவைகள் போன்றவற்றை வைப்பதுண்டு. இம்மாதிரிக் குடுவைகளின் பக்கம் நாய்களைச் செல்ல விடாதீர்கள். ஒரு துளிபோல இவற்றை நாய்கள் சுவைத்தாலும் மரணத்தை அவை தழுவிக் கொள்ள வாய்ப்பு உண்டு. அவைகளை பிராணிகளின் வாய்க்கும், மூக்குக்கும் எட்டாத வகையில் அவற்றை ஒழுங்குபடுத்தி வைத்தல் மிக அவசியம்.

குளிர்காலங்களில், நாய்கள் கூடுமானவரை குறைந்த அளவு உணவை உண்ணுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். குண்டாக இருக்கும் நாய்களுக்கு குளிர்காலங்களில் நெஞ்சில் அழுக்கம் ஏற்படுவதுண்டு. இவ்வளவு கவனத்தையும் உங்கள் நாயின் மேல் பிரயோகித்தாலே போதும்; குளிரை எளிதாக வெல்லலாம்!

■ ■ ■


Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# வீட்டை விற்க எவ்வளவு காலம் எடுக்கும்



அலன்
சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

நாம் ஒரு வீட்டை சந்தையில் விற்கப் போட்டால் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. சில காரணங்கள் எமது கட்டுப்பாட்டில் இல்லாது இருக்கலாம். அதாவது சந்தையின் வீழ்ச்சி, Mortgage Interest, வேலைத் தட்டுப்பாடு என்னும் சில காரணங்கள் இருக்கலாம். இப்படியான காரணங்கள் எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் எமது கட்டுப்பாட்டில் உள்ள சில காரணங்களைக் கவனத்தில் எடுப்பதன் மூலம் அக் காரணங்களை ஓரளவிற்கு என்றாலும் சரி செய்து கொள்ள முடியும்.

## எந்தக் காலத்தில் நாம் விற்கப் போடுகின்றோம்.

வருடத்தில் சில மாதங்களில் மக்கள் அதிகம் வீடு தேடுவது குறைவாக இருக்கும். உதாரணமாக நத்தார் பண்டிகை நேரத்தில் அனேகமானோர் அதைக் கொண்டாடும் நோக்கத்தில் தான் இருப்பார்கள். அந்த நேரத்தில் நாம் வீட்டை விற்கப் போடும் போது, அதிக மக்களின் கவனத்திற்கு கொண்டுவர முடியாது இருக்கும். அதனால் வீடு விற்பதற்கு நாட்கள் எடுக்கலாம். அதே நேரத்தில் உங்களது வீட்டைச் சரியான நேரத்தில், காலநிலையும் நாட்டின் பொருளாதார நிலையும் சரியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் விற்கப்போடுவதால் வீட்டை விரைவாக விற்பதற்கு உதவியாக இருக்கும்.

## Competition

நாம் வீட்டை விற்கப் போடும்போது சந்தையில் விற்கப் போட்டுள்ள வீடுகளின் விலைகள் அத்துடன் அந்த வீட்டின் condition களை ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு விலையைப் போட்டால் வீடு விரைவாக விற்கப்படலாம். காரணம் வீடு விற்பவர்கள் தங்களிடம் உள்ள பெரிய சேமிப்பை வீட்டில் போடுவதால், அவர்கள் பல வீடுகளைப் பார்த்து அவற்றில் உள்ள நல்லது, கூடாதவற்றை ஆராய்ந்த பின் தான் வீட்டை வாங்குவதற்குத் தீர்மானிப்பார்கள். அப்படியான சந்தர்ப்பத்தில் எமது வீடு எவ்வளவிற்குப் போட்டியாக சந்தையில் இருக்கின்றது என்பது முக்கியமாகும்.

## என்ன விலைக்கு வீடு விற்பதற்குப் போடப்பட்டுள்ளது.

நாம் ஒரு வீட்டை விற்கப் போடும்போது அதை என்ன விலைக்குப் போடுகின்றோம் என்பது முக்கியமாகும். எமது வீட்டை ஒத்த வீடுகள் என்ன விலைக்கு விற்கப்பட்டுள்ளது. அத்துடன் என்ன விலைக்கு விற்பதற்கு உள்ளது என்பதும் முக்கியமாகும். நாம் எமது வீட்டிற்கு அதிக பணத்தைச் செலுத்தி வீட்டை அழகு செய்த பின்பு, செலவு செய்த முழுப் பணத்தையோ அல்லது அதிக பணத்தையோ எதிர்பார்க்க முடியாது. காரணம் நாம் எவ்வளவு பணத்தைச் செலவழித்தாலும். சந்தையில் உள்ள விலையைவிட அதிகமாக வாங்குபவர்கள் செலுத்துவது குறைவாகும். ஆனால் உங்களது வீட்டை இலகுவாகவும் விரைவாகவும் விற்பதற்கு உதவியாக இருக்கும். நாம் வீட்டை அழகுபடுத்துவது எம்மைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஒழிய மற்றவர்களை அல்ல. காரணம் எமக்குப் பிடித்த designs எல்லோருக்கும் பிடிக்கும் எனக் கருத முடியாது.

## The Property

சில வேளைகளில் வீடு விற்பவர்கள், வீடு வாங்குபவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை மறந்து விடுவது வழக்கம். நாம் வீட்டை விற்கும்போது நாம் அதை வந்து பார்ப்பவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு வைத்திருக்க வேண்டியது அவசியம். உதாரணமாக நாம் ஒரு ஐநூறு டொலர்களைச் செலவழித்து Paint அடிப்பதால் நாம் எமது வீட்டை அழகுபடுத்துவது மட்டும் அல்லமல் அந்த ஐநூறு டொலர்கள் உங்களது வீட்டின் விலையை ஆயிரம் டொலர்களால் அதிகரிக்கச் செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆனால் நாம் அனேகர் விருப்பப்படும் நிறத்தில் Paint அடிப்பது அவசியமாகும். சில வேளைகளில் எம்மால் முற்பணத்தைக் கொடுத்து நாம் விற்கும் வீட்டை திருத்தவோ அல்லது அழகுபடுத்தவோ முடியாவிட்டால், பணத்தைக் குறைத்து வீட்டை விற்கப் போடுவது சாலவும் சிறந்தது.

## Financing

வீட்டை நாம் சரியான விலைக்குப் போட்டாலும், அந்த வீட்டை விரும்புபவர்கள் Mortgage எடுப்பதற்கு தகுதி உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். பலர் வீடு வாங்க விரும்பினாலும் எல்லோராலும் வீட்டை வாங்குவதற்கு வசதி ஏற்படுவதில்லை. ஆகவே நாட்டின் பொருளாதாரம், வீடு வாங்குபவரின் Credit இன் நிலைமை என்பவை முக்கியமாக அடங்கும். ஆகவே இதன் காரணத்தாலும் விற்பதற்கு நாட்கள் எடுக்கலாம். ஆகவே ஒரு வீடு விரைவாக விற்கப்பட வேண்டுமானால் அந்த வீட்டிற்கான Marketing, சரியான விற்கும் விலை, வீட்டின் பராமரிப்பு, வீடு வாங்குபவர்களின் Financial (Situation), அந்த நேரத்தில் உள்ள நாட்டின் பொருளாதார நிலைமை என்பவை எமது வீடு எவ்வளவு காலத்தில் விற்கப்படும் என்பதை நிர்ணயிக்கும்.

## Professional Stager ஐ வைத்து வீட்டை அழகுபடுத்தினால் வீட்டை இலகுவாக விற்க முடியுமா எனப் பார்ப்போம்.

தற்போது Staging என்பது ஒரு பிரசித்தி பெற்ற ஒரு செயற்பாடாக அமைகின்றது. Staging என்பது வீட்டில் உள்ள தளபாடங்களை சரியானஇடத்தில் வைத்தும், தேவையில்லாத பொருட்களை அப்புறப்படுத்தி அந்த வீட்டை வாங்குபவர்களுக்கு ஒரு Emotional attach வரக்கூடியதாகச் செய்வதாகும். அத்துடன் Stagers உங்களுக்கு என்ன நிறத்தில் Paint அடித்தால் அது உங்களிடம் உள்ள தளபாடங்களோடு ஒத்துப் போவது மட்டும் அல்லாமல், அது வாங்குபவர்களுக்கு ஒரு attention ஐக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

■ ■ ■


வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!
416-400-6406

வீடு வாங்க விற்க



Sutton

Alen Sivasambu
Sales Representative
Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617



alen@sutton.com

மூலிகை வைத்தியம்
Herbal Treatment

கனடாவில் 14 வருடங்களுக்கு மேலாக மூலிகை வைத்தியம் செய்யும் ஒரேயொரு மூத்த வைத்திய நிபுணர்

தேங்காயில் நேரடியாக கொலஸ்ரோல் இல்லை என்று ஆய்வு செய்து கனடாவில் நிரூபித்த டாக்டர்



நீண்டநாள் வியாதிகள், பிடிவாதமான நோய்கள், ஆய்வுகளில் புலப்படாத நோய்கள் இன்னதென்று கண்டு பிடிக்கப்படாமல் கைவிடப்பட்ட நோய்கள்

- ஆலோர்ஜிஸ்
- குழந்தைகளின் கிரந்தி
- தோல் வியாதிகள்
- ஆண்மைக்குறைபாடுகள்
- மாதவிடாய் கோளாறுகள்
- கை, கால், கழுத்து, நரம்பு வியாதிகள்
- இடுப்பில் இருந்து குதிக்கால் வரையும் பாயும் நரம்பு வலிகள்
- முள்ளந்தண்டு 4ம் 5ம் விலகல்
- தலை மயிரில் புழு வெட்டுதல்

- Head aches + Migraine
- Allergies
- Skin Diseases
- Male Difficulties
- Menses Problem
- Nervous Disorders
- Sciatica
- Carpal Syndrome (Wrist)
- Pinch Nerve
- Twisted Nerve Nerve in hand & Legs
- Prolapsed disc 4 & 5

இங்குள்ள வைத்திய முறைகளால் உங்கள் வியாதி குணமடையவில்லையா?... இனி என்ன செய்வது!! இலங்கைக்குப் போவோமா? இந்தியாவுக்குப் போவோமா? என்று ஏங்கும் நோயாளிகள் ஒரு தடவை மட்டும் தொலைபேசியில் அழையுங்கள். பல மன உழைச்சல்களும் கவலையும் தீரும்

முன்பதிவு மட்டும் (By Appointment only)
Tel: 905-209-9464

கீதவாணிவானொலி, செந்தாமரை, உதயன், உலகத்தமிழர் பத்திரிகைகள் மற்றும் மருத்துவம் சஞ்சிகை புகழ்

Dr. N. M. குமார் Prd. MBBS, CNHP ( Canada)

Health Card not covered மருத்துவ அட்டை செல்லுபடியாகாது




McCowan & Eglinton
2 Bed Room, 2 Full Wash Room,

வீடு வாங்க விற்க அல்லது அது
சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

Tel: 416-843-8585
Bus: 416-290-1200



**Kuga Raveendrarajah**
**Broker**



"சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு"




Victoria park & Eglinton
3 Bed Room, 2 Wash Room,

Century 21
Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.


தமிழர் மத்தியில் புதிய நிறுவனம்

# QUICKFENCE

PARTY RENTALS & SALES

**24/7 Days a Week**

Birthdays|Weddings|Meetings|BBQ Parties|Trade Shows|Musical Events|Sport Events|Get to gether


Temporary Chainlink Fences


Event Barricades


Generators


BBQ Machines

We add more products to our inventory!!! Please visit our website!!! or Call Us for Quote!!!


Folding Chair $1.00



Party Chair $2.00


Meeting Chair $3.50


Office Chair $4.50


Folding Table $7.00



Round Table $8.00




3 UPTON ROAD SCARBOROUGH ON.
WWW.QUICKFENCE.CA - info@quickfence.ca
TEL: 416 759 8222 FAX: 416 642 4922


UT AUTO TECH
General Repair & Tire Change
• செய் நேர்த்தி • நம்பிக்கை • உத்தரவாதம்
• Oil Change
• Driver Shaft
• Upper Control
• Ball Joint
• Time Belt Pakage
• Brakes
• Fast Tire Change & Wheel Balancing
New & Used Tire SALE!!
உங்கள் பழைய வாகனங்களை புதிய வாகன மிடுக்கோடு தருகிறோம்.
இயந்திரம் மற்றும் வாகன உற்புற சாம்பூ
Engine $34.99
Interior from $79.99
Engine & Interior Shampoo
Oil Change $24.99
jayacs ad • 416•275•0070
சகல வாகன திருத்த வேலைகளுக்கும் மற்றும் Body Works களுக்கும் அழையுங்கள்
Call
Uthayan or Babu
Off: 905•910•0148
416•931•1890
166 Bullock Drive Unit #30
(McCowan/ HWY 7)
Markham, ON.
N
MCCowan Rd.
Bullock Dr.
HWY 7
Markham Rd.

# வீட்டில் நிம்மதி



பாலா
இராஜேந்திரன்

‘எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம்வேண்டும்’! இது ஒரு சினிமாப் பாடல்வரி. ஆனால், இன்று அநேகமானோர் இதே நியைில்தான் இருக்கிறார்கள். வேலை, பிள்ளை பராமரித்தல், வீட்டு மோட்கேஜ், வருத்தங்கள், உற்றார் உறவினர்கள் பிரச்சினை, பணப் பற்றாக்குறை, வேலை இல்லாமை, இப்படிப் பல பிரச்சினைகள். இவற்றைத் தீர்ப்பதற்குள் புதிய பிரச்சினைகள் ஆரம்பமாகிவிடும். வேலைத் தளத்திலோ, வீட்டிலோ பிரச்சினையானால் உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி, பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். மேலும் பொறுமை, விட்டுக்கொடுத்தல், என்ற இரு முக்கிய விடயத்தை மனதில் வைத்துக்கொண்டு பேசவேண்டும். வரட்டுக் கௌரவம், பிடிவாதம், கோபம், பேச்சைச் சுமுகமாக முடிக்க விடாது.

அடுத்து, பணப் பிரச்சினை. செலவைக் குறைத்து வருவாயை அதிகரிக்கச்செய்ய வேண்டும். அனாவசியச் செலவுகளையும், அவசியமற்ற செலவுகளையும் தவிர்க்கலாம். ஒரு பொருளை வாங்குமுன் வீட்டில் உள்ளவர்களுடன் யோசித்து, அந்தப் பொருள் அவசியம் என்றால் மட்டுமே வாங்குங்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். பிறந்த நாள் விழா, கல்யாண நாள் முதலியனவற்றை வீட்டில் நெருங்கிய உறவினர், நண்பர்களுடன் சிக்கனமாக - ஆனால் மகிழ்வாகக் கொண்டாடலாம். பெரிய அளவில் கொண்டாட வேண்டியதில்லை. பிறருடன் போட்டி போட்டு விலை உயர்ந்த தளபாடங்கள், மற்றும் பொருட்கள் வாங்காதீர்கள்.

விரலுக்கேற்ற வீக்கம் என்பதுபோல் எம் வரவுக்குள் செலவு இருக்கவேண்டும். கடன் பட்டு, ஆடம்பரச் செலவு செய்யவோ ஆடம்பரப் பொருட்கள் வாங்கவோ கூடாது. நோய்வாய்ப்பட்டால் உடனே டாக்டரைப் போய்ப் பார்த்து வேண்டிய சிகிச்சை உடனே செய்ய வேண்டும். சிகிச்சையை என்ன காரணம் கொண்டும் பின்போடக்கூடாது. வேலைத் தளத்தில் விடுப்புத் தரமறுத்தால் அவர்களுக்கு எமது நோயின் தன்மையை விளக்கி. அதன் அவசியத்தையும் அவசரத்தையும் அறிந்தால் விடுப்புத் தரச் சம்மதிப்பார்க்ள. சிகிச்சையைப் பின்போட்டால் அந்த நோய் முற்றி உங்கள் உயிருக்கு ஆபத்தாகவும் முடியலாம்.

நீங்கள் வீடு வாங்கினால் வீட்டு மோட்கேஜ் கட்டுவதை என்ன காரணத்துக்காகவும் நிறுத்தாதீர்கள். இதற்கான காப்புறுதிகள் உண்டு. அதாவது நீங்கள் வேலையில்லாமல் வீட்டில் இருக்கும்போது மோட்கேஜ் தவணைப் பணத்தை உங்களுடைய காப்புறுதியிலிருந்து கட்டலாம். எனவே வேலையில்லாத நேரங்களிலும் நல்ல உடல் நலம் இல்லாத நேரங்களிலும் மோட்கேஜ் பணம் கட்ட முடியவில்லையென்று பயப்படத் தேவையில்லை.

உடல்நலம் இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம். எனவேதான் ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்று கூறுகிறார்கள். நீங்கள் கோடீஸ்வரராயிருந்தாலும் நீங்கள் விரும்பிய உணவை உட்கொள்ள முடியவில்லையாயின் உங்களுக்கு உங்கள் செல்வத்தால் ஏது பயன்? நீங்கள் தினமும் அரை மணி நேரம் தேகாப்பியாசம் செய்து இரண்டு மூன்று மைல்கள் நடந்தால் உங்களுக்கு எத்தனையோ நோய்கள் வராது தடுக்கலாம். தேகாப்பியாசம் செய்ய முடியாதவர்கள் தினமும் குனிந்து நிமிர்ந்து நன்றாக வேலைசெய்ய வேண்டும். சிறிய தூரத்துக்குப் போக வர வாகனங்களை உபயோகிக்காதீர்கள். நடந்தே போய்வாருங்கள்.

இதைவிட வீட்டில்இருக்கும்போது மனதிற்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் தரவல்ல சில விடயங்களில் நாம் கவனம் செலுத்தினால் எமக்கு மேலும் அதிக மன அமைதி கிடைக்கும். வீட்டிலேயே மரம், செடிகளை வளர்க்கலாம். கனடா போன்ற நாடுகளில் பனிக்காலத்தில் வீட்டினுள்ளே மரம் செடிகளை வளர்க்கலாம். மரம் செடிகள் நன்றாகச் செழித்து வளர்வதையும் அவை பூத்து, காய்த்து இருப்பதையும் பார்ப்பதே மனதிற்கு மகிழ்ச்சியாகும். வீட்டிற்குள் பூத்திருக்கும் பூக்களிலிருந்து கம கம என்று நறுமணம் வரும்போது அதுவும் மனதிற்கு மகிழ்ச்சியே.

மன அமைதிக்காகவும் நிம்மதி கிடைக்கவும் மக்கள், பூங்காக்களுக்கும் ஆற்றங்கரைக்கும் குளக்கரைக்கும் கடற்கரைக்கும நீர்வீழ்ச்சி போன்ற இடங்களுக்கும் செல்கின்றனர். இதே பூங்காவையும், மீன்கள் நீந்தி விளையாடும் தொட்டி, சிறிய அளவான நீர் வீழ்ச்சியையும் வீட்டில் அமைத்தால் எப்படி இருக்கும்! ஒரு செயற்கை நீர்வீழ்ச்சியை - இரண்டடி நீளம், இரண்டடி அகலத்தில் இருந்தாலே போதும். நீரானது மேட்டிலிருந்து கீழேஉள்ள குளம் அல்லது ஆறுபோன்ற பகுதியில் விழுந்து, மீண்டும் ஒரு சுழற்சி மூலம் மேலே எடுக்கப்பட்டு மீண்டும் கீழே விழும்வகையில் அமைத்தால் உண்மையில் ஒரு நீர் வீழ்ச்சிக்குப் பக்கத்தில் நிற்பது போன்ற ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கும். இரவு நேரங்களில் ஒரு Focus light உடன் இரண்டு மூன்று குரோட்டன் செடிகளைச் சாடியுடன் Fountain முன் வைத்தால் Focus light மேலிருந்து ஒளிவீசும். குரோட்டன் செடிகளுக்கூடாகப் பார்க்கும்போது தத்ரூபமாக நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதுபோல் தோன்றும். வீட்டில் எந்நேரமும் மெல்லிய வாத்திய இசை இசைத்துக் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். பக்திப் பாடலாகவோ, தமிழ் எழுச்சிப் பாடல்களாகவோ அல்லது நல்ல தத்துவ சினிமாப் படைப்புகளாகவும் இருக்கலாம். மெல்லிய இசை மனதில் மிக ரம்மியமாக இருக்கும். அத்துடன் உங்கள் அன்றாட வேலைகளைச் செய்ய இது இடையூறாகவும் இராது. நீங்கள் தொலைபேசியில் பேசும்போதும், பத்திரிகை வாசிக்கும் போதும் வீட்டில் உள்ளவர்களுடன் வேலைசெய்யும்போதும் இடையூறாக இராது.

மற்றது, சமய, சமூக சொற்பொழிவுகளை வீட்டில் ஓய்வாக இருக்கும்போது அரை மணி நேரமாவது கேட்கலாம். சாப்பாட்டு நேரமோ அல்லது வீட்டைத் துப்பரவு செய்யும்போதோ சமையல் செய்யும்போதோ கேட்கலாம். இதனால் மனம் நிம்மதி அடைகிறது. புதிய விடயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்து மூச்சுப்பயிற்சி, யோகாப்பியாசம், தேகாப்பியாசம், 2, 3 மைல் தூரம் வேகமாக நடத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்வதால் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

வீட்டில் நன்றாகப் பாடக்கூடியவர்கள். வாத்தியம் இசைக்கக் கூடியவர்களாக இருந்தால் அவர்களைப் பாடச்சொல்லி, அல்லது வாத்தியங்களை வாசிக்கச் சொல்லி அவற்றைக் கேட்டு மகிழலாம்.

மனதுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய நல்ல புத்தகங்களை வாசிக்கலாம்.

மேலே கூறிய யாவும் மனதிற்கு நிம்மதியைத் தரக்கூடியன. உங்களால் இயன்றவற்றைச்செய்து மன நிம்மதியுடன் வாழுங்கள்.

மன நிம்மதியைத் தேடி வெகுதூரம் செல்லத் தேவையில்லை. உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவுவது, ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு, உடை, படிப்பு வழங்க ஏற்பாடு செய்தல், அகதியாகச் சொந்த மண்ணிலேயே மரத்தடியிலும் தெருவோரமாகவும் சீவிக்கும் குடும்பங்களுக்கு எம்மால் இயன்ற உதவியைச் செய்வது, உங்கள் பிள்ளைகளின் பிறந்த நாள் நினைவாக படிக்கக்கூடிய ஆனால் பண வசதி இல்லாமல் கஸ்டப்படும் மாணவர்களுக்கு அவர்கள் படிப்பைத் தொடர உதவுதல், விதவைப் பெண்களுக்கும் சிறு தொழில் தொடங்க ஆர்வமாயுள்ளவர்களுக்கும் சிறு தொழில் தொடங்க வேண்டிய நிதி உதவி, வழி நடத்தல் முதலியன ஏற்பாடு செய்தல்; கல்யாணம், ஆண்டு விழா, மஞ்சள் நீராட்டு விழா, அரங்கேற்றம் போன்ற ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து மிகுதியாக வரும் பணத்தில் உங்கள் ஊரில் உள்ள உங்கள் தாய் தந்தையர் பெயரில் அனாதை இல்லம், தொழிற் கல்வி புகட்டல் (தையல், தட்டச்சு, சுருக்கெழுத்து) கணனி, ஆங்கிலம், வர்த்தகம், புக்கீப்பிங், கைவேலைப் பாடங்கள் (Handicraft class) முதானவற்றை உங்கள் ஊரில் உங்கள் உறவினர், நண்பர்கள், தெரிந்தவர்கள் மூலம் ஏற்பாடு செய்யலாம். இவ்விதமான சிறந்த சேவை மனதுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

■ ■ ■

ELROD
Renovation
- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tiling
- Electrical
- Plumbing
- Separate entrance
- Full basement

Over 12 years of experience

For free estimate and consultation contact
Prem @ 416-712-1016

Logos
Flyers
Businesscards
Brochures
Cover Designs
Banners/ Posters
Vinyl Signs
Religious Program Recording/Mixing
Radio Commercials
Tamil Karaoke Songs
Tape to CD Transfers
CD Albums
Voice Dubbing & Re-recordings
Audio Mixing & Mastering
Video Commercials
Logo Animation
Short Films
HD Movie Production
"Connecting your voice to media"
STS ADVERTISING
416 640 5445
stsads@gmail.com

# மகப்பேறும் மன உளைச்சல் எனும்
# இரட்டைப் பிரசவ வேதனையும்



பார்வதி கந்தசாமி

மன உளைச்சல் ஐந்து பேரில் இருவருக்கு ஏற்படுவதாக வட அமெரிக்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மன உளைச்சல் புதிய குடிவரவாளரில் பலருக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. வேலை இல்லாத பிரச்சனை, புதிய நாட்டில் முகங்கொடுக்கும் இசைவாக்கப் பிரச்சனைகளில் இனத்துவேசக் கொடுமையும், குடும்ப வன்முறை, குடும்பங்களில் ஆதரவு கொடுப்பதற்கு யாரும் இல்லாத நிலை, யுத்த, சுனாமி இழப்புக்களின்பின் ஏற்படும் கொடுந்துயரச் சுமை போன்றனவும் காரணங்களாகின்றன.

மன உளைச்சல் பணக்காரர் ஏழை என்ற வேறுபாடின்றிக் குடிகொள்ளும். "மனத்தை விட்டிட்டார்" என்று கூறும்போது ஆழ்ந்த மன உளைச்சலை மக்கள் அநுமானிக்கின்றனர் எனலாம். பென்சில் களவெடுத்தது என பிடிபட்ட இளம் தமிழ் மகன்கூட மன உளைச்சலுக்கு இலக்காகித் தற்கொலை செய்து கொண்டமை பல வருடங்களிற்கு முன்னர் ரொறன்ரோவில் நடைபெற்றது. பாயும் புகையிரதத்திலும், வானளாவிய மாடங்களிலிருந்தும் விழுந்தும், கழுத்தில் சுருக்கிட்டும் தம்மை வில்லங்கமாக அழித்துக் கொண்ட தமிழ் மக்கள் வரலாறு கனடிய வரலாற்றில் இரத்தக் கறைகளாகப் பதிக்கப்பட்டு வருகின்றது.

வழக்கமாக, காதலில் தோல்வியுற்றவர்கள், விவாகமாகாது சிசுவைச் சுமந்த விளைந்த வெட்கத்தால் பிரச்சனைகளுக்கு உள்ளாகியோர் போன்ற சிலர் தற்கொலை செய்வது தான் சமூகங்களில் நடைபெறும் தற்கொலைகளாக நாம் அறிந்து வந்தவை. மன உளைச்சல் ஏற்பட்டுத் தாமாகவே தம்மை அழித்துக் கொண்டவர்கள் தற்கொலை செய்து கொள்ள முன்னர், அவர்களிடம் சோகநிலை காணப்படும். சிலரிடம் மனம் தளர்ந்து போதல் தற்காலிக நிகழ்ச்சியாக இருக்கும். சிலருக்கு மனம் மிகத் தளரும் நிலை அவருடைய பரம்பரையிலிருந்து கூட கடத்தப்பட்டதாக இருக்கலாம். மனத் தளர்ச்சி சிறுகச் சிறுக ஆரம்பித்துச் சிலரை மிகவேகமாக அமுக்கி, எதுவும் செய்ய முடியாதவர்களாக ஆக்கிவிடும் நிலைக்குக் கொண்டு செல்லும்போது அவர்களது மூளையில் உள்ள இராசயனக் கலவையில் மாற்றங்கள் ஏற்படலாம். தற்காலிக மனத் தளர்ச்சி, வாழ்க்கையின் தோல்வி அநுபவங்களால் ஏற்படலாம். தன்னையே "தூற்றும்" மனநிலை ஏற்பட துக்கம், ஏமாற்றம், வெறுமை உணர்வுகளைச் சுமக்க நேரிடலாம். இது சிறிது காலத்தில் போய் விடும்.

### மகப்பேற்றின் பின் மன உளைச்சல் அறிகுறிகள்

மனஉளைச்சல் என்பது மேலே கூறிய மன நிலை மிகத் தீவிரமாக நீடிக்கும் நிலையாகும். வேலையைக் கூட இழக்க வைத்து விடும். இந்நிலையில் இந்த மன உளைச்சல் ஒரு நோயாக ஆகிவிடுகிறது. அறிகுறிகளை அவதானிக்கும் போது ஒருவரின் மனப்போக்கு, நடத்தைகள், அவரின் உடல் இயங்கும் தன்மை ஆகியவற்றை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

### மனஉளைச்சல் தீவிரமாக உள்ளவர்களின் அறிகுறிகள் சில.

- வழமைக்கு மாறாக உணவை மிகக் குறைவாகவோ கூடுதலாகவோ உண்ணல்
- நித்திரை இல்லாமல் அவதிப்படல்
- எந்த நேரமும் படுத்திருத்தல்
- சிந்தனை இல்லாமை
- தீர்மானம் எடுக்கச் சிரமம்படல்
- தாழ்வு மனம் கொள்ளல்
- வழமையாக செய்த எந்த செயலிலும் அக்கறையின்மை
- அளவுக்கு மிஞ்சிய சோகம்/கவலை
- தனிமைப்படுத்தல், அறையில் பூட்டியிருத்தல்
- பாலியலில் விருப்பமின்மை
- அளவுக்கு மீறிய குற்ற உணர்வு
- சக்தியற்றவர்களாக உணர்தல்
- களைப்புறுதல்
- இறப்பு பற்றி சிந்தனை/தற்கொலை எண்ணம்

இவை மன உளைச்சல் கொண்டோரின் பொதுவான அறிகுறிகள். மகப்பேற்றின் பின்னர் பெண்களில் பத்தில் ஒருவருக்கு மேலே கூறிய மன உளைச்சல் வருவது இயல்பு. இதனை மகப்பேற்றின் பின்னர் வரும் மன உளைச்சல் (post – partum Depression)என அழைப்பார்கள். இந்நோய் வருவதற்கு சரியாக இதுதான் காரணம் என்று கூறமுடியாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

குடும்பப் பிரச்சனைகள், புதிய மாற்றங்கள், பொருளாதார சுமைகள், தாயின் பரிவான பிள்ளைப்பேறு "பார்த்தல்" கிடைக்காத ஏக்கம், குழந்தையை ஒரு சுமையாக வயிற்றில் சிசு வளரும் போதில் இருந்தே எண்ணி வந்தமை, விரும்பாமலே குழந்தையை சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம், அடிக்கடி குழந்தையை பெறுவதால் அவர்களை பார்த்து எடுக்க முடியாத நிலை, அநாதரவான நிலை போன்றனவும், இழப்புக்களும் பிள்ளைப் பேறின் பின்னர் பெண்களுக்கு மன உளைச்சலைப் ஏற்படுத்தும்.

இது ஏறத்தாழ ஒரு வருடங்கள் தீவிரமாக இருக்கும். சிலருக்கு இரண்டு வருடங்கள் நீடிக்கலாம். இவர்களுக்கு குழந்தைக்குப் பால்கொடுப்பதே ஒரு சிரமமான தொழிலாக இருக்கும். (இங்கிலாந்தில் பிள்ளைக்கு பால் கொடுக்காது பயப்பிராந்தியாலும் மன உளைச்சலாலும் அலுமாரியில் ஒழித்திருந்த பெண்ணை கணவர் அடித்ததாக கூறினார்).

மகப்பேற்றின் பின்னர் ஏற்படும் மன உளைச்சல் குடும்ப வன்முறை, யுத்த வன்முறைக்கு உள்ளாகியோருக்கு வருவதற்கு சாத்தியம் உண்டு. பரம்பரையிலோ, தனக்கோ மகப்பேற்றின் பின்னான மன உளைச்சல் அல்லது மனநோய் வந்திருப்பினும் நோய் வர வாய்ப்பு உண்டு. குழந்தை கிடைக்காமல் இருக்கும் உடல் நிலை நீண்டகாலம் இருந்திருப்பினும், குழந்தை வயிற்றில் வளரும் போது கடுமையாக பாதிப்புக்களை தாய் அடைய நேரிடின், மகப்பேறு கடினமாயின் குழந்தைக்கு அதிகளவு கவனம் கொடுக்க வேண்டும் எனின், அண்மைய இழப்புக்கள், குறைமாத கருக் கலைவுகள், கோமோன்கள் உணர்ச்சி வசமானவையாயின், தீட்டுப் பிரச்சனையிருப்பின் மகப் பேற்றின் பின்வரும் மனஉளைச்சல் வரச்சாத்தியம் அதிகம்.

மகப்பேற்றின் பின்வரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியோரின் நோய் பலவிதமான அறிகுறிகள் கொண்டது. சிலர் அழுவார்கள், கண்ணீரும் கம்பலையுமாக இருப்பார்கள், சிலர் துக்கமாக இருப்பார்கள், கோபமும் எரிச்சலும் கொண்டவர்களாக இருப்பார்கள், களைப்பு மிகுதியுடனும் நித்திரையின்றியும் இருப்பார்கள், பசியில் மாற்றம் ஏற்படும், வழமைக்கு மாறாக ஆர்வம் அற்றிருப்பர், பாலியலில் விருப்பின்றி இருப்பர், பதட்டத்துடன் உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டவராக இருப்பர், குழந்தை பராமரிப்பு பற்றி ஐயங்கள் எழுபவராயிருப்பர், தாழ்வு மனப்பான்மை, குற்ற உணர்வு, வெட்கம் கொண்டவர்களாக இருப்பர், எல்லாமே பெரும் சுமை என்ற எண்ணம் கொண்டிருப்பர்.

### மகப்பேற்றின் பின் பதட்ட நிலைக் கோளாறு

> "பைத்தியங்கள் தான் மனநோய் வைத்தியரை நாடுவர்" என்ற தப்பெண்ணத்தைக் களைந்து எறிவோம். குடும்ப வைத்தியர் போல் மனநோய் வைத்தியரை அணுகுவோம். நல்லதொரு வளமான, நலமான சமூகத்தைக் கட்டி எழுப்ப உதவுவோம்.

மகப்பேற்றின் பின்னர்தான் கூடுதலாக அறிகுறிகள் தோன்றும். சிலருக்குத் தீவிரமாக ஒரு வருடமும் எடுக்கலாம். ஒரு வருடமாக தாய் சமாளித்துக் கொண்டிருக்கவும் கூடும். சிலருக்கு மகப்பேற்றின் பின் பதட்ட நிலை தோன்றும். இத்தகையோர் மிகுந்த பதட்டத்திற்கு உட்பட்டிருப்பர். செயலற்றவராக இருப்பர். இவர்களது பயமும், பயப் பிராந்தியும் மிக வேகமாக இயங்கும். உறங்கும் தேவை குறையும். எண்ண ஓட்டம் வேகமாக நடைபெறுவதால் நித்திரை கொள்ள முடியாமல் இருக்கும். தொண்டையுள் ஒரு கட்டி இருப்பதாக உணர்வர். சாப்பாடு உட்செல்லாது விக்கல் வருவதாக இருக்கும். விசராகப் போய் விடுமோ என்ற பயம் ஏற்படும். குழந்தையுடன் தனியாக இருப்பதில் பயம் ஏற்படும். இதன் ஆரம்பம் பிள்ளை பெற்றதும் ஏற்படலாம் - கற்ப காலத்திலும் ஏற்படலாம். இவ்வறிகுறிகள் மிகவேகமாக மோசமான நிலைக்கு சென்று பின்னடைவுகளை விளைவிக்கலாம்.

### மகப்பேற்றின் பின் தோன்றும் உணர்ச்சி மிகைக் கோளாறு (Nkdpah Mania)

சிலர் தாம் சொர்க்க உலகில் இருப்பது போலவும் கனவுலகில் சஞ்சரிப்பது போலவும் உணர்வார்கள். மகப்பேறு உலகில் உள்ள விடயங்களில் சுகமானது எனவும் உடனேயே இன்னொரு குழந்தை பெறலாம் எனவும் கூறுவர். அளவுக்கு மீறிய சக்தி உடையவர்களாக இருப்பர். பேசிக் கொண்டே இருப்பர். நித்திரையே கொள்ள தேவையில்லாத உணர்வடன் இருப்பர். இவர்களுக்குத் தம்மை "பைத்தியங்களாக" மற்றவர் எண்ணுவர் என்ற பயத்தினால் இதைப் பிறருக்குக் கூறமாட்டார்கள். தங்கள் பிள்ளைகளை குழந்தைக் காப்பு நிறுவனம் எடுத்து விடுவர் என எண்ணுவர். இது ஹோமோன்களின் வடிகால் ஆக்கம். அவர்கள் தங்கள் நிலைபற்றி நல்ல அறிவு இருக்கும்போது பயப்பட வேண்டியதில்லை. வைத்திய உதவியால் ஹோமோன்கள் சமப்படுத்தப்படும் என உதவி பெற வைத்தல் வேண்டும்.

### மகப்பேற்றுக்குப் பின்னான "விடாப்பிடி" எண்ணக் கோளாறு: (Obsessive compulsive Disorder)

இது மிகவும் கடினமான நோய். மீண்டும் மீண்டும் மனதில் விடாப்பிடியான எண்ணம் உதித்த வண்ணம் இருக்கும். விடாப்பிடி எண்ணம் அவர்கள் வாழ்வில் ஊடுருவலைச் செய்யும். ஆச்சரியத்தைத் தரும் எண்ணங்களாக இருக்கும். நம்ப முடியாதவையாக இருக்கும். குழந்தை நீரில் மூழ்குவதையும், குழந்தை மீது கத்தி இருப்பதையும், படிகளால் விழுந்து குழந்தை தலை சிதறுவதையும், பிள்ளை திக்குமுக்காடுவதையும் நேரடியாக, உண்மையாகத் தாம் பார்ப்பதாகக் கூறுவர். இது அவர்கள் எண்ணத்தில் ஏற்படுவதாகும். தவிர்த்துக் கொள்ளும் போக்கு இவர்களிடம் காணப்படும்.

- பிள்ளையை பிரதான வதிவிட அறையில் வைத்திருப்பர்.
- சமயலறைக்குள் வைத்திருப் பதைத் தவிர்ப்பர்.
- மிகையாகக் கையைக் கழுவுவார்கள், சுத்தம் செய்வார்கள்.

இவர்களுக்கும் குழந்தை பிறப்பின் பின் உடனடியாகவே தொடங்கும். வைத்திய சாலையில் அவதானிப்பது இலகு. எனினும் சில தாதிமார்கள் இதனை அனுமானிக்கத் தவறி விடுகின்றனர். இத்தாய்மார் சமாளிக்கின்றனர் எனநினைத்து விடுகின்றனர். இவர்களுக்கு உடனடி வைத்தியம் செய்யாவிடின் பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாகுவர்.

இவர்களது ஹோமோன் மாற்றத்தினால் இவ்வாறு நடைபெறுகிறது என்பதை அவர்களிடம் உறுதி செய்து அவர்கள் "பைத்தியங்கள்" அல்ல எனக் கூறவேண்டும்.

### மகப்பேற்றுப பின் பித்தலாட்டம் (Post Partum psychosis)

இந்நோய் மிகவும் பாரதூரமானது. மார்க்கம் நகரில் இரு குழந்தைகளைக் கொன்று தன்னையும் கொல்ல முயன்று தோல்வி கண்ட பெண்ணும் இந்நோயினால் பீடித்திருக்க வேண்டும். இளங்கோ அன்டிரியா யேற் என்ற பெண் 5 குழந்தைகளையும் நீரில் அமுக்கிக் கொன்றது நல்லதங்காள் கதையைப் போன்றது. இன்னுமோர் தமிழ்ப் பெண்ணுடன் ஜெயிலில் சென்று உறவாடிய போது அவர் மன உளைச்சலால் தான் அவ்வாறு செய்தார் என தெரிய வந்தது. அவரது கணவரின் இழப்பு அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. அவ்வாறு இருந்த வேளையில் உரிய சேவைகளையும் நாட

63ம் பக்கம் பார்க்க...

வோ யாராவது அவரை நாடவைக்கவோ முடியவில்லை. இந்திய ஆமியைக் கொன்றதாகத் தன் குழந்தையைக் கொன்ற கனடாத் தமிழ்ப் பெண்ணுக்கும் இந்நோய் காணப்பட்டிருந்தது. ரொறன்ரோவில் சூசன் என்ற மனநோய் வைத்தியரே தன் குழந்தையுடன் ஓடும் புகைவண்டியில் பாய்ந்து மாய்த்த செயலைப் பலரும் அறிவர். இது மகப்பேற்றுப் பின்னான மனஉளைச்சலின் கோரத்தைக் காட்ட உரிய உதாரணமாகும்.

இந்தப் பாரிய பித்தலாட்ட நோய் ஆயிரத்தில் ஒருவருக்கு அல்லது இருவருக்கு மகப்பேற்றின் பின்னர் வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது 3-6 நாட்கள் அல்லது 3-6 கிழமைகளில் நடைபெறுவது வழக்கம். இந்தப் பித்தலாட்ட மன உளைச்சல் உள்ளவர் காணும் பொருட்கள், ஆட்கள், தொலைக் காட்சியில் காண்பவை வேறு உருவங்களாக அவர்களுக்குத் தோன்றும். எதையோ செய்யும்படி கூறுபவையாக, தீய விடயங்களுக்கு இட்டுச் செல்பவையாக காட்சிகள் இருக்கும். இவர்களுடன் யாரோ சில கட்டளைகளை இடுவதாகவும் அவர்களது கேட்புப் புலனில் தொனிக்கும். அது இவர்களுக்கு உண்மையாகத்தான் இருக்கும். குழப்பம் மிகுந்தவர்களாகவும், விடாப்பிடியாகச் சில எண்ணங்களில் பற்றுக்கோடாக இருப்பவர்களாகவும் இருப்பார்கள். எப்பொழுதும் நெருப்பில் மிதித்தவர் போல கடுமையாக இருப்பர். நித்திரை இல்லாமல் இருப்பர், இது பிள்ளை கருப்பத்தில் இருக்கும்போதுகூட நிகழலாம். இவர்களை உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டும்.

ரொறன்ரோவில் மகப்பேற்றுப் பின்னரான மன உளைச்சலைக் கண்காணிக்க ரொறன்ரோ ஈஸ்ற் ஜெனரல், சென்ஜோசெப் வைத்தியசாலை என்ற இரு வைத்திய சாலைகளில் வசதிகள் செய்யப்பட்டுள்ள. துரதிஸ்டவசமாக இவை ஸ்காபரோவில் புதிய குடிவரவாளர் அதிகமாக வாழும் இடங்களில் இல்லை. எங்களிடம் பல தமிழ் மனநோய் வைத்திய நிபுணர்கள், ஆலோசகர்கள் உளர். மக்கள் உளநலம் பேண உதவிகளை நாட வேண்டும். “பைத்தியங்கள் தான் மனநோய் வைத்தியரை நாடுவர்” என்ற தப்பெண்ணத்தைக் களைந்து எறிந்து நல்லதொரு வளமான, நலமான சமூகத்தைக் கட்டி எழுப்ப உதவுவோம். வந்ததன் பின் ஆலோசனை பெற்றுப் பயன் பெறுவதைவிட வெள்ளம் வருமுன்னர் அணைகட்ட வேண்டும். “மன உளைச்சல்” என்ற படம் ஒன்றை பல வருடங்களுக்கு முன் செய்திருந்தேன். அதனைப் பார்த்துத் தற்கொலை குறைப்பு நடைபெற்றது என்பது வரலாற்று உண்மை. இன்று மகப்பேற்றுப் பின் மன உளைச்சல் பற்றிய கல்வியூட்டலின் அவசியம் கனடியக் காற்றில் பரவலாக ஒலிக்கின்றது. இதனை நிறுவனங்கள் முன்வந்து நடவடிக்கை எடுத்துச் சமூக ஒளியூட்டல் செய்ய வேண்டும். நல்லதொரு உளவளம் மிக்க சமூகத்தைக் கட்டி எழுப்ப ஆவன செய்வோம்.

■ ■ ■


## Van For Sale

Dodge Carevan 94

260,000 k.m

647.887.3997





## VIEW TECH WINDOWS INC.

•Industrail •Commercial • Residential

- Storm Doors
- French Doors
- Patio Doors
- Porch Enclosures
- Thermal Windows
- Vinyl Windows
- Aluminum Windows
- Glass & Screen

**All work Guaranteed**

**Vinyl and Aluminum Replacement Windows**

**FREE ESTIMATE**



6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON

**KARUNA 905•796•9292/ 416•892•7070**



## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY



*Good news !*

for Real Estate Agents

Computek College is approved as a continuing education provider

by the

REAL ESTATE COUNCIL OF ONTARIO ( RECO)

for the following Courses

Windows XP
Ms Excel
Ms Word
Ms Access
Ms Power Point

Study at Computek College & Earn your credits

for details :

**416-321-9911**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS
"Dedicated and determined to provide the best results for your personal injury claims"

30 மில்லியன் டொலர்கள்
2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?

MOTOR VEHICLE ACCIDENT
Serious Injuries

Rocky Lofranco
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
LOFRANCO CHAGPAR
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 75 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
இலங்கதாஸ் பத்மநாதன்

TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York
416 223-8333

MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1
905 275-8806

FREEE CONSULTATION
LANKATHAS PATHMANATHAN
416 774-8122
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

# குளிர்கால ஆடைகள், அணிகள்.

சிந்தியுங்கள்! காலநிலை மாற்றங்களுக்கேற்ப பொருத்தமான ஆடைகளை அணிவதால் சுகமான வித்தியாசங்களை உங்களால் மனப்பூர்வமாக உணர முடிந்திருக்கிறதா? குளிர்கால சுகானுபவத்தைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றேன்.

அது பனிச் சறுக்கல் விளையாட்டாக இருக்கட்டும். அன்றேல் வீட்டு முன்னே ஒய்யாரமாய்க் குவிந்திருக்கும் வெண்பனியைச் செதுக்கி உருங்வகள் செய்வதாகக் கூட இருக்கட்டும். நாம் குளிருக்குப் பொருத்தமாய் அவைகளைத் தேர்ந்தெடுத்து நம்முடம்பில் படரவிட்டுக்கொண்டால் பிறகு குளிர்தான் நம்மை என்ன செய்துவிட முடியும்?

ஆய்வாளர்களின் கூற்றுப்படி, சின்னச்சின்ன வரைமுறைகளை நாம் கடைப்பிடித்தாலே பெரிய மாற்றங்களை உருவாக்கலாம் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

ஆடைகளை விற்கும் கடைகளில் போய் நின்றுகொண்டு, சிறு குழந்தைகள் குளிரைத் தாங்கக்கூடிய வகையிலான ஆடைகளைத் தெரிவு செய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால், இனியசெய்தி என்னவெனில் காலப்போக்கில் விதவிதமான துணிகளில் பலவகையான ஆடைத் தெரிவுகள் மிகவும் விருத்தியுடன் வெளிவருவதுதான். இம்மாதிரியான உடைகள் மனித சரீரத்தை மிதமான வெப்பம் மிதக்கும் உடலாக மாற்றுவதால் ஏற்படும் சுகம் மட்டுமன்றி, கஸ்டமின்றி மூச்சை இழுத்துவிடவும் இலகுவாக இருக்கும். மற்றையதோர் முக்கிய விடயமானது, இம்மாதிரி ஆடைகளுக்குள் தண்ணீர் ஊடுருவிச் செல்ல வழியே இல்லை.

குளிர் காலத்தில் உங்களை இரண்டு றொட்டித் துண்டுகளுக்குள் வைத்துக் கடிக்கும் சிற்றுண்டியாய் ஆடைகளுக்குள் புகுத்திக் கொள்ளுங்கள். உங்கள் புருவம் உயர்வதை உணரமுடிகிறது. தப்பான அர்த்தமில்லை. ஒன்றன்மேல் ஒன்றாக இரண்டு அல்லது கூடிய எண்ணிக்கையில் ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள் என்று சொல்ல வந்தேன். இதிலுள்ள பெரிய இலாபம் என்னவெனில், குளிரின் அளவைப் பொறுத்து, தேவையைப் பொறுத்து, ஒன்றிரண்டை தற்காலிகமாக கழற்றி வைக்கலாம் அல்லவா? குளிர் குறைந்தால் அல்லது நீங்கள் ஒரு விடயத்தில் ஈடுபடும் பரிணாமத்தைப் பொறுத்து, ஆடை விடயத்தை நீங்களே தீர்மானிக்கலாம். பொதுவாக மூன்று அடுக்காக ஆடைகளை அணிவதால் சரியான உடல் வெம்மையை நீங்கள் உங்களுக்குள்ளேயே உற்பத்தி செய்யலாம்.

முதன் முதலில் அணியும் ஆடையானது, உங்கள் உடலில் நேரடியாக படரக்கூடியதாகும். உடலின் சதையுடன் நேரடியாய் மோதும் உடை இதுதான். இம்மாதிரி உள் அங்கிகளை குளிர்காலங்களில் முடிந்த அளவுக்கு நீளமாக அணிந்துகொள்ளப் பழக வேண்டும். அசௌகரியம்தான். ஆனால், ஆரோக்கியமான முடிவு. இவற்றை மிகவும் இறுக்கமாக அணியக்கூடாது. அணிந்தால் உடலிலுள்ள இயற்கையான ஈரப்பதமானது, நொடியில் உறிஞ்சப்பட்டுவிடும். பட்டினால் நெய்யப்பட்ட ஆடைகளாய் இருத்தல் நன்று. இவை உடம்பின் ஈரத்தை மெதுவே உறிஞ்சி ஈர ஆவியாய் தம்முள்ளேயே வைத்துக் கொள்ளும்.

இரண்டாவதாக அணியப்பட்ட ஆடையானது, கம்பளியால் நெய்யப்பட்டிருத்தல் நன்று. கம்பளி ஆடைகள் சூட்டை தமக்குள் வைத்திருந்து, குளிரை அறவே வெளியேற்றக் கூடியவை. காற்றுப் புக வசதியாய் கம்பளி ஆடைகள் அழகாக நெய்யப்பட்டிருக்கும். ஆனால், இம்மாதிரியான ஆடைகள் இறுக்



கமாகவும், பாரமானதாகவும் இருந்தால் காற்றுப் புகுதல் தடைப்படும். அது உடம்புக்கு நல்லதல்ல. சில நெசவு ஆடைகள் மேலே ஈரம் பட்டாலும் உடனே உலர்ந்துவிடக் கூடிய நன்மையை உடையவை. அம்மாதிரி உடைகளை குளிர் காலங்களில் அணிவது மிகவும் நன்மை பயக்கும். பருத்தியால் நெய்யப்பட்ட ஆடைகள் குளிர் காலத்துக்கு உகந்தவை அல்ல. பருத்தித் துணிகளில் துவாலைகள் செய்வதின் காரணம் என்ன தெரியுமா? அவை ஈரத்தை அபரிமிதமாக உறிஞ்சக்கூடியவை. இவ்வகை உடையை பனி கடுமையாக கொட்டும் காலங்களில் அணிந்தால் விளைவு என்ன என்பதை சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். சட்டென்று ஈரத்தை உள்வாங்கிவிடுமே! விளைவு உடலில் ஈரம் பட்டுக்கொண்டிருப்பது மட்டுமன்றி, காற்றும் கடுமையாக வீசினால் உடல் கடுமையான குளிரை அனுபவிக்க வேண்டிய கொடுமைக்கு உள்ளாவிடும். கால் சட்டை, காலுறை, மேல் அடை இவைகளில் எந்தவித உடையையேனும் பருத்தியினால் செய்த துணிகளில் நெய்யப்பட்டிருந்தால் குளிர் காலங்களில் இவற்றை அணிவதைத் தவிர்த்துவிடுங்கள். மூன்றாவதாக, மேலாடைதான் உங்களை மிகுதியாக பாதுகாப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இவற்றில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில், இது வெண்பனி கொட்டும்போது, நீரை அல்லது ஈரத்தை உள்வாங்கினாலும் விரைவில் அவற்றை நீராவியாய் சூடேற்றி வெளியேற்றக்கூடிய தன்மையுடன் செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும். இது இறுக்கமாய் உடலோடு ஒட்டி இருக்கக்கூடாது. உடம்பில் பொருத்தமில்லாத ஆடைகளை அணிவதன் மூலம் ஈரம் பட்டுவிட்டாலோ பிறகு மறு ஆடை ஒன்றை மாற்றும்வரை அந்த ஈரத்தை முறியடிக்க எந்த வழியுமே கிடையாது. இதை மனதில் இறுக்கமாக நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

உடலின் அறுபது சதவிகித சூடானது, தலையில் உள்ள துவாரங்கள் மூலம் வெளியேறக்கூடியது. இதனாலேயே குளிர் காலங்களில் தலைக்கு குல்லாய், தொப்பி முதலியவற்றை அணிந்து தலையைப் பத்திரப் படுத்தக் கொள்ள வேண்டும். கடைகளில் விதவிதமான வடிவங்களில் நிறங்களில் அளவுகளில் அழகான தொப்பிகள், குல்லாக்கள் போன்றவற்றை வாங்கலாம். இவைகள் பெரும்பாலும் கம்பளிகளாலேயே நெய்யப்பட்டிருக்கும். இவை தலையை அரிக்காதவாறு இருக்கும் மூலப் பொருட்களால் செய்யப்பட்டிருப்பதால் தலையைப் பேணிப் பாதுகாப்பதோடு, தலையையும் குளிரில்லாது மிதமான வெப்பத்தில் தழுவச் செய்யும். கடும் குளிர்காலங்களிலோ மூக்கும் கண்களும் மட்டுமே தெரியக்கூடிய மாதிரியான தலைக் குல்லாய்களை அணிதல் மிகவும் பலனைத் தரும்.

அடுத்த பாதுகாப்பான உறையானது, கண்களில் அணியும் குளிர் கண்ணாடிளாகும்.

இவை, கண்களைக் கூசச் செய்யும் வெய்யில் இருந்து பார்வையைப் பாதுகாப்பதுடன் மாத்திரம் தன் கடமை முடிந்ததென்ற இருந்துவிடுவதில்லை. இவை நம் கண்களை கடுமையான சூரியக் கதிர் வீச்சுக்களினின்றும் பாதுகாக்கின்றன. வெண்பனி உறைந்து கிடக்கும்போது, சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்கும் பிம்பமானது, சாதாரண ஒளிக் கதிர்களை விட மிகவும் சக்திவாய்ந்ததாகும். இவை கண்களைத் தாக்கும்போது, கண்கள் கூடுதல் பாதிப்பை அடைய வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். மிகவும் வெயில் கடமையாக எரிக்கும் நாட்களிலும், பனி கடுமையாகக் கொட்டும் காலங்களிலும் கண்களைப் பாதுகாக்க குளிர்க் கண்ணாடி அணிதல் மிகவும் இன்றியமையாததாகும். ''நூறு சதவிகித சூரியக் கதிரிலிருந்து பாதுகாப்பானது' என்ற குறிப்புடன் விற்கப்படும் கண்ணாடிகளைத் தெரிந்தெடுத்து அணிவது கண்களுக்கு நல்ல பலனைத் தரும். கண்ணாடிகள் நம் முகத்துக்கு அளவானதாகவும் பொருத்தமானதாகவும் இருத்தல் மிக முக்கியம். மூக்கின் மேல் அழகாக அந்தக் கண்ணாடி உட்கார்ந்திருக்க வேண்டும். இம்மாதிரிக் கண்ணாடிகள் புருவங்களுக்கு மேலே உயர்ந்தும், கன்னக் கதுப்புக்களின் கீழேயும் படர்ந்திருக்க வேண்டும். ஆனால், கன்னக் கதுப்புக்களுடன் கூடிய மூக்கில் இடைவெளி அமையுமாற்போல் இருக்கக் கூடிய கண்ணாடிகளைத் தேர்ந்தெடுங்கள்.

கைகைளில் அணியும் கையுறைகள், கம்பளி நூலினால் பின்னப்பட்டிருப்பின் மிகவும் நல்லது. mitten என்பது ஒருவித கையுறை. ஆனால், இதன் வடிவமைப்பு சற்று வித்தியாசமானதாய் இருக்கும். அதாவது, கட்டை விரலைப் பொருத்தக்கூடிய பகுதி இதில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், மற்றைய நான்கு விரல்களும் ஒரு இடத்திலேயே பொருந்துவதுபோல் அமைக்கப்பட்டிருக்கும். நான்கு விரல்கள் ஒரு பகுதியிலும் கட்டை விரல் தனியாகவும் நுழையுமாறு இவ்வகை கையுறைகள் அமையப்பெற்றிருக்கும். Gloves எனப்படும் கையுறைகளில், ஐந்து விரல்களும் தனித்தனியே நுழையக் கூடிய மாதிரியாக அமையப்பட்டிருக்கும். சிறு குழந்தைகளுக்கு முதற்கூறிய கையுறைகள் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் இரண்டாவது வகையை விட முதலாவது கையுறை குளிரை மேலதிகமாகத் தாங்கக் கூடியது. நீங்கள் எவ்வித காரியத்தில் குளிர் காலங்களில் வெளியேபோய் ஈடுபடப்போகின்றீர்கள் என்பதைப் பொறுத்து, இவ்விரண்டில் எது பொருத்தமானதோ அந்த வகைக் கையுறைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது நல்லது. இறுக்கமான கையுறைகளை வாங்கவோ அணியதோ செய்யாதீர்கள்.


காற்று உட்புக வசதியாக விரல் நகங்களுக்கு மேல் இடைவெளிவிட்டு, கையுறைகளை அணிந்துகொள்ளுங்கள்.

காலுறைகள் அணியும்போது, சிலர் ஒன்றுக்கு இரண்டாகக் கால்களில் அணிவதைக் காணலாம். அப்படி அணியவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இரண்டு மூன்று என்று காலுறைகள் அணிவதன் மூலம் நீங்கள் கால்களில் தவழும் இரத்த ஓட்டத்தை உங்களை அறியாமலே தடைப்படுத்துகின்றீர்கள். காலுறைகள் பலவித நெசவுத்துணி வகையறாக்களைக் கொண்டு தைக்கப்படுகின்றன. இவற்றில் நீளமான காலுறைகளை அணிந்தால் மிதமிஞ்சிய குளிர் உடலுக்குள் ஊடுருவி இரத்த நாளங்களைப் புடைக்காதவாறு பாதுகாக்கலாம்.


■ ■ ■

# இலையுதிரும் வண்ணங்கள்


இலையுதிர்காலத்தில் கனடாவில் மரங்களின் மீது இயற்கை வர்ணக்குளம்பை அள்ளி ஊற்றிவிடுகிறது. எங்கெங்கு காணினும் இயற்கையின் வண்ணமடா என்னும்வகையில் அழகு பூத்துக்கிடக்கும் காலம் அது. நகரங்களை விட்டு சற்று வெளியே போய் கிராமங்களின் வனப்பை ஊடறுத்துச் செல்லும் வீதிகளில் பயணித்திருக்கிறீர்களா? இல்லையெனில் நீங்கள் இலயுதிர்கால அழகை முழுமையாக அனுபவித்திருக்க முடியாது. வரும் Thanks Giving விடுமுறைக்கு குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் வாகனத்தில் ரொறன்ரோவுக்கு வெளியே பயணித்துப்பாருங்கள். இயற்கையின் ஓவியங்களை ரசிக்க ஒரு அற்புத வாய்ப்பைப் பெறுவீர்கள். ஒன்ராரியோ உல்லாசப்பணத்துறை எந்தெந்த வீதிகளால் பயணித்தால் நீங்கள் அதிக பட்சம் இந்த வனப்பை இரசிக்கலாம் என ஒரு கையேட்டையே வெளியிட்டுள்ளது. அதில் சில பாதைகளை மட்டும் இங்கு தருகிறோம். Thanks Giving காலப்பகுதியிலேயே இந்த அழகை அதிகம் இரசிக்க முடியும்.





ரொறன்ரோவின் கிழக்குப்புறமாகப் பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.





ரொறன்ரோவிலிருந்து வடமேற்குப் புறமாகவும் ஒரேஞ்ச்வில்லிலிருந்து கிழக்குப் பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.





நாயகரா நீர்வீழ்ச்சியின் மேற்குப்புறமாக பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.




ஹமில்டனுக்கு தென்கிழக்குப் புறமாக பயணித்தால் இந்தப்பகுதிக்குச் செல்லலாம்.

இதே போன்ற மேலும் 15 பாதைகளின் விபரங்கள் http://www.ontariotravel.net இல் உள்ளன.




MEGA CARPET & DUCT CLEANING LTD.

உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை

• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents

NATHAN: Dir: 416.893.8363, Tel: 416.286.2416, www.megaduct.com

You Dream It....

We Make It Happen...

Ravi Logarajah B.Sc

Tharshi Rajenthiram B.B.A

Sales Representatives

416.843.7474

30 Eglinton Ave. W, Suite 200, Mississauga, ON, L5R 3E7

Bus: 905.568.2121



ROYAL LEPAGE

KINGSBURY REALTY BROKERAGE

Markham/401




$1,800 / Month

Professional Well Lay Out Office. 3 Office Rooms, One Boardroom, And Kitchen Area, Well Maintained Building.


Morningside/Ellesmere



$116,900

Condo Townhouse Stacked Townhse , 2+1 Washrooms, 2 Washrooms, Loc On The Main Flr Facing The Front Of The Building(Easy Access).Excellant Investment Opportunity.

Birchmount/Ellesmere



$199,900

Condo Apt, 1+1 Bedrooms, 1 washroom, Luxury Tridel Mondeo Spring Condo With Most Desired South Side Exposure.Spectacular City View,Full Recreational Facilities With Guests Suite


Williamspkwy/Mclaugh



$312,900

Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Quiet Street,Nice Cozy Home In Glenrose Neighbourhood.Warm & Cozy Family Room W/Gas Fireplace


Eglinton / Hwy 403



$349,900

Link 2-Storey, 3+1 Bedrooms, 4 Washrooms, Absolutely Immaculate Family Home Shows 10+++.Huge Gourmet Kit W/Bkfst Area.Huge Mster Bdr W/Sitting+Jacuzzi Ensuite.

Kipling/Birmingham



$674,900

Freestanding

digi Media



S.P. IMPORTERS FURNITURE INC.

Importers & Distributors of High Quality Furniture & Mattresses

now with expanded NEW SHOWROOM and more collections of FURNITURE

NO PAYMENT INTEREST for 1 YEAR

on spot FINANCING now AVAILABLE *OAC








Lowest Prices! Huge Selections! New Designs! VISIT OUR NEW SHOW ROOM







2861 Lawrence Ave. East

(Lawrence & Brimley) Scarborough

416•266•3077

Special Sale on Solidwood Bedroom Sets and Lether Sofas

QUALITY | RELIABILITY | FREE DELIVERY **

(**Over $500 in City Limits)

# பிற்போடுகை

## குமார் புனிதவேல் பக்கம்

‘தாய்வீடு’ பத்திரிகை ஆசிரியர் தொலைபேசியில் அழைத்து ‘கட்டுரை ஆயத்தமா’ என்று கேட்டபோதுதான் ‘அடடா மறந்து விட்டோமே’ என்று கூடிய சீக்கிரமாய் தருவதாக சொன்னேன். பத்திரிகை ஆசிரியருக்குப் பல வேலைகள் உண்டு. அதற்கு மத்தியில இப்படி கட்டுரை எழுதுபவரை அழைக்கும் பொறுப்பும் ஒன்று. கட்டுரை எழுத வேண்டும் என்ற விரும்பினாலும் மனம் நாளை, மாலை, பிறகு என்று பிற்போட்டுக் கொண்டே சென்றதால் ஆசிரியரை பொறுமையின் எல்லைக்கே அழைத்துச் சென்று விட்டேன். கடைசியில் ஏன் பிற்போடுதலைப் பற்றி எழுதக்கூடாது என்று இதோ பிற்போடுதல் பற்றி ஒரு கட்டுரை!

பிற்போடும் பழக்கம் எனக்குப் புதிதில்லை. சிறு பையனாக இருந்தவேளை. வீட்டு வேலையை (ஆசிரியர் வீட்டில் செய்துவரச் சொன்ன வேலை) உடனே செய்யாமல் பிற்போட்டு, பின் ஆசிரியரிடம் அடிவாங்கிய அனுபவம் எனக்கு நிறையவே உண்டு. சில சமயங்களில் நண்பனுடைய கொப்பியை கொப்பி அடித்துத் தப்பியதுமுண்டு. சிரிக்க வேண்டாம். நீங்களும் பிற்போட்டு பின் தண்டனை வாங்கித்தான் இருப்பீர்கள்!

ஏன் ஒருவர் ஒரு கருமத்தைப் பிற்போடுகிறார் என்றால், அதற்கான காரணத்தை இரண்டு பகுதிகளாக வகுக்கலாம். ஒன்று சோம்பல். இரண்டாவது அச்சம். இவை இரண்டுமே ஒருவர் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருக்கும். சோம்பல் காரணமாக ஏற்படும் பிற்போடுகை எல்லோருக்குமே எளிதாகப் புரிந்துவிடுவதால் அதிகம் இதுபற்றி எழுதுவதில் அர்த்தமில்லை. சோம்பலுக்குக் காரணம் தாமத குணம். அது இருக்கும் வரை அவர்கள் வாழ்க்கையில் ஒரு விதத்திலும் முன்னேற முடியாது. அவர்களுக்கு எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் படத்தில் வந்த பாடல் தூங்காதே தம்பி தூங்காதே... தான் நல்ல அறிவுரை. எனவே, நீங்கள் சோம்பல் காரணமாக ஒரு காரியத்தைப் பிற்போடும் வழக்கமுள்ளவரானால் அந்த சீடீயைப் போட்டுப் பாருங்கள்.

> **“துன்பத்தில் முன்வராத உங்களை மற்றவர் வெறுப்பது அதிசயமில்லை. எனவே, நீங்கள் செய்ய வேண்டியதை உடனே செய்துவிடுங்கள். பிற்போடாதீர்கள்.”**

இனி, அச்சம் காரணமாக பிற்போடும் பழக்கத்தைப் பற்றி சற்று விரிவாக கவனிப்போம். மேலே நான் முன்பு குறிப்பிட்ட விடயத்தில், அதாவது - ‘தாய்வீடு’ பத்திரிகைக்கு எழுதுவதற்கு அமையும் கட்டுரை அச்சம் காரணமாகப் பின்போடப்படலாம். இத்தகைய பிற்போடுகை பல அனர்த்தங்களை ஏற்படுத்தும். காரணம், பிற்போடுவதால் அத்தேவை மறையப் போவதில்லை. ஆசிரியரும் என்னை விடப்போவதில்லை. எனவே, உடனே இயலாமையைச் சொல்லிவிட்டால் நல்லதல்லவா?

எமது வாழ்க்கையிலும் நாம் பல சமயங்களில் அச்சம் காரணமாக தயக்கம் ஏற்பட அக்கருமத்தைப் பிற்போட்டு மேலும் அதிகம் இக்கட்டான நிலைக்குக் கொண்டுசெல்வோம்.

உங்கள் நண்பர் ஒருவர் வீட்டில் ஒரு துன்பம் இடம்பெற்றதாகக் கொள்வோம். அவரை எப்படி முகம்கொடுப்பது? என்ற அச்சத்தால் ஏற்படும் தயக்கத்தால் பின்போட்டு, நாளை கண்டு துக்கம் விசாரிப்போம் என்று பிற்போடுவீர்கள். அடுத்தநாள், நேற்று நான் ஏன் விசாரிக்கவில்லை என்று எண்ணுவார் என்ற தயக்கத்தால் மேலும் பின்போடுவீர்கள். இதேவேளை எனது இன்பங்களில் பங்குகொண்ட நண்பர் துன்பத்தில் விலகியிருக்கிறாரே என்று வேதனைப்படுவார். அவர், இவர் உண்மையில் நண்பர்தானா என்று சந்தேகம் கொள்ள இடமுண்டு. இவ்வளவுக்கும் உடனே சென்று, அவருக்கு ஏதும் உதவியைச் செய்யலாம். அதுதான் தர்மம். இவ்வளவுக்கும் அவர் பிற்போடும் தன்மைதான் காரணமாகிறது. உங்கள் நண்பர் வள்ளுவர் சொன்னது போல்,

“கேட்டனு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்”

என்றபடி துன்பத்தில் முன்வராத உங்களை அவர் வெறுப்பது அதிசயமில்லை. எனவே, நீங்கள் சொல்ல வேண்டியதை உடனே சொல்லிவிடுங்கள்.

ஒரு நண்பர் அண்மையில் தனது அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சில காலத்திற்கு முன்பு அவர் பிற்போடுகையைப் பற்றி றீடர்ஸ் டைஜஸ்ற் இல் வாசித்ததாகவும், அதைத் தொடர்ந்து தனது தந்தைக்கு அவர் தனது முன்னேற்றத்துக்காக உதவிகளையும், கஸ்டங்களையும் குறிப்பிட்டு, அதற்குத் தனது ஆழ்ந்த நன்றியையும் தெரிவித்து, கடிதம் எழுதியதாகவும் அதுதான் தன் வாழ்வில் அவர் எழுதிய ஆகச் சிறந்த கடிதம் எனவும், அது தனக்குத் தந்த மனநிறைவு போல் வேறு எந்த விடயமும் தரவில்லை என்றும் குறிப்பிட்டார். அப்போது அவர் முகத்தில் ஒரு தனிப் பிரகாசம் தெரிந்தது.

எனவே, நீங்களும் பிற்போடுகை எனும் நோய்க்கு அகப்படாமல் கூற வேண்டியதைக் கூறி, செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்.

பார்த்தீர்களா? நானும் பிற்போடுகை இற்கு அகப்படாமல் இந்தக் கட்டுரையை எழுதியபடியால் எவ்வளவு மனநிறைவுடன் ‘தாய்வீடு’ பத்திரிகை ஆசிரியரைப் பார்கக்கூடியதாக இருக்கிறது!

■ ■ ■




**For All Your Real Estate Needs..**

**Lucky Draw for New Car Will be on September,2007**

**Buy or Sell through us before September16, 2007 and win a New Car****





- 2 Bedroom Condominium
- Great Location
- Well Maintained Building
- Steps to TTC & 1 Bus To Subway
- Lots Of Facilities In The Building...






**Sasi Chelvaratnam**
**Sales Representative**
**416.858.4828**




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....

Call Me To Find Out About The Special Discount And Special Deposit That Is Available For Our Buyers.

Luxurious Condominium In Central Scarborough By Award Winning Builder “TRIDEL”.




- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9’Ceiling On Main Floor
- Primium Lot...

**HomeLife GTA Realty Inc., Brokerage***

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

The Sitara
Shopping Centre

# A New Star is born

the biggest South Asian indoor shopping centre in the GTA






# To buy a unit

# Please call me

# 24 Hrs 416 856 6900



**Kathir S Kathirgamanathan** P. Eng.
Sales Representative
Email: kathirs@rogers.com

*Call me for a change*

**HomeLife / GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Road, #206,Toronto, ON, M1S 3Y3
Tel: 416-321 6969 Fax: 416 321 6963
Independently owned and operated

## ஆயுட்காப்புறுதி

# இறந்து போகிறவர்களுக்காக அல்ல.



**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஒருவரின் மரணத்திற்குப் பின்பு அவரது குடும்பம் எப்படி பொருளாதாரப் பிரச்சினைகள் இல்லாமல் வாழ்வைத் தொடர முடியும் என்ற கேள்விக்கு இலகுவான பதில் ஆயுட் காப்புறுதி. மரணம் என்பது எவருக்குமே பிடிக்காத விடயம். எனவே இதற்காக முன் கூட்டியே சிந்திப்பதற்கு எவரும் விரும்புவதில்லை. ஆனால் எங்களின் பொருளாதாரம் அல்லது வருமானத்தில் யாராவது தங்கி இருந்தால் மரணம் பற்றி முன் கூட்டியே சிந்திப்பது தவிர்க்க முடியாத விடயம்.

**ஆயுட்காப்புறுதி இறந்து போகிறவர்களுக்காக அல்ல. அது வாழப் போகின்றவர்களுக்காகவே. "Life Insurance isn't for the people who die. It's for the people who live".**

ஆயுட் காப்புறுதியானது ஒருவர் இறந்தவுடன் அவரின் குடும்பத்திறகு ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடு செய்வதுடன், உங்கள எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற உதவி புரியும். அத்துடன் உங்களின் வீட்டுக்கான கடன் மற்றும் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான செலவுகள் போன்றவற்றையும் பூர்த்தி செய்யும். ஒரு குடும்பத்திற்கு தேவையான எல்லாச் செலவுகளையும் ஒருவர் இறந்த பின்பும் கவனிப்பதற்கு ஆயுட்காப்புறுதி மிகவும் உகந்தது.

காரணம் இதற்கு தேவையான முழுப்பணத்தையும் ஒருவரால் சேமித்து வைப்பது மிகவும் கடினமானது. அதிகமான குடும்பங்களில் கணவன், மனைவி இருவரின் உழைப்பால் தான் செலவுகளை சமாளிக்க முடிகின்றது. எனவே அதில் ஒருவரின் உழைப்புத் தடைப்பட்டால் மிகவும் கடினம். ஆனால் இருவரில் ஒருவர் இறந்து விட்டால் மிகவும் கடினமான நிலை உருவாகும். இந்த நிலையை ஈடு செய்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியம்.

### ஆயுட்காப்புறுதி பெற்றுக் கொள்வதைத் தவிர்ப்பதற்கு மக்கள் கூறும் பொதுவான மன்னிப்புகள்.

**ஆயுட் காப்புறுதி எனக்குத் தேவை யில்லை.**

நீங்கள் திருமணமாகாதவர், குழந்தைகள் இல்லாதவர், இறுதிச் சடங்குகள் மற்றும் கடன்கள் எல்லாவற்றிற்கும் தேவையான பணத்தை கையில் வைத்திருப்பவர், அல்லது எந்தப் பொறுப்பும் இல்லாதவராகவும் இருந்தால் ஆயுட்காப்புறுதி அவசியமில்லை.

**வேலை செய்யும் நிறுவனத்தில் ஆயுட் காப்புறுதி இருக்கின்றது. எனவே ஆயுட் காப்புறுதி தேவை யில்லை என்பவர்களுக்கு**

அதிகமான நிறுவனங்களில் கிடைக்கும் ஆயுட்காப்புறுதியின் தொகை மிகவும் சிறியது. அத்துடன் நீங்கள் அந்த வேலை நிறுவனத்தை விட்டு விலகியதும் ஆயுட் காப்புறுதியும் இரத்து செய்யப்படும். எல்லாரும் 65வயதில் வேலையை விட நேரிடும். அதன் பின்பு ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொள்வது மிகவும் கடினம். அத்துடன் மாதாந்த கட்டுப் பணம் மிகவும் அதிகமாக இருக்கும்.

**நான் இப்போது மிகவும் இளமையாகவும் வருத்தங்கள் எதுவும் இல்லாமலும் இருக்கின்றேன். எனவே காப்புறுதி தேவையில்லை என்று நினைப்பது தவறு.**

காரணம் சிறுவயதில் காப்புறுதி எடுப்பதால் மிகவும் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள முடியும்.

**ஆயுட்காப்புறுதிக்கு மாதாந்தக் கட்டணம் அதிகமாக இருக்கின்றது என்று நினைத்தால் ஆயுட்காப்புறுதி இல்லாமல் இருப்பதால் ஏற்படும் செலவு பலமடங்கு அதிகமாக இருக்கும்.**

ஆயுட்காப்புறுதிக்கு செலவு செய்யும் பணம் விரயமாகப் போவதில்லை. காரணம் அது ஒரு சேமிப்புத் திட்டம் போலவே செயல்படும். அதாவது உங்கள் குடும்பத்திற்கு ஏற்படும் மிக முக்கியமானதும் உங்களால் எதுவித உதவியும் செய்ய முடியாத நேரத்தில் ஆயுட்காப்புறுதி ஒன்று மட்டுமே உங்கள் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும்.

**பொதுவாக மக்கள் கூறும் நொன்டிச் சாட்டுகள்**

வயது 1-25 வரை – எங்களால் இப்பொழுது ஆயுட்காப்புறுதிக்காக செலவு செய்ய முடியாது. காரணம் நாங்கள் வயதில் குறைந்தவர்கள் பின்பு பார்க்கலாம் என்பார்கள்.

வயது 25-40 வரை - எங்களுக்கு இப்போது குழந்தைகள், மற்றும் செலவுகள் அதிகம். எனவே பின்பு வருமானம் கூடியதும் ஆயுட் காப்புறுதி அல்லது சேமிப்புகள் பற்றி யோசிப்போம் என்பார்கள்.

வயது 40-65 வரை - எங்கள் குழந்தைகளின் உயர்கல்வி மற்றும் வீட்டுக் கடன் எல்லாம் அதிகமாகவுள்ளது எனவே பின்பு பார்ப்போம்.

வயது 65 எனக்கு இப்போது காப்புறுதி எடுப்பது மிகவும் கடினம். காரணம் வருத்தங்கள் பலவும் வந்துவிட்டது.

எனவே இப்படிப்பட்ட பல காரணங்களுக்காக மக்கள் காப்புறுதி பெறுவதை தட்டிக் கழிப்பதும் பின்போடுவதும் உண்டு. நீங்கள் ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டத்தை வாங்கும் போது அது வெறும் பணம்அல்ல. பதிலாக நீங்கள் வாங்கும் ஆயுட்காப்புறுதித் திட்டம் உங்கள் குடும்பத்தின் எதிர்கால வாழ்க்கையைத் தொடர உதவி செய்யும் ஒரு உபகரணம். உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை ஆரம்பிப்பதற்கான ஒரு முதலீடு.

ஒருவரின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம், இவற்றுடன் ஆயுட்காப்புறுதியையும் சேர்த்துக் கொள்ளலாம். காரணம் ஒருவர் மறைந்த பின்பு அவரின் குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆயுட் காப்புறுதி பயன்படும்.

■ ■ ■


# வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்...

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட் காப்புறுதி**
(Universal Life Insurance)

- இத்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்கும்
- மாதாந்தக் கட்டணம் எப்போதும் அதிகரிக்காது
- 10, 15 அல்லது 20 வருடங்கள் மட்டுமே பணம் செலுத்த வேண்டும்
- அதன் பின்பு கட்டிய பணத்தை மீளப் பெற முடியும்

**வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி**

உங்கள் வயதான பெற்றோருக்கு வைத்திய பரிசோதனை இன்றி காப்புறுதி செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப் பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம் (RESP)**

கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.

காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் தகுந்த விளக்கத்துடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.





digi Media Creations

**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர் (Licensed Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada

•கொடிய நோய்களுக்கான காப்புறுதி • ஈட்டுக்கடன் காப்புறுதி • வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி • RRSP • RESP



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

**Vasanthy Niranjan**
Sales Representative
**416•845•8272**



**M/Vale & Sheppard**
3 Bedroom, 2 Washroom
Affordable 2 Yrs. New Freehold
T/House W/Fin. Walk-Out Bsmt., Steps
To Ttc & Toronto Zoo, Easy Access To
Hwy,. 401, Close To Hospital, Shopping
**$279,900**



**Markham/Passmore**
3 Bedroom, 2 Washrooms
Near Brookside P.S., Step To Ttc, Best
Value In Area! 'Mattamy Home' Avalon
Model. Quality Upgrds, Spac Bright
Main Level
**$294,900**



**Mckennon/Bur Oak**
4 +1 Bedroom, 3 Bathroom
Stunning Approx 1900 Sq Ft As Per
Builder. Features Hardwood Floors
Large Pantry, Breakfast Bar, Fireplace,
Oak Staircase, Front Porch,
**$350,000**

**LAND FOR SALE**

**Hwy 7 & Kingsalei**
Aprox 6 Acres Site Plan Approved By
Town Of Pickering For A Motel
Awaiting Reginol Approval
**$1,200,000**

**LAND FOR SALE**

**Maj.Mack&Mccow**
mproved With Single-Family Detached
Dwelling & Attached Double Garage.
Frontage On Major Mackenzie, Close
Proximity To New Residential, Angus
Glen Community Centre
**$2,600,000**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc. Brokerage**
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED BROKER


## Two Investment Properties for Sale

**(90 minutes drive from Toronto)**

**Vacant Land And Farm**

### 1) Farm –with house

**Barn and Tractor shed**
**59 Acres**
**$249,000 Asking Price**
*****Mortgage can be Arranged******

### 2) Vacant land

### 28 Acres near to lake

**$3000 per acre Asking Price**

**commission 1%**

digi Media Creations



குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து தரப்படும்*

**Ranjan Kumaresiya**
Sales Representative
**Cell: 416.833.0152**
rkumaresiya@trebnet.com

**VEEDU REALTY INC. BROKERAGE**
1008 Midland Ave.
Toronto, ON
M1K 4G6
Tel: 416-759-6000
Fax: 416-759-6005
www.veedu.com

* ocac

# ROYAL BROKERS




பல்வேறு நிறுவனங்களிடமிருந்து
குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை
தெரிவு செய்துகொள்ள

## மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

### மிகக் குறைந்த கட்டணமாக $15ல் இருந்து!

- இருதய நோய்
- இருதய சத்திர சிகிச்சை
- புற்று நோய்
- நீரிழிவு நோய் (இன்சுலின் பாவிப்பவர் உட்பட)
- சிறுநீரக நோய்

போன்ற நோய்கள் இருப்பினும்
எவ்வித மருத்துவ பரிசோதனையுமின்றி மிகக்குறைந்த
மாதாந்தக் கட்டணத்துடன் ஆயுட்காப்புறுதியை
பெற்றுக்கொள்ள முடியும்.

• சில நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்படும்



**Siva Kandiah**
*Managing General Agent, RBC*
*416•992•1259*

- Premiums as low as $15 per month
- Safe, private and secure
- 100% tax-free benefits

ROYAL BROKERS
Corporation

80 Nashdene Ave., unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

RBC Insurance Authorized Agent

Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments

JayaCS AD

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborough, ON

BUY AND SELL HOMES AND BUSINESS
0 dwn mortgage avail.
50 ACRE INVEST MENT
0% down
23 POWER OF SALE AVAILABLE CALL NOW!!
CONVENIENCE STORE AVAILABLE FOR SALE FRM 29000/-
PAT PUSHPAKANTHAN
OFF: 416 493 2100
Dir: 416 490 SOLD
TOP PRODUCER 5 YEARS
TOTAL COMMISSION SOLUTION 2.5%**
Century 21
Professional Choice REALTY INC. Brokerage*
200 Consumers Rd
EXPERIENCE!
*Based on your yearly sales
*EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

**இம் மாத புகைப்படக் கலைஞர்**



**சுரேஸ் தம்பிராசா**

ஒட்டாவாவில் வசிக்கும் இவர் புகைப் படம், வரைகலை ஆகிய துறை-களில் ஆர்வம் காட்டி வருகிறார்.





• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com